

தேவதையே...
திருமகளே...
கலைவாணி சொக்கலிங்கம்
திருமகளே...
கலைவாணி சொக்கலிங்கம்
தேவதையே...
திருமகளே...
லைவாணி சொக்கலிங்கம்

## நூற் குறிப்பு

- நூல் தலைப்பு — தேவதையே... திருமகளே...
- ஆசிரியர் — கலைவாணி சொக்கலிங்கம்
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — மே, 2013
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 300
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 140.00**

வெளியிடுவோர்: **அறிவு நிலையம் பதிப்பகம்**
எண். 32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு: மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 116.
செல் : 9043558732

அச்சிட்டோர்: கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.


# தேவதையே...
# திருமகளே...

# தேவதையே...
# திருமகளே...

**1**

பெண்ணல்ல பெண்ணல்ல ஊதாப்பூ
சிவந்த கன்னங்கள் ரோஜாப்பூ
கண்ணல்ல கண்ணல்ல அல்லிப்பூ
சிரிப்பு மல்லிகைப் பூ!

'அயிகிரி நந்தினி நந்தி தமேதினி விஸ்வ விநோதினி...' - மஹிஷாசுரமர்த்தினி ஸ்லோகம் மெல்லிய குரலில் ஒலித்துக் கொண்டிருக்க, கையில் பூஜைக் கூடையுடன் கோவிலை நெருங்கினாள் உஷா. கூடவே வந்த தங்கையிடம் திரும்பினாள்.

"உமா! சாமிக்குப் பூ வாங்கிட்டுப் போயிடலாமா?"

"ம்... வாங்குக்கா."

"பாட்டி ஏதோ பூ சொன்னாங்களே... என்னவோ ஒரு மாலை..."

"ஏதாவது ஒரு பூவை வாங்குக்கா. எனக்குக் காலேஜுக்கு டயமாகுது..."

"இருடி. நாம கிளம்பும்போதே பத்து தரம் சொல்லி விட்டாங்க. நாம ஏதாவது ஒரு பூவை வாங்கினோம்னு தெரிஞ்சது வேற வினையே வேண்டாம். இன்னிக்குப் பூரா திட்டு வாங்கிட்டே இருக்கணும்..."

"சரி. அப்படி என்னதான் பூ சொன்னாங்க?"

"அது... ஏதோ சிவந்த மாலையாம். வெள்ளிக் கிழமை அம்மனுக்குச் சிவந்த மாலை சாத்தினா ரொம்ப நல்லதாம்."

"அப்படின்னு பாட்டி சொன்னாங்களாக்கும்?"

"ம்..."

"வர வர இந்தப் பாட்டியைச் சமாளிக்கவே முடியலை. எப்பப் பாரு எதையாவது நொய் நொய்ன்னு கிட்டு..."

"ஷ்... உமா! தப்பு. பெரியவங்களை அப்படியெல்லாம் மரியாதைக் குறைவா பேசக் கூடாது..." - தங்கையைக் கண்டித்தாள் உஷா.

"முதல்ல பெரியவங்க மாதிரி நடக்கட்டும். பிறகு மரியாதை கொடுத்துக்கலாம்..." - அலட்சியமாய்க் கூறிய



உமாவும் உஷாவும் இரண்டு வருட இடைவெளியில் பிறந்த சகோதரிகள். இருவரும் இரு துருவங்கள்.

உருவ அமைப்பில் ஒற்றுமையாய்த் தெரியும் இவர்களின் குணநலன்கள் நேரெதிர். அதிர்ந்து பேசக்கூட தயங்கும் மூத்தவள். எதையுமே பளிச்செனக் கணீரென்று பேசுபவள் இளையவள்.

பெற்றவர்கள்... பெரியவர்கள் எதைச் சொன்னாலும் தலையாட்டும் உஷாவையும் எதற்கெடுத்தாலும் குறைந்தது பத்து கேள்வியாவது கேட்டு விடும் உமாவையும் பெற்றவர் ராமச்சந்திரனால் மட்டுமே சமாளிக்க முடியும்.

ம்... என்றால் அழுது விடுவாள் உஷா.

எத்தனை துயரம் வந்தாலும் கண்களில் துளி நீரைக் காட்ட மாட்டாள் உமா.

"பெண் பிள்ளைக்கு அப்படி என்னடி அழுத்தம்? கல்லு மாதிரி உட்கார்ந்திருக்கியே? கண்ணுல ஒரு சொட்டுத் தண்ணி வருதா பார்..." - என்பாள் ரங்கநாயகி. ராமச்சந்திரனின் தாய்.

"அவசியம் இல்லாம ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூட வீணாக்கக் கூடாது பாட்டி. அழுவதுதான் பெண்களின் பலவீனம்!" என்பாள் உமா.

எந்த வார்த்தைக்கும் பதில் சொல்லி வாயடைத்து விடுவாள் என்பதால் ரங்கநாயகிக்கும் உமாவுக்கும் ஒருபோதும் ஒத்துப் போகாது. பாட்டி என்ற சொல்லைக்

கேட்டாலே வேப்பங்காயைக் கடித்தது போல முகம் சுளிப்பாள் உமா.

பாட்டிக்காகப் பரிந்து கொண்டு தங்கையை அதட்டுவது உஷாவின் வழக்கம். இன்றும் அதே போல் மென்மையான குரலில் கடிந்தாள்.

"என்ன உமா நீ! எப்பப் பாரு பாட்டியைக் குறை சொல்லிட்டே இருக்கே. தப்பும்மா... வயசானவங்களை மதிக்கணும். அப்பத்தான்..."

"அக்கா! நீ சாமி கும்பிட வந்தியா? எனக்கு டியூஷன் எடுக்க வந்தியா?"

"ஒரு நல்லது சொன்னா... காது கொடுத்துக் கேட்க மாட்டியே!"

"அதெல்லாம் பொறுமையாக் கேட்கலாம். இப்ப பூ வாங்கு. சாமி கும்பிட்டு வீட்டுக்குப் போகலாம்."

"சரி வா..." - என்றவாறு இருவரும் வரிசையாய் இருந்த பூக்கடையை நெருங்கினர்.

சாமந்தி, மல்லிகை, முல்லை, கனகாம்பரம், கதம்ப மலர்கள் என அனைத்தும் புத்தம் புதிதாய் நறுமணத்தோடு வீற்றிருந்தது.

ரோஜா மாலை, சாமந்தி மாலை, சம்பங்கி மாலை என வரிசையாய்த் தொங்க விடப்பட்டிருந்த மாலையைப் பார்த்தாள் உஷா. 'இதில் எது சிவந்த மாலை? இந்த ரோஜா மாலையாய் இருக்குமோ?'



"இன்னாம்மா வோணும்?" - வெற்றிலை வாயோடு கேட்ட பூக்கார அம்மாளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"வந்து... சிவந்த மாலைன்னா... எது?"

"செவ்வரளி மாலை. எத்தினி வேணும்?"

"ரெண்டு கொடுங்க..."

"முப்பது ரூபா கொடும்மா..." என்றவாறு பூக்களோடு கவரில் சுற்றி வைத்திருந்த செவ்வரளி மாலைகளில் இரண்டை எடுத்து வாழை இலையில் மடித்துக் கட்டி நீட்டினாள்.

"என்னம்மா இது? இந்த அரளி மாலையா முப்பது ரூபா? ஒரு முளம் நீளம் கூட இல்லையே?" என்றாள் உமா.

"இன்னிக்கு வெள்ளிக்கிழமைம்மா. சிவந்த மாலை யாருகிட்டயும் கிடைக்காது. அவ்வளவு கிராக்கி."

"என்ன அநியாயம் இது? அக்கா! இந்தப் பூதான் நம்ம தெரு முனையில உள்ள குழாயடி பக்கத்திலயே ஏராளமாப் பூத்துக் கிடக்குதே... நாம அதையே பறிச்சிக் கட்டிட்டு வந்திருக்கலாமே..."

"எனக்குச் சிவந்த மாலைன்னா செவ்வரளி மாலைன்னு தெரியாது உமா. பாட்டி தொடர்ந்து அஞ்சு வாரம் இந்த மாலையைச் சாமிக்குச் சாத்தச் சொன்னாங்க. அடுத்த வாரம் வரும்போது நாமளே கொண்டு வந்திடலாம்."

"என்ன... பூ வேணுமா? வேண்டாமா? வாங்கிக் கலன்னா இடத்தைக் காலி பண்ணும்மா. வியாபாரம் கெடுதில்ல...?"

"ஆமா! நூறு பேர் லைன்ல நிக்கிறாங்க. ரொம்ப அலுத்துக்காதம்மா. அக்கா! நீ காசைக் கொடு."

"ஆத்தி! இது என்னா வாய் பேசுது பாரேன்...?"

"இதோ பாரும்மா. பேசாம காசை வாங்கினோமா வியாபாரத்தைப் பார்த்தோமான்னு இருக்கணும். அதை விட்டுட்டு ஏதாவது பேசின..." என்ற தங்கையை அதட்டினாள் உஷா.

"ஏய்! சும்மா இருக்க மாட்ட? போய் அர்ச்சனைத் தட்டு வாங்கு. நான் காசு கொடுத்திட்டு வர்றேன்."

"ம்... ம்..." என்றவாறு உமா கடுப்பாய் நகர...

நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினாள் உஷா. "இந்தாங்க..."

"என்னம்மா... காலையில முழு நோட்டா நீட்டுற? சில்லரையாக் கொடுத்திடு. இன்னும் போணியே ஆகலை."

"அடடா! என்கிட்டயும் சில்லரை இல்லையே..."

"அர்ச்சனை சாமான் வாங்குறல்ல...? அவன்கிட்ட சில்லரை மாத்திட்டு எனக்குக் கொடு."

"சரிம்மா..." என்று கூறிவிட்டு கூப்பிடு தூரத்தில் இருந்த அர்ச்சனைப் பொருட்கள் இருந்த சிறு கடையை உஷா நெருங்க... அவள் மீது நம்பிக்கையின்றியோ



என்னவோ பூக்கார அம்மாளும் அவளைப் பின் தொடர்ந்தாள்.

உஷாவின் இதழ்களில் புன்னகை நெளிந்தது. 'கோவில் வாசலில் வைத்து அதுவும் சுவாமிக்கு வாங்கிய மாலைக்கா காசு கொடுக்காமல் ஏமாற்றி விடுவேன்? அடிக்கடி வந்து போகும் கோவில்தான். எப்போதும் பார்க்கிற பெண்மணிதான். இருந்தும் எப்படி நம்பிக்கை இல்லாமல் போகிறது?'

கடையை நெருங்கியதும் உமாவிடம் கேட்டாள். "வாங்கியாச்சா?"

"ம்..."

"நூறு ரூபாய்க்குச் சில்லரை இருக்கா?"

"கொடும்மா..." - என்றதும் அவரிடம் பணத்தை நீட்டி... சில்லரையைப் பெற்றுக் கொண்டு, மூன்று பத்து ரூபாய் தாள்களை எண்ணிப் பூக்காரப் பெண்மணியிடம் நீட்டினாள்.

அவள் வாங்கிக் கொண்டு நகர... அர்ச்சனைப் பொருட்களைப் பூஜைக் கூடையில் அடுக்கிக் கொண்டு, அதன் மேலாக, செவ்வரளி மாலையையும் வைத்துக் கையில் எடுத்துக் கொண்டு கோவிலை அடைந்தனர்.

வாசலருகே இருந்த குழாயைத் திருகி... கால்களை அலம்பி விட்டு... கோவிலுக்குள் நுழைந்து அர்ச்சகரிடம் பூஜைக் கூடையை நீட்டினாள் உஷா.

"யார் பேருக்கும்மா அர்ச்சனை?"

"அம்பாள் பேருக்கே பண்ணிடுங்க!" - என்றதும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே அவர் கர்ப்பகிரகத்தை அடைய, இருவரும் கைகூப்பி அம்பாளை வணங்கினர்.

சிரித்த முகத்தோடு மஞ்சள் அலங்காரத்தில் மின்னிய முத்துமாலையம்மனை மலர்ந்த முகத்தோடு கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் உஷா. கண்களை மூடவோ விலக்கவோ மனமில்லை.

அப்படி ஒரு தெய்விக முகம். புன்னகையும் சாந்தமும் நிரம்பிய கண்கள்.

உஷாவின் கண்களுக்கு ஒரு கற்சிலையாகத் தோன்றவில்லை. அந்த அம்மனே உயிர் பெற்று அமர்ந்திருப்பதைப் போல் தோன்றியது.

'கோவிலுக்குப் போனதும் நல்லா வேண்டிக்கோ. இந்த வரனாவது நல்லபடியா முடியணும். இன்னிக்கு வரப்போற மாப்பிள்ளைக்கு என்னைப் பிடிச்சிருக்கணும். இந்தச் சம்பந்தம் கண்டிப்பா கைகூடணும்னு வேண்டிக்க...' என்ற ரங்கநாயகியின் வார்த்தைகள் தோய்ந்து போனது.

இந்த முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாலே போதுமே... வேறு என்ன கேட்பது? பெற்றவளுக்குத் தெரியாதா? பிள்ளைக்கு எப்போ எதைச் செய்ய வேண்டும் என்று? தனக்கான துணையை இவளே தேர்ந்தெடுத்து அனுப்ப மாட்டாளா?



நான் ஏன் கேட்க வேண்டும்? பாட்டி சொல்லி அனுப்பியது போல் எதுவும் வேண்டப் போவதில்லை. எனக்கு எது நடக்கணும்னு இருக்கோ அது நடக்கட்டும்.

கற்பூரத் தட்டோடு வந்தார் அர்ச்சகர். கற்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டதும்... பூஜைக் கூடையை அவளிடம் கொடுத்தார்.

"சிவந்த பூ வந்திருக்கு. பாட்டிகிட்ட சொல்லிடும்மா... எல்லாம் நல்லதாவே நடக்கும்னு..."

"சாமி! என்ன சொல்றீங்க?"

"பாட்டி காலம்பற வந்து... பூ கட்டி போடச் சொன்னாம்மா... போட்டதுல சிவந்த மலர் வந்திருக்கு. சுப சகுனம்."

உமாவின் முகம் கடுகடுத்தது. " இந்தக் கிழவி ஊர் முழுக்கச் சொல்லி வெச்சிருக்குதா?" - பற்களைக் கடித்தவாறே முணுமுணுத்த தங்கையை அதட்டினாள் உஷா.

"ஷ்... சும்மாயிரு! சரிங்க சாமி. நான் சொல் லிடுறேன்..."

"நல்லதும்மா..." - என்றவாறே விபூதி, குங்குமம் தர... அதைப் பெற்றுக் கொண்டே கோவில் பிரகாரத்தில் அமர்ந்த தமக்கையிடம் சீறினாள் உமா.

"இந்தப் பாட்டிக்கு வரவர ஏன்தான் புத்தி இப்படிப் போகுதோ? ச்சே!"

"ஏன்டி?"

"பின்னே என்னக்கா? பொண்ணு பார்க்க வர்றதை ஊர் பூரா சொல்லி தம்பட்டம் அடிக்கணுமா? அப்புறம் இது கைகூடலைன்னா கேட்கிறவங்களுக்கு பதில் சொல்ல முடியுமா? துக்கம் கேட்கிற மாதிரியில்ல கேட்பாளுங்க..."

"உமா! பாட்டி பழமையில ஊறினவங்க... பூ கட்டிப் போட்டுப் பார்க்கணும்னு விரும்பினது அவங்க விருப்பம்."

"அதை வீட்டுலயே கட்டிப் போட்டு பார்க்கலாமில்ல... ஏன் கோவில்ல வந்து சொல்லணும்?"

"இப்ப எதுக்கு நீ இவ்வளவு கோபப்படுற உமா? எனக்கொண்ணும் இதுல தப்பு இருக்கிறதா தோணலை. பெரியவங்க ஒரு காரியம் செய்தா அதுக்கு அர்த்தம் இல்லாம இருக்காது..."

"ம்... இப்படி அவங்க பண்ற கூத்துக்கெல்லாம் தலையாட்டிட்டு இரு. அவங்க உன்னை மாசத்துக்கு ரெண்டு நாள் நல்லா அலங்கரிச்சி... போற வர்றவனை எல்லாம் கூப்பிட்டு உட்கார வெச்சி காபி, டிபன் கொடுத்து உன்னைக் காட்சிப் பொருளா கொண்டு வந்து நிறுத்தட்டும்."

"உமா!"

"உனக்கென்ன முப்பது வயசா ஆகிப் போச்சி? இருபத்தி மூணு வயசுதானே ஆகுது. அதுக்குள்ள ஏன் இப்படிப் பறக்கிறாங்க?"



"நான் என்ன பண்ணுவேன் உமா? அப்பாவும் பாட்டியும் செய்யுற ஏற்பாடு இது. நான் மறுக்கவா முடியும்?"

"நான் மறுக்கச் சொல்லலைக்கா. ஆனா எதுக்காக இத்தனை மாப்பிள்ளையை வரச் சொல்லணும். நம்ம தகுதிக்கு ஏத்த மாதிரி ஒருத்தனைப் பார்த்து எல்லாம் பேசி முடிச்சிட்டுப் பெண் பார்க்க வரச் சொல்லலாமில்ல?

"சும்மா வந்து வயிறு முட்டத் தின்னுட்டு உன்னை நிக்க வச்சிக்கிட்டே பேரம் பேசுறாங்க. அசிங்கமா இல்லக்கா? பேரம் படியலைன்னா வேற இடம் பார்த்துக் கிறோம்னு கிளம்பிடுறானுங்க..."

"இதெல்லாம் காலம் காலமாத் தொடர்ந்து வர்ற சங்கடம். இதை நீயோ நானோ மாத்த முடியாது."

"மாத்தணும்க்கா. என் ஃப்ரெண்டோட அக்காவை இப்படித்தான் மாப்பிள்ளை வீட்டுல இருந்து பொண்ணு பார்க்க வர்றோம்னு சொன்னாங்களாம். அதுக்கு அவங்க சம்மதிக்கவே இல்லையாம்."

"ஏன்?"

"போட்டோவையோ இல்லன்னா வெளியிடங்கள்ல எங்கேயாவது வெச்சிப் பார்த்திட்டு... பிடிச்சிருந்தா மட்டும் வீட்டுக்கு வந்து நிச்சயம் பண்ணட்டும்னு சொல்லிட் டாங்களாம்."

"ஓஹோ!"

"அக்கா! இது சூப்பரான ஐடியா இல்ல?"

"ம்... கேட்க நல்லாத்தான் இருக்கு."

"நாமளும் இதே டெக்னிக்கை யூஸ் பண்ணினா என்ன?"

"நம்ம வீட்டுலயா? இதெல்லாம் நடக்கிற காரியமா உமா!"

"ஏன்? ஏன் நடக்காது? நான் அப்பாகிட்ட பேசுறேன்."

"வேண்டாம் உமா. ஏற்கனவே உன்னை வாயாடின்னு பாட்டி கரிச்சிக் கொட்டுறாங்க. இதுல உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலையெல்லாம்?"

"யாரது? ரங்கநாயகி பேத்திகளா?" - வயதான அம்மாள் தனது மூக்குக் கண்ணாடியை நிமிர்த்திக் கொண்டே கேட்க... உமா வாய்க்குள் முணுமுணுத்தாள்.

"ம்க்கும்! இது ஒரு இம்சை..." என்றவளை நறுக் கெனக் கிள்ளினாள் உஷா. எதிரில் நின்ற பெண்மணி யிடம் சின்னதாய்ப் புன்னகைத்தாள்.

"ஆமா பாட்டி..."

"இதுல யாரு மூத்தவ?"

"நான்தான் பாட்டி..." என்ற உஷாவை முழுவதுமாய் ஒரு முறை பார்த்து விட்டுத் தலையாட்டினாள் அந்த அம்மாள்.

"ம்... பார்க்க லட்சணமாத்தான் இருக்கிற. பிறகேன் வர்ற வரனெல்லாம் தட்டிப் போகுது?"



உமாவின் முகம் சினந்தது. "இதைக் கேட்கத்தான் காலங்கார்த்தால புறப்பட்டுக் கோவிலுக்கு வந்தீங்களா?"

"என்னடியம்மா... இப்படிக் கேட்கிற?"

"பின்னே... கோவிலுக்கு வந்தா சாமியை மட்டும் கும்பிடுங்கோ. அடுத்தவா விஷயத்தை அலசி ஆராயாதீங்கோ..."

"ஷ்... உமா! வாயை மூடு."

"நீ சும்மா இருக்கா. இதுங்களுக்கெல்லாம் இப்படி நறுக்குன்னு நாலு கேள்வியாவது கேட்கணும்..."

"அம்மாடி! ரங்கநாயகி சொன்னது எவ்வளவு உண்மை. சின்னப் பேத்தி சரியான வாயாடின்னு சொல்வாளே... அது சரிதான் போலிருக்கு!" - வக்கனையாய் நீட்டி முழக்கியவளிடம்... உமா ஏதோ கடுப்பாய்ப் பேசத் துவங்க... அவளைத் தடுத்தாள் உஷா.

"இதோ பாருங்கம்மா! நாங்க சாமி கும்பிட வந்தோம். சச்சரவுக்கு வரலை. வந்த வேலையைப் பாருங்களேன்... ப்ளீஸ்!" என்று மென்மையாகவும் அழுத்தமாகவும் சொல்ல... அந்த அம்மாள் சலிப்பாய் விலகினாள்.

"என்னவோம்மா! இந்தக் காலத்துப் பெண் பிள்ளைங்ககிட்ட ஒரு வார்த்தை கூடப் பேச முடியுற தில்லை. பாவம்தான் ரங்கநாயகி!" - முனகிக் கொண்டே அவள் போய் விட...

கோபமும் அவமானமுமாய் தமக்கையை ஏறிட்டாள் உமா.

"பார்த்தியா! இதுங்ககிட்ட எல்லாம் நாம பேச்சுவாங்க வேண்டியிருக்கு? எல்லாம் நம்ம வீட்டுல இருக்கிற பெரிசால வந்தது..."

"உமா! இது என்ன பேச்சு? அவங்க நம்ம பாட்டி. அவங்களுக்கு நாம மரியாதை கொடுக்கணும்..."

"மரியாதையா! என்னைப் பத்தி என்ன சொல்லி வெச்சிருக்கு பார்த்தியா?"

"அவங்க என்கிட்டதானே கேட்டாங்க. நீ ஏன் கோபமாப் பேசின?"

"அப்போ... அது கேட்டது தப்பில்லையா?" - சீற்றமாய்க் கேட்ட தங்கையின் வலக்கரத்தைப் பற்றி மென்மையாய் அழுத்தியவாறே... வறட்சியாய் புன்னகைத்தாள் உஷா.

"தப்பில்லை உமா... ஒரு பொண்ணை நாலு பேர் வந்து பார்த்துட்டுப் போறதும்... எந்த இடமும் அமையலைன்னா அக்கம் பக்கம் உள்ளவங்க கேட்கிறதும்...! இதுல கோபப்பட என்ன இருக்கு?"

"அக்கா! அப்போ... உனக்கு வருத்தமே இல்லையா?"

"ம்ப்ச்! வருத்தப்பட்டு என்ன ஆகப் போகுது? நமக்குப் பிடிக்காத விஷயத்தையோ... நம்ம மனசைக் கஷ்டப்படுத்தற வார்த்தைகளையோ யாராவது பேசினா... நாம பதிலேதும் பேசாம ஜஸ்ட் ஒரு புன்னகை செய்தாப் போதுமே... ஏன் வீணா கோபப்பட்டு மனசங்கடத்தையும் கசப்பையும் உண்டாக்கிக்கணும்...!" என்றவளைப் பார்க்கையில் மனம் கனத்தது.



பதில் பேசத் தோன்றாமல்... தமக்கையைக் கண்களில் வேதனையோடு பார்த்தாள்.

நல்ல பொன் நிறம். பளிச்சென்ற புன்னகையும் சாந்தமும் தவழும் அழகு முகம். எவ்வித ஒப்பனையும் செய்ய விரும்ப மாட்டாள். என்றாலும் அற்புதமான அழகுதான். போதுமான உயரம். சுருள் கூந்தல். மெல்லிய விரல்கள். அடக்கம், பணிவு என எந்தக் குறையும் சொல்ல முடியாதுதான்.

பிறகேன்... எந்த மாப்பிள்ளை வீட்டாருக்கும் இவளைப் பிடிக்க மாட்டேன் என்கிறது?

எது அவர்களது கண்களைக் குருடாக்குகிறது?

பணமா? பணம் அதிகம் கிடைக்கிறது என்றால் கழுதைக்குக் கூட தாலி கட்டுவார்களோ? வாரம் தவறாமல் இந்தக் கோவிலுக்கு வருகிறாளே... இந்தக் கடவுளுக்குக் கூட கண்ணில்லையா? கண்களில் வெறுப்போடு முத்து மாலையம்மனை வெறித்தாள் உமா.

"என்னடி... அமைதியாகிட்ட?"

"ஒண்ணுமில்லக்கா... போலாமா?"

"போறதா? இன்னும் அடிபிரதட்சணம் பண்ணலையே நான்..."

"என்னது? அடிபிரதட்சணமா?"

"ம்... பாட்டி சொல்லி விட்டாங்க. ஒவ்வொரு அடியா பாதம் வெச்சுக் கோவில் பிரகாரத்தை மூணு முறை சுத்தனுமாம்..."

"விடிஞ்சிடும். நான் எப்போ காலேஜுக்குப் போறதாம்?"

"டென் மினிட்ஸ்ம்மா... இதோ இப்ப பண்ணிடுறேன்..." - என்றவாறே எழுந்தாள் உஷா.

அவளது கையிலிருந்த பூஜைக் கூடையை வாங்கிக் கொண்டாள் உமா.

"ம்... ம்... சீக்கிரம் செய். டயமாகுது..."

"ஏய்! நீயும் வாயேன். சேர்ந்தே நடக்கலாம்."

"நானா? நான் எதுக்கு?"

"பாட்டி சொன்னாங்க. கன்னிப் பெண்கள் இப்படி அடிபிரதட்சணம் செய்தா மனசுக்கேத்த மாதிரி கணவன் கிடைப்பானாம்..."

"முதல்ல உனக்குக் கிடைக்கட்டும். பிறகு பார்க்கலாம்."

"வாடி!"

"அக்கா! நான் கிடைக்கணும்றதுக்காக என்னைக் கட்டிக்கப் போறவன்தான் இதெல்லாம் செய்யணும். நீ போ..."



"ம்... செய்வான்... செய்வான்..." - புன்னகையோடு சொல்லி விட்டு... அம்பாளை வணங்கி விட்டு தன் மெல்லிய பாதத்தை குளிர்ந்த தரையில் ஊன்றி நடக்கத் துவங்கினாள் உஷா.

உமா கண்மூடி வேண்டத் துவங்கினாள்.

'தாயே! எங்க அக்காவிற்கு ஏற்ற துணையை நீதான் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். இன்று வரப் போகும் மாப்பிள்ளைக்கு என் அக்காவை உடனே பிடிக்க வேண்டும். எந்தத் தடங்கலும் இன்றித் திருமணம் நடந்தேற வேண்டும்.

'அவள் மனதை மீண்டும் மீண்டும் ரணப்படுத்தாதே. எல்லாம் நல்லபடியா நடக்கணும். நீதான் துணை நிற்கணும்!' - இரு கரம் கூப்பி உமா வேண்டிக் கொண்டிருக்க...

கோவிலில் மணியோசை தனது ஒலியெழுப்பி ஆசி வழங்கியது.

## 2

ஒரு கோடி பூக்கள்
உலகெங்கும் உண்டு
இந்தப் பெண் போல அழகான
பூ ஒன்று உள்ளதா?

**கா**ரை விட்டு இறங்கினான் ராஜகுமாரன். பெயருக்கேற்ற தோரணை. கண்களைச் சுழற்றி அந்தக் கோவிலைப் பார்த்தான்.

புதுப் பொலிவோடு, இறை இசையோடு சுத்தமாகவும் நறுமணத்தோடும் இருந்தது முத்துமாலை அம்மன் கோவில்.

காரின் மறுபக்கக் கதவைத் திறந்து கொண்டு இறங்கிய நண்பனை ஏறிட்டான்.

"சீனு! இந்தக் கோவில்தானா?"

"யா ராஜா!"

"அந்தப் பொண்ணு வந்திருப்பாளா?"

"வந்திருப்பாள். வா! உள்ளே போய் பார்க்கலாம்."

"நான் எதுக்கு சீனு? நான் கார்லயே வெயிட் பண்றேன். நீ போய் பேசிட்டு வா..."

"ஏய்! என்னப்பா நீ? இது வரைக்கும் வந்துட்டு... கடைசி நேரத்தில காலை வாரி விடுற? நான் நீ இருக்கிற தைரியத்திலதான் இவ்வளவு தூரம் வந்தேன்..." - கண்ணாடி அணிந்திருந்த சீனிவாசன் சற்று பயமாய் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான்.

"நோ சீனு! நீ செய்யுற தப்புல என்னையும் சேர்த்திடாதே. நீ மட்டும் போயிட்டு வா..."

"ராஜா! என்னடா இப்படிச் சொல்ற?"

"வேற எப்படிச் சொல்றது. நீ செய்யுறது தப்புதானே?"

"நோ. நான்... நான் எப்படி தாரணியை விட்டுட்டு இந்தப் பொண்ணைக் கட்டிக்க முடியும்?"



"அதை உன் வீட்லதானே நீ சொல்லணும்? அதை விட்டுட்டு மனசில ஆயிரம் கனவுகளோட இருக்கிற பொண்ணுகிட்ட..."

"ஏய்... ஏய்! நான்தான் அந்தப் பொண்ணோட போட்டோவைப் பார்த்திருக்கேன். அந்தப் பொண்ணுக்கு நான் யாருன்னே தெரியாது. பிறகெப்படி அது மனசில கனவுகளை வளர்த்திட்டு இருக்கும்?"

"முட்டாள்! நான் கனவுன்னு சொன்னது உன்னை நினைச்சிட்டு இருக்கிறதைச் சொல்லலை. பெண் பார்க்க வர்றாங்கன்னு தெரிஞ்சதும் அந்தப் பொண்ணு மனசில எவ்வளவு எதிர்பார்ப்பு இருக்கும்?

"மாப்பிள்ளை நல்லவரா இருக்கணும்... மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்குத் தன்னைப் பிடிக்கணுமேன்னு... எவ்வளவு டென்ஷனோட கோவிலுக்கு வந்திருக்குதோ?"

"அந்த டென்ஷனையும் எதிர்பார்ப்பையும் இப்பவே நிறுத்திடலாம்னு தான் வந்திருக்கேன் ராஜா! ஈவ்னிங் வீட்ல போய் பார்த்து மறுக்கிறதை விட... இப்பவே என் முடிவைச் சொல்லிட்டா ஏமாற்றம் குறைவா இருக்குமில்ல...?

"அதோட அவங்களோட செலவையும் மிச்சப் படுத்திடலாம். உறவுக்காரங்க முன்னால அந்தப் பொண்ணோட மனசையும் நாம கஷ்டப்படுத்த வேண்டாமே..."

"ம்... இதெல்லாம் நல்லாப் பேசு. ஆனா உன் வீட்டுல மட்டும் எதையும் பேசிடாதே..." - கடுப்பாய்ச் சொன்னான் ராஜகுமாரன்.

சீனிவாசன் அலுத்துக் கொண்டான். "நான் என்ன பண்ணுவேன் ராஜா. அப்பா மிலிட்டரி மேன். சதா அவரோட மிரட்டலுக்குப் பயந்து அவர் முன்னால நின்னு பேசவே பயமா இருக்கு. அவர்கிட்ட போய் எப்படி எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்னு சொல்றது?"

"ஏன்? சொன்னா என்ன?"

"ஏன்டா! அதுக்கெல்லாம் தைரியம் இருந்தா... இப்படி முன்ன பின்ன பார்க்காத பொண்ணைத் தேடி வந்திருப்பேனா?"

"சரி. சீக்கிரமாப் போய் பேசிட்டு வா. டயமாகுது..."

"ராஜா! ப்ளீஸ்டா... தனியாப் போய் பேச எனக்குப் பயமா இருக்குடா... நீயும் வாடா."

"நோ சான்ஸ். நான் இந்த விளையாட்டுக்கு வரலை..."

"டேய்! நான் உன் நண்பன்டா!"

"அதுக்காகத்தான் உன்னை இவ்வளவு தூரம் என் கார்ல கூட்டிட்டு வந்தேன். இதுக்கு மேல என்னால ஒண்ணும் பண்ண முடியாது..." - என்றவாறே காரின் கதவைத் திறந்து உள்ளே ஏற முயன்றவனின் கையைப் பற்றிக் கொண்டான் சீனிவாசன்.

"நண்பா! இது உன் கையில்ல... காலா பிடிச்சிக் கேட்கிறேன். எனக்கு ஹெல்ப் பண்ணுடா!"

"அடடா! உன்னோட பெரிய இம்சைடா. கையை விடு."



"நீ என்கூட வர்றேன்னு சொல்லு."

"விடு... வர்றேன்."

"தேங்க்ஸ் நண்பா!"

"பட் ஒன் திங்! உள்ளே வந்த பிறகு எனக்குப் பயமா இருக்கு... நடுக்கமா இருக்குன்னு என்னைப் பேசச் சொன்ன... அப்புறம் நடக்கிறதே வேற?" - ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தான் ராஜகுமாரன்.

"நோ நண்பா! இது என்னோட லைஃப். நான்தான் பேசியாகணும். நீ சும்மா என்கூட வந்து நின்றால் போதும்..."

"சரி வா... பொண்ணோட போட்டோ கொண்டு வந்தியா?"

"ம்ஹூம்... அம்மாகிட்ட இருக்கு."

"அப்போ எப்படிடா கண்டுபிடிப்ப?"

"நேற்று முழுக்க நல்லாப் பார்த்து அந்தப் பொண்ணோட உருவத்தை என் மைண்ட்ல பதிவு பண்ணியிருக்கேன். எத்தனை கூட்டத்துக்கு நடுவில பார்த்தாலும் சட்டுன்னு கண்டுபிடிச்சிடுவேன்!" - என்றான் பெருமையாக.

"இந்த வெட்டி பந்தாவுக்கெல்லாம் குறைச்சலில்லை. சரி... வா..." - என்றதும்... காருக்கு அருகே காலணிகளைக் கழற்றி விட்டுக் கோவிலுக்குள் நுழைந்தனர்.

ராஜகுமாரன் மிக மெல்லிய குரலில் கேட்டான்.

"ஏன்டா சீனு! அந்தப் பொண்ணு இந்தக் கோவிலுக்குத் தான் வருவாளா? நல்லாத் தெரியுமா?"

"நேற்றே எங்க அம்மா மூலமா நல்லா விசாரிச் சிட்டேன். செவ்வாய், வெள்ளியானா காலையில கோவிலுக்கு வராம பச்சைத் தண்ணி கூட குடிக்க மாட்டாளாம். அவ்வளவு பக்தி."

"அப்போ நிச்சயம் நல்ல பொண்ணாத்தான் இருக்கும்."

"இருக்கலாம்..."

"பிறகேன்டா வேண்டாம்னு சொல்ற? பேசாம வீட்டுல பார்த்த பொண்ணையே கட்டிக்க வேண்டியது தானே?"

"டேய்! என்னடா கோவிலுக்குள்ள நுழைஞ்சதும் அந்தர் பல்டி அடிக்கிற? இதுக்கா உன்னைக் கூட்டிட்டு வந்தேன்?"

"இல்லை சீனு... நாம தேர்ந்தெடுக்கிற லைஃபை விட நம்ம பேரண்ட்ஸ் தேர்ந்தெடுக்கிற லைஃப்தான் பெஸ்ட்னு நான் நினைக்கிறேன்."

"இந்த நினைப்பெல்லாம் உன் கல்யாண விஷயத்துல இருக்கட்டும். எனக்கு என் தாரணிதான் முக்கியம்."

"எப்படியோ போ... சரி. நான் சாமி கும்பிட்டுட்டு வர்றேன். நீ அந்தப் பொண்ணு எங்கே நிற்கிறான்னு பாரு?"



"ஏய்! நாம என்ன சாமி கும்பிடவா வந்தோம்?"

"சீனு! இதெல்லாம் ரொம்ப ஓவர். நீ உன்னோட பெர்சனல் மேட்டருக்காக என்னையும் பலிகடா மாதிரிக் கூட்டிட்டு வந்திருக்க. அந்தப் பொண்ணு மட்டும் நீ பேசினதைக் கேட்டுக் கோபப்பட்டுக் கத்தினான்னு வை... நம்ம ரெண்டு பேருக்கும் தர்ம அடி தாராளமா கிடைக்கும்..." - ராஜகுமாரன் சீரியஸாகவே சொல்ல... சீனிவாசன் பயமாய் விழித்தான்.

"என்ன நண்பா... இப்படிப் பயமுறுத்துற?"

"இப்படியும் நடக்கலாம்னு உன்னை எச்சரிக்கிறேன். அப்படி எதுவும் நடக்காம... நாங்க முழுசா வீடு போய் சேரணும்னு நான் போய் சாமிகிட்ட வேண்டிக்கிறேன். நீ அதுக்குள்ள அந்தப் பொண்ணு எங்கே இருக்குதுன்னு பாரு?"

"ச... சரி. ஆனா நீ சீக்கிரமா சாமி கும்பிட்டுட்டு வந்திடு. என்னால தனியாப் பேச முடியாது."

"நீ இப்படியே டயத்தை வேஸ்ட் பண்ணிட்டு இரு. அந்தப் பொண்ணு வீட்டுக்குப் போயிடும்."

"இல்ல... இல்ல. இதோ கிளம்பிட்டேன்!" - என்றவாறு சீனிவாசன் கண்களை நாலாபுறமும் சுழல விட்டவாறே விலகிச் செல்ல... சின்னச் சிரிப்போடு திரும்பிய ராஜ குமாரன் தனக்கு வெகு அருகே வந்து நின்ற பெண்ணைக் கண்டு அசைவற்றுப் போனான்.

மெல்லிய வெண்பஞ்சுப் பாதங்களை நிதானமாய் அடியெடுத்து வைத்துக் கொண்டு... பாதம் பார்த்து குனிந்த தலையும், வீசிய காற்றில் அசைந்தாடும் கருங்கூந்தலுமாய் நின்றவளைப் பார்த்துக் கொண்டே நகர மனமின்றி நின்றான்.

பாதங்களைப் பார்த்துக் கொண்டே நடந்து வந்த உஷா... தன் எதிரில் நின்ற ஆணின் பாதத்தைக் கண்டு மெல்ல நிமிர்ந்தாள்.

முழு நிலவை வெகு அருகே கண்டது போல் பரவசமானான் ராஜகுமாரன்.

'இது என்ன முகம்? புதிதாய் பூத்த ரோஜாப் பூ போல... பௌர்ணமி நிலவு போல... இல்லை... இப்போதுதான் பிறந்த குழந்தையின் பட்டு முகம் போல்... ம்ஹூம்... வானில் தவழும் பஞ்சுப்பொதி மேகம் போல்... அதிகாலையில் பிரகாசிக்கும் மஞ்சளும் சிவப்பும் கலந்த சூரியன் போல்...

'ம்ஹூம்... இது எல்லாம் சேர்ந்தால்கூட இந்த முகத்திற்கு ஈடாகாது. இவள் என்ன பிரம்மனால் செய்யப்பட்ட பளிங்குச் சிலையா? கைதேர்ந்த ஓவியனின் அற்புதப் படைப்பா?

இது என்ன கண்கள்... மானா? மீனா? கருவண்டா? ம்ஹூம்... இது உயிர் வரை பாயும் அம்புகள். இத்தனை குட்டியான மூக்கா? சிரிக்கின்றாளா? இல்லை... இந்த உதடுகளின் இயல்பே இதுதானா!



தனக்குள் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந் தவனைப் புருவம் உயர்த்திப் பார்த்தாள் உஷா.

என்ன இது? நடு வழியில் சிலை போல் நின்று கொண்டிருக்கிறான்? அவனது விழிகள் அசையாமல், தன் முகத்தில் நிலைத்திருக்க... சற்று கோபமாய்க் குரல் கொடுத்தாள்.

"எக்ஸ்கியூஸ் மீ!"

ராஜகுமாரனின் விழிகள் இன்னும் அகலமாய் விரிந்தது. 'அட! குயில் ஏன் இவ்வளவு மென்மையாய் கூவுகிறது?'

"எக்ஸ்கியூஸ் மீ! உங்களைத்தான்..." - உஷா குரலை உயர்த்த... திடுக்கிட்டு விழித்தான்.

"ஒரு ஓவியம் உயிர் கொண்டு என்னிடம் பேசுகிறது..." - மனதில் நினைத்தது வார்த்தையாய் வெளியேற... உஷாவின் முகம் கோபத்தால் சிவந்தது.

"ஏய் மிஸ்டர்! இப்ப என்ன சொன்னீங்க?"

சட்டென சுதாரித்தான். "யா...ரு? நானா? நான் எதுவும் சொல்லலையே...!"

"சொன்னீங்க. ஏதோ... ஓவியம் அது இதுன்னு..."

"ஓ! அதுவா? அது ஒரு கவிதை... சும்மா சொல்லிப் பார்த்தேன்..." என்றான் சமாளிப்பாய்.

"உங்க கவிதையைக் கொஞ்சம் ஓரமா நின்னு சொல்லிப் பாருங்க. இப்ப வழியை விடுங்க..."

"ஓ! ஸாரி..." - என்றவாறு அவன் விலகி நிற்க... தன் வேண்டுதலைத் தொடர்ந்தாள் உஷா.

அவளது நடையை வியப்பாய்ப் பார்த்தவாறே தானும் அவளுடன் நடந்தவாறே கேட்டான். "என்னங்க! கால்ல எதுவும் அடிபட்டிருக்கா?" - அவன் அக்கறையாய் விசாரிக்க... கோபமாய் அவனை முறைத்து விட்டுத் தன் நடையைத் தொடர்ந்தாள்.

"நான் என்ன தப்பாக் கேட்டுட்டேன்னு முறைக்கிறீங்க? ஒரு வயசுக் குழந்தை மாதிரி நடந்திட்டு இருக்கீங்களே... அதான் கேட்டேன்."

இதற்கும் அவளிடம் பதில் இல்லை. அவனே தொடர்ந்தான்.

"கால்ல அடிபட்டிருந்தா வீட்ல ரெஸ்ட் எடுக்கலாமே... ஏன் இப்படி ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கிறீங்க?" - அவன் விடாமல் நச்சரிக்க... கடுப்பாய் நின்றாள்.

"ஹலோ! யார் நீங்க? ஏன் இப்படி டிஸ்டர்ப் பணறீங்க?"

"ஹாய்! நான் ராஜகுமாரன். எம்.எஸ்ஸி. படிச்சிருக்கேன். சொந்தமா பிசினஸ் பண்ணிட்டு இருக்கேன். அப்புறம்..."

"ஸ்டாப் இட்! இதையெல்லாம் ஏன் என்கிட்ட சொல்றீங்க?"

"நீங்கதானே கேட்டீங்க?"



"நானா? நான் எப்போ கேட்டேன்?"

"இப்பத்தானே கேட்டீங்க. யார் நீங்கன்னு? அதான் சொன்னேன்..."

"ஓ! காட்..." - நெற்றியில் கை வைத்துக் கொண்டாள் உஷா.

"ஏங்க! தலை வலிக்குதா?"

"ஹும்..." - கடுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு நடக்கத் துவங்கினாள்.

மீண்டும் கேட்டான். "ஏங்க! அப்பவே கேட்டேனே... கால்ல என்ன?"

"எதுக்குக் கேட்கிறீங்க?"

"இப்படி நடக்க முடியாம நடக்குறீங்களே... பார்க்க கஷ்டமா இருக்குங்க..." - என்றவனை வியப்பாய் விழிகளை விரித்துப் பார்த்தாள்.

"யார் ஸார் நீங்க?"

"அதான் சொன்னேனே... ராஜகுமாரன். எம்.எஸ்..."

"போதும்... போதும். இப்ப உங்களுக்கு என்ன வேணும்?"

"நீங்க இப்படி நடக்கிறதுக்கான காரணம் தெரியணும்..."

"இது வேண்டுதல்!"

"என்ன?"

"சாமிகிட்ட வேண்டிக்கிட்டு அடிபிரதட்சணம் செய்தா... நாம நினைச்சது நடக்கும்னு எங்க பாட்டி சொல்வாங்க..."

"ஓஹோ! நீங்க என்ன வேண்டிக்கிட்டீங்க?" - அவன் இயல்பாய்க் கேட்க... மீண்டும் கடுப்பானாள்.

"மிஸ்டர்! அது எதுக்கு உங்களுக்கு?"

"சும்மா தெரிஞ்சுக்கலாம்னுதான்..."

"அதை நீங்க தெரிஞ்சுக்க வேண்டிய அவசிய மில்லை..."

"என்ன பெரிய ரகசியம்? உங்களை மாதிரி வயசுப் பொண்ணுங்களுக்கு வேற என்ன வேண்டுதல் இருக்கப் போகுது? நல்ல மாப்பிள்ளை கிடைக்கணும்னு வேண்டுவீங்க... அதானே?"

"ஏன்? எங்களுக்கெல்லாம் வேற வேண்டுதல் இருக்காதா?"

"அப்ப என்ன வேண்டுதல்ன்னு சொல்லுங்க..."

"அதை உங்ககிட்ட சொல்ல வேண்டிய அவசிய மில்லை."

"அப்போ நான் சொன்ன காரணம்தான்!" - அவனும் விடாப்பிடியாய் நிற்க...

உஷா தவிப்பாய் அக்கம் பக்கம் பார்த்தாள். கண்களில் பயமும் பதட்டமும் தெரிந்தது.



'யார் இவன்? இப்படி வலிய வந்து பேசி வம்பை வளர்க்கிறானே? யாரேனும் தெரிந்தவர்கள் பார்த்து விட்டால் என்ன ஆவது? அந்நிய ஆடவனுடன் இப்படிப் பொது இடத்தில் நின்று பேசுவது தெரிந்தால்... தன் பெயரோடு தன் குடும்பத்தின் பெயருமல்லவா கெட்டுப் போய் விடும்.

'இவன் எதற்காக தன்னிடம் வந்து பேசுகிறான்? வேண்டுதலைப் பாதியில் நிறுத்தி விட்டால் பாட்டியிடம் பதில் சொல்ல முடியாது. தொடர்ந்து நடக்க இவன் விடமாட்டான் போலிருக்கிறதே... நிழலாய்த் தொடர் கிறானே... இவனை எப்படி விரட்டுவது?' - சுற்றும் முற்றும் பார்த்தவளது கண்கள் வேப்பமர நிழலில் பொறுமையின்றி அமர்ந்திருந்த உமாவின் மீது நிலைத்தது.

'ம்... இவள்தான் இவனது வாயை அடைக்கச் சரியான ஆள். ஓட ஓட விரட்டி விடுவாள்...' - புன்னகையோடு ராஜகுமாரனை ஒரு தரம் பார்த்து விட்டு... தங்கையை அழைத்தாள் உஷா.

"உமா! ஏய் உமா...!" - கோவிலில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலின் ஓசையால் அவள் அழைத்தது... தங்கையின் காதில் விழவில்லை. நின்ற இடத்தில் நின்றவாறே இரு கரங்களையும் தட்டி மீண்டும் குரல் கொடுத்தாள்.

"உமா..." - இம்முறை உமா திரும்பினாள்.

"என்னக்கா?"

"கொஞ்சம் வாயேன்..."

"இதோ வர்றேன்..." - என்றவாறு பூக்கூடையோடு எழுந்து அவர்களை நோக்கி வர...

ராஜகுமாரன் உஷாவிடம் திரும்பினான். "யாருங்க அது?"

"ம்... உங்களை மாதிரி ஆட்களுக்கு என் தங்கைதான் சரி..."

"ஓ! எனக்கு அறிமுகப்படுத்தப் போறீங்களா?"

"ஹய்யோ... உமா! கொஞ்சம் சீக்கிரமா வாயேன்..." - என்று சற்று உரக்கவே அழைக்க...

மரத்தடியில் நின்று கண்களால் துழாவிக் கொண்டிருந்த சீனிவாசன் திரும்பினான். அவனது முகம் சற்று குழம்பி... பின் புன்னகைத்தது.

3

மனதில் ஒன்று விழுந்ததம்மா!
விழுந்தது பூவாய் மலர்ந்ததம்மா!
கனவில் ஒன்று தெரிந்ததம்மா!
கைகளில் வந்தே விழுந்ததம்மா!

"யாருக்கா இது?" - என்றவாறே தன்னைப் பார்வையால் அளவெடுத்த இளையவளைக் கண்டு லேசாய்ப் புன்னகைத்தான் ராஜகுமாரன்.

"ஹலோ! என் பேர் ராஜகுமாரன்."



"யாருக்கா இது?"

"அதான் சொன்னேனே... என் பேர்..."

"மிஸ்டர்! நான் உங்ககிட்ட எதுவும் கேட்கலையே... என் அக்காகிட்டதானே கேட்கிறேன்."

"இல்லை... ஒரு சுயஅறிமுகம் பண்ணிக்கலாம்னு..."

"தேவையில்லை. அக்கா! என்ன பிரச்சனை? நீ ஏன் பாதியில நின்னுட்ட?"

"அதையேன் கேட்கிற உமா... நான் அடிபிரதட்சணம் பண்ணிட்டு இருக்கும்போது எதிர்ல வந்து நின்னார். தெரியாத்தனமா யார் நீங்கன்னு கேட்டுட்டேன்... அதுல இருந்து பேச ஆரம்பிச்சவர் நிறுத்தவே மாட்டேங்கிறார். என்னை நடக்கவும் விடமாட்டேங்கிறார்...

"ஏதாவது பேசிட்டுக் கூடவே வந்து இம்சை பண்றார். யாராவது பார்த்தா என்ன ஆகும்? கொஞ்சம் என்னன்னு கேளு உமா! நான் வேண்டுதலை முடிச்சிட்டு வந்திடுறேன்!" - என்றதும் கோபமாய் நிமிர்ந்தாள் உமா.

"என்ன மிஸ்டர்! ஈவ் டீஸிங்கா? கோவில்ல கூட நிம்மதியா நடமாட விடமாட்டீங்களா?"

"அய்யய்யோ! என்னங்க... என்னைப் போய் இவ்வளவு மட்டமா எடை போட்டுட்டீங்க? நான் அப்படிப்பட்ட ஆள் இல்லைங்க..."

"அதான் உங்க முகரையைப் பார்த்தாலே தெரியுதே..."

"என்ன தெரியுது?"

"லிட்டர் கணக்கில ஜொள் விட்டுட்டுப் பொண்ணுங்க பின்னாடி அலையுற கேஸுன்னு..."

"நோ சிஸ்டர்! திஸ் இஸ் டூ மச். பொண்ணுங்க மேல நான் ரொம்ப மதிப்பு வெச்சிருக்கேன். ரொம்ப கண்ணியமானவன்."

"எது? இப்படிக் கோவில்ல வந்து சும்மா இருக்கிற பொண்ணுகிட்ட வம்பு பண்ணுறது கண்ணியமான ஆள் செய்யுற காரியமா?"

"தப்புதாங்க... ஆனா உங்க அக்காவைப் பார்த்த நிமிஷத்தில இருந்து எனக்குச் சுற்றுப்புறமே மறந்து போச்சு. ஏதோ ரொம்ப நாளா பழகினவங்களை நேர்ல பார்த்த மாதிரி ஒரு ஃபீலிங்ஸ்."

"என்ன?" - நடக்க முயன்ற உஷா நின்றாள்.

"தப்பா நினைச்சுக்காதீங்க மேடம்! எப்பவுமே என் மனசில பட்டதை பளிச்சுன்னு சொல்லிடுவேன். உங்களைப் பார்த்தா..."

"யோவ்! உன் மனசுல என்ன சினிமா ஹீரோன்னு நினைப்பா?" - உமா பற்களைக் கடித்தவாறே சீறினாள்.

"என்னங்க இப்படிக் கேட்கிறீங்க?"

"பின்னே? நீங்க பேசுறதெல்லாம் சினிமா டயலாக்தானே!"

"என்னங்க உமா! சினிமாக்காரங்க என்ன வேற்றுக் கிரகவாசியா? நம்மை மாதிரி உள்ளவங்கதானே... அவங்க



மனசில தோணுறதை டயலாக்கா எழுதுறாங்க. நான் என் மனசில தோணினதைச் சொன்னேன்...."

"உங்க மனசில என்ன தோணினாலும் சொல்லிடுறதா? யார்கிட்ட பேசுறோம்னு ஒரு வரைமுறை கிடையாதா? நாங்க..." - உமா குரலை உயர்த்தும் முன் சீனிவாசனின் குரல் குறுக்கிட்டது.

"ராஜா! என்னடா நடக்குது இங்கே? இவங்களை உனக்கும் தெரியுமா?" - நண்பனின் கேள்வியில் குழம்பினான் ராஜகுமாரன்.

"சீனு! என்ன கேட்ட? உனக்கும்னா? அப்போ... இவங்க...?"

"ஆமான்டா! நான் சொன்னேன்ல... அந்தப் பொண்ணு... இவ... இவங்கதான்!" - சீனிவாசன் சற்று தயக்கமாகவே சொல்ல... பளாரென அடி வாங்கப் பட்டதைப் போல் உணர்ந்தான்.

அவளைப் பார்த்ததும் எழுந்த பரவசம், உற்சாகம், ஆனந்தம் அனைத்தும் தவிடுபொடியானது.

'ச்சே! தன் நண்பனுக்குப் பார்த்த பெண்ணையா இத்தனை நேரம் பின் தொடர்ந்தேன்? இந்தப் பெண்ணையா துளித்துளியாய்ப் பார்த்து ரசித்தேன்? இவள் மீதா கண்டதும் மையல் கொண்டேன்? ஐயோ! இது எத்தனை பெரிய பிழை?

நண்பனின் மனைவி எனக்குச் சகோதரி அல்லவா! அவளைப் போய் நொடியில் ஏதேதோ கற்பனை செய்து

கொண்டேனே! இது மட்டும் சீனுவிற்குத் தெரிந்தால்... நிச்சயம் என்னை ஒரு மனிதனாகக் கூட மதிக்க மாட்டான்.

இந்தப் பெண் கூடத்தான் என்ன நினைப்பாள்? விலகிப் போனவளைத் தொடர்ந்து சென்று வம்பு பேசி னேனே... தன்னைப் பெண் பார்க்க வரும் மாப்பிள்ளையின் தோழன்தான் என்று தெரிந்தால் என் முகத்தில் காறி உமிழ மாட்டாளா? நான் ஏன் இப்படிச் செய்தேன்?' - ராஜகுமாரன் தன்னையே கடுமையாய் நொந்து கொண் டிருந்த அதே நேரம் இன்னொன்றும் உறைத்தது.

'மை காட்! சீனு இன்று இவளைப் பெண் பார்க்கப் போவதில்லை. இந்தத் திருமணத்தில் தனக்கு நாட்டமில்லை என்று சொல்லத்தான் வந்திருக்கிறான். சீனுவிற்கோ தனக்கோ அது சாதாரண விஷயமாய் இருக்கலாம். ஆனால்... இந்தப் பெண்... இவளால் அந்த வார்த்தைகளைத் தாங்க முடியுமா?

குழந்தைத்தனம் மாறாத அனிச்சமலர் போன்றிருப் பவளிடம் எப்படிச் சொல்வது? பேசாமல் சீனுவை எதுவும் பேச விடாமல் தடுத்து விட்டால் என்ன?' - ராஜகுமாரன் நினைத்துக் கொண்டிருக்கையிலே... உஷாவும் உமாவும் அவ்விடத்தை விட்டு விலக... அவர்கள் முன் கை நீட்டித் தடுத்தான் சீனிவாசன்.

"மிஸ் உஷா! ஒரு நிமிஷம்..."

தன் பெயரைச் சொல்லி அழைத்தவனைத் திகைப்பாய் ஏறிட்டாள் உஷா.



சட்டென்று ஒரு பயம் ஊடுருவ... மிரட்சியாய் பின்னே நின்ற ராஜகுமாரனை ஒரு தரம் பார்த்து விட்டுத் தங்கையின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"உ...மா... என்ன இந்த ஆள் என் பேரைச் சொல்றார்?"

"அதானே! ஹலோ யார் ஸார் நீங்க?"

"சொல்றேன். அப்படி மரத்தடி நிழல்ல நின்னு பேசலாமா?"

"ஏன்? உங்ககிட்ட நாங்க என்ன பேசணும்?" - உமாவின் குரல் உயர்ந்தது.

சீனிவாசன் லேசாய் பதறினான். "கோபப்படாதீங்க! ரொம்ப முக்கியமான விஷயம் இது. கொஞ்சம் ஓரமா நின்னு பேசலாமே... இங்கே நிறையப் பேர் வந்திட்டு இருக்காங்க..."

"உங்களை யாருன்னே தெரியாது. உங்ககிட்ட அப்படி என்ன ஸார் முக்கியமான விஷயம் பேசணும்?"

"நான்... என் பேர் சீனிவாசன். இன்னிக்கு ஈவ்னிங் உங்க வீட்டுக்குப் பொண்ணு பார்க்க வர்றாங்கள்ல... அந்த மாப்பிள்ளை நான்தான்!" - என்றதும்...

குப்பென முகம் சிவந்து... தலையைத் தாழ்த்திக் கொண்டாள் உஷா.

பதட்டத்தில் அவளது பிடி மேலும் இறுக, கோபம் தணிந்து புன்னகைத்தாள் உமா.

இருவரது முகத்தையும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டு நின்ற ராஜகுமாரனின் மனம் வெகுவாய்க் கலங்கியது.

'இந்தச் சின்னப் பெண்களின் மனதில் இந்த நிமிடம் என்ன நினைவு ஓடிக் கொண்டிருக்கிறதோ? சீனு மட்டும் வந்த விஷயத்தைச் சொன்னால்... இவர்களின் மனநிலை என்னாகும்?'

"என்ன மாப்பிள்ளை ஸார்... இது? இப்படியா சொல்லாம கொள்ளாம வந்து நிற்கிறது? நாங்க ஏதோன்னு நினைச்சிட்டோம்..."

"அது வந்து... நான் அந்தப் பக்கம் தேடிட்டு..."

"சரி. உங்க அவஸ்தை எனக்குப் புரியுது. என்ன ஈவினிங் வரைக்கும் வெயிட் பண்ண உங்களுக்குப் பொறுமை இல்லையா?"

"சேச்சே! அப்படி இல்ல..." - அவசரமாய் மறுத்தவனைக் கண்டு கேலியாய்ப் புன்னகைத்தாள் உமா.

"பயப்படாதீங்க ஸார்! நான் ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டேன். ஈவினிங் கூட்டத்தோட வந்தா பொண்ணைச் சரியா பார்க்க முடியாதுன்னுதானே வீட்டுக்குத் தெரியாம வந்திருக்கீங்க?"

"நீங்க சொன்னதுல கடைசி வார்த்தை மட்டும் உண்மை."

"என்ன?"



"வீட்டுக்குத் தெரியாமத்தான் வந்திருக்கோம். உஷாகிட்ட கொஞ்சம் பேசணும்..."

"அட பார்றா... அக்கா! மாப்பிள்ளை ரொம்ப ஃபாஸ்ட்டா இருக்காரே..."

"உமா! எனக்கு பயமா இருக்கு. வா போகலாம்."

"அட நில்லுக்கா! நான்தான் இருக்கேனில்ல... பிறகேன் பயப்படுற? சும்மா பேசு..."

"நோ. இதெல்லாம் தப்பு. அம்மா அப்பாவுக்குத் தெரியாம நாம இப்படிக் கண்ட ஆம்பிளையோட நின்னு பேசக்கூடாது வா..."

"அக்கா! அவர் உன்னைக் கட்டிக்கப் போற மாப்பிள்ளை!"

"கழுத்தில தாலி ஏறும் முன்னால நான் யாரையும் மாப்பிள்ளையா ஏத்துக்க முடியாது. யாரோடயும் பேசவும் முடியாது. நீ வா..." - என்றவளை வியப்பாய்ப் பார்த்தான் ராஜகுமாரன். அவள் மீது பிரியத்தோடு மதிப்பும் கூடியது.

சீனிவாசன் விடுவதாய் இல்லை. "இதோ பாருங்க! உங்க கொள்கையெல்லாம் சரிதான். உயர்வானதுதான். பட்! என்னைக் கொஞ்சம் பேச விடுங்க... நான் ஒண்ணும் பொழுது போகாமல் இங்கு வரவில்லை..."

"என்ன மாப்பிள்ளை ஸார்! ஒரு மாதிரி பேசுறீங்க?"

"மிஸ் உமா! நான்... சில முக்கியமான விஷயம் பேசணும்... உங்க அக்காகிட்ட தனியா..."

"பரவாயில்லை. சும்மா சொல்லுங்க..."

"ஓ.கே. மிஸ் உஷா! நீங்க இப்ப வீட்டுக்குப் போனதும் உங்க பேரண்ட்ஸ்கிட்ட ஒண்ணு சொல்லணும்!" - நேரிடையாய் விஷயத்திற்கு வந்தவனை முதன் முறையாய் நிமிர்ந்து பார்த்தாள்.

ஏனோ இவனைப் பார்க்கையில் மனம் சிறகடிக்கவில்லை. உள்ளம் பரபரக்கவில்லை. உடல்கூட பதறவில்லை. வெகு சாதாரணமாய்க் கேட்டாள்.

"என்ன சொல்லணும்?"

"எனக்குக் கல்யாணம் வேண்டாம். இன்னிக்கு யாரையும் பெண் பார்க்க வரச் சொல்ல வேண்டாம்னு சொல்லணும்!" - சீனிவாசன் நிறுத்தித் தெளிவாகச் சொல்ல...

அக்காள் - தங்கை இருவரும் திகைத்தனர்.

மூத்தவள் முகம் குழம்பித் தவிக்க... இளையவளின் முகம் செந்தணலாய் கனன்றது. தனது கையைப் பற்றியிருந்த தமக்கையின் கையை விலக்கி விட்டு சீனிவாசனை நெருங்கினாள்.

"என்ன? என்ன சொன்னீங்க இப்போ?"

"அது வந்து... இந்தக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லணும்..."

"ஏன்?"

"எனக்கு இந்தக் கல்யாணத்தில விருப்பம் இல்லை."



"யாருக்கு?"

"எனக்கு..."

"அப்போ... இதே வார்த்தையை நீங்க உங்க வீட்டுல போய் சொல்ல வேண்டியதுதானே? நாங்க ஏன் சொல்லணும்?"

"வந்து... ஸாரி! எனக்கு... எங்க அப்பான்னா கொஞ்சம் பயம். அவர்கிட்ட என்னால பேச முடியாது!" - சீனிவாசன் தயங்கியவாறே சொல்ல... உமா கேலியாய் கைகொட்டிச் சிரித்தாள்.

"வாவ்! சூப்பர். நீதான்யா ஆம்பிளை."

"மிஸ் உமா?"

"அடச்சீ... வாயை மூடு! உடம்புல எவ்வளவு தெனாவட்டு இருந்தா... எங்களைத் தேடி வந்து இந்த வார்த்தையைச் சொல்லியிருப்ப... உன்னை மாதிரி ஆட்களை ஆம்பிளைன்னு சொல்லணுமா?"

"இதோ பாருங்க... நான்..."

"பேசாதய்யா... நீ ரோஷக்கார ஆம்பிளையா இருந்தா உன் வீட்டுல தைரியமாப் பேசியிருக்கணும். அதை விட்டுட்டுக் கல்யாணப் பொண்ணைத் தேடி வந்து அவ வாயால கல்யாணத்தை நிறுத்தணும்னு சொல்லச் சொல்றியா? எவ்வளவு சுயநலவாதி நீ...?

"நான் கூட உன்னைப் பார்த்ததும் எங்க அக்காவோட போட்டோவைப் பார்த்ததும் பிடிச்சிப் போய்

தனியா பார்க்க வந்திட்டியோன்னு நினைச்சேன். ஆமா! உன்னை மாதிரி மாப்பிள்ளையெல்லாம் பொண்ணைப் பார்த்திட்டு... மூக்குமுட்டத் தின்னுட்டுத்தானே பொண்ணு பிடிக்கலேன்னு சொல்வீங்க... இப்ப என்ன டெக்னிக்கை மாத்திட்டீங்களா?"

"இதோ பாருங்க... சத்தம் போடாதீங்க. எல்லாரும் பார்க்கிறாங்க...!"

"பார்க்கட்டுமே... உங்க லட்சணம் எல்லாருக்கும் தெரியட்டும்."

"உமா!"

"நீ சும்மா இருக்கா... இந்த ஆளுக்கு என்ன நெஞ்சழுத்தம் இருந்தா நம்மகிட்ட வந்து இப்படிச் சொல்லுவான்?"

"ஏங்க! இப்ப நான் என்ன தப்பாப் பேசிட்டேன்னு இவ்வளவு கோபப்படுறீங்க? ஏதோ உங்க நல்லதுக்காகத்தான் நான் இவ்ளோ தூரம் உங்களைத் தேடி வந்திருக்கேன்..." - சீனிவாசனும் குரலை உயர்த்த... அவனைத் தடுத்தான் ராஜகுமாரன்.

"சீனு! ப்ளீஸ்... நாம போகலாம் வா."

"இரு ராஜா... இன்னும் அவங்க பதிலே சொல்லலையே?"

"சீனு! நான் திரும்பத் திரும்பச் சொன்னேன். நீதான் கேட்கலை. இது சரியில்லை சீனு... பேசாம உங்க அப்பாகிட்ட பேசிப் பார்க்கலாம்."



"என்ன ராஜா! நீயும் புரியாமப் பேசுற. அப்பா ஒரு முடிவை எடுத்தா எடுத்ததுதான். யார் பேசினாலும் மாத்த முடியாது. என்னால... என்னால இந்தப் பொண்ணைக் கட்டிக்க முடியாதுடா. நான்... நான்தான் ஏற்கனவே..."

"யோவ்! உன் மூஞ்சிக்கு என் அக்காவைப் பிடிக்கலையா? ஏன் உன் மூஞ்சியை நீ கண்ணாடியில பார்த்ததில்லையா?"

"ஹலோ! நீங்க..."

"இப்பச் சொல்றேன் கேட்டுக்க... என் அக்காவை நீ என்ன வேண்டாம்னு சொல்றது? இனி... நீயே தேடி வந்தாலும் உனக்கு இவ கிடைக்க மாட்டா. நீயும் உன் மூஞ்சியும்... நான் வயிறெரிஞ்சி சொல்றேன். நீ கடைசி வரைக்கும் கல்யாணமே ஆகாம...."

"உமா! ஸ்டாப் இட்."

"ஏன்க்கா?"

"கோவில்ல வெச்சு இப்படியெல்லாம் ஒருத்தருக்குச் சாபம் கொடுக்காதே. கன்னிப் பொண்ணு சாபம் பலிச்சிடும்னு சொல்வாங்க..."

"பலிக்கட்டுமேக்கா..."

"தப்பு. அவங்க யாரோ எவரோ? அவங்களுக்கு என்ன சூழ்நிலையோ? எதுவும் தெரியாம நாம ஏன் சாபம் விடணும்? வேண்டாம்னா போகட்டும் உமா... நான் ஒண்ணும் யாரையும் நினைச்சிக் கனவு காணலை. வா...

நாம போகலாம். இனி இந்த வேண்டுதலுக்கு அவசியம் இருக்காது..." - என்றவாறு தங்கையின் கைபற்றி நடக்கத் துவங்கினாள்.

ராஜகுமாரன் உறைந்து போய் நிற்க... சீனிவாசன் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

"உஷா! ஒரு நிமிஷம் நில்லுங்க..."

"என்ன?"

"உஷா! நீங்க ரொம்ப நல்லவங்களா இருக்கீங்க. உங்க நல்ல மனசுக்கு அருமையான மாப்பிள்ளை கிடைப்பான்..."

"என்ன? ஆருடம் சொல்றீங்களா!"

"இல்லங்க... சொல்லணும்னு தோணிச்சி. உஷா! நீங்க நினைக்கிற மாதிரி உங்களைப் பிடிக்காம நான் மறுக்கலை. உங்க ஃபோட்டோவை ஒரு ரெண்டு வருஷத்துக்கு முன்னால என்கிட்ட காட்டியிருந்தா... அடுத்த நிமிஷமே உங்க கழுத்தில தாலி கட்டியிருப்பேன்..."

புருவம் உயர்த்திப் பார்த்தாள். "என்ன?"

"ஆமாங்க. கிட்டத்தட்ட ரெண்டு வருஷமா நான் ஒரு பொண்ணை விரும்பிட்டு இருக்கேன். அவளை மனசில வெச்சிக்கிட்டு... உங்களைப் பெண் பார்க்க வர்றது பெரிய பாவமில்லையா? அதான்... இப்படி வந்து..." என்றவனை வியப்பாய்ப் பார்த்தாள் உஷா.

"ஏன் ஸார்! இந்தக் காரணத்தை நீங்க உங்க வீட்டுல சொல்லியிருக்கலாமே?"



"சொல்லியிருக்கலாம். ஆனா... அதுல ஒரு சிக்கல் இருக்கு."

"என்ன சிக்கல்?"

"என்னுடையது... ஒரு கை ஓசை!" - சீனிவாசன் தயக்கமாய்ச் சொல்ல... புரியாமல் விழித்தாள் உஷா.

"அப்படின்னா?"

"அக்கா! உனக்குப் புரியலையா? இது ஒன் சைட் லவ்வாம். அதானே... எந்தப் பொண்ணாவது இந்த மூஞ்சியை விரும்புவாளா?"

"ஏங்க! உங்க தங்கை என்னை ரொம்ப மட்டம் தட்டுறாங்க. நான் என்ன அவ்வளவு அசிங்கமாகவா இருக்கேன்?"

"அதைத் தனியா வேற சொல்லணுமாக்கும்..."

"உமா! சும்மா இரு. அடுத்தவங்க மனசு கஷ்டப்படுற மாதிரிப் பேசக் கூடாது."

"இவர் மட்டும் பேசலாமா?"

"ஸாரிங்க... நான் உங்க மனசைக் கஷ்டப்படுத்தணும்னு வரலை. என்னோட நிலைமையை உங்ககிட்டச் சொல்லி ஹெல்ப் கேட்கலாம்னுதான் வந்தேன். நான் விரும்புற பெண்ணோட மனசு புரியாம என் விருப்பத்தை வீட்டுல சொல்லவும் முடியலை. பெண் பார்க்க வரவும் மனசில்ல...

"வேறு எந்தக் காரணத்தைச் சொல்லியும் என் அப்பாகிட்ட தப்பிக்கவும் முடியாது. ரொம்பக் கண்டிப்பான பேர்வழி. அவங்க விருப்பத்துக்காக நான் வந்தாலும் உங்களைப் பிடிச்சுப் போய் கல்யாணத்துக்குத் தேதி குறிச்சிட்டாங்கன்னா... அது பெரிய பிரச்சினை ஆகிடுமே...

"நிச்சயமா... தாருவை என்னால மறக்க முடியாது. அவ நினைப்பை மனசில வெச்சிக்கிட்டு உங்ககூட மட்டுமல்ல... வேற எந்தப் பெண்ணோடயும் என்னால வாழவும் முடியாது. பெரியவங்களுக்காகத் தலையாட்டிட்டு நம்ம வாழ்க்கையை நரகமாக்க எனக்கு விருப்பமில்லைங்க...

"அதான்... கொஞ்சம் கோழைத்தனமா தெரிஞ்சாலும் இந்த முடிவுதான் சரியா இருக்கும்னு உங்களைப் பார்க்க வந்தேன். தயவு செய்து என்னைத் தப்பா நினைச்சுக்காதீங்க..." - சீனிவாசன் சற்று தணிந்த குரலில் சொல்ல... உஷா பேச்சற்றுப் போனாள்.

உமாதான் சிடுசிடுத்தாள்.

"ம்... பேச்செல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனா எங்க மேல பழியைப் போட்டுட்டு நீங்க தப்பிச்சிக்கலாம்னு நினைக்கிறீங்களே...? இது எந்த விதத்தில நியாயம்?"

"அதுக்கும் காரணம் இருக்குங்க..."

"என்ன?"

"இப்போ... நீங்களே வேண்டாம்னு சொல்லிட்டீங்கன்னா எங்க வீட்டுல உள்ளவங்க கொஞ்சம் அப்செட்



ஆகிடுவாங்க. இதையே காரணமா வெச்சு என் கல்யாணத்தைப் பத்தி இனிமே யாரும் பேசக் கூடாதுன்னு கோபமாக் கத்துவேன். அவங்களும் கொஞ்ச நாளைக்கு இதை ஆறப்போடுவாங்க...

"அதுக்குள்ள என் ஆள்கிட்ட பேசி சம்மதம் வாங்கிடுவேன். அப்புறமா... தைரியமா வீட்டுல சொல்லிடுவேன். அதுக்காகத்தான் உங்களை வேண்டாம்னு சொல்லச் சொன்னேன்."

"ஓஹோ! உங்க வேலை எந்தப் பிரச்சினையும் இல்லாம நடக்க நாங்க பகடைக்காயா?"

"உமா! போதும். ஸார்... நான் அப்பாகிட்ட சொல்லிடுறேன். நீங்க எதைப் பத்தியும் கவலைப்படாதீங்க. நாங்க கிளம்பறோம்!" - பொதுவாய்ச் சொல்லி விட்டு தங்கையோடு புறப்பட்டாள்.

"ரொம்பத் தேங்க்ஸ்ங்க. இந்த ஹெல்ப்பை என் லைஃப் ஃபுல்லா மறக்க மாட்டேன்..." - என்ற சீனிவாசனின் குரலைக் கேளாதவள் போல்... நிற்காமல் திரும்பியும் பாராமல் போய் விட்டாள்.

சீனிவாசன் ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு நண்பனைப் பார்த்தான்.

"எப்படியோ ஒரு பெரிய பிரச்சினை ஸால்வ் ஆயிடுச்சிப்பா.... போகலாமா?" - எனக் கேட்க... ராஜகுமாரனிடம் துளியும் அசைவில்லை.

அவனது கண்கள் வாசலுக்கு வெளியே போய்க் கொண்டிருந்தவளிடம் நிலைத்துப் போயிருந்தது.

# 4

மேகங்கள் பொழிகின்ற வெள்ளம்
வானத்தை நனைப்பதில்லை!
காலம் இன்னும் கூடவில்லை!
மாலை இன்னும் வாடவில்லை!

குளித்துவிட்டு ஈரவேட்டியோடு பூஜையறைக்குள் நுழைந்து சாமி கும்பிட்டு விட்டு மூன்று விரல்களை திருநீறில் தோய்த்து நெற்றியில் பட்டையாய்ப் பூசினார் ராமச்சந்திரன்.

பாதிக்கு மேல் நரைத்திருந்த தலைமுடியில் ஈரம் சொட்டியது.

இறைநாமத்தை உச்சரித்துக் கொண்டே வெளியே வந்தவரை செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்த ரங்கநாயகி நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏன்டாப்பா! குளிச்சா ஈரத்தைத் துடைச்சிட்டு வரப்படாதா? வீடு முழுக்க ஈரமாக்கணுமா?"

"பழகிப் போச்சும்மா..."

"பழக்கத்தை மாத்து. இப்பத்தான் வீட்டைக் கழுவித் துடைச்சா. திரும்பவும் ஈரமாக்கிட்ட... இனி இன்னொரு தரம் துடைக்கணும்..." - ரங்கநாயகி சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனலட்சுமி கையில் பழைய துணியோடு வந்தாள்.

கணவன் நடந்த வழியெங்கும் இருந்த நீர்த் தடயங்களைத் துடைக்கத் துவங்கினாள்.



பேப்பரை மடித்து விட்டு எழுந்தாள் ரங்கநாயகி. "தனம்! அதை இப்படிக் கொடு."

"இருக்கட்டும் அத்தை... நான் துடைச்சிடுறேன்."

"நான் துடைக்கிறேன். நீ போய் அவனுக்கு டிபன் எடுத்து வை..." என்றவாறே மருமகள் விட்ட பணியைத் தொடர...

தனலட்சுமி சமையலறையை நோக்கிச் சென்றாள்.

"அம்மா! புள்ளைங்களை எங்கே காணோம்?"

"நான்தான்டா கோவிலுக்குப் போயிட்டு வரச் சொன்னேன். இன்னிக்கு வெள்ளிக்கிழமை இல்லையா!"

"மணி ஒன்பதாகப் போகுதேம்மா... சின்னப்புள்ளை காலேஜ் போகணுமே..."

"ஆமாங்க! நேரமாச்சு... இன்னும் ரெண்டு பேரும் வரலையே..." - சாப்பாடு எடுத்து வைத்துக் கொண்டே வாசலை ஒரு தரம் எட்டிப் பார்த்தாள் தனலட்சுமி.

"நான் வேணா கோவில் வரைக்கும் போய்ப் பார்த்துட்டு வரட்டுமா?" - அவசரமாய் துணியை மாற்றினார் ராமச்சந்திரன்.

"ஏன் ரெண்டு பேரும் இப்படிப் பதறுறீங்க? அடுத்த தெருவில இருக்கிற கோவிலுக்குத்தானே போயிருக்காங்க. வந்திடுவா..."

"நேரமாகுதேம்மா! எதுக்கும் நான் போய்..."

"அட இருப்பா...! நான்தான் பெரியவளை அடிபிரதட்சணம் பண்ணிட்டு வரச் சொன்னேன். அதான் நேரமாகியிருக்கும். இப்ப வந்திடுவாங்க. நீ உட்கார்ந்து சாப்பிடு."

"அடிபிரதட்சணமா! எதுக்கும்மா?"

"இன்னிக்கு வரப்போற வரனாவது நல்லபடியா அமையணுமேன்னு வேண்டிக்கிட்டேன். இதோ வந்திட்டாளே... உம் பொண்ணு!" - பெற்றவர்கள் வாசலைப் பார்க்க... சற்றே சோர்வுடன் இருவரும் உள்ளே நுழைந்தனர்.

"தனம்! புள்ளைங்களுக்கும் சாப்பாடு எடுத்திட்டு வா. சேர்ந்தே சாப்பிடலாம்..."

"சரிங்க!"

"வாங்கம்மா... என்னடாம்மா இவ்வளவு நேரம்?" - என்ற தந்தையைப் பார்த்து லேசாய் புன்னகைத்தாள் உஷா.

"கோவில்ல கூட்டம்ப்பா..."

"உஷாம்மா... கூட்டம்ன்னு வேண்டுதலை நிறைவேத்தாம வந்துடலையே... பாட்டி சொன்ன மாதிரி எல்லாம் செய்திட்டுத்தானே வந்தே?" - ஆர்வமாய்க் கேட்ட பாட்டியை... நேராய்ப் பாராமல் கையில் இருந்த பூஜைக் கூடையை மேசை மேல் வைத்துக் கொண்டே தலையாட்டினாள்.

"ம்... ம்... சிவந்த மாலை வாங்கிப் போட்டுட்டேன்."



"அப்புறம்... அடிபிரதட்சணம்?"

"எல்லாம் ஆச்சு. பாட்டி! ரொம்பத் தலை வலிக்குது."

"தலையைப் பிரித்துக் காய விடும்மா. ஈரத் தலையோட இருந்தா நீர் கோர்த்திடும். வாங்க... அப்பாவோட உட்கார்ந்து சாப்பிடுங்க..."

"எனக்குப் பசியில்லைம்மா..."

"ஏன்? மணி ஒன்பதாகுதே! காலையில காபி கூட குடிக்கலையே? வா... வந்து உட்கார்."

"வேண்டாம்னா விடுங்கம்மா... நீங்க அப்பாவைக் கவனிங்க...!" என்றவாறே தன் அறைக்குள் நுழைந்தவளை அனைவரும் குழப்பமாய்ப் பார்க்க... அதற்குள் உமா கல்லூரிக்குப் புறப்பட்டுத் தந்தையிடம் வந்தாள்.

"அப்பா! டயமாச்சு. காலேஜ் பஸ் போயிருக்கும். என்னை ட்ராப் பண்ணிடுங்கப்பா!"

"சரிம்மா... முதல்ல சாப்பிடு."

"சாப்பிட டயமில்லப்பா. இப்பவே லேட்!"

"ரெண்டு இட்லி சாப்பிட எவ்வளவு நேரமாகும். உட்காரு... அப்பாவும் இன்னும் சாப்பிடலை!" - அன்னை அதட்டியதும்... அவசரமாய் அமர்ந்தாள்.

"ஒரு இட்லி போதும்மா!"

"நீ என்ன குழந்தையாடி? படிப்பு முக்கியம்தான். அதைவிட உடம்பும் ஆரோக்கியமும் முக்கியம்."

"போதும்மா... உங்க புராணத்தை ஆரம்பிச் சிடாதீங்க."

"உமாக்குட்டி! அம்மா எது சொன்னாலும் பொறுமையாக் கேட்டுக்கணும்மா..."

"சீக்கிரம் சாப்பிடுங்கப்பா... பயமாகுது."

"இப்படி அரக்கபரக்கத் தின்னா அது எப்படி உடம்புல சேரும்? இன்னிக்கு ஒரு நாள் லீவு போட்டா என்ன?" - என்ற ரங்கநாயகியைக் கவனியாமல் கைகளைக் கழுவினாள்.

"சந்திரா! நான் சொன்னா உம் மக காதுல விழாது. நீயாவது சொல்லு..."

"என்னம்மா சொல்லணும்?"

"இன்னிக்கு மூத்தவளைப் பெண் பார்க்க வர்றாங்கல்ல. இவ வீட்டுல இருந்து அவளுக்குக் கூடமாட உதவி செய்யலாமில்ல?"

கடுப்பாய்த் திரும்பினாள் உமா. "நான் என்ன பண்ணணும்?"

"உன் அக்காவுக்கு அலங்காரம் பண்ணி..."

"அலங்காரம் பண்ணி...? சொல்லுங்க! அலங்காரம் பண்ணி... நாம நாலு பேரும் சுத்தி உட்கார்ந்து ரசிக் கணுமா?"

"ஏய்! என்னடி ஒரு மாதிரிப் பேசுற?" - தனலட்சுமி பதறினாள்.



"வேண்டாம்மா... நான் எதுவும் பேசக் கூடாதுன்னு அக்கா சொல்லிட்டா. தயவு செய்து என் வாயைக் கிளறாதீங்க. அப்பா! போலாமா?"

ராமச்சந்திரன் யோசனையாய் கைகளைக் கழுவி விட்டு எழுந்தார்.

"உமாம்மா! என்னடா? உம் முகம்... பேச்சு... எதுவுமே சரியில்லையே?"

"நம்மைச் சுத்தி நடக்கிற எதுவுமே சரியில்லப்பா... யார் யாரோ பண்ற தப்புக்கான தண்டனையெல்லாம் நம்ம தலையிலதான் வந்து விடியுது."

"உமா?"

"வாங்கப்பா! எனக்குக் காலேஜுக்கு டயமாகுது..."

"இரும்மா... என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரிப் பேசுற? உஷா முகம் கூட சரியில்லையே... என்னம்மா! கோவில்ல யாராவது எதுவும் சொன்னாங்களா?"

"அப்பா!" - அறைக்குள் இருந்து உஷா வந்தாள்.

கண்கள் கலங்கிச் சிவந்திருக்க... முகம் வெகுவாய்ச் சோர்ந்திருந்தது.

"என்னம்மா?"

"உமாவைக் காலேஜ்ல விட்டுட்டு நீங்க கடைக்குக் கிளம்புங்கப்பா! மத்ததெல்லாம் பிறகு பேசிக்கலாம்..."

"கடைக்கா? இன்னிக்கு உன்னைப் பெண் பார்க்க வர்றாங்கம்மா... நான் அதுக்கான ஏற்பாடெல்லாம் கவனிக்கணும். கடை லீவும்மா..."

"வேண்டாம்ப்பா... கடையைத் திறங்க."

"உஷா! என்னம்மா... சொல்ற?"

"அவங்க வர மாட்டாங்கப்பா!" - தொண்டை அடைக்கக் கூறிய மகளை அதிர்ச்சியாய் ஏறிட்டனர் பெற்றவர்கள்.

ரங்கநாயகி சற்று பதட்டமாய் முன்னே வந்தாள். "ஏய்! என்னடி சொல்ற? அவங்க வரமாட்டாங்களா? யார் சொன்னது உனக்கு?"

"வரமாட்டாங்க பாட்டி..."

"அதான் ஏன்னு கேட்கிறேன்? பூ கட்டிப் போட்டதுல எதுவும் தப்பா வந்திடுச்சா?"

"அதெல்லாம் சரியாத்தான் வந்துச்சு..."

"பிறகேன் இப்படி அபசகுணமாப் பேசுற? இந்த இடம் நல்ல சம்பந்தமாச்சே.... நமக்குத் தூரத்து உறவுக்காரங்க. அருமையான குடும்பம். போடுறத போட்டா போதும்னு சொன்னாங்களே..."

"எல்லாம் பார்த்தீங்களே... மாப்பிள்ளையைப் பத்தி ஏதாவது விசாரிச்சீங்களா?" - கடுப்பாய்க் கேட்டாள் உமா.

"அவனுக்கென்ன? தங்கமான பிள்ளைன்னு சொன்னாங்களேம்மா... பெத்தவங்க பேச்சை மதிக்கிற புள்ள... அடக்கமான பிள்ளைன்னு சொன்னாங்க ளேம்மா..." - ராமச்சந்திரன் சற்றுத் தவிப்பாய்ச் சொல்ல... உமா சீறினாள்.



"அந்த அடக்க ஒடுக்கமான பிள்ளைதான்... இப்ப கொஞ்ச நேரம் முன்னால எங்ககிட்ட வந்து பேசினாரு..."

"என்ன? மாப்...பிள்ளை வந்து உங்ககிட்ட பேசினாரா? எப்படி? உங்களை... அவருக்கு எப்படித் தெரியும்?"

"என்னைக் கேட்டால்...! நாங்க அந்த ஆளை இன்னிக்குத்தான் பார்த்தோம். ரொம்ப உரிமையா வந்து பேசினான்..."

"எ... என்ன பேசினார்?"

"இந்தக் கல்யாணத்தில அவருக்கு விருப்ப மில்லையாம். அதை அவர் வீட்டுல சொல்ல பயந்துகிட்டு எங்ககிட்ட வந்து சொல்றார்..."

"எ...ன்...ன?" - பலமாய் அதிர்ந்தார் ராமச்சந்திரன்.

தனலட்சுமி பதறி மகளைத் தன்புறமாய்த் திருப்பினாள்.

"ஏய்! என்னடி சொல்றே?"

"ஆமாம்மா... நாமளே வேண்டாம்னு சொல்லிடணு மாம். அதை அக்காகிட்டயே சொல்றான் அந்த ஆள்..."

"ஐயோ! என்னங்க இது கொடுமை? ரொம்ப நல்ல இடம்னு சொன்னீங்களே... எப்படியும் நல்லபடியா அமைஞ்சிடும்னு சொன்னீங்களே....?"

"எனக்கு ஒண்ணுமே புரியலை தனம்! நேத்துகூட நான் போய் பேசும்போது மாப்பிள்ளையும் இருந்தார். மறுப்பா எதுவும் பேசலையே..."

"அப்பா! அவன் ஒரு தொடைநடுங்கிப்பயப்பா. அதான் வீட்டுல எல்லார்கிட்டயும் நல்லபிள்ளையா தலையாட்டிட்டு எங்ககிட்ட வந்து கெஞ்சினான். அவனை நாலு வார்த்தை கேட்கலாம்னா இவதான் விடலை..."

"கேட்டா மட்டும் எல்லாம் சரியாகிடுமா?" - உஷா கேட்க... தாய் பதறினாள்.

"உஷாம்மா! அதனால... அவங்களை அப்படியே விட்டுட முடியுமா?"

"வேற வழியில்லையேம்மா... என்னைப் பிடிக்கலைன்றார்... என்னைக் கட்டிட்டுக் குடும்பம் நடத்த முடியாதுன்றார்... அவர்கிட்ட போய் நீ என்னைத்தான் கட்டிக்கணும்னு வாதாடச் சொல்றீங்களா?"

"உ...ஷா!"

"முடியலைம்மா... இப்படி ஒவ்வொரு முறையும் அவமானப்பட்டு நிற்க என்னால முடியலை. வேண்டாம். எனக்குக் கல்யாணமே வேண்டாம். தயவு செய்து என்னை இப்படியே விட்டுடுங்க! இனிமே தயவு பண்ணி யாரும் என் கல்யாண விஷயமாப் பேசாதீங்க..." - இருகரங்களையும் கூப்பிக் கெஞ்சியவாறே... மடங்கி அமர்ந்து அழத் துவங்கினாள் உஷா.

ராமச்சந்திரன் விக்கித்துப் போனார்.



தனலட்சுமி மகளைக் கட்டிக் கொண்டு அழ... ரங்கநாயகி அதட்டினாள்.

"வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஏன் இப்படி அழுதிட்டு உட்கார்ந்திருக்கீங்க? நமக்கென்ன இது புதுசா? வழக்கமா நடக்கிறதுதானே!"

"பாட்டி..." -உமா கோபமாய் நிமிர்ந்தாள்.

"ஒரு இடமா... ரெண்டு இடமா? இதோட நாலாவது இடம். இப்படி வர்றதெல்லாம் தட்டிப் போனா என்ன அர்த்தம்?"

"என்ன? என்ன அர்த்தம்?"

"இவ ஜாதகத்துல ஏதோ தோஷம் இருக்கும். இவளுக்குக் கல்யாண ராசி இருக்கா இல்லையான்னு..."

"வாயை மூடுங்க பாட்டி... எல்லாத்துக்கும் நீங்களும் உங்க ஜாதகமும் காரணம்!" - என்று பாய்ந்தவளைக் கண்டு மிரண்டாள் ரங்கநாயகி.

"ஏ...ய்! நான் என்னடி பண்ணினேன்?"

"என்ன பண்ணலை நீங்க? மேற்கொண்டு படிக்கிறேன்னு சொன்னவளை... இருபத்தி மூணு வயசிலேயே கல்யாணம் பண்ணிடணும். இல்லேன்னா இருபத்தி ஏழு வயசு வரைக்கும் கல்யாணமே கூடாதுன்னு இந்தப் பாழாப் போன ஜாதகத்தைத்தானே காரணம் காட்டித் தடுத்தீங்க?"

"அது... அவ ஜாதகத்தில அப்படித்தான் இருந்தது..."

"அதே ஜாதகத்தில இப்படி வர்ற வரனெல்லாம் தட்டிப் போகும்னு இருந்ததா?"

"என்ன உளர்ற?"

"நான் உளறலை. உங்களுக்குத்தான் ஜாதகப் பைத்தியம் பிடிச்சிருக்கு. இந்த ஜாதகம், ஜோசியம் எல்லாம் சாப்பாட்டுல சேர்த்துக்கிற உப்பு மாதிரி. தேவைன்னா கொஞ்சம் போட்டுக்கலாம். அதையே சாப்பாடா ஆக்கிக்கக் கூடாது..."

"அப்போ... ஜாதகம் பார்க்கிறதைத் தப்புன்றியா?"

"பார்க்கிறது தப்புன்னு சொல்லலை. அதை மட்டுமே நம்புறது முட்டாள்தனம்றேன். கல்யாணம் காட்சின்னா... பார்க்க வேண்டியதுதான். உட்கார்ந்தா... தும்மினா... உடனே ஜாதகத்தைத் தூக்கிட்டு ஓடிட வேண்டியது... பிறகு அவன் அதைச் சொன்னான்... இதைச் சொன்னான்னு புலம்ப வேண்டியது... "

"உமாம்மா! இப்படியெல்லாம் பேசாதடா..."

"பின்னே என்னப்பா? இந்த வரனெல்லாம் தட்டிப் போனதுக்கு அக்கா எப்படிப் பொறுப்பு ஆவாள்? முதல்ல ஒருத்தனைக் கூட்டிட்டு வந்தீங்க... அவன் வேலைக்குப் போற பொண்ணுதான் வேணும்னு சொல்லிட்டுப் போயிட்டான்...

"அடுத்ததா வந்தவன்... அக்காவை விட அவ கொண்டு வர்ற பணமும் நகையும்தான் வேணும்னு சொன்னான். அடுத்தவன்? கல்யாணம் முடிஞ்சதும்



ஃபாரின் போயிடுவானாம். அஞ்சு வருஷத்துக்கு ஒரு தரம்தான் வருவானாம். அவன் வர்ற வரைக்கும் அவன் அம்மா அப்பாவை இவ பார்த்துக்கணுமாம்...

"அவனுக்குத் தேவை ஒரு வேலைக்காரி. சம்பளம் இல்லாத வேலைக்காரி. அதுக்குத்தான் பெண் தேடியிருக்கான். இன்னிக்கு வந்தவன் வேற எவளையோ விரும்புறானாம்... அவளை விட்டுட்டு இன்னொருத்தியைக் கட்டிக்க முடியாதுன்னு சொல்லிட்டுப் போறான். இப்படி எல்லாவரனும் பண்ற தப்புக்கு இவ எப்படிப்பா காரண மாவாள்?"

"சரிம்மா... இப்படியெல்லாம் நடக்கும்னு யார் கண்டது? ஏதோ நம்ம கெட்ட நேரம். இப்படி ஆகிப் போச்சு!"

"நேரத்தைக் காரணம் காட்டாதீங்கப்பா. நம்ம அவசரத்தைச் சொல்லுங்க. இப்பவே அவளுக்குக் கல்யாணத்துக்கு என்ன அவசரம்? அவ மேலே படிக் கட்டும். நீங்க பொறுமையா நிதானமா மாப்பிள்ளையைப் பாருங்க. ஒண்ணும் அவசரமில்லை..."

"ஆமா! அக்காளும் தங்கையுமா படிக்கிறேன்... படிக்கிறேன்னு எம்புள்ளையைக் கடனாளியா ஆக்கி டுங்க..."

"அம்மா!" - அதட்டினார் ராமச்சந்திரன்.

"பிறகென்னடா? இன்னொருத்தன் வீட்டுல போய் வாழப் போறவளுக்கு என்ன பெரிய படிப்பு வேண்டிக்

கிடக்கு? இவ படிச்சி முடிச்சி உனக்கா சம்பாதிச்சித் தரப் போறா...!"

"ஏன்? நாங்க சம்பாதிச்சுக் கொடுக்க மாட்டோமா?"

"கொடுப்பீங்க... யாருக்கு? உன் புருஷன் வீட்லதானே கொடுப்ப? பெண்கள் முன்னேற்றம்னு வாய் கிழியப் பேசுறீங்களே... உங்கள்ல எந்தப் பெண்ணாவது புருஷன் வீட்டுக்குப் போன பிறகு சம்பாதிக்கிற பணத்தைப் பெத்தவங்களுக்குக் கொடுக்க முடியுமா?

"சம்பளத்தில பத்துப் பைசா குறைஞ்சாலும் கணக்குக் கேட்பானே புருஷன்... பிறகெப்படிக் கொடுப்பீங்க?"

"ஏன்? எல்லா ஆம்பிளைங்களும் அப்படியே இருப்பாங்களா என்ன? மாமன் மாமியாரைப் பெத்த தாய் தகப்பனா நினைக்கிற ஆண்களும் இருக்காங்க..."

"இருப்பான். ஆயிரத்தில ஒருத்தன் இருப்பான். அவனைத் தேடி எப்படிக் கண்டுபிடிப்பீங்க? அவ்வளவு சிரமப்படுறதுக்குப் பேசாம... நாலெழுத்துப் படிச்சோமா... அறிவை வளர்த்தோமான்னு இருந்திட்டுக் கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்தலாமில்ல?"

"எல்லாரும்தான் கல்யாணம் பண்றீங்க... குடும்பம் நடத்துறீங்க. அதனால என்ன சாதிச்சிட்டீங்க? ஆனா... எங்களால சாதிக்க முடியும். அக்காவோட ஆசை ஐ.ஏ.எஸ். ஆகணும்கறதுதான். அப்படி ஆனா எங்க அப்பாவுக்குத்தானே பெருமை! எங்களைக் கஷ்டப்பட்டுப் படிக்க வைக்கிறவங்களுக்கு அதுதானே பலன்?"



"ஐயோ! இப்ப ஏன் இப்படிப் பேச்சை வளர்த்திட்டு இருக்கீங்க? எம் பொண்ணு கண்ணீர் விடுறது உங்க கண்ல படலையா?" - தனலட்சுமி கத்தினாள்.

"அக்கா! நீ ஏன்க்கா கண்ணீர் விடுற? உன்னை மாதிரிப் பொண்ணு கிடைக்காம அவனுங்கதான் அழணும்... எழுந்திருக்கா! கோழை மாதிரி அழுதிட்டு இருக்காதே..."

"உமா! என்னால... முடியலை உமா. என்னை நினைச்சா எனக்கே வெறுப்பா இருக்கு... இன்னும் எத்தனை பேர் முன்னால அலங்கார பொம்மையா நின்னு அவமானப்படப் போறேனோ?"

"அழாதே ராஜாத்தி! உனக்குன்னு ஒருத்தன் பிறக்காமலா இருப்பான்? அந்த ஒருத்தன் வரும்போது எல்லாம் தானா நடக்கும்மா..."

"அது வரைக்கும் யாரையும் மாப்பிள்ளைன்னு தேடிப் போகாதீங்கம்மா... கொஞ்ச நாளாவது நான் நிம்மதியா இருக்கணும். என் மனசுக்குப் பிடிச்ச மாதிரி வாழணும். அப்பாவுக்கு என்னால முடிஞ்ச உதவியைச் செய்யணும்..."

"படிக்கிறியாம்மா?" - கனிவாய்க் கேட்டார் ராமச் சந்திரன்.

"படிச்சது போதும்ப்பா... இதுக்கு மேலயும் உங்களைக் கடனாளி ஆக்கமாட்டேன். நான் வேலைக்குப் போறேன்ப்பா..."

"என்னம்மா சொல்ற?"

"ஆயுசு முழுக்கச் சம்பாதிச்சிக் கொடுக்க முடியாட்டியும் கொஞ்ச நாளாவது என் மனத்திருப்திக்காக வேலைக்குப் போய் சம்பாதிச்சுத் தர்றேன்ப்பா...!" - என்ற மகளைக் கண்கள் கலங்க அணைத்துக் கொண்டார்.

## 5

பூவிழி மூட முடியவுமில்லை;
மூடியபோது விடியவுமில்லை!
கடலைச் சேரும் காவிரிபோல்
கலந்திட வேண்டும் - உன் மடிமேல்
இது புது சொந்தம் அன்பே!

உறக்கம்.

அது ஓர் அற்புத வரம். சிறந்த அருமருந்து. அது ஒரு கொடுப்பினையும்கூட. எல்லோருக்கும் படுத்ததும் நித்திரை வந்து விடுவதில்லை.

வீடு நிறையப் பணம் சேர்த்து வைத்திருப்பவனுக்கு அதைப் பதுக்கிப் பாதுகாக்கும் கவலையிலேயே தூக்கம் விலகிப் போய் விடும்.

சிலருக்கோ... நாளைய சாப்பாட்டுக்கு என்ன வழி? தங்கள் எதிர்காலம் என்று ஒளிமயமாகும்? எப்படிக் குடும்பத்தைக் கரை சேர்க்கப் போகிறோம்... என்ற மன உளைச்சலிலேயே தூக்கம் பறந்துவிடும்.



ஆனால்... எப்படிப்பட்ட பெரிய பிரச்சனைகளுக்கும் தூக்கம் ஒரு அருமையான அடைக்கலமாகி விடும்.

தன்னை மறந்து உறங்குபவனுக்கு எதிர்கால பயம் தெரியாது. நிகழ்காலத் துன்பம் பாதிக்காது. அமைதியும் நிம்மதியும் மறுநாளுக்குத் தேவையான சுறுசுறுப்பையும் அந்த உறக்கம் அவனுக்குத் தந்துவிடும்.

உறக்கம் வராமல் தவிப்பவனுக்கோ... பலவிதமான நோய்களும் சொல்லாமல் கொள்ளாமல் வந்து குடியேறி விடுகிறது.

பகலெல்லாம் உழைப்பவனது உடலும் மனமும் இரவில் மட்டுமாவது ஓய்வெடுக்கட்டும் என்றுதான் இறைவன் இந்த உறக்கத்தைப் படைத்தாரோ? ஆனால் அந்த உறக்கம் எட்டாத தொலைவிற்குச் சென்றுவிட... ராஜகுமாரனின் உடலும் மனமும் வெகுவாய்ச் சோர்ந்து போனது.

ஒரு நாள்... ரெண்டு நாள் அல்ல... முழுதாய் ஏழு நாட்கள்!

உஷாவைக் கோவிலில் தரிசித்துவிட்டு வந்த இந்த ஏழு நாட்களில் உறக்கம் என்பதே சுத்தமாய் மறந்துவிட... படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

கண்களை மூடினால் அவளது முகம் வந்து இம்சித்தது.

அதுவும் அவள் கடைசியாய்ப் பேசிவிட்டு... நிமிர்ந்தும் பாராமல் சென்றவிதம் இன்னும் வலித்தது.

சீனு கூட அதை அன்றே மறந்து விட்டான். வழக்கம் போல் தாரணியின் பின்னால் நிழலாய்த் திரிகிறான்.

ஆனால்... ராஜகுமாரனால் அத்தனை சுலபமாய் அந்த நிகழ்வுகளை மறக்க முடியவில்லை.

அவளிடம் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவள் முகத்தில் பிரதிபலித்த உணர்வுகளும் காந்தக் கண்களும் அவனுள் அழுத்தமாய் பதிந்து போயிருந்தது. எத்தனை முயற்சித்தும் மூளையும் மனமும் அவளது நினைவிலேயே உழன்று கொண்டிருந்தது.

'இப்போது எப்படி இருப்பாள்? சீனுவின் உதாசீனத்தால் மனதளவில் துவண்டு போயிருப்பாளோ? அவளது வீட்டார் மனதால் வெகுவாய் பாதிக்கப் பட்டிருப்பார்களோ?

இருந்தாலும்... சீனு செய்தது பெரிய மடத்தனம். அதுவும் அவனுக்குத் துணையாய் நான் சென்றது மிகப்பெரிய முட்டாள்தனம். ச்சே!'

கோபமாய் தலையணையில் ஓங்கிக் குத்தும் போது அறையின் கதவு திறக்கப்பட்டது. பளிச்செனத் திரும்பினான்.

உறக்கம் கலைந்த நிலையில் யசோதா நின்று கொண்டிருக்க... அவளது கண்களில் கவலை குடிகொண்டிருந்தது.

தாயைக் கண்டதும் எழுந்து அமர்ந்தான்.



"என்னம்மா! இந்த நேரத்தில? தூங்கலையா நீங்க?"

"அதையேத்தான் நான் கேட்கிறேன்... நீ தூங்கலையா?"

"ம்ப்ச்! தூக்கமே வரமாட்டேங்குதும்மா...!"

"ஏம்ப்பா! உடம்பு எதுனா சரியில்லையா?" - மகனை நெருங்கி நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா!"

"பிறகேன் தூக்கம் வரலை?"

"என்னன்னு தெரியலைம்மா... சரி! நீங்க போய்த் தூங்குங்க. நான் படுத்துக்கிறேன்..." - என்ற மகனின் அருகே அமர்ந்து கூர்ந்து பார்த்தாள்.

"ராஜா!"

"என்னம்மா?"

"உனக்கு... என்னப்பா பிரச்சனை?"

"பிரச்சனையா? நோ... நோ. அப்படியெல்லாம் ஒண்ணுமில்லம்மா!"

"பிறகேன் நாலஞ்சு நாளா இப்படித் தூங்காம கஷ்டப்படுற?"

"அம்மா...!" - வியப்பாய் தாயைப் பார்த்தான்.

"உன் ரூம்ல இப்பல்லாம் விடிய விடிய லைட் எரியுதே...?"

"ஸாரிம்மா! ஏதோ ஒரு யோசனையில லைட்டை ஆஃப் பண்ண மறந்திருப்பேன்..."

"தினமுமா? நீ ஒண்ணும் அவ்வளவு பொறுப்பில்லாத புள்ளை இல்லையேப்பா?"

"அம்மா!"

"ராஜா! நீ ஏதோ குழப்பத்தில இருக்க... அது எனக்கு நல்லாப் புரியுது. பிள்ளையோட முகத்தை வெச்சே அவங்க மனசில என்ன இருக்குன்னு கணிச்சிடுறவதான் தாய்... சொல்லுப்பா! உன் மனசைப் போட்டு வதைக்கிறது எதுப்பா?"

"அம்மா!"

"அம்மாகிட்ட சொல்லலாம்னா சொல்லு..."

"சொல்றேன்ம்மா... நாளைக்குச் சொல்றேன். இப்பப் போய் படுங்கம்மா..."

"நீ இப்படித் தவிக்கையில எனக்கு எப்படியப்பா தூக்கம் வரும்? அதோட மணி இப்ப நாலரை. விடியப் போகுது..."

"என்ன? விடியப் போகுதா?" - ஆச்சர்யமாய் கண்ணாடி ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

இருள் மெல்ல விலகத் துவங்கியிருந்தது.

"ம்... இது கூடத் தெரியாம குழம்பிப் போயிருக்க? அப்படி என்ன பிரச்சனைப்பா?"



"இது... பிரச்சனைன்னு சொல்ல முடியாதும்மா! ஒரு மாதிரி... என் மனசை பாதிச்ச விஷயம்னு சொல்லலாம்."

"அப்படி என்னப்பா உன்னை பாதிச்சது?"

"அம்மா! இந்தச் சீனு இருக்கானில்ல...?"

"யாரு? சீனிவாசனா!"

"ஆமாம்மா... அவனுக்கு அவன் வீட்டுல கல்யாண ஏற்பாடு செய்திட்டு இருக்காங்கம்மா!"

"அடடா! நல்ல விஷயம்தானே?"

"முழுசாக் கேளுங்கம்மா... ஆனா இவன் கல்யாணம் வேண்டாங்கிறான்."

"ஏனாம்?"

"அது... அது ஏன்னு தெரியலை. ஆனா அவன் செய்தது பெரிய தப்பும்மா...!"

"தப்பா? என்ன பண்ணினான்?"

"அவங்க அப்பா பார்த்து வெச்ச பொண்ணுகிட்ட போய்... எனக்கு இந்தக் கல்யாணத்தில விருப்பம் இல்லை. என்னால உங்களைக் கட்டிக்க முடியாதுன்னு நேரிடையாவே சொல்லிட்டான்..."

"எ...ன்ன?"

"ஆமாம்மா! அந்தப் பொண்ணு பாவம் இல்லையாம்மா? எனக்கு அந்தப் பொண்ணோட முகம் மறக்கவே இல்லைம்மா... அவன் மறுத்ததும் அந்தப்

பொண்ணுக்கு நிச்சயம் மனசு வலிச்சிருக்கும். ஆனா... அதை எதையும் வெளிக்காட்டிக்காம ரொம்ப இயல்பா சரின்னுட்டு போயிடுச்சும்மா..."

"ஏய்! இதெல்லாம் எப்போ நடந்தது?"

"போன வாரம்மா... கோவில்ல வெச்சுப் பார்த்தோம்."

"என்ன? நீயும் கூடப் போனீயா?"

"தனியாப் போக ஒரு மாதிரி இருக்குன்னு என்னையும் கூட்டிட்டுப் போனாம்மா..."

"அவன் கூப்பிட்டா... நீ போயிடுறதா?"

"என்னம்மா நீங்க? ஒரு ஃப்ரெண்டுக்காக இந்த ஹெல்ப் கூட பண்ணக் கூடாதா?"

"தப்பு ராஜா! ஃப்ரெண்டுன்னா உபயோகமுள்ள உதவிதான் செய்யணும். இப்படி ரெண்டு பேருமா போய் ஒரு பெண்ணோட மனசை உடைச்சிட்டு வந்திருக்கீங்க... இது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா?"

"அம்மா..."

"கல்யாணம்றது ஒண்ணும் சாதாரண விஷயம் இல்லடா... நீங்கபாட்டுக்குப் போய் பேசிட்டு வந்திட் டீங்களே... அதுக்கப்புறம் அந்தப் பொண்ணு விஷயம் என்னாச்சுன்னு தெரியுமா?"

"தெ... தெரியாதும்மா..."

"ஒருவேளை அந்தப் பொண்ணு மனசு ஒடிஞ்சு போய் ஏதாவது ஏடாகூடமாச் செய்திருந்தா... அந்தப் பாவம் யாரைச் சேரும்? நம்மைத்தானே!"



"அ...ம்மா!" - திகைத்தான் ராஜகுமாரன்.

'அப்படி ஏதேனும் நடந்திருக்குமோ? அதனால்தான் அந்தப் பெண் கோவிலுக்கே வரவில்லையோ? இரண்டு நாட்களாய் கோவிலில் போய் மணிக்கணக்காய் நின்றுவிட்டு... ஏமாந்து வீடு திரும்பிய போதுகூட இப்படி ஒரு எண்ணம் தோன்றாமல் போயிற்றே?

ஐயோ! அவளுக்கு என்ன ஆயிற்ற? அவளது வீடு கூட தெரியாதே! கடவுளே... நான் கொலைகாரனா? ஒரு அப்பாவிப் பெண்ணின் உயிர் பிரிய நானும் ஒரு காரணமாகிப் போனேனா?'

"ராஜா!" - மகனின் தோளைத் தொட்டாள் யசோதா.

திடுக்கிட்டான். "என்னம்மா?"

"இனிமே... இந்த மாதிரி பயலுககிட்ட எல்லாம் சிநேகிதம் வெச்சுக்காதே..."

"'அ...ம்மா!'

"என்னப்பா?"

"அ... அந்தப் பொண்ணு... ஒருவேளை சூஸைட் பண்ணியிருப்பாளோ?"

"நீ அந்தப் பொண்ணைப் பார்த்தியா?"

"ம்... பார்த்தேன்."

"பார்க்க எப்படி இருந்தாள்?"

"எப்படின்னா?"

"படிச்ச பொண்ணு மாதிரி... தைரியசாலி மாதிரி இருந்தாளா? இல்ல..."

"ம்... தைரியசாலிதாம்மா... நேருக்கு நேராப் பேசும்போதும் சரி... கோபப்படும்போதும் சரி. ஒரு தனி நிமிர்வு தெரிஞ்சுது. நிச்சயமா படிச்ச பொண்ணுதான். என்ன ஒரு கம்பீரம்?

"அதுவும் அவகூட ஒரு சின்னப் பொண்ணு வந்தாம்மா... அது அவளோட தங்கையாம். அந்தப் பொண்ணு அப்படியே லேடி ஜாக்கிசான்தான்!"

"என்ன?"

"ஓ! தப்பா சொல்லிட்டேனோ? அதாம்மா... லேடி ஃபைட்டர் விஜயசாந்தி இருக்காங்கள்ல... அந்த மாதிரி தைரியசாலியான பொண்ணு..."

"நீ சொல்றதை வெச்சுப் பார்த்தா... பெரிய கலாட்டாவே நடந்திருக்கும் போல!"

"சேச்சே! சும்மா... அவங்க பேசும்போது கவனிச்சேன்..."

"ம்... சரி. சீனு சொன்னதும் அந்தப் பொண்ணு அழுதாளா?"

"ம்ஹூம்... ரொம்ப இயல்பா பேசினாம்மா... எனக்கே ஆச்சர்யமா இருந்தது..."

"அப்போ அந்தப் பொண்ணு எந்தத் தப்பான முடிவையும் எடுத்திருக்க மாட்டாள். நீ பயப்படாதே!"



"எப்படிம்மா சொல்றீங்க?"

"மனசில துணிச்சலும் நிதானமும் இருக்கிற பொண்ணுங்க அவசரப்பட்டு எந்த முடிவையும்... குறிப்பா தப்பான முடிவை எடுக்க மாட்டாங்க. அதோட சீனு மாதிரி ஒருத்தனுக்காக நிச்சயமா எவளும் சாக மாட்டாள்..."

"அம்மா!"

"இவனை விட ஒரு நல்ல மாப்பிள்ளை அமைவான். இவன் போனாப் போகட்டும்னு ரொம்ப தைரியமா இருப்பாள்..." - என்றதும் ராஜகுமாரனின் முகம் மலர்ந்தது. நிம்மதியாய் மூச்சு விட்டான்.

"அம்மாடி! இப்பத்தான் எனக்கு நிம்மதியாச்சு..."

"டேய்! நான் சொன்னதெல்லாம் ஒரு யூகம்தான். அந்தப் பொண்ணோட மனநிலை எப்படி இருந்ததோ?"

"அம்மா! ஏம்மா இப்படிப் பயமுறுத்துறீங்க?"

"இந்தப் பயம்... என்னைக் கேட்காம சீனு கூட போகும்போது இருந்திருக்கணும்."

"எனக்கும் விருப்பம் இல்லைம்மா. எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன்தான் கேட்கலை."

"தப்பை நாம பண்ணிட்டு அடுத்தவங்களைக் காரணம் சொல்லக் கூடாது."

"ஸாரிம்மா!"

"சரி விடு. இனி இந்த மாதிரி எதுவும் பண்ணாதே. நம் வேலையை நாம் செய்தால் போதும். புரியுதா?"

"புரியுதும்மா..."

"சரி... மணி அஞ்சாகிப் போச்சு. இனிமே தூங்க முடியாது. எழுந்து குளி. நாம எட்டு மணிக்கெல்லாம் கிளம்பணும்..."

"எங்கேம்மா?"

"என்ன மறந்துட்டியா? இன்னிக்கு வசந்துக்கு நிச்சயதார்த்தம்..."

"அது ஈவ்னிங்தானேம்மா...!"

"ஃபங்ஷன் ஈவ்னிங்தான். ஆனா பொண்ணுக்குப் பட்டுப் புடவை எடுக்க... அத்தை என்னையும் கூப்பிட்டிருக்காங்க. போகணும்!"

"புடவை எடுக்கிறதெல்லாம் லேடீஸ் டிபார்ட்மெண்ட். அதுக்கு நான் எதுக்கும்மா?"

"டேய்! அப்பா... அக்காவை அழைச்சிட்டு வரப் போயிருக்காங்க. நான் மட்டும் எப்படி தனியாப் போறது? நீ வந்து டிராப் பண்ணு. அப்படியே சாயந்திரம் வரைக்கும் இருந்து ஃபங்ஷன் முடிஞ்ச பிறகு வந்திடலாம்."

"அப்போ அக்கா?"

"அவளை நேரா அத்தை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்திடறதா அப்பா போன் பண்ணிட்டாங்க..."

"நான் ஆபீஸ் போகணும்மா..."



"ஒரு நாள் லீவு போட்டா ஒண்ணும் ஆகாது. பேசி நேரத்தை வீணாக்காதே. சீக்கிரமாக் குளிச்சிட்டுக் கிளம்பு..." - என்றவாறே எழுந்தாள்.

"சரிம்மா!"

"அதுக்கு முன்னால ஷேவிங் பண்ணு... முகத்தைக் கண்ணாடியில பாரு. ஏதோ சீக்காளி மாதிரித் தெரியுற! அப்புறம் ஆளாளுக்குக் கேள்வி கேட்பாங்க..." - என்றவாறே யசோதா வெளியேற...

கட்டிலை விட்டு இறங்கி நேராய் கண்ணாடி முன்னே போய் நின்றான்.

அம்மா சொன்னது போல்தான் இருந்தது முகம்!

தூங்காத கண்கள் வறட்சியாய்த் தெரிய...

முள்முள்ளாய் நின்ற தாடியும் முகத்தையும் பார்க்கப் பிடிக்காமல் முகத்தைச் சுருக்கினான்.

'இதே முகத்தோடு போனால்... நன்றாய் இருக்காது தான்.'

கொட்டாவியை மென்றவாறே குளியலறையை நோக்கிச் சென்றவனின் மனம் மீண்டும் உஷாவிடம் சென்றது.

'கடவுளே! அந்தப் பெண்ணுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது. அவளை முழுதாய் என் கண் முன்னே காட்டிவிடு இறைவா!'

மனம் அவசரமாய் வேண்டிக் கொண்டது.

# 6

உறங்கினாலும் விழித்தாலும்
ஊர்கள் தோறும் அலைந்தாலும்
மயங்க வைப்பது ஒரு முகமே
மங்கை உந்தன் திருமுகமே!

"அப்பா! நாங்க கிளம்பறோம்..." - என்றவாறு தன் முன் வந்து நின்ற மகள்களை நிமிர்ந்து பார்த்தார் ராமச்சந்திரன்.

எளிதான ஒப்பனையோடு கண்ணுக்கு நிறைவாய் நின்றவர்களைப் பார்த்துக் கனிவாய் புன்னகைத்தார்.

"எங்கேடா கிளம்பிட்டீங்க?"

"நான் காலேஜுக்கு... அக்கா இன்டர்வியூக்கு..."

"இன்டர்வியூவா! இன்னிக்குமா?"

"ஆமாம்ப்பா... இது ரொம்ப நல்ல கம்பெனிப்பா... என் ஃப்ரெண்ட் கூட இங்கேதான் வேலை பார்க்கிறா... அவ சொல்லித்தான் கிளம்புறேன்..." என்றாள் உஷா.

"என்ன கம்பெனிம்மா?"

"செல்போன் கம்பெனிப்பா... அம்பத்தூர்ல இருக்கு."

"அம்பத்தூரா? அவ்வளவு தூரம் வேணாம்மா... டிராஃபிக்ல மாட்டிகிட்டு வீடு வந்து சேர நேரமாகும்..."

"முதல்ல இன்டர்வியூக்குப் போயிட்டு வரட்டுமேப்பா..."



"அந்த வேலையே வேணாம்னு சொன்ன பிறகு... வீணா ஏம்மா அலையணும்?"

"அப்போ... வேற எதுவும் ட்ரை பண்ணவாப்பா?"

"அப்பா ஒரு வேலை சொல்லட்டுமாம்மா...?" - என்றவரை வியப்பாய் பார்த்தனர் இருவரும்.

கையில் காபியோடு வந்த தனலட்சுமி சற்றுக் கோபமாய்க் குரல் கொடுத்தாள்.

"அவ வெளியே வேலை தேடி அலையுறதே எனக்குப் பிடிக்கலை. இதில நீங்களே வேலை பார்த்துக் கொடுக்கப் போறீங்களா?" - என்றவாறே கணவனிடம் காபியை நீட்டினாள்.

அதை வாங்கியவாறே புன்னகைத்தார்.

"தனம்! புள்ளைய வெளியே வேலைக்கு அனுப்பத்தானே உனக்குப் பிடிக்கலை?"

"ஆமா! வேலைக்குப் போறவ எப்ப வீடு திரும்புவான்னு தினமும் பயந்து சாகணும்... பத்திரமா வந்து சேர்ற வரைக்கும் வேற எந்த வேலையும் ஓடாது எனக்கு..."

"உனக்கு அந்தக் கவலையே வேண்டாம். தினமும் நானே அழைச்சிட்டுப் போயிட்டு நானே கூட்டிட்டு வந்திடுறேன். எப்பவும் என் கண் பார்வையிலேயே வெச்சுப் பார்த்துக்கிறேன்..."

"என்னங்க சொல்றீங்க?"

"அப்பா! அது என்னப்பா வேலை? எந்த இடத்தில இருக்கு?"

"கேம்ப் ரோடு ஜங்ஷன்ல இருக்கிற ஜவுளி ஷோரூம். கொஞ்சம் பெரிய கடைதான். தனலட்சுமி பட்டு சென்டர்ன்னு பேரு..."

தந்தை சொன்னதும்... மூவரின் விழிகளும் வியப்பால் விரிந்தன.

துணிகளை உதறிக் காயப் போட்டுக் கொண்டிருந்த ரங்கநாயகி வீட்டினுள் எட்டிப் பார்த்தாள்.

"அப்பா! நம்ம கடையையா சொல்றீங்க?"

"ஆமாம்மா! பட்டு செக்ஷன்ல வேலை பார்த்த ராகவன்... தன் மகனோட கோயம்புத்தூர்ல போய் செட்டிலாகிட்டார். ஒரு பத்து நாளா சிரமமா இருக்கு. உனக்கு விருப்பம்னா வாயேம்மா..."

"வாவ்! இந்த ஐடியா எனக்குத் தோணாமப் போச்சே? நான் வர்றேம்ப்பா..."

"உஷாம்மா! நிறைய படிப்புப் படிச்சிட்டு ஜவுளிக் கடையில நிற்கணுமான்னு உன் மனசு வருத்தப்பட்டா..."

"சேச்சே! என்னப்பா இப்படிக் கேட்கிறீங்க? உங்களுக்கு உதவியா இருக்கும்னுதான்... நான் வேலைக்குப் போகவே முடிவெடுத்தேன். யார்கிட்டயோ போய் அடிமையா சேவை செய்யுறதுக்கு நம்ம கடையில வேலை பார்க்கிறதுல எனக்கு ரொம்பச் சந்தோஷம்ப்பா...



"அதோட அப்பாவோட தொழில்ல தோள் கொடுக்கப் போறேன்ற ஆத்மதிருப்தியும் கிடைக்கும்ப்பா... இத்தனை நாள் வீணாப் போச்சே...!"

"அப்பாடி! எப்படியோ... அந்த ஆண்டவன் என் மனபாரத்தைப் போக்கிட்டான்..." - நிம்மதியாய் நெஞ்சில் கை வைத்தாள் தனலட்சுமி.

"ஏம்மா?"

"உன் அக்கா வேலைக்குப் போன மாதிரியும் ஆச்சு... அப்பாவுக்கு ஒத்தாசைக்கு ஆள் கிடைச்ச மாதிரியும் ஆச்சு. நானும் எந்தப் பயமும் இல்லாம நிம்மதியா இருப்பேன்..."

"அப்போ ஒரே கல்லுல மூணு மாங்காய்!"

"இல்லை... நாலு மாங்காய்!" - என்றாள் உமா.

"நாலா? எது நாலாவது?"

"பாட்டியோட நச்சரிப்பிலிருந்து அக்காவுக்கு முழு விடுதலை. இனி பாட்டியோட கதி அதோகதிதான்!"

"அதானே...! என்னை வம்புல இழுக்காம உனக்குச் சாப்பாடு இறங்காதே..." - ரங்கநாயகி இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைக்க... அசடு வழிந்தாள்.

"பாட்டி! துணியெல்லாம் துவைச்சாச்சா?"

"எப்பவோ ஆச்சு..."

"அப்ப நான் கிளம்புறேன். எனக்கு டயமாகுது..."

"என்னைப் பத்திப் பேசும்போது நேரமாகாதே... என்னைக் கண்டதும் நழுவுறதே உனக்கு வழக்கமாப் போச்சு..."

"விடுங்கம்மா... இந்த வீட்டுல மாமியார் மருமக... நீங்க ரெண்டு பேர்தான். சரி! நான் சொன்னதைப் பத்தி என்னம்மா நினைக்கிறீங்க?"

"அருமையான முடிவுய்யா... தாராளமாச் செய்."

"உஷாம்மா... இன்னிக்கு முகூர்த்த நாள். இன்னிக்கே வந்திடுறியா?"

"நான் ரெடிப்பா... போகலாம்!" - என்றாள் உற்சாகமாய்.

"தனம்! அப்ப நாங்க புறப்படுறோம். மதியச் சாப்பாட்டைக் கடைக்குக் கொடுத்தனுப்பு."

"சரிங்க!"

"அம்மா... பாட்டி... நான் போயிட்டு வர்றேன்."

"போயிட்டு வாடா கண்ணு!"

"ரங்கநாயகி! நானும் காலேஜுக்குப் போயிட்டு வர்றேன்..."

"அடி! வாயாடிக் கழுதை... என் புருஷன் கூட என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டதில்லை..." - சற்றுச் சிரிப்பாகவே அவள் மிரட்ட... உமா முதல் ஆளாய் ஓடிச் சென்று காரில் ஏறி அமர்ந்தாள்.



மற்றவர்களும் சிரித்துக் கொண்டே விடைபெற்றுக் காரில் ஏற... இருவரும் கையசைத்து வழியனுப்பினர்.

ரங்கநாயகியின் முகம் கனிந்தது. "தனம்...!"

"என்ன அத்தை?"

"மூத்த புள்ள முகத்தைப் பார்த்தியா? எவ்வளவு உற்சாகம்... சந்தோஷம்...!"

"ஆமா அத்தை! ரொம்ப நாள் கழிச்சி இன்னிக்குத் தான் அவ முகத்தில சந்தோஷத்தைப் பார்க்கிறேன்..."

"நான்தான்... நான்தான் புள்ளையோட மனசை நோகடிச்சிட்டேன். உடனே கல்யாணம் பண்ணியாக ணும்னு அடம்பிடிச்சி இந்தப் புள்ளைக்கு ரொம்ப வேதனையை உண்டாக்கிட்டேன்..."

"விடுங்க அத்தை! இனி எது நடந்தாலும் நல்லதே நடக்கும்னு நம்புவோம். கடவுள் எது செய்தாலும் அதுல ஒரு அர்த்தம் இருக்கும். வாங்க சாப்பிடலாம்..." - என்ற வாறே தனலட்சுமி வீட்டினுள் நுழைய ரங்கநாயகியின் மனம் இறைவனை வேண்டிக் கொண்டது.

"ஆண்டவா! என் பேத்தி பட்ட துன்பம் போதும். இனிமே அவ வாழ்க்கையில நடக்கிறதெல்லாம் சந்தோஷ மானதா நடக்கட்டும்..."

உஷா வெகு ஆனந்தமாய் இருந்தாள். தங்களுடைய கடைதான் என்றாலும் இது வரை இப்படி உள்ளே வந்து நின்றதில்லை.

வீட்டிற்குத் தேவையான அனைத்து ஜவுளிகளும் வீடு தேடி வந்துவிடும். அதில் தங்களுக்குப் பிடித்தமான வற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு மற்றவற்றைத் திருப்பி அனுப்புவதுண்டு.

என்றாவது ஒரு நாள் தந்தையிடம் கல்லூரிக்குத் தேவைப்படும் பணத்தை வாங்கச் செல்வதுண்டு. ஆனால் இன்றுதான் கடையை முதன் முறையாய் முழுவதுமாய் நிதானமாய்ப் பார்க்கிறாள்.

அப்பா கடையை நன்றாகவே நிர்வகித்திருந்தார்.

வாசல் பக்கமாய் முழுவதும் கண்ணாடி வேயப்பட்ட தடுப்பு. உட்பக்கமாய் ஏழெட்டுப் பொம்மைகள், ரெடிமேட் ஆடைகளை அணிந்து மாடலாய் நின்று கொண்டிருந்தன.

வாசலுக்கு இருபுறமும் நின்றிருந்த சந்தன நிறப் பொம்மைகள் புத்தம்புது பட்டுப் புடவையோடு இரு கரங்களையும் கூப்பி அனைவரையும் வரவேற்றுக் கொண்டிருந்தன.

வெகுநேர்த்தியாய் கட்டப்பட்டிருந்த புடவையும்... தூக்கிப் போடப்பட்டிருந்த கொண்டையில் காதோரமாய்ச் செருகப்பட்டிருந்த ஒற்றை ரோஜாவுமாய் அச்சு அசலாய் இரு பெண்கள் நிற்பதைப் போலவே தோன்றியது.

மூன்றடுக்கு மாடியுடைய கட்டடம் அது. தரைத் தளத்தில் சிறுவர்களுக்கான... குழந்தைகளுக்கான ரெடிமேட் ஆடைகள் நிரம்பி வழிந்தன.



முதல் மாடி முழுக்கப் பெண்களுக்காக ஒதுக்கப் பட்டிருந்தன. பெண்களுக்குத் தேவையான அனைத்து வகை ஆடைகளும் கண்ணைப் பறித்தன. விற்பனைப் பிரிவு முழுக்கப் பெண்கள்.

இரண்டாவது தளம் ஆடவர்களுக்குரியது. ஏ டு இஸட் வரை அனைத்தும் இருந்த தளத்தின் விற்பனைப் பிரிவில் பன்னிரண்டு ஆடவர்கள்... வெகு சுத்தமாய் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தனர்.

மூன்றாவது தளத்தில் நுழைந்ததும்... ஏதோ புது உலகிற்கு வந்தது போல் பிரமித்துப் போனாள். முழுக்க முழுக்கக் கண்ணாடியால் ஆன அறை அது.

கண்ணாடித் தடுப்பிற்குப் பின் புதிய, பழைய வகையில் அனைத்து ரக பட்டுப் புடவைகளும் மடிப்புக் கலையாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஒரு பக்கச் சுவரில் இரும்புத் தடுப்பு போடப் பட்டிருக்க... அந்த இடத்தில் வேறு ஒருவரும் இல்லை. மொத்தம் நான்கே பேர். இரண்டு பெண்கள். இரண்டு ஆண்கள். இருவருமே அப்பாவின் வயதை ஒத்தவர்கள்.

"இதுதாம்மா உன்னோட செக்ஷன்! சாமியைக் கும்பிட்டுட்டுப் போய் சீட்ல உட்கார்!" - என்றார் ராமச்சந்திரன்.

"சரிப்பா..." - என்றவாறு மேஜை மீது வைக்கப் பட்டிருந்த வண்ணமயமாய் கற்கள் பதிக்கப்பட்டிருந்த

வெங்கடாஜலபதியை வணங்கிவிட்டு... தனக்கான இடத்தை அடைந்தாள்.

ராமச்சந்திரன் மகளை நெருங்கி மெல்லிய குரலில் விவரித்தார்.

"உஷாம்மா... இந்த இரும்புத் தடுப்புச் சாவி நம்ம மேஜைக்குக் கீழ் அறையில இருக்கும். தேவையில்லாம அதை எடுக்கவோ திறக்கவோ வேண்டாம்."

"சரிப்பா!"

"இதுக்குள்ள நிறைய காஸ்ட்லி பட்டு ஸாரிங்க இருக்கும்மா... யாராவது கஸ்டமர் வந்து ரிச்சா... கிராண்டா வேணும்னு கேட்டா மட்டும் எடுத்துக் காட்டணும். மத்தபடி இதைத் திறக்க வேண்டாம்."

"சரிப்பா!"

"சரிம்மா... இது பட்டு செக்ஷன்றதால எப்பவும் கூட்டம் இருக்காது. ஆனா... வந்தா கூட்டம் கூட்டமா வருவாங்க. கவனமா இருக்கணும். அதே நேரம் வந்தவங்க... புடவை எடுக்காமப் போகக் கூடாது. அந்த அளவுக்கு நயமாப் பேசி வியாபாரம் பண்ணணும்..."

"நான் பார்த்துக்கிறேன்ப்பா..."

"அப்பா கீழேதான் இருப்பேன். எதுவும் டவுட்னா இன்டர்காமில் கூப்பிடு. கஸ்டமர் வர்ற நேரம். நான் போகட்டுமா?"

"சரிப்பா..."



உஷா புன்னகையோடு தலையசைக்க... மற்றவர்களிடம் பொதுவாய் மகளை அறிமுகம் செய்து விட்டு கீழே இறங்கிப் போனார் ராமச்சந்திரன்.

மற்றவர்களிடம் இயல்பாய் ஒரு புன்னகையைச் சிந்திவிட்டு... மேஜை நாற்காலியைச் சுத்தப்படுத்தி விட்டு... சுவாமி படத்தின் முன் இருந்த ஊதுபத்தியை ஏற்றி வைத்தாள்.

அருகே நின்ற பெண்களை நெருங்கி... வியாபார நுணுக்கங்களை, வந்தவர்களை வரவேற்றுப் பேசுவது என... தனக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டிருந்த போது... சின்ன சலசலப்பு...

நான்கைந்து பெண்களும் இரு ஆண்களும் உள்ளே நுழைந்தனர்.

அனைவரும் அவரவர் இடத்தில் நின்று புன்னகையோடு வரவேற்க...

வந்திருந்த பெண்களில் ஒருத்தி கடையைப் பார்வையால் அலசியபடியே கேட்டாள்.

"புது மாடல் பட்டுச் சேலையெல்லாம் இருக்கா?"

"இருக்கும்மா... என்ன மாடல் பார்க்கிறீங்க?"

"நீங்க எடுத்துப் போடுங்க. நாங்க பார்த்துக்கிறோம்..."

"என்ன அமௌண்ட்ல பார்க்கிறீங்க?"

"ஏன்? இதையெல்லாம் சொன்னாத்தான் காட்டுவீங்களா?" - வந்தவள் வெடுக்கெனக் கேட்க... பெரியவர் நிதானமாகவே பதிலளித்தார்.

"அப்படியில்லம்மா... இரண்டாயிரத்தில இருந்து ஐயாயிரம் வரை இங்கே இருக்கு. அதுக்கு மேலே பார்க்கணும்னா எதிர் வரிசைக்குப் போகணும்..."

"ஒரு மூவாயிரத்துக்குள்ள காட்டுங்க பார்ப்போம்!" - என்றதும் கண்ணாடித் தடுப்பை விலக்கி விட்டு... அவர்கள் கேட்ட நிறங்களில் ஒவ்வொன்றாய் எடுத்துப் பிரித்துக் காட்டினார்.

வந்திருந்த பெண்களில் நான்கு பேர் சேர்ந்து... மொத்தம் நாற்பது புடவைகளைப் பிரித்துப் பார்த்து அலசி... கடைசியாய் மாம்பழ நிறத்தில் கரும்பச்சை நிற பார்டரோடு கூடிய புடவையைத் தேர்ந்தெடுத்தனர்.

பில் போடும்படி புடவை உஷாவிடம் வர... இருக்கையில் அமர்ந்து விலைப்பட்டியலைச் சரிபார்த்து... அவர்கள் கேட்டுக் கொண்டபடி சிறிய தொகையைத் தள்ளுபடி செய்து... பணத்தைப் பெற்றுக் கொண்டு... புடவையைக் கவனமாய் அட்டைப் பெட்டியில் வைத்துக் கட்டி, அதைப் பையில் போட்டு அவர்களிடம் கொடுத்தபோது... 'அப்பாடா!' என்றிருந்தது.

ஜவுளி வியாபாரம் ஒன்றும் சாதாரணப்பட்டது அல்ல என்று தோன்றியது. வருகிறவர் கேட்பதையெல்லாம் முகம் சுணங்காமல் எடுத்துப் பிரித்துக் காட்ட வேண்டும்.



அவர்களுக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுக்கும் வரை சலிக்காமல் அடுத்தடுத்த வகை ஆடைகளை எடுத்துப் போட வேண்டும்.

அவர்கள் ஒருவழியாய் பேரம் பேசி வியாபாரம் முடிந்தபின்... கலைத்துப் போட்ட துணிமணிகளை நிதானமாய் மடிப்புக் கலையாமல் நேர்த்தியாய் மடித்து அடுக்க வேண்டும். இந்த வேலைக்கு நிறையப் பொறுமை வேண்டும் என்று புரிந்தது.

விரித்துக் காட்டிய புடவைகளை... கேசவன் பொறுமையாய் மடித்துக் கொண்டிருக்க... அவரை நெருங்கினாள் உஷா.

"கேசவன் சார்! எப்படி மடிக்கணும்னு எனக்கும் கத்துக் கொடுங்க. நானும் மடிக்கிறேன்."

"ஐயோ! உங்களுக்கெதுக்கும்மா சிரமம்? நீங்க போய் கல்லாவில உட்காருங்க..."

"ஸார்! நான் ஒண்ணும் சும்மா உட்கார வரலை. எல்லா வேலையையும் கத்துக்கணும் ஸார்!"

"இல்லம்மா! கல்லாவில எப்பவும் ஒருத்தர் உட்கார்ந்திருக்கணும். நீங்க போங்க... நான் பத்தே நிமிஷத்தில இதை மடிச்சிடுவேன்!" - என்றவாறே அவர் லாவகமாக... மளமளவெனப் புடவைகளை மடித்துவிட... அவற்றைக் கவனமாய் பார்த்துக் கொண்டு நின்றாள் உஷா.

"ம்... இதுவே பெரிய வேலைதான். இல்ல ஸார்!"

"இல்லம்மா... எந்த வேலையுமே மனசார முழு ஈடுபாட்டோட செய்தா... ரொம்பச் சுலபமான வேலைதான்."

"ரொம்பப் பொறுமையும் வேணும்..."

"கண்டிப்பாம்மா!" - என்றவாறே மடித்த புடவைகளை அவர் வரிசையாய் அடுக்கத் துவங்க...

அடுத்த கும்பல் ஆரவாரமான பேச்சோடு உள்ளே நுழைந்தது.

மற்றவர்களைப் போல் தானும் புன்னகைத்து... வந்தவர்களை வரவேற்றவளது கண்கள் விரிந்தன.

தன் வயதையொத்த இரண்டு ஆடவர்களுடன் வந்து கொண்டிருந்த ராஜகுமாரனைக் கண்டதும்... நெஞ்சம் படபடத்தது.

இது... இவன்? அவனல்லவா?'

அதே சமயம்... அவனும் உஷாவைப் பார்த்துவிட... அவன் முகத்தில் பயங்கர வெளிச்சம் உதயமானது.

சட்டென மற்றவர்களை விட்டு விலகி... வேகமாய் இவள் நின்ற இடத்திற்கு ஓடி வந்தான்.

"ஏங்க! நீங்க... அன்னிக்குக் கோவில்ல பார்த்த உஷாதானே?" - நம்பமுடியாத அதிர்ச்சியுடன் அவன் கேட்க... மௌனமாய் தலையாட்டினாள்.

ராஜகுமாரன் பெருத்த நிம்மதியோடு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.



"ஓ! தேங்க் காட்!"

"என்னாச்சு?"

"ஏங்க! நல்லவேளை என் வயித்துல பாலை வார்த்தீங்க...!"

"என்ன?"

"ஆமாங்க! உங்களைத் திரும்பவும் பார்க்கணுமேன்னு அந்த ஆண்டவன்கிட்ட வேண்டிட்டே இருந்தேன். என் வேண்டுதல் வீண் போகலை!" - ராஜகுமாரன் வெகு இயல்பாய் உற்சாகமாய்ப் பேச...

உஷா அவஸ்தையாய் மற்றவர்களைப் பார்த்தாள்.

"இப்ப... என்ன வேணும் உங்களுக்கு?"

"ஓ! ஸாரி. நீங்க இங்கதான் வேலை பார்க்கிறீங்களா?"

"ஆ...மாம்."

"ஸாரி. டியூட்டி டைம்ல டிஸ்டர்ப் பண்றேனோ?"

"புரிஞ்சா சரி..."

"ஏங்க! நான் ஒண்ணும் இங்கிதமில்லாதவன் இல்லங்க... உங்களைத் திடீர்னு பார்த்ததும் ஒரே சந்தோஷம். அதான்..."

"டேய்! என்னவோ புடவை எடுக்கிறதெல்லாம் லேடீஸ் சமாச்சாரம்... நான் எதுக்குன்னு ரொம்ப பிகு பண்ணின? இப்ப என்ன... வந்ததும் வராததுமா இங்க

கதை விட்டுட்டு இருக்க!" - என்றவாறே வந்த வசந்தைக் கட்டிக் கொண்டான் ராஜகுமாரன்.

"தேங்க்ஸ் மச்சான்!"

"எனக்கெதுக்குடா தேங்க்ஸ்?"

"வரவே மாட்டேன்னு சொன்னவனை கம்ப்பெல் பண்ணி இங்க கூட்டிட்டு வந்தியே அதுக்கு...!"

"புரியலையே?"

"உனக்குப் புரிய வேண்டாம். வா... வா. உன் ஆளுக்கு என்ன ரேஞ்சுல புடவை எடுக்கலாம்னு பாரு..."

"எங்கேஜ்மெண்ட்தானே! ஒரு டென் தௌஸண்ட்க்குள்ள பார்த்தாப் போதும்."

"ஏங்க! புது மாடலா நைஸ் கலரா எடுத்துப் போடுங்க..."

"சார்! டென் தௌஸண்ட்க்கு ஆப்போசிட் லைன்ல பார்க்கணும்..."

"அப்போ... இங்கே?"

"இது பத்தாயிரத்தில இருந்து லட்ச ரூபா வரைக்கும் உள்ள புடவை செக்ஷன்..."

"ஃபைன். அப்போ ஒரு ட்வெண்ட்டி தௌஸண்ட்ல சூப்பரா ஒரு புடவை எடுத்துப் போடுங்க!" - ராஜகுமாரன் சற்றும் தயங்காமல் சொல்ல... வசந்த் அவனை முறைத்தான்.



"ஏய்... ராஜா! என்ன விளையாடுறியா?"

"ஏன்டா?"

"அம்மாவோட பட்ஜெட் வெறும் செவன் தௌஸண்ட் தான். நான்தான் பத்தாயிரத்தில பார்க்கலாம்னு சொன்னேன்... நீ என்னன்னா இருபதாயிரம்ன்ற..."

"டேய்! உன் வருங்கால மனைவிக்குப் புடவை எடுக்க கணக்குப் பார்க்கலாமா? நீ என்ன சாதாரண ஆளா?"

"இப்ப எனக்கு ஒரு சந்தேகம்?"

"என்னடா?"

"நாம ஏன் இதே செக்ஷன்ல புடவை எடுக்கணும்? அதுக்குக் காரணம் எனக்குத் தெரிஞ்சே ஆகணும்..." - என்றவாறு இருவரையும் வசந்த் பார்வையால் ஆராய...

உஷா அவசரமாய் பார்வையைத் தழைத்துக் கொண்டாள். இரத்தம் முழுவதும் சூடானது.

## 7

காத்திருந்த கண்களே
கதையளந்த நெஞ்சமே!
ஆசையென்னும் வெள்ளமே
பொங்கிப் பெருகும் உள்ளமே!

உஷாவின் செம்மை படர்ந்த முகமும் ராஜ குமாரனின் பளீரிட்ட முகமும் எதையோ உணர்த்த... தன் மாமன் மகனை மீண்டும் சீண்டினான் வசந்த்.

"ராஜா! உன்கிட்டதான் கேட்கிறேன்... சொல்லு!"

"எ... என்ன கேட்டே?"

"நாம ஏன் இந்த செக்ஷன்ல புடவை எடுக்கணும்?"

"என்ன வசந்த்... இவ்வளவு சில்லியா கேள்வி கேட்கிற? நீ ஒரு மரைன் இஞ்சினியர். கை நிறைய... இல்ல... இல்ல பை நிறையச் சம்பாதிக்கிற. உனக்கு நிச்சயதார்த்தம். நிச்சயதார்த்தப் புடவை சும்மா கிராண்டா இருந்தாத்தானே உனக்கு மதிப்பு!"

"எனக்கு?"

"ஆமா! நீதானே மாப்பிள்ளை?"

"அப்போ... வேற எந்தக் காரணமும் இல்லை...."

"வேற என்ன காரணம்?"

"சரி! வா போகலாம்..."

"எங்கே?"

"அத்தைகிட்ட சொல்லி பர்மிஷன் கேட்டுடலாம்."

"யாருகிட்ட? அம்மாகிட்டயா?"

"ம்..."

"ஏன்டா?"

"ஏன்னா... பில்லை நீதானே பே பண்ணணும்..."

"போடா! கஞ்சப் பிசாசு... இதுக்கு எதுக்கு என்னை அம்மாகிட்ட மாட்டி விடணும்? பேசாம ஆயிரம் ரூபாய்க்குப் புடவை எடு. போ..."



"வசந்த்! அங்கே என்ன பண்றீங்க ரெண்டு பேரும்...?"

"கலர் பார்த்திட்டு இருக்கோம்மா..."

"என்னது?" - யசோதாவின் குரலில் கோபம் தொனித்தது.

"இல்ல அத்தே! இந்த லைன்ல ஏதாவது நல்ல கலர் ஸாரி இருக்கான்னு பார்த்திட்டு இருக்கோம்..."

"நீங்க பார்த்தது போதும். நாங்க நாலு புடவை செலக்ட் பண்ணியிருக்கோம். இதுல எது பிடிச்சிருக்குன்னு பாரு..."

"வாடா போலாம்!"

"உன்னைத்தானே கூப்பிட்டாங்க... நீ போ."

"அப்போ நீ?"

"கொஞ்சம் பேசிட்டு வர்றேன். எனக்குத் தெரிஞ்சவங்க..."

"ஓஹோ!" - என்றவாறு புன்னகையோடு வசந்த் நகர்ந்து செல்ல...

அடிக்குரலில் சீறினாள் உஷா.

"மிஸ்டர்! உங்க மனசில என்ன நினைச்சிட்டு இருக்கீங்க?"

"ஏங்க?"

"நான் உங்களுக்குத் தெரிஞ்சவளா?"

"ஆமா. நாம ஏற்கனவே மீட் பண்ணியிருக்கோமே..."

"மீட் பண்ணியிருந்தா?"

"இப்ப ஏன் கோபப்படுறீங்க உஷா...? வேலை செய்யுற இடத்தில வந்து டிஸ்டர்ப் பண்ணணும்னு நினைக்கலை. பார்த்துட்டு... பேசாமப் போக முடியலை. அதான்..."

"ஏன்? என்கிட்ட என்ன பேசணும்?"

"எவ்வளவோ பேசணும்ங்க... இந்த ஒரு வாரமா நான் பட்ட பாட்டை உங்ககிட்ட சொல்லியே ஆகணும்..."

"என்ன?"

"என் கண்ணைப் பார்த்தீங்களா?" – அவள் முகத்தருகே குனிந்து... தன் கண்களை விரித்துக் காட்ட... உஷா மெல்ல பின்வாங்கினாள்.

அவசரமாய் மற்றவர்களை ஒரு முறை திரும்பிப் பார்க்க... அவரவர் பணியில் ஆழ்ந்திருந்தவர்களைக் கண்டதும் லேசாய் நிம்மதியானாள்.

ராஜகுமாரன் இன்னும் அதே நிலையில் நிற்க... புருவம் உயர்த்திக் கேட்டாள்.

"என்ன இது?"

"என் கண்ணை நல்லாப் பாருங்க..."

"எ...துக்கு?"



"இது தூங்கி முழுசா ஏழு நாளாச்சு... தெரியுமா?"

"இதை ஏன் என்கிட்ட சொல்றீங்க?"

"உங்ககிட்ட சொல்லாம வேற யார்கிட்ட சொல்றதாம்? என் தூக்கம் பறிபோனதுக்குக் காரணமே நீங்கதானே!"

"வாட்...? நானா?"

"ஆமா."

"என்ன?"

"அன்னிக்குக் கோவில்ல சீனு பேசினது பெரிய தப்பு. அதைக் கேட்டு உங்க மனசு என்ன பாடுபட்டிருக்கும்... உங்க ஃபேமிலியில கூட எல்லாருக்கும் கஷ்டமா இருந்திருக்கும் இல்ல..."

சட்டென முகம் கடுத்தாள். "இப்ப எதுக்கு அந்தப் பேச்சு?"

"இல்லங்க... என்னால அப்படி இருக்க முடியலை. சீனு பண்ணின முட்டாள்தனமான காரியத்துக்கு நானும் துணையா வந்துட்டேனேன்னு என் மனசு என்னை வதைக்குது. சாப்பிட முடியலை. படுத்தா... தூங்க முடியலை. ம்ப்ச்! ரொம்பக் கஷ்டமாப் போச்சு..."

"நானே அதைப் பத்திக் கவலைப்படலை. நீங்க ஏன் சார் வருத்தப்படுறீங்க?"

"வருத்தமா! உங்களுக்கு என்ன ஆச்சோ... ஏதாச் சோன்னு எவ்வளவு பயந்திட்டேன் தெரியுமா?"

"ஏன்?"

"ஒருவேளை... மனசு ஒடிஞ்சு..."

"ஓ! சூஸைட் பண்ணிகிட்டேனோன்னு பயந்திட்டீங் களா?"

"ம்... ம்..." - வேகமாய்த் தலையாட்டியவனைக் கண்டு வசீகரமாய்ப் புன்னகைத்தாள் உஷா.

"ஏன் சார்... இந்தச் சின்ன விஷயத்துக்காக யாராவது தற்கொலை பண்ணுவாங்களா?"

"உஷா!"

"இதுக்கெல்லாம் தற்கொலை பண்ணணும்னா என்னை மாதிரி உள்ள பொண்ணுங்க எத்தனை முறைதான் தற்கொலை பண்றது?" - என்றவளைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

"என்னங்க இப்படிச் சொல்றீங்க?"

"உண்மையைத் தானே சொன்னேன். கல்யா ணம்னா... ஒரே வரனைப் பார்த்து அதையே பேசி முடிச்சிடுறாங்களா என்ன? எத்தனையோ வரன் வருது... போகுது. அதுல ஏதாவது ஒண்ணு அமையுது. இதுக் கெல்லாம் வருத்தப்பட்டுட்டு இருக்க முடியுமா?"

"தேங்க்ஸ்ங்க!" - என்றான் திருப்தியாய்.

"எதுக்கு?"

"நான் நினைச்சதைவிட நீங்க தைரியசாலியா இருக்கீங்க. இப்படித்தான் இருக்கணும்... பெண்கள்



எதுக்கும் கலங்கக் கூடாது. துணிச்சலா நிமிர்ந்து நிற்கணும்..."

"உங்க அட்வைஸ்க்கு நன்றி."

புடவையோடு வந்தாள் பணிப்பெண்.

"மேடம்! பில் போடணும்..."

"இதோ வந்திட்டேன்!" - நகர முயன்றவளைத் தடுத்தான்.

"உஷா! ஒரு நிமிஷம்..."

"என்ன?"

"அப்போ... நிஜமாவே உங்களுக்கு எந்த வருத்தமும் இல்லையே?"

"இல்ல. அன்னிக்கு நடந்ததையே நான் மறந்திட்டேன்..."

"ஐயோ!" - பதறினான்.

"என்னாச்சு?"

"அன்னிக்கு நடந்த எல்லாத்தையும் மறந்திடாதீங்க. சீனு சம்பந்தப்பட்ட விஷயத்தை மட்டும் மறந்தாப் போதும்..."

"என்ன?"

"சீனு கூட வந்த என்னையும் நான் பேசின வார்த்தைகளையும் மறந்துடாதீங்கன்னு சொன்னேன்..."

"யூ ஸீ மிஸ்டர்..."

"ராஜகுமாரன்!"

"மிஸ்டர் ராஜகுமாரன்! தேவையில்லாத எந்த விஷயத்தையும் நான் உடனே மறந்திடுவேன்..."

"ஆனா... என்னை அப்படி மறக்க முடியாது."

"வாட்?"

"இப்பக்கூட என்னைப் பார்த்ததும் உங்களுக்கு அடையாளம் தெரிஞ்சிடுத்தே. அப்போ... என்னை மறக்கலைன்னுதானே அர்த்தம்!" - அவன் குறும்பாய்க் கேட்க...

"நான்சென்ஸ்!" - சிடுசிடுப்பாய்ச் சொல்லிவிட்டு... பில் போடும் இடத்திற்குச் சென்றாள்.

அவளது கோபத்தையும் வேகத்தையும் ரசனையாய்ப் பார்த்துக் கொண்டு நின்ற மகனை நெருங்கினாள் யசோதா.

மற்றவர்கள் புடவைக்கான பணத்தைக் கொடுக்குமிடத்தில் நிற்க... மகனைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"யாருடா அந்தப் பொண்ணு?"

"அம்மா! அது... அது..."

"நல்லாக் கேளுங்க அத்தே! மணிக்கணக்கா ரீல் சுத்திட்டு இருக்கான். கேட்டா... தெரிஞ்சவங்கன்றான்!"

"ராஜா! யார் அது?"



"அம்மா! நான்... காலையில சொன்னேன்ல... அந்தப் பொண்ணு இதுதான்..."

"யாரு?"

"அதாம்மா! சீனு அவாய்ட் பண்ணினான்னு சொன்னேனே..." - ராஜகுமாரன் மெல்லிய குரலில் சொல்ல... யசோதா வியப்பாய்ப் பார்வையைத் திருப்பினாள்.

இளம்பச்சை நிறப் புடவையில் மிக மெலிதான ஒப்பனையில் இருந்த போதும் கண்ணுக்கு நிறைவான அழகுடன் மின்னினாள் உஷா.

எதிரில் நிற்பவர்களிடம் மென்மையாய்ப் பேசிச் சிரித்தபோது... காதில் கிடந்த குட்டி ஜிமிக்கிகள் அசைந்தாடி... அவளை இன்னும் அழகாக்கியது.

பணத்தை எண்ணிப் பார்த்து விட்டு... பில்லையும் புடவையையும் மேஜை மேல் இருந்த சுவாமிப் படத்தின் பாதத்தில் வைத்து எடுத்து... இரு கரங்களாலும் வந்தவர்களிடம் கொடுத்த பாங்கு பிரமிக்க வைத்தது.

துளியும் ஆர்ப்பாட்டமில்லாத அமைதியான அற்புதமான அழகு. பேசுவது கூட வெகு அமைதி. சிரிக்கும்போது இதழ்கள் விரிந்ததே தவிர... பற்கள் வெளியே தெரியவில்லை. அத்தனை மென்மையான புன்னகை.

பார்த்த விழிகளை எடுக்க மனமின்றி... பார்வையைத் திருப்பாமலேயே மகனிடம் கேட்டாள் யசோதா.

"என்னப்பா சொல்ற? இந்தப் பொண்ணையா வேண்டாம்னு சொன்னான்?"

"ம்... யெஸ் மா!"

"அவனுக்கு என்ன கண்ணு குருடாப் போச்சா? இந்த மாதிரி ஒரு பொண்ணு கிடைக்குமா?"

"ராஜா! உன் ஃப்ரெண்ட் சீனுவைப் பத்தியா பேசுற?"

"ம்... ம்..."

"அத்தே! இந்தப் பொண்ணு ரொம்ப லக்கி அத்தே!"

"என்னப்பா சொல்ற?"

"அந்தச் சீனுப்பய எப்பப் பார்த்தாலும் ஒரு பொண்ணு பின்னால சுத்திட்டு இருக்கான். நான் கூட ரெண்டு மூணு தரம் பார்த்திருக்கேன்..."

"ஓ! இந்த வேலைகூட செய்யுறானா அவன்? அவன் மூஞ்சிக்கு இந்தப் பொண்ணை வேணாம்னு சொல்லி யிருக்கானே... ராஸ்கல்! அவன் மட்டும் வீட்டுப் பக்கம் வரட்டும்..."

"அம்மா... அம்மா! அதெல்லாம் அவன் சொந்த விஷயம். நமக்கென்ன வந்தது?"

"எதுடா அவன் சொந்த விஷயம்? அவன் ஒண்ணும் தனியாப் போகலையே... எம்புள்ளையையும் இல்ல கூட்டிட்டுப் போயிருக்கான். நீ இந்தப் பொண்ணை நினைச்சி ஒரு வாரமா தூங்காம..."



"ஐயோ அம்மா! சத்தமாப் பேசாதீங்க... யார் காதிலயாவது விழுந்தா தப்பாகிப் போகுது...?"

"அண்ணி! புடவை வாங்கியாச்சி. புறப்படலாமா?"

"ம்... போலாம்... போலாம்."

"அம்மா! நீங்க போயிட்டே இருங்க... நானும் வசந்தும் பின்னாடியே வந்திடுறோம்."

"எங்கேடா போறீங்க?"

"முகூர்த்தப் புடவைக்கு ஆர்டர் கொடுத்திட்டு வர்றோம்."

"ஏய்! அதுக்கு இன்னும் ஒரு மாசம் இருக்கே?"

"இப்பவே ஆர்டர் பண்ணினாத்தான் கிடைக்கும். நீங்க கிளம்புங்க. இப்ப வந்திடுறோம். நீ வா... வசந்த்!" - என்றவாறு வசந்தைத் தன் பக்கமாய் இழுத்துக் கொண்டு உஷாவிடம் நெருங்கினான்.

"டேய்! என்னை எங்கே கூட்டிட்டுப் போற?"

"அந்தப் பொண்ணுகிட்ட பேசுறதுக்கு?"

"நான் ஏன் பேசணும்?"

"நான் பேசும்போது கூட நின்னாப் போதும். நீ ஒண்ணும் பேச வேண்டாம்."

"நான் ஏன்டா கூட வரணும்?"

"சும்மா... ஒரு சப்போர்ட்டுக்கு..."

"ராஜா! இதெல்லாம் ரொம்ப ஓவர்."

"டேய்! சும்மா வாடா."

"எனக்கு ஏற்கனவே கல்யாணம் முடிவாகிப் போச்சு. இன்னிக்கு நிச்சயதார்த்தம்!"

"குட்... இதே வார்த்தையை உஷாகிட்ட சொன்னாப் போதும்."

"வாட்?"

"உன் நிச்சயத்துக்கு அவளை இன்வைட் பண்ணப் போறோம்..."

நடந்து கொண்டிருந்த வசந்த் நின்றான்.

"ஏய்! என்னாச்சு உனக்கு? ஆர் யூ மேட்?"

"ஏன்டா?"

"பின்னே...? அந்தப் பொண்ணு யாருன்னே தெரியாது. அவளைப் போய் இன்வைட் பண்ணினா செருப்பாலயே அடிப்பா..."

"பயப்படாதே! நான் பார்த்துக்கிறேன்."

"எதை? நான் அடி வாங்குறதையா?"

"ஷ்... வளவளன்னு பேசாதே! டயமாகுது... கூட்டம் வேற வந்திட்டே இருக்கு. வா..." – என்றவாறு நேராய் உஷாவின் முன் சென்று நின்றான்.

நழுவ முயன்ற வசந்தை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

"ஹாய்!" – லெட்ஜரில் ஏதோ எழுதிக் கொண்டிருந்த உஷா நிமிர்ந்தாள்.



வியப்பாய் அவர்களின் பின்னால் பார்த்துவிட்டு தயக்கமாய்க் கேட்டாள்.

"என்ன சார்... எதையும் விட்டுட்டுப் போயிட்டீங்களா?"

"இல்ல... ஆமா!"

"இது என்ன பதில்?"

"பதில்... இதோ இவன் சொல்வான்!" – வசந்த் ராஜகுமாரனை கைகாட்ட... அவன் அடக்கமாய் புன்னகைத்தான்.

"இல்ல வசந்த்! அவங்க என்னதான் எனக்குத் தெரிஞ்சவங்களா இருந்தாலும் இன்னிக்கு நடக்கப் போறது உன்னோட என்கேஜ்மெண்ட். ஸோ! நீதான் இன்வைட் பண்ணணும்..."

"என்ன?" – வியப்பாய் எழுந்தாள் உஷா.

"ஆமாங்க! இன்னிக்கு இவனுக்கு நிச்சயதார்த்தம்."

"அதுக்கு?"

"அதுக்கு நீங்க கண்டிப்பா வரணும்னு இவன் விருப்பப்படுறான்..." – வசந்த் திணறலாய்ச் சொல்ல...

கோபமாய் நிமிர்ந்தாள் உஷா.

"ஏய் மிஸ்டர்! என்ன விளையாடுறீங்களா?"

"இல்லங்க... எங்க வீட்டுல நடக்கிற ஃபங்ஷனுக்கு இன்வைட்தான் பண்றோம்."

"நான்சென்ஸ்! யார் சார் நீங்க? என்னை முன்னே பின்னே தெரியுமா உங்களுக்கு? எந்தத் தைரியத்தில கூப்பிடுறீங்க?"

"ஸாரி உஷா! நான் சொன்னேன் இவன்கிட்ட... அவங்களைக் கூப்பிட வேண்டாம்னு... இவன்தான் கேட்கலை!"

"நானா!" - வாயைப் பிளந்தான் வசந்த்.

"ஆமா! எனக்குக் கூடப்பிறந்த அக்கா தங்கை யாருமே இல்லை. இவங்களைப் பார்த்தா என் தங்கை மாதிரியே இருக்குன்னு சொன்னியே...!"

"அடப்பாவி! இன்னும் கொஞ்ச நேரம் நின்னா என் சோலியை முடிச்சிடுவ... நான் வரலைப்பா இந்த ஆட்டத்துக்கு! நீயாச்சு... அவங்களாச்சு... என்னை விட்டுடு!" - இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி... கும்பிடு போட்டு விட்டு வசந்த் ஓட... ராஜகுமாரன் தலையில் கை வைத்தான்.

"கடைசி நேரத்தில கவுத்திட்டானே?" - அவஸ்தையாய் விழித்தவனை...

இரு கைகளையும் கட்டிக் கொண்டு ஏற இறங்கப் பார்த்தாள் உஷா.

"என்ன இதெல்லாம்?"

"வந்து ஸாரி... நான் ஏதோ நினைச்சேன்... அது எப்படியோ முடிஞ்சிடுச்சு..."



"இது என்ன ப்ளே கிரௌண்டா? உங்க விருப்பத்துக்கு விளையாட? ம்...!"

"ஸாரி உஷா! இப்படியெல்லாம் மிரட்டாதீங்க. நான் உண்மையைச் சொல்லிடுறேன்..."

"என்ன உண்மை?"

"நீங்க வேற ஏதாவது ஒரு கடையில வேலை பார்த்தால் கூட தினம் ஒரு முறை ஏதாவது ஒரு திங்க்ஸ் வாங்குற சாக்குல உங்களை வந்து மீட் பண்ணலாம். நீங்க நிற்கிறதோ பட்டு ஸாரி ஷோ ரூம்ல... இங்கே தினம் என்னால வரமுடியுமா?"

"என்ன உளறுறீங்க?"

"இல்லை. நிஜமாத்தான் சொல்றேன். எனக்கு உங்களை எப்பவும் பார்க்கணும் போல இருக்குது..."

"யூ இடியட்!"

"நீங்க என்ன திட்டினாலும் இதுதான் உண்மை. அன்னிக்குக் கோவில்ல பார்த்தப்பவே சொன்னேனே... நான் எதையும் வெளிப்படையாப் பேசிடுவேன்னு..."

"ப்ளீஸ் அவுட்!"

"போறேங்க... அதுக்கு முன்னால ஒரு சின்ன ஹெல்ப்!"

"என்ன?"

"எங்க அத்தை வீடு இங்க மேடவாக்கத்திலதான் இருக்கு. இன்னிக்கு முழுக்க நான் அங்கேதான் இருப்பேன்."

"அதை ஏன் என்கிட்ட சொல்றீங்க?"

"ஒருவேளை உங்களுக்கு அங்கே யாராவது கெஸ்ட் ரிலேஷன் யாராவது இருந்தா வாங்களேன்..."

"வாட்?"

"தப்பா எடுத்துக்காதீங்க... பொண்ணுக்கும் அதே ஊர்தான். ஒருவேளை உங்க உறவுக்காரங்களா இருந்து... நீங்களும் ஃபங்ஷனுக்கு வந்தா உங்களை மறுபடியும் ஒரு முறை பார்க்க வாய்ப்பு கிடைக்குமே! அதோட..."

"ஸ்டாப் இட். இந்த மாதிரிப் பைத்தியக்காரத்தனமா உளறிட்டு இந்தப் பக்கம் வந்தீங்க... மரியாதை கெட்டுடும். அவுட்... கெட் அவுட்!" - வாசலுக்கு நேரே கைநீட்டினாள்.

ராஜகுமாரன் அசராமல் நிமிர்ந்து நின்றான். கண்களால் சிரித்தான்.

"உஷா! நாம பார்ப்போம். சீக்கிரமே நேருக்கு நேரா சந்திப்போம். பார்க்கலாமா?"

"அப்படி ஒரு சந்திப்பு நடக்கும்போது பார்க்கலாம். இப்பக் கிளம்புங்க!"

"பை... ஸீ யூ!" - கையசைத்து விட்டு அவன் வெளியேற...

உஷாவின் இதயம் படபடவென அடித்துக் கொண்டது.



# 8

வாசமான முல்லையோ
வானவில்லின் பிள்ளையோ
பூவில் நெய்த சேலையோ
நடந்து வந்த சோலையோ!

**க**ல்லூரி விட்டு நேராய் கடைக்கு வந்த இளைய மகளை வியப்பாய்ப் பார்த்தார் ராமச்சந்திரன்.

"என்னம்மா! கடைக்கு வந்திருக்க?"

"உங்ககிட்ட பெர்மிஷன் கேட்கணும்ப்பா..."

"என்ன பர்மிஷன்?"

"அப்பா! என் ஃப்ரெண்ட் சர்மிளா இருக்கால்ல... அவ அக்காவுக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்குப்பா..."

"சரி... நல்ல விஷயம் தான்!"

"இன்னிக்கு நிச்சயதார்த்தம்ப்பா... அதுக்கு எங்களையெல்லாம் கண்டிப்பா வரணும்னு சொல்லியிருக்கா..."

"சரி!"

"நானும் போகணும்ப்பா... நானும் அக்காவும் போயிட்டு வந்திடட்டுமா?" - என்றவாறே தந்தையின் எதிரே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள் உமா.

"என்னம்மா இது? பொம்பளைப் பிள்ளைங்களை எப்படி தனியா அனுப்புறது? அதெல்லாம் வேண்டாம்மா..."

"என்னப்பா நீங்க? இதோ இருக்கிற மேடவாக்கம் தானேப்பா... கார்ல போனா இருபது நிமிஷம்தான்... போயிட்டு வர்றோம்ப்பா..."

"அதுக்கில்லம்மா..."

"என் ஃப்ரெண்ட் எல்லாரும் போறாங்க. நான் மட்டும் போகலைன்னா அப்புறம் ஷர்மி என்கூட பேசவே மாட்டாள்..."

"உமாம்மா! பெண்பிள்ளையைத் தனியா அனுப்பிட்டு... முதல்ல இதுக்கு அம்மா ஒத்துக்க மாட்டாள்..."

"நீங்கதான்ப்பா அம்மாவை ஒத்துக்க வைக்கணும். நாம நாலு இடத்துக்குப் போனாத்தானே நாளைக்கு நம்ம வீட்டுக்கும் நாலு பேர் வருவாங்க..."

"அதெல்லாம் சரிதாம்மா... ஆனா?"

"ரொம்ப யோசிக்காதீங்கப்பா... ஏற்கனவே டயமாச்சு. ஆறு மணிக்கு ஃபங்ஷன். நாங்க இப்பவே கிளம்பியாகணும். ப்ளீஸ்ப்பா... மை ஸ்வீட் டாடியில்ல... சரின்னு சொல்லுங்கப்பா!"

கடையில் கூட்டம் நிரம்பி வழிந்தபோதும் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் தந்தையின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டு உமா கொஞ்ச... ராமச்சந்திரனால் பலமாய் மறுக்க முடியாமல் போனது.

"உமாம்மா! நாம எல்லாரும் கல்யாணத்தன்னிக்குப் போகலாமே?"



"அப்பா! நான் இன்னிக்குப் போறதைப் பத்திப் பேசுறேன். நீங்க எப்பவோ போறதுக்குச் சம்மதம் சொல்றீங்களா?"

"இல்லம்மா... உங்களைத் தனியா அனுப்பினா உங்க அம்மாகிட்டயும் எங்க அம்மாகிட்டயும் மாட்டிகிட்டு அல்லாடுவேனே...!"

"அப்போ ஒண்ணு பண்ணலாம். நீங்களும் வாங்க..."

"இன்னிக்கு முகூர்த்த நாளும்மா. கடையைப் போட்டுட்டு வர முடியாது."

"அப்ப ஒரு வழிதான் இருக்கு...."

"என்ன வழி?"

"நானும் அக்காவும் கிளம்பி ஆட்டோவுல போயிடுறோம். நீங்க ஒரு எட்டு ஒன்பது மணிக்கெல்லாம் காரை எடுத்திட்டு வாங்க. நாம சேர்ந்தே திரும்பிடலாம்... சரியாப்பா!"

"நான் இன்னும் போன்னு சொல்லவே இல்லையே?"

"சொல்லுங்கப்பா! எப்படியும் உங்களைச் சம்மதிக்க வெச்சிடுவேன். பிறகேன் வாக்குவாதம் செய்து டயத்தை வீணாக்கணும்?"

"ஏய்! காரியக்காரக் குட்டி நீ?"

"தெரியுதில்ல... நான் போய் அக்காவைக் கூட்டிட்டு வர்றேன். அதுக்குள்ள வீட்டுக்குப் போன் பண்ணி உங்க மம்மிகிட்டயும் எங்க மம்மிகிட்டயும் விஷயத்தைச் சொல்லிடுங்க. இல்லேன்னா... அவங்ககிட்ட பர்மிஷன் கேட்கிறதுக்குள்ள விடிஞ்சிடும்..." - என்றவாறே படிக்கட்டை நெருங்கினாள்.

"அப்பா! அக்கா தேர்ட் ஃப்ளோர்லதானே இருக்கா?"

"ஆமாம்மா! கேசவன்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சிட்டு வரச் சொல்லு..."

"தேங்க் யூ டாடி! ம்மா..." - தந்தைக்கு பறக்கும் முத்தம் ஒன்றைப் பரிசளித்து விட்டு புள்ளிமான் குட்டியாய் படிக்கட்டுகளில் குதித்தோடிய மகளைப் புன்னகையோடு பார்த்து விட்டு... தொலைபேசியைக் கையில் எடுத்தார்.

இரண்டே நிமிடத்தில் தமக்கையின் முன் சென்று மூச்சுவாங்கினாள் உமா. வியப்பாய் எழுந்தாள் உஷா.

"ஏய்! நீ எப்ப காலேஜ்ல இருந்து வந்தே?"

"இப்பத்தான்..."

"என்னடி! வீட்டுக்குப் போகாம கடைக்கு வந்திட்ட? என்னைப் பார்க்கணும்னு வந்தியா?"

"அக்கா! முதல்ல நீ கிளம்பு. என்கூட வா."

"என்னாச்சு?"

"சீக்கிரம் வா. எல்லாம் போகும்போது சொல்றேன்..."

"என்னன்னு சொல்லேன்... பயமா இருக்கு..."



"எல்லாம் நல்ல விஷயம்தான்... வா.

"கேசவன் சார்! நீங்க கவனிச்சுக்கங்க... நாங்க கிளம்புறோம்!" - என்றவள் அவரது பதிலை எதிர் பாராமல்... தமக்கையின் கையைப் பிடித்துக் கொண்டு விடுவிடுவென இறங்கினாள்.

"ஏய்! மெல்லடி.... எதுக்கு இவ்ளோ அவசரம்?"

"நேரமாகிட்டா... ஃபங்ஷன் முடிஞ்சிடும்."

"என்ன ஃபங்ஷன்?"

"நிச்சயதார்த்தம். ஈவ்னிங் ஆறு மணிக்கு!"

"யாருக்கு நிச்சயதார்த்தம்?"

"ஷர்மியோட அக்காவுக்கு..."

"அதுக்கு ஏன்டி என்னை இழுத்திட்டு வர்ற?"

"அக்கா! நான் மட்டும் போகணும்னா அப்பா விடமாட்டாங்க. அதான் உன்னையும் கூட்டிட்டுப் போறேன். வா..."

"நான்... நான் எதுக்குடி?"

"ம்ப்ச்! இப்பத்தானே சொன்னேன்...."

"அதுக்கில்லைடி... உன் ஃப்ரெண்ட் வீட்டுல எனக்கு யாரையும் தெரியாதே! நான் வந்து என்ன பண்றது?"

"எனக்கு மட்டும் யாரையும் தெரியுமா? கூப்பிட்ட மரியாதைக்குப் போயிட்டு ஆளோட ஆளா நின்னுட்டு வந்திடலாம்..."

"உமா! எனக்கு இதில எல்லாம் இன்ட்ரஸ்ட் கிடையாதுடா!"

"சும்மா வாக்கா... சும்மா வீட்டுலயே அடைஞ்சு கிடந்தா எப்படி? இப்படி நாலு இடத்துக்குப் போகணும்..."

"அப்பா எப்படிச் சம்மதிச்சாங்க?"

"சம்மதிக்கலைன்னா யார் விடுறது?"

"ஓஹோ! அப்பாவை மிரட்டிட்ட... வீட்டுல உள்ள பாட்டியை எப்படிச் சமாளிக்கப் போறியாம்?"

"அந்தப் பொறுப்பை அப்பாகிட்ட விட்டுட்டேன்... நீ பேசாம வா..." - என்றவள் தந்தையிடம் நெருங்க... ரிசீவரை வைத்து விட்டுப் புன்னகையோடு மகள்களை ஏறிட்டார்.

"அம்மாடி! வீட்டுல சொல்லிட்டேன். பார்த்து ஜாக்கிரதையா போங்க. விசேஷம் முடிஞ்சதும்... அப்பாவுக்குப் போன் பண்ணுங்க... நான் கூட்டிட்டுப் போக வர்றேன்."

"தேங்க்யூப்பா... வர்றோம்!"

"இரும்மா... சர்மிளாப் பொண்ணு வீடு எங்கே இருக்குன்னு சொல்லிட்டுப் போ..."

"பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில இருக்கிற அஷ்டலட்சுமி கோவிலுக்குப் பின்னாடி இருக்குதுன்னு சொன்னாப்பா... நிச்சயதார்த்தம் கிராண்டா பண்றாங்களாம். ஸோ! நிறையக் கூட்டம் இருக்கும். நீங்க ஈஸியாக் கண்டுபிடிச்சிடலாம்.



"ஏதும் டவுட்னா எனக்கு போன் பண்ணுங்க. நின்னு பேச நேரமில்ல... பை டாட்! வாக்கா..." - என உஷாவுடன் வெளியேறி சாலையோரமாய் நின்ற ஆட்டோவில் பேரம் பேசி ஏறிக் கொண்டனர்.

"ஏன் உமா! நாம கண்டிப்பா போய்த்தான் ஆகணுமா?"

"இது என்ன கேள்வி?"

"இல்ல... கல்யாணம்னா பரவாயில்லை. நிச்சயதார்த்தம்தானே!"

"அக்கா! அவ அக்கா நிச்சயத்துக்கு நாம போனாத்தானே உன் ஃபங்ஷனுக்கு அவ வருவா...?"

"அதுக்காக...."

"அக்கா! நான் வீட்டுல என்ன சொல்லித் தப்பிக்கலாம்னு யோசிக்கிறேன். நீ நாம எந்த டிரஸ் போட்டுட்டுப் போகலாம்னு யோசி. இப்ப வேற எதையும் கேட்காதே!" - என்றவாறு உமா தீவிரமாய்ச் சிந்திக்கத் துவங்கினாள்.

'அப்பாவைச் சமாளிப்பது ஒன்றும் கடினமல்ல... அம்மாவைக் கூட கொஞ்சம் தாஜா பண்ணிடலாம். இந்தப் பாட்டியை எப்படிச் சமாளிப்பது? வாக்குவாதம் பண்ணவோ... சண்டை போடவோ நேரமிருக்காதே! ஆறு மணிக்கு ஃபங்ஷன் என்றால் ஒரு பத்து நிமிஷம் முன்பாவது போய் நிற்க வேண்டுமே...!'

யோசனையாய் மணிக்கட்டைத் திருப்பி நேரம் பார்த்தாள்.

மணி ஐந்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

ஆட்டோ வீட்டை நெருங்க... டிரைவரிடம் குரல் கொடுத்தாள்.

"அந்த கிரீன் கலர் வீடுதான்!" - என்றதும் ஆட்டோ வேகம் குறைந்து வீட்டின் முன் வந்து நின்றது.

இருவரும் இறங்கியதும் உமா டிரைவரிடம் திரும்பினாள்.

"அண்ணே! ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க... மேடவாக்கம் வரைக்கும் போகணும். இப்ப வந்திடுறோம்."

"சரிங்கம்மா..." - என்றவாறு அவர் ஆட்டோவைத் திருப்ப... உஷா லேசாய்த் திடுக்கிட்டாள்.

வீட்டிற்குள் நுழைய முயன்ற தங்கையின் கையைப் பற்றினாள்.

"ஏய்... உமா!"

"என்னக்கா?"

"இப்ப... என்ன சொன்ன? எந்த ஊர்?"

"மேடவாக்கம். ஷர்மியோட வீடு அங்கதானே இருக்கு..."

"அச்சோ...!" - பதறிப் போனாள்.



உமா குழப்பமாய் உஷாவின் முகத்தைப் பார்த்தாள்.

"என்னக்கா?"

"அது... நான்... நான் எங்கேயும் வரலை!"

"அக்கா! என்ன விளையாடுறியா? நான் எத்தனை பாடுபட்டு அப்பாகிட்ட பர்மிஷன் வாங்கியிருக்கேன்....?"

"இல்ல உமா... நான் சொல்றதைக் கேளு..."

"டயமாகுது. எதுவா இருந்தாலும் போகும் போது பேசிக்கலாம். பேசாம வா!" - என்றவாறு உமா வீட்டிற்குள் நுழைய... இதயம் தடதடக்க பின்னால் சென்றாள் உஷா.

காலையில் ராஜகுமாரன் பேசிய வார்த்தைகள் காதில் எதிரொலிக்க... கால்கள் பின்னிக் கொண்டன.

அவன் சொன்ன நிச்சயதார்த்தமாய் இருக்குமோ? ஐயோ! அவனை நினைத்தாலே... கை கால்கள் எல்லாம் உதறல் எடுக்கிறதே! திரும்பவும் அவனைப் பார்ப்பதா? நோ!

தன் கடைக்கே வந்து அத்தனை நேரம் துணிச்சலாய் வாதாடியவன்... அவர்கள் வீட்டிற்குச் சென்றால் சும்மா விடுவானா? நினைத்தாலே உள்ளம் பதறியது.

வேண்டாம்... அவனைப் பற்றி நினைக்கக் கூடாது. மேடவாக்கம் என்றால் சற்று பெரிய ஊர்தானே? அதில் எத்தனையோ வீடுகள் இருக்கலாம். இந்த சர்மிளா வீட்டிற்கும் அவனுக்கும் சம்பந்தம் இல்லாமல்கூட

இருக்கலாம். நான் ஏன் வீணாய் அவனை நினைத்துப் பயப்பட வேண்டும்? அவன் மாப்பிள்ளை வீட்டுக்காரன் தானே!

ஐயோ! பொண்ணு வீடும் அதே ஊர்தான் என்றானே.... அந்தப் பெண் ஒருவேளை... ஷர்மியின் அக்காவாய் இருக்குமோ? எத்தனை உறுதியாய் தன்னிடம் சொல்லிவிட்டுப் போனான்...?

சீக்கிரமே நேருக்கு நேராய் சந்திப்போம் என்றானே! அந்த வார்த்தையில் ஏதேனும் உள்நோக்கம் இருக்குமோ? எதற்காக அப்படிச் சொன்னான்?

"அக்கா! ஏன் இப்படிச் சிலையாட்டம் நின்னுட்டு இருக்க... வா!" - தங்கை உசுப்பிய பிறகே திடுக்கிட்டாள்.

மனம் அடித்துக் கொள்ள... வீட்டிற்குள் நுழைய... ரங்கநாயகி வாயெல்லாம் சிரிப்போடு வரவேற்றாள்.

"வாங்கம்மா! தனம்... புள்ளைங்க வந்திடுச்சி பாரு..."

"இதோ வந்திட்டேன்!" - என்றவாறே வந்த தனலட்சுமியின் கையில் மல்லிகைப் பூப்பந்து இருந்தது.

"அம்மா! வந்து... ஷர்மியோட..."

"எல்லாம் அப்பா சொன்னாங்க. போய் ரெடியாகுங்க... நீங்க கட்டிட்டுப் போக புடவை, போட்டுக்க நகையெல்லாம் மேசை மேல எடுத்து வைச்சிட்டேன். கவனமாப் போட்டுக்கோங்க. நான் பூவைக் கட் பண்ணி எடுத்திட்டு வர்றேன்..." - என்ற தாயை நம்ப முடியாமல் பார்த்தனர்.



"அம்மா! இது... கனவில்லையே?"

"போடி! உனக்கு எப்பவும் விளையாட்டுத்தான். மணியாகுதே... சீக்கிரம் கிளம்பு!" - என அன்னை விரட்ட... உற்சாகமாகத் தன் அறைக்குள் பத்தே நிமிடத்தில் பசுமையும் நீலமும் கலந்த நிறத்தில் புத்தம் புதிய பட்டுப் புடவையில் கண்ணை உறுத்தாத நகையுடன் தயாராகி வந்தாள் உமா.

"அம்மா! எப்படி இருக்கேன் நான்?"

"உனக்கென்னடி... ராசாத்தி மாதிரி இருக்க! உஷா! நீ இன்னும் கிளம்பலையா?"

"இதோ வர்றேம்மா..." - என்றவாறே புடவைக் கொசுவத்தை இழுத்து விட்டுக் கொண்டே வெளியே வந்தவளைக் கண்டு திருஷ்டி கழித்தாள் ரங்கநாயகி.

கரும்பச்சை நிறப் பட்டுப் புடவையில் தளிர் பச்சைநிற பார்டரும் அதற்கேற்ற பச்சைக்கல் பதித்த நகைகளுமாய் முகத்தில் சங்கோஜப் புன்னகையுடன் நின்றவளைக் கண்டு மெலிதாய் விசிலடித்தாள் உமா.

"அக்கா! கலக்குறியே.... இன்னிக்கு எல்லாரும் உன்னைத்தான் பார்க்கப் போறாங்க... போ!"

"ச்சு... சும்மா இருடி."

"தனம்! புள்ளைங்களுக்கு பூ வெச்சி விடு!" - என்றதும் நான்காய் மடித்த பூச்சரத்தைத் தலையில் வைத்து விட்டாள் தனலட்சுமி.

உமா அடக்க முடியாமல் கேட்டே விட்டாள்.

"பாட்டி! எப்படி பாட்டி! நான் பெரிய பூகம்பத்தையே எதிர்பார்த்துட்டு வந்தேன். நீங்க என்னன்னா... எங்களை அலங்கரிச்சு விடுறீங்க? எப்படி பாட்டி இதெல்லாம்?"

"அடியே வாயாடி! இதுக்கெல்லாம் காரணம் இருக்குடி..."

"என்ன காரணம்?"

"எங்க ஊர்ப்பக்கம் கல்யாணம் கூடி வராம நிற்கிற பொண்ணுங்களை இந்த மாதிரிக் கல்யாண வீட்டுக்குக் கூட்டிட்டுப் போவோம். அப்படிக் கூட்டிட்டுப் போனா... உடனே கல்யாணம் கூடி வந்திடும்னு ஒரு ஐதீகம்!"

"அதானே பார்த்தேன்... என்னடா எலி அம்மணமாப் போகுதேன்னு...?"

"என்னடி! என்னவோ மாதிரிப் பேசுற?"

"பாட்டி! உங்க மூடப் பழக்கவழக்கத்திற்கு அளவே கிடையாதா? நீங்க சொல்றது ஐதீகம் இல்ல பாட்டி... புத்திசாலித்தனம்!"

"என்ன?"

"ஆமா பாட்டி! கல்யாண வீடுன்னா ஆயிரம் உறவுக்காரங்க ஒண்ணாக் கூடுவாங்க. அதில பாதிப் பேருக்கு கல்யாண வயசுல பொண்ணோ பையனோ இருப்பாங்க. இந்த மாதிரி அழகான பொண்ணு கண்ணுல பட்டா விடுவாங்களா!



"இது யார் பொண்ணு? இவ்வளவு அழகா இருக்காளேன்னு விசாரிப்பாங்க... எல்லாம் ஒண்ணுக்குள்ள உறவா இருப்பதால கல்யாணம் பேசி முடிக்க வசதியாப் போயிடும். என்ன? நான் சொல்றது சரிதானே!" - என்றவளைப் பார்த்து வாயைப் பிளந்தாள் ரங்கநாயகி.

'இவள் சொல்வதும் சரியாய்த்தானே இருக்கிறது? தங்களுடைய முன்னவர்கள் கல்யாண வீட்டுக்குப் போய் வந்தா... திருமணத் தடை நீங்கிக் கல்யாணம் கூடும் என ஒற்றை வார்த்தையில் சொல்லிச் சென்றதை... இன்றைய இளசுகள் விலாவாரியாய் சொல்கின்றன. இரண்டிற்குமே அர்த்தம் ஒன்றுதான்!'

"தனம்! உன் மககிட்ட கொஞ்சம் உஷாராத்தான் இருக்கணும் போலிருக்கு?" - என்றாள் சற்றுப் பெருமிதத்தோடு.

"பாட்டி! அப்ப நான் சொன்னது சரிதானா?"

"ரொம்பச் சரி. நீ அறிவாளிதான். ஒத்துக்கிறேன்..."

"ம்... வெரி குட். சரி... நாங்க போயிட்டு வர்றோம்."

"உஷாம்மா... ரொம்ப லேட் பண்ணிடாதீங்க. சீக்கிரமா வந்திடுங்க. மறக்காம அப்பாவுக்குப் போன் பண்ணுங்க..."

"சரிம்மா... வர்றோம்மா... வர்றோம் பாட்டி!" - என்றவாறு இருவரும் புறப்பட... அவர்களை வாசல் வரை வந்து வழியனுப்பினர்.

ஆட்டோ புறப்பட்டதும்... தமக்கையை இடித்தாள் உமா.

"அக்கா! பாட்டி சொன்னதைக் கேட்டியா?"

"ம்... ம்...."

"அப்போ... பாட்டி சொல்றதை வெச்சுப் பார்த்தா இந்த ஃபங்ஷன்லயே உனக்கேத்த மாப்பிள்ளை கிடைச்சிடுவாரோ...?" - உமா மெல்லிய குரலில் கேட்க...

உஷாவின் முகம் குப்பென வியர்த்தது.

ஏற்கனவே ராஜகுமாரனின் நினைவில் உழன்று கொண்டிருந்தவளுக்கு... தங்கையின் பேச்சு வயிற்றில் புளியைக் கரைக்க... அவளை அதட்டினாள்.

"ஷ்! கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு வா."

"நான் வாயை மூடிக்கிறேன். ஆனா அப்படி ஏதாவது ஒரு மாப்பிள்ளை உன் கண்ணுல பட்டான்னு வை... உடனே என்கிட்ட காட்டு. நான் பார்த்து ஓ.கே. பண்ணிடுறேன்!"

உமா கேலியாகவே சொல்ல... உஷாவின் இதயத் துடிப்பு அதிகமாகியது.

இது அவன் வீடாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தை விட...

அவன் வீடாக இருக்குமோ...? என்ற எதிர்பார்ப்பு அதிகமாகத் துவங்கியது.



## 9

மின்னலைத் தேடும் தாழம்பூவே
உன் எழில் மின்னல் நானே
பனிப்பார்வை ஒன்றே போதும்
பசி தீரும் மானே! உறவாடும்
எந்தன் நெஞ்சம் உனக்காகத்தானே!

ஆட்டோவை விட்டு இறங்கிப் புடவை மடிப்புகளைச் சரிசெய்து கொண்டே நிமிர்ந்த உஷாவின் கண்கள் வியப்பாய்... அதிர்ச்சியாய் விரிந்தது.

தன் எதிரே புன்னகை சிந்தும் முகத்துடன் லேசாய் புருவம் உயர்த்தியவாறு நின்றவனைக் கண்டதும் வெல வெலத்துப் போனாள்.

தனது பதட்டத்தை மறைக்க இயலாமல் உதறிய கரங்களை இறுக மூடிக் கொண்டு... பின்னால் இறங்கிய தங்கையின் புறமாய்த் திரும்பினாள்.

உமா ஆட்டோ ஓட்டுநரிடம் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்க... லேசாய்ச் செருமினான் ராஜகுமாரன்.

"என்ன உஷா... இவ்ளோ தூரம்?" - வெகு உரிமையாய் அவன் கேட்க... வெடுக்கெனத் திரும்பி முறைத்தாள். அதில் அவனது புன்னகை இன்னும் பெரிதானது.

"நான் சொன்னது நடந்ததா... இல்லையா?"

"வாட்?"

"நாம நேருக்கு நேரா சந்திப்போம்னு சொன்னேனே...!"

"மிஸ்டர்! நான் ஒண்ணும்..."

"வெயிட்... வெயிட்! நான் இன்னும் சொல்லி முடிக்கவே இல்லையே... உங்க பதட்டத்தையும் மிரட்சியையும் பார்த்தாலே தெரியுது..."

"என்ன தெரியுது?"

"இந்த இடத்துல நீங்களும் என்னை எதிர்பார்த்திருக்கீங்க...?"

"நான்சென்ஸ்!"

"ஹை! கோபப்பட்டா மட்டும் உண்மை பொய்யாகிடுமா? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் உஷா!"

கடுப்பாய் நகர முயன்றவளைக் கை நீட்டித் தடுத்தான்.

"ஒன் மினிட் உஷா! இந்தப் புடவை உங்களுக்கு ரொம்ப அருமையா இருக்கு... பியூட்டிஃபுல்!"

"மிஸ்டர்!"

"ராஜகுமாரன்! என் பேரை அடிக்கடி மறந்திடுறீங்க..."

"இதோ பாருங்க... இப்படிப் பொது இடத்தில போற வர்ற பொண்ணுங்ககிட்ட பேசுறது உங்களுக்கு வேணா சாதாரணமா இருக்கலாம். ஆனா எனக்கு...."

"வெயிட் உஷா! எனக்கும் இது மட்டுமே பழக்கமில்லை... இது என் அத்தை வீட்டு விசேஷம்.



வர்றவங்களை வரவேற்பதற்காக இங்க நிற்கிறேன். மத்தபடி பெண்களிடம் வழியும் ஆளில்லை..."

"அக்கா! டிரைவர்கிட்ட சேஞ்ச் இல்லையாம். உன்கிட்ட நூறு ரூபா இருக்கா?" - என்றவாறே வந்த உமா... கடுப்பாய் நின்ற தமக்கையையும் எதிரே நின்றவனையும் பார்த்து முகம் சுருக்கினாள்.

"அக்கா! என்னாச்சு?"

"இ... இல்ல... இவர் வந்து... என்..." - உஷா தடுமாறினாள்.

"வரவேற்றுக் கொண்டிருந்தேன். வாங்க... உள்ளே வாங்க!" - ராஜகுமாரன் எந்தவிதத் தடுமாற்றமும் இல்லாமல் புன்னகையுடன் வரவேற்க... தானும் புன்னகைத்து வைத்தாள் உமா.

"அக்கா! சேஞ்ச் இருக்கா இல்லையா?"

"இதோ தர்றேன்!" - என்றவாறு தனது பர்ஸைத் திறக்க... ராஜகுமாரன் தடுத்தான்.

"ஆட்டோவை நான் கட் பண்றேன்... நீங்க உள்ளே போங்க..." என்றதும் நிமிர்ந்தாள் உமா.

"ஏன்? நீங்க ஏன் பே பண்ணணும்?"

"உமா! இந்தா பணம்... கொடுத்திட்டு வா!" - என்றதும் ராஜகுமாரனைக் கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டே விலகிச் சென்றாள் உமா.

கூடவே நகர முயன்ற உஷாவை... மெல்லிய குரலில் தடுத்தான்.

"ஒன் மினிட் உஷா!"

நின்று திரும்பினாள். "என்ன?"

"ரொம்ப தேங்க்ஸ்."

"எதுக்கு?"

"நான் கூப்பிட்டதை ஏத்துகிட்டு இங்கே வந்ததுக்கு..."

"எக்ஸ்கியூஸ் மீ! நான் ஒண்ணும் நீங்க கூப்பிட்டதுக்காக வரலை. இது என் தங்கையோட ஃப்ரெண்ட் வீடு. அவளுக்காகத்தான் வந்தேன்..."

"இருக்கட்டுமே... ஆனா இங்க வந்த பிறகு நாமெல்லாம் ஒண்ணுக்குள்ள ஒண்ணாகிட்டோம். இது நம்ம வீட்டு விசேஷம்!"

"ஹலோ! யார் ஸார் நீங்க?" - என்றவாறே உமா வர... அவளது தோழியர் கூட்டமும் வந்து மொய்த்துக் கொண்டது.

"ஹேய் உமா! இது மாப்பிள்ளையோட சொந்தக்காரர். மாப்பிள்ளைத் தோழன்!"

"ரொம்ப ஹேண்ட்ஸம் இல்ல..."

"பட் நோ யூஸ்! நம்மகிட்ட எல்லாம் பேச ரொம்பக் கஷ்டப்படுறார்... பந்தா பார்ட்டி போலிருக்கு..."

"மனசில பெரிய ஹீரோன்னு நினைப்பு. நீ உள்ளே வாடி. ஷர்மிளா உன்னைத் தேடிட்டே இருந்தா..." - என்ற தோழியரை புன்னகையால் ஒதுக்கினாள்.



"நீங்க போங்க. நான் இதோ வர்றேன்!" - என்றவாறு இன்னும் அதே இடத்தில் புன்னகையோடு நின்றவனை நெருங்கினாள்.

"ஹலோ மிஸ்டர்! நீங்க... அன்னிக்குக் கோவில்ல வந்து எங்களை மீட் பண்ணினவர்தானே?" - நெற்றியைச் சுருக்கியவாறே கேட்க... புன்னகையோடு தலையசைத்தான்.

"ஆமா..."

"அதான்... அந்த சோடா புட்டியை வேண்டாம்னு சொல்லிட்டோமே... திரும்பவும் ஏன் அக்காவை டார்ச்சர் பண்றீங்க?"

"நோ உமா! நான் டார்ச்சர் பண்ணலை...."

"பின்னே? உங்களுக்கு இவகிட்ட என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு?"

"உமா! சத்தம் போடாதே. எல்லாரும் பார்க்கிறாங்க..." - உஷா கிசுகிசுப்பாய் தங்கையைப் பற்றி அழைக்க... அவளை அதட்டினாள்.

"நீ சும்மா இருக்கா... இந்த மாதிரி ஆளுங்களை எல்லாம் முதல்லயே தட்டி வைக்கணும். மூஞ்சைப் பாரு... நல்லா இஞ்சி தின்ன குரங்காட்டம்...?"

"ஹலோ! திஸ் இஸ் டூ மச்!"

"என்ன? என்ன டூ மச்?"

"என்னைப் பார்த்தா குரங்கு மாதிரியா இருக்கு?"

"ஆமா..."

"உஷா! நீங்க சொல்லுங்க... நான் எப்படி இருக்கேன்?" - உஷாவிடம் நேரிடையாய்க் கேட்க... அவள் தடுமாறிப் போனாள்.

"ஏன் அவகிட்ட கேட்கிறீங்க?"

"அவங்கதான் சொல்லணும்..."

"அதான் ஏன்னு கேட்கிறேன்...?"

"ஏன்னா... என்னைக் கட்டிக்கப் போறது அவங்கதானே! அவங்க கண்ணுக்கு நான் எப்படித் தெரியுறேன்னு எனக்குத் தெரிய வேண்டாமா?" - கேலியாகவே அவன் சொன்ன வார்த்தையில் இருவரும் திடுக்கிட்டனர்.

உஷா வெலவெலத்துப் போனவளாய்... திகைப்பாய் அவனை ஏறிட்டாள்.

"எ... என்ன?"

"ஆமா உஷா! நான் பார்க்க அழகா இருக்கேனா? உங்களுக்குப் பிடிச்சிருக்கா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா?"

"யோவ்! என்ன விளையாடுறியா?"

"நோ உமா... உங்க வீட்டுக்கு வரப் போற மாப்பிள்ளையை இப்படியெல்லாம் மரியாதைக்குறைவாப் பேசக் கூடாது..."



"இதோ பாருங்க! இந்த மாதிரி விளையாட்டுப் பேச்செல்லாம் என்கிட்ட வேண்டாம். உமா! வா போகலாம்..."

"ஒரு நிமிஷம் உஷா!"

"ம்ப்ச்! வழியை விடுங்க..."

"எனக்கு பதிலைச் சொல்லிட்டுப் போங்க..."

"என்ன சொல்லணும்?"

"நான் கேட்ட கேள்விக்கு ஒரு பதில் கூடச் சொல்லலையே?"

"உங்களுடைய விளையாட்டுக்கும் முட்டாள்தனமான கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை..." - உமா சீறினாள்.

"விளையாட்டா...! யார் விளையாடுறது? நான் ரொம்ப சீரியஸாக் கேட்கிறேன்..."

"இதோ பாருங்க... சும்மாக் கலாட்டா பண்ணாதீங்க... பார்க்கிறவங்க எங்களைத்தான் தப்பா நினைப்பாங்க... வழியை விடுங்க..."

"ஸாரி உஷா! நான் சும்மா வம்பு பண்ணலை. என் மனசில உள்ளதை உங்ககிட்ட சொல்றேன். உங்களைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுறேன்.

"உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா... என் அம்மா அப்பாவோட உங்க வீட்டுல வந்து பெண் கேட்கிறேன்... உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?" -

மென்மையான குரலில் திடமாய்க் கேட்டவனை நம்ப முடியாமல் திகைப்பாய்ப் பார்த்தாள் உஷா.

உடல் முழுக்க உதறிக் கொண்டது. அவசரமாய் எச்சில் விழுங்கினாள்.

"இ.. இப்படிக் கேட்டா எப்படி?"

"சரி... வேற மாதிரிக் கேட்கிறேன். நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"உமா! வா... போகலாம்."

"வெயிட்! பதில் சொல்லிட்டுப் போங்க..."

"இதோ பாருங்க... ஒரு விசேஷம் நடக்கிற வீட்டுல வந்து இப்படிப் பிரச்சனை பண்ணாதீங்க. கல்யாண காரியம் உங்களுக்கென்ன விளையாட்டாப் போச்சா?"

"ஐயோ! இல்லை உஷா... நிஜமாவே கேட்கிறேன்."

"எப்படி? திடீர்னு இப்படிக் கேட்கத் தோணுது?"

"உங்களைப் பார்த்த நிமிஷத்தில இருந்தே எனக்குத் தோணின விஷயம் இது. இன்னிக்குத் தனியா பார்க்க வாய்ப்புக் கிடைச்சதும் கேட்டுட்டேன்..."

"நான்சென்ஸ்! அன்னிக்கு எந்தச் சூழல்ல என்னைப் பார்க்க வந்தீங்கன்னு மறந்து போச்சா?"

"இல்லைங்க... மறக்கலை. மறக்கவும் மாட்டேன். மறக்கக் கூடிய நாளா அது?"

"இதோ பாருங்க. நான்..."



"வெயிட் உஷா! நீங்க என்னைச் சரியாப் புரிஞ்சுக்கணும். அன்னிக்கு சீனுகூட நான் கோவிலுக்கு வந்தது என்னவோ உண்மைதான். ஆனா அவன் அவாய்ட் பண்ண வந்த பொண்ணு நீங்கதான்னு எனக்குச் சத்தியமாத் தெரியாது.

"அவன் சொல்றதுக்கு முன்னாலயே உங்களை நான் பார்த்திட்டேன். நீங்க யாரு? உங்க பேரென்ன... ஊரென்ன? இப்படி எதுவுமே தெரியாமலேயே உங்களைப் பார்த்து நான் மயங்கிப் போனது உண்மை..."

"எ...ன்ன?"

"சத்தியம் உஷா! ஒரு சிலரைப் பார்த்தவுடனே நம்ம மனசுக்கு ரொம்பப் பிடிச்சிப் போகுமில்லையா! அதுக்கெல்லாம் காரணம் தெரியாது. பட்! நம்ம மனசு அவங்க பின்னாலயே போயிடும்.

"அதே மாதிரிதான். என்னை அறியாமலேயே என் மனசு உங்க பின்னால வந்திடுச்சி. அதுவும் அன்னிக்குச் சீனுகிட்ட நீங்க பேசின விதம் பிடிச்சிருந்தது. உங்க மனசு பிடிச்சிருந்தது. அன்னிக்கே முடிவு பண்ணிட்டேன்..." - என அவன் நிறுத்த... நம்ப முடியாத பார்வையோடு சிலையாய் நின்றாள் உஷா.

"எ...ன்ன முடிவு?"

"வாழ்ந்தா உங்க கூடத்தான் வாழணும்னு..." - அவன் இதமான குரலில் சொல்ல...

பதறிய உள்ளத்தோடு துளி நாணமும் சேர்ந்து கொள்ள... தயக்கமாய் தங்கையை ஏறிட்டாள் உஷா.

தங்கையின் முகம் தீவிரமாய் எதையோ சிந்தித்துக் கொண்டிருக்க... குழப்பமாய் தங்கையைத் தொட்டாள்.

"உமா!"

"ம்..."

"என்னடா? எதுவுமே பேச மாட்டேங்கிற?"

"ஒரு நிமிஷம்க்கா! ஏன் ஸார்...? நீங்க சொல்றதெல்லாம்..."

"சத்தியமான உண்மை உமா..."

"இதை எப்படி நம்புறது?"

"உங்களுக்கு நம்பிக்கை வரணும்னா நான் என்ன பண்ணணும்? சொல்லுங்க செய்யுறேன்..."

"ராஜா!" - யசோதாவின் குரல் கேட்டு சட்டெனத் திரும்பினான்.

பட்டுப் புடவை சரசரக்க... மகனை நெருங்கினாள் யசோதா.

"அம்மா!"

"இங்கே என்னப்பா பண்ணிட்டு இருக்க?. அங்கே வசந்த் உன்னைத் தேடிட்டு இருக்கான்...."

"இதோ வந்திட்டேம்மா. உஷா... இது அம்மா! அம்மா... இது உஷா!" - என பரஸ்பரம் இருவரையும் அறிமுகம் செய்ய உஷா தயக்கமாய்க் கைகூப்பினாள்.



"வணக்கம்மா..."

"ம்... ராஜா! யாருப்பா இது?"

"சொல்றேன்ம்மா... முதல்ல பொண்ணு எப்படி இருக்குன்னு சொல்லுங்க?"

"பார்க்க லட்சுமிகரமா இருக்கா. ஆனா இதுக்கு முன்னால... எங்கேயோ பார்த்த மாதிரி இருக்குதே!"

"அதாம்மா... இன்னிக்கு ஜவுளிக்கடையில பார்த்தோமே... நான் கூடச் சொன்னேனே...?"

"அட! அந்தச் சீனுப்பய வேண்டாம்னு சொன்ன பொண்ணா?" - யசோதா இயல்பாகக் கேட்க...

உஷாவிற்குள் சுருக்கெனத் தைத்தது. சட்டென அவமானத்தால் முகம் கன்றியது. அதற்குள் அருகே நின்ற பெண்மணி திரும்பினாள்.

"என்ன... சீனுவா? யசோதா! நீ எந்தச் சீனுவைச் சொல்ற?" - என்றவளைக் கண்டதும் லேசாய்த் திடுக்கிட்டான் ராஜகுமாரன்.

யசோதாவும் சற்று முகம் மாறினாலும் சட்டெனச் சமாளித்தாள்.

"ரஞ்சிதமா! நீ எப்போ வந்தே? நான் பார்க்கவே இல்லையே...?"

"நான் வந்தது இருக்கட்டும். நீ இப்போ சீனுவைப் பத்தி ஏதோ சொன்னியே..." - என்றவாறே சீனிவாசனின் தாய் ரஞ்சிதம் உஷாவையும் உமாவையும் பார்வையால் அளந்தாள்.

அவளது பார்வையைத் தாள முடியாமல் இருவரும் நகர்ந்து செல்ல.... புன்னகையோடு அவர்களைத் தடுத்தாள் யசோதா.

"நில்லுங்கம்மா... ரஞ்சிதம்! நானே உன்னை நேர்ல பார்த்து நாலு வார்த்தை கேட்கணும்னு இருந்தேன். ஆமா! உம்பிள்ளைக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படிப் பண்றான்?"

"என்ன பண்ணினான் அவன்?"

"இதோ பாரு... இந்தப் பொண்ணு எவ்வளவு அழகு! இதை ஏன் வேண்டாம்னு சொன்னான்? அவனுக்குத்தான் புத்திக் கெட்டுப் போச்சுன்னா... நீயாவது சொல்ல மாட்டியா?" - யசோதா சற்று வேகமாகவே கேட்க... அக்கம் பக்கம் நின்ற பெண்மணிகள் ஆவலாய் அவர்களைச் சூழ்ந்தனர்.

ரஞ்சிதத்தின் முகம் அவமானமும் கோபமுமாய் மாறியது. உஷாவைப் பொசுக்கி விடுவதைப் போல் பார்த்து விட்டு யசோதாவிடம் திரும்பினாள்.

"எம்புள்ளை இவளை வேண்டாம்னு சொன்னான்னு உன்கிட்ட யார் சொன்னது?" - ரஞ்சிதத்தின் கடுமையான குரலில் ராஜகுமாரன் பதறினான்.

"அம்மா! என்ன இது? ஒரு நல்ல காரியம் நடக்கிற இடத்தில வந்து... ஏன் மத்த கதையெல்லாம் பேசுறீங்க? வாங்க... உள்ளே போகலாம்."



"இருடா... இவ புள்ளையைப் பத்தி இவகிட்ட சொல்ல வேண்டாமா?"

"இப்ப எதுவும் பேச வேண்டாம். முதல்ல என்கூட வாங்க..."

ரஞ்சிதத்தின் கோபம் அதிகரித்தது. "அப்படி எம்புள்ள என்ன தப்பு பண்ணிட்டான்னு தாயும் மகனும் ஷோ காட்டுறீங்க. எம்புள்ளையைப் பத்தி என்ன தெரியும்... உங்களுக்கு?"

"கோபப்படாதே ரஞ்சிதம்! இந்தப் பொண்ணோட முகத்தைப் பாரு. என்ன ஒரு அழகு! இவளை வேண்டாம்னு சொல்ல சீனுவுக்கு எப்படி மனசு வந்தது?"

"என்ன? எம்புள்ள... இவளை வேண்டாம்னு சொன்னானா? யார் சொன்னது?"

"ஏன்? ராஜாதான் சொன்னான். சொல்லேன்டா...!" - மகனை உசுப்ப... அவன் சற்றுத் தவிப்பாய் உஷாவைப் பார்த்தான்.

முகம் முழுக்க கலக்கத்தோடு கண்களில் துளி கண்ணீரோடு அவள் நின்ற கோலம் மனதை வருத்தியது.

கோபமாய் தாயிடம் திரும்பினான். "ஏம்மா! உங்களுக்கு எங்கே வெச்சி என்ன பேசணும்னு தெரியாதா?"

"ஏன்டா! இப்ப நான் என்ன தப்பாப் பேசிட்டேன்?"

"பின்னே...? பொது இடத்தில வெச்சுப் பேசுற பேச்சா இது! அதுவும் இந்தப் பொண்ணையும் பக்கத்தில வெச்சுக்கிட்டு..."

"ராஜா! உங்க அம்மா என்ன சொல்றா? என்னவோ எம்புள்ளை இந்தப் பொண்ணை வேண்டாம்னு சொன்ன மாதிரிப் பேசுறா..."

"ஆன்ட்டி! இந்தப் பேச்செல்லாம் இப்ப எதுக்கு?"

"நல்லா இருக்கே... எந்தத் தப்பும் செய்யாத எம்புள்ளை மேல நீங்க பழியைப் போடுவீங்க... நான் கேட்டுட்டு சும்மா இருக்கணுமா?"

"ஆன்ட்டி! ப்ளீஸ்... நான் சொல்றதைக் கொஞ்சம்..."

"நீ சும்மா இருப்பா! யசோதா... விபரம் புரியாம எதையும் பேசிடாதே. எம்புள்ளை ஒண்ணும் இவளை வேணாம்னு சொல்லலை. இவதான் என்புள்ளையைக் கட்டிக்க விருப்பமில்லைன்னு சொல்லி அனுப்பிட்டா..."

"எ...ன்ன?"

"இதோ நிற்கிறாளே... நீயே கேளேன்!" – ரஞ்சிதம் கோபமாகவே சொல்ல...

யசோதாவின் பார்வை உஷாவிடம் திரும்பியது.

அந்தப் பார்வையில் சற்று முன் வரை இருந்த கனிவும் கருணையும் காணாமல் போயிருந்தது.



# 10

சுமை போட்டுப் பேசும் ஊரென்றால்
மனம் துடித்திடும் மானே – இமை
மீறும் கண்ணில் நீரென்றால்
தினம் தவிப்பவன் நானே!

சுற்றிலும் நிற்பவர்களின் பார்வையை விட... ராஜகுமாரனின் அன்னையின் பார்வையைத்தான் உஷாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இனம் புரியாத பதட்டம் ஆட்கொண்டது. அவள் தன்னைத் தவறாக நினைத்து விடக்கூடாது என மனம் பதறியது. மறுப்பாய் தலையசைத்தாள்.

"இ... இல்ல. இல்ல..."

ரஞ்சிதத்தின் கோபம் அதிகரித்தது. "என்ன... இல்லையா? அப்போ நான் பொய் சொல்றேனா?"

"இ..ல்ல... நான் அப்படிச் சொல்லலை..."

"வேற என்ன சொல்லப் போற? எம்புள்ளைதான் வேண்டாம்னு சொன்னான்னு சொல்லப் போறியா?"

"அது... அது வந்து..."

"இந்தா! சும்மா ஏன் மென்னு முழுங்குற? நான்கூட ராமச்சந்திரன் பொண்ணு தங்கமான பொண்ணுன்னு நினைச்சுத்தான் நகை நட்டைப் பத்தி எதுவும் பேசாமச் சம்மதிச்சேன். இப்பத்தானே இவளுங்க லட்சணம் தெரியுது..." – ரஞ்சிதம் முகத்தைச் சுளித்தவாறே சொல்ல... உமா சீறினாள்.

"இதோ பாருங்கம்மா... ஒழுங்கா மரியாதையா பேசுங்க..."

"என்ன? ஒழுங்கு... மரியாதையா... இதெல்லாம் என்னன்னு தெரியுமா உங்களுக்கு?"

"தெரிஞ்சதாலதான் இன்னும் உங்களை மரியாதையாப் பேசுறேன். இல்லேன்னா..."

"உமா! வா போயிடலாம்..."

"நில்லுக்கா! இந்தம்மா பையன் செய்த காரியத்தையும் சொல்லிட்டே போயிடலாம். அவன் செய்த தப்புக்கு நீ பழி ஏற்கணுமா?"

"ஏய்! அப்படி என்னடி எம்புள்ளை தப்பு பண்ணிட்டான்?"

"உம்புள்ள பண்ணின தப்பு எல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஆனா இந்தக் கல்யாணத்தை வேண்டாம்னு சொல்லி...."

உஷா அதட்டினாள். "உமா! உன்னை வான்னு சொன்னேனே..."

"ஏன்க்கா! யாரைக் காப்பாத்த நீ பழி ஏற்கிற?"

"இவங்க என்ன வேணாப் பேசிட்டுப் போகட்டும். நீ வா..."

"அதானே! நாம என்ன பேசினா என்ன? தங்கச்சி வாயைத் திறந்தா தன்னோட வண்டவாளம் வெளியே



வந்திடும்னு பயப்படுறா போலிருக்கு..." - ரஞ்சிதத்தின் குரலில் எள்ளல் அதிகரிக்க...

ராஜகுமாரன் கடுமையாய் எச்சரித்தான். "வேண்டாம் ஆன்ட்டி! தப்பாப் பேசுறீங்க?"

"தப்பானவங்க கிட்ட தப்பாத்தான் பேசணும்... இவ எவனை நினைச்சுக்கிட்டு எம்புள்ளையை வேண்டாம்னு சொன்னாளோ?"

"நோ..." - காதுகளை மூடிக் கொண்டாள் உஷா.

உமா கொதித்துப் போனாள். "வாயை மூடும்மா... இனிமே ஏதாவது ஒரு வார்த்தை பேசின... மரியாதை கெட்டுடும்..."

"ஏய்! யார்கிட்ட...?"

"சரிதான் மூடும்மா... என்னவோ உத்தமபுத்திரனைப் பெத்திட்ட மாதிரி என் அக்காவைக் குற்றம் சொல்றியா? என் அக்கா எப்பவுமே சுத்தமானவ... உம்புள்ளைதான் எவளையோ நினைச்சிட்டு என் அக்காவை வேண்டாம்னு சொன்னான்...

"தன் மனசில உள்ளதைத் தைரியமா பெத்தவங்ககிட்ட சொல்லத் துப்பில்லாத பொட்டப்பயலைப் பெத்துட்டு... உனக்கு இத்தனை வீராப்பா?"

"ஏய்... ஏய்! எம்புள்ளையை என்னடி சொன்னே?"

"அப்படித்தான் சொல்லுவேன். அவன் எவளை வேணா விரும்பிட்டுப் போகட்டும். அதை உன்கிட்டயோ

உன் புருஷன்கிட்டயோ தானே சொல்லணும்? அதை விட்டுட்டு எங்களைத் தேடி எங்க வீட்டுக்கும் வராம... கோவில்ல வந்து எங்ககிட்ட கெஞ்சினானே!

"எப்படியாவது இந்தக் கல்யாணத்தை வேண்டாம்னு சொல்லிடுங்க. தாரிணி இல்லாம வாழ முடியாது. அது இதுன்னு... டயலாக் விட்டானே! ஏன் ஸார்... நீங்களும்தானே கூட வந்தீங்க? வாயில என்ன வெச்சிருக்கீங்க? சொல்லுங்களேன்..." - கடுப்பாய் ராஜகுமாரனை அழைத்தாள் உமா.

ரஞ்சிதத்தின் முகம் அவமானத்தால் சுருங்கியது.

"ரா...ஜா! இவ... இவ என்னப்பா சொல்றா?"

"உண்மைதான் ஆன்ட்டி!"

"எ...ன்ன?"

"சீனு வேற பொண்ணை விரும்புறது நிஜம். அங்கிள்கிட்ட சொல்லப் பயந்துதான்... இந்தப் பெண்ணைப் பார்த்துப் பேசினான். நானும்... கூடப் போயிருந்தேன்."

"எ...ன்ன? எப்போ?"

"நீங்க பெண் பார்க்க டிஸைட் பண்ணி வெச்சிருந்த அன்னிக்கு மார்னிங்..." - தர்மசங்கடமாய் அவன் சொல்ல... ரஞ்சிதம் உடைந்து போனாள். மனம் கனக்க... கண்களில் நீரோடு நின்ற உஷாவைப் பார்த்து விட்டு மீண்டும் அவனிடமே திரும்பினாள்.



"ஏம்பா! நீயாவது இதை எங்ககிட்ட சொல்லியிருக்கலாமில்ல?"

"ஸாரி ஆன்ட்டி! சொல்லக் கூடாதுன்னு சீனு சொன்னான்..."

"அவன் சொன்னான்னா... அப்படியே விட்டுடுவியா? இது எதுவும் தெரியாம... நான் வேற இந்தப் பொண்ணை ஏதேதோ பேசிட்டேனே..."

"ஸாரி ஆன்ட்டி!"

"நீ ஏம்பா ஸாரி கேட்கிற? இந்தச் சீனுப்பயலுக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தா... இப்படி ஒரு காரியம் பண்ணியிருப்பான்..."

"சரி விடு... ரஞ்சிதம்! புள்ளைங்க மனசில என்ன இருக்குன்னு தெரியாம... கல்யாணத்தை முடிவு பண்ணினது உங்க தப்பு. நான்கூட இந்தப் பொண்ணை ஒரு நிமிஷம் தப்பா நினைச்சிட்டேன்... மன்னிச்சிடும்மா!" - என்றவாறே திரும்ப... உஷா வேகமாய் வெளியேறிக் கொண்டிருந்தாள்.

முகம் முழுக்கக் கோபத்துடன் நின்ற உமா ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

"இதோ பாரும்மா... இனி மேலாவது உண்மை எதுவும் புரியாம வார்த்தையை விட்டுடாதீங்க... ராமச்சந்திரனோட பொண்ணுங்கன்றதால இதோடு விடுறோம். இல்ல..." - என்றவாறே விடுவிடுவென வெளியேறினாள்.

அவர்கள் வெளியேறுகிறார்கள் என்பதை உணர்ந்து பதறி... அவர்கள் பின்னே செல்ல முயன்ற மகனைக் கைப்பற்றி தடுத்தாள் யசோதா.

"நீ எங்கேடா போற?"

"அம்மா... அவங்க போறாங்கம்மா!"

"அதுக்கு நீ என்ன செய்வ? வா... உள்ளே ஏற்கனவே நம்மைத் தேடிட்டு இருப்பாங்க. உங்க அத்தைக்கு நம்மளைக் குறை சொல்ல இது போதும். வா உள்ளே!"

"அம்மா..."

"வான்னு சொல்றேனில்ல..." - என்றவாறு யசோதா தன் மகனைக் கையோடு அழைத்துச் செல்ல... இயலாமையால் வெளியே திரும்பிப் பார்த்தான் ராஜகுமாரன்.

இருவரும் ஏதோ ஆட்டோவில் ஏறி அமர்வதும் புறப்படுவதும் தெரிய... வெகுவாய் சோர்ந்து போனான்.

ஆட்டோ சீரான வேகத்தோடு சென்று கொண்டிருக்க... உமா பொருமிக் கொண்டிருந்தாள்.

"பொம்பளையா இவ? நல்லவேளை நீ தப்பிச்ச அக்கா... இவ மட்டும் உனக்கு மாமியாரா வந்திருந்தா... ஐயோ! உன் கதி... அதோகதிதான்!"

"உமா! பெரியவங்களை இப்படி ஏகவசனத்தில பேசாதேன்னு உன்கிட்ட எத்தனைவாட்டி சொல்றது?"



"என்ன? நான் என்ன பேசிட்டு இருக்கேன்? நீ என்ன கூலா அட்வைஸ் பண்ணிட்டு இருக்க?"

"சரி... அமைதியா இரு. இனி அதைப் பத்திப் பேச வேண்டாம்..."

"என்னக்கா நீ! அந்தப் பொம்பளை பேசினதைக் கேட்டு... நான் கொதிச்சுப் போயிருக்கேன். இன்னும் நாலு வார்த்தைக் கேட்டிருப்பேன்.... நீதான் அதுக்குள்ள கிளம்பி வந்திட்ட... இல்லைன்னா..."

"வேண்டாம் உமா! அது நல்ல காரியம் நடக்கிற வீடு. நம்மால ஏன் வீணா சலசலப்பு உண்டாகணும்?"

"நம்மால இல்ல... அந்தப் பொம்பளையால...! ம்ஹூம்... உன்கிட்ட வந்து பேசினானே எல்லாம் அவனால வந்தது?"

"அவர் என்ன பண்ணினார்?" - என்ற தமக்கையை வியப்பாய் ஏறிட்டாள்.

"என்ன? அவர் என்ன பண்ணினாரா? இந்தப் பிரச்சனைக்கு முழுக் காரணமே அவன்தான்."

"உமா!"

"நாமபாட்டுக்கு வீட்டுக்குள்ள போயிருப்போம். இவன் நம்மளைப் போக விடாம நின்னு வளவளன்னு பேசிட்டு இருந்ததால தானே பிரச்சனை வந்தது. இதில இவன் அம்மாவைக் கூப்பிட்டு இன்ட்ரடியூஸ் வேற பண்றான்... இவன்கிட்ட யார் கேட்டாங்க?"

"அவர் என்ன... இப்படியெல்லாம் நடக்கும்னு நினைச்சா நம்மகிட்ட வந்து பேசினார்... அவர் சும்மா யதேச்சையா பேசப் போக... அது அந்த அம்மா காதில விழுந்ததாலத்தானே பிரச்சனையாச்சு. அவருக்கும் சங்கடமாகிப் போச்சு..." - என்றவளை விழிகள் விரியப் பார்த்தாள் உமா.

தமக்கையின் முகத்திலும் பேச்சிலும் நிறைய மாறுதல்கள் தென்பட்டன.

'இதற்கு முன் இப்படியொரு சம்பவம் நடந்திருந்தால் குமுறிக் குமுறி அழுதிருப்பாள். பயந்து நடுங்கியிருப்பாள். நத்தையாய்ச் சுருங்கியிருப்பாள். ஆனால் இன்று...

இந்த முகத்தில் எத்தனை ஜொலிப்பு... நிமிர்வு. துளியும் கலக்கமோ நடுக்கமோ தென்படவில்லையே...? அதுவும் முதன்முறையாய் ஒரு அந்நிய ஆடவனுக்காகப் பரிந்து கொண்டு வருகிறாள். அவனைப் பற்றிப் பேசும் போதெல்லாம் இவளது முகமும் குரலும் கனிந்து விடுகிறதே!

அப்படியென்றால் அவன் மீது இவளுக்கு ஏதேனும் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டதா? அதெப்படி?

அன்று ஒரு நாள் கோவிலில் சிலகணம்தானே பார்த்தாள்? பிறகெப்படி? இடையில் எனக்குத் தெரியாமல் ஏதேனும் சந்திப்பு நடந்ததா?

நிச்சயமாய் நடந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவன் இத்தனைத் துணிவாய் தன் முன்னே



இப்படிப் பேசுவானா? கல்யாணம் வரை போய் விட்டானே!'

"உமா!"

"ம்..."

"என்ன மௌனமாகிட்ட..?"

"யோசிச்சிட்டு இருக்கேன்..."

"எதைப் பத்தி?"

"அந்த ஆளைப் பத்திதான்."

"எந்த ஆள்?"

"அதான்... உன் அவர்?" - என அழுத்தமாய் சொல்லிக் கொண்டே... உஷாவை உற்றுப் பார்த்தாள்.

தமக்கையின் முகம் நாணத்தில் சிவந்ததை அந்த அரைகுறை வெளிச்சத்திலும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. திருப்தியாய் புன்னகைத்தாள்.

"ஏய்! யாரைச் சொல்ற?"

"அதான்க்கா... நம்மகிட்ட பேசினானே... ஓ! ஸாரி! பேசினாரே... அவர் பேர் என்ன?"

"அ...து... எனக்குத் தெரியலையே?" - தடுமாறினாள் உஷா.

"இல்லையே! ஏதோ பேர் சொன்னாரே... ராமசாமியா?"

"ம்ஹூம்..."

"பின்னே? ராஜாதி ராஜாவா?"

"இ... இல்ல. ரா...ஜ...குமாரன்."

"ஓஹோ! ராஜ...குமாரனா?"

"கிண்டலா இருக்கா?"

"நான் கிண்டல் பண்ணலம்மா! ம்... நல்ல பேர்தான். ஆள் கூட ராஜாவாட்டம்தான் இருக்கார். இல்லக்கா?"

"நான் சரியாப் பார்க்கலை."

"ஆச்சர்யம்தான்!"

"ஏன்?"

"நீ அவர் முகத்தைக் கூடப் பார்க்கலன்ற... ஆனா அவர் கல்யாணம் பண்ற வரைக்கும் வந்திட்டாரே... அதெப்படி?"

"எ... என்னைக் கேட்டா?"

"ஆமா! நீ ஏன்க்கா எதுவுமே சொல்லலை?"

"என்னது?"

"கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமான்னு கேட்டாரே... நீ கடைசி வரைக்கும் பதிலே சொல்லலையே?"

"ம்ப்ச்! இந்த ஆள் யாருன்னே நமக்குத் தெரியாது. முன்னே பின்னே தெரியாத யாரோ வந்து கேட்டா... உடனே நாம சம்மதம்னு சொல்லிட முடியுமா?"



"நீ வேண்டாம்னு மறுக்கவும் இல்லையே?" - தங்கையின் கேள்வியில் சுரீரென நிமிர்ந்தாள் உஷா.

அப்போதுதான் புத்தியில் உறைத்தது.

'ஆமாம்! நான் மறுக்கவும் இல்லையே... முன்பின் அறியாதவன் துணிச்சலாய் எதிரில் நின்று என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா... என்று கேட்டானே! நான் ஏன் மறுக்கவில்லை? மறுப்பதற்குத் தோன்றவும் இல்லையே!

அவன் கேட்டதில் கோபம்கூட வரவில்லை. மாறாக... இதயம் தவித்ததே! இந்தத் தவிப்பிற்கு என்ன அர்த்தம்? நான் மறுக்காததற்கு என் காரணம்? கடவுளே! நான்... நான் அவனை விரும்புகிறேனா?' - இந்த எண்ணம் தோன்றியவுடன் அவளது உடல் தானாக உதறிக் கொண்டது.

"அக்கா! என்னாச்சு?"

"ம்... ஒ... ஒண்ணுமில்லை..."

"என்ன? ராஜகுமாரனோட நினைப்பு வந்திடுச்சா?"

"உ...மா!" - உஷாவின் குரலில் நடுக்கம் தொனித்தது.

"என்னக்கா?"

"இ... இந்தப் பேச்சு வேண்டாம்."

"ஏன்க்கா?"

"இல்ல... வேண்டாம்."

"அதான் ஏன்னு கேட்கிறேன்?"

"தப்பு உமா! நாம இந்த மாதிரி ஒரு நாளும் எந்த ஆம்பிளையைப் பத்தியும் பேசினதில்லையே!"

"நாமா போய் அவர்கிட்ட பேசலையே..."

"இருந்தாலும் நம்மைத்தானே குற்றம் சொல்வாங்க? நாம எந்தத் தப்பும் செய்யாமலேயே இன்னிக்கு அந்த அம்மா என்ன சொன்னாங்க பார்த்தியா?"

"யாரு? அந்த மிலிட்டரிக்காரர் பொண்டாட்டியா!"

"ம்..."

"ஏன்க்கா! அவள்லாம் ஒரு பொம்பளைன்னு... அவ சொன்னதை நினைச்சுப் பயப்படுவியா?"

"இல்ல... இருந்தாலும்..."

"அவ மகனுக்குக் கல்யாணம் தட்டிப் போச்சுன்ற வருத்தத்தில வாய்க்கு வந்தபடி பேசியிருப்பாள்..."

"சரி. அதைப் பத்திப் பேசாதே உமா! இங்க நடந்தது எதுவும் நம்ம வீட்டுக்குத் தெரிய வேண்டாம்."

"இதைப் போய் சொல்வேனா? நீ நம்ம மேட்டருக்கு வா..."

"என்ன மேட்டர்?"

"அதான் ராஜகுமாரன் மேட்டர். அவரை உனக்குப் பிடிச்சிருக்கா?" - காதோரமாய்க் குனிந்து உமா ரகசியமாய்க் கேட்க... குப்பென சிவந்தாள் உஷா.



"விளையாடாதே உமா!"

"இப்படி அவரை மாதிரி என்கிட்டயும் நழுவலாம்னு நினைக்காதே. வீடு வரப் போகுது. சீக்கிரம் சொல்லு!"

"என்ன சொல்லணும்?"

"அவரைப் பிடிச்சிருக்கா... இல்லையா?"

"இப்ப ஏன் இந்தக் கேள்வி உனக்கு?"

"காரணம் இருக்குக்கா. ஒருவேளை அவர் சொன்ன மாதிரியே திடீர்ன்னு வீட்டுக்கு வந்து பெண் கேட்டுட்டாருன்னா...?"

"எ...ன்ன?" - திகைப்பாய்க் கேட்டாள்.

"ம்... கண்டிப்பா வருவாருன்னு நினைக்கிறேன். அப்படி வந்தால்... உனக்கும் விருப்பம்னா... அப்பாகிட்ட சொல்லிப் பேசி முடிச்சிடலாமில்ல... என்ன சொல்றே?"

உமா கேலியாய் கண் சிமிட்டியவாறே கேட்க...

உஷாவின் உடல் முழுக்கப் புல்லரித்துப் போனது.

இதயத் துடிப்பு எகிறியது.

முகம் முழுக்கப் புன்னகை ததும்பியது.

'இது நடக்குமா? அவன் பெண் கேட்டு வருவானா?'

# 11

தண்ணீரில் வாழும் செம்மீனைத் தூக்கி
வெந்நீரில் நான் போடமாட்டேனே - அடி
கஸ்தூரி மானே கண்ணாலே நானே
கல்யாணப் பூமாலை போட்டேனே!

உறக்கம் வராமல் படுக்கையை விட்டு எழுந்தான் ராஜகுமாரன்.

கண்களை மூட விடாமல் இம்சித்தது மாலையில் நடந்த நிகழ்வுகள். கண்களில் நீரோடு வெளியேறிய உஷாவின் முகம் இமைகளை மூட விடாமல் முள்ளாய் குத்திக் கொண்டிருந்தது.

தன்னால்தானே இது நடந்தது? எத்தனை அழகாய் தேவதை போல் வந்து இறங்கினாள்? எத்தனை மென்மையான பேச்சு!

தன்னைக் கண்டதும் அவள் தடுமாறித் தவித்தது எத்தனை கவித்துவமாய் இருந்தது. அதை அப்படியே ரசித்துக் கொண்டிருந்திருக்கலாம். என்னுடைய அவசரப் புத்தியால் மனசு காயம்பட்டுப் போனாளே!

சீனுவின் அம்மாவும் அங்கு வந்ததைக் கவனியாமல் விட்டுவிட்டேனே... அவர்களும் இப்படியெல்லாம் பேசியிருக்கக் கூடாதே...

நான்தான்... என் அவசரம்தான் என் தேவதையின் கண்களில் நீரை வரவழைத்து விட்டது. அவளது கண்ணீருக்கு நான்தான் காரணமாகிப் போனேன்.



ச்சே! நான் ஏன் அப்படிச் செய்தேன்? கொஞ்சம் நிதானமாய் இருந்திருந்தால் நிகழ்ச்சி முடியும் வரை இருந்திருப்பாள். ஆசை தீரப் பார்த்திருக்கலாம். கொஞ்சம் விளையாட்டாய் பேசியிருக்கலாம். இனிமையாய்ப் பொழுது கழிந்திருக்கும். இப்போது எல்லாம் போச்சு. தூக்கமும் போச்சு...!

சலிப்பாய் எழுந்து அறைக் கதவைத் திறந்து விட்டுப் பால்கனியில் வந்து நின்றான்.

நேரம் நள்ளிரவைத் தாண்டிப் போயிருந்தது. தெரு முழுக்க அமைதியாக இருந்தது.

அவ்வப்போது தூரத்தில் எங்கோ நாய் குரைக்கும் ஓசை மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

கைகளைக் கட்டிக் கொண்டு மெல்ல நடை போட்டான். லேசாய் பனிக் காற்று தீண்ட... உடல் சிலிர்த்தது.

நின்று வானத்தை நிமிர்ந்து பார்த்தான். தாரைக் கொட்டிப் பூசிவிட்டாற் போல் இருட்டாய்க் கிடந்த வானத்தில் வெளிச்சப் புள்ளிகளாய்... சில நட்சத்திரக் கூட்டங்கள்.

நகத்துணுக்கைப் போல் மிக மெல்லிய கீற்றாய் பிறைநிலா பொன்நிறமாய் ஜொலித்தது.

ஓ! வளர்பிறையா? தன்னையும் மீறி மென்மையாய் புன்னகைத்தான்.

வெண்ணிலவே! உன்னைப் போல என் நேசமும் வளர வேண்டும். இருண்டு கிடக்கும் என் வானில் பெண்ணிலவாய் தோன்றியவள் என் வாழ்விற்கு ஒளி கொடுக்க வந்தவள் என் உஷா!

இறுதி வரை அவள் என்னுடன் வாழ வேண்டும். எங்களின் இல்வாழ்க்கையில் தினமும் பௌர்ணமிதான் ஒளி வீசவேண்டும். போ! போய் அவளிடம் சொல். உன் நினைவில் ஒருவன் உறங்காமல் புலம்பிக் கொண்டிருக்கிறான் என்று சொல்.

எத்தனையோ பேர் புறாக்களை... நண்பர்களை... ஏன் உடன்பிறந்தவர்களைக் கூட தூது அனுப்புவார்கள். நான் உன்னை அனுப்புகிறேன். என்னவளிடம் போய்ச் சொல். இந்த ராஜகுமாரன் அவளுக்குத்தான் என்று சொல்.

தெருவில் நடந்து செல்லும் கூர்க்காவின் விசில் ஒலியில் சட்டெனக் கலைந்தான்.

உயரமாய் நடந்து கொண்டிருந்த கூர்க்கா... தன் வரவை உணர்த்தும் வகையில் கையில் இருந்த தடியால் சாலையில் தட்டிக் கொண்டே செல்ல... அறைக்குள் திரும்பிக் கடிகாரத்தைப் பார்த்தான்.

பின்னிரவு இரண்டைத் தாண்டியிருந்தது.

தூக்கம் என்பது சுத்தமாய் மறந்து போய்விட... சலிப்பாய் அறைக்குள் நுழைந்தான்.



உஷா இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாள்? மனவருத்தத்தோடு உறக்கமின்றி என்னைப் போல் உழன்று கொண்டிருப்பாளோ?

ஏனோ உடனே அவளைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது.

பார்க்க வேண்டும்... பேச வேண்டும்... முந்தைய தினம் நடந்தவற்றிற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். எப்படியாவது தன் மனதில் உள்ளவற்றைச் சொல்லிவிட வேண்டும்.

எப்படி? எப்படிச் சொல்வது? எங்கே பார்ப்பது?

மூளையைத் தட்டி யோசித்தவனுக்குச் சட்டென மூளையில் பொறி தட்டியது.

பேசாமல் விடிந்ததும் நேராய் அவள் பணிபுரியும் கடைக்கே சென்று விட்டால் என்ன?

ஜவுளிக் கடையில் காரணமில்லாமல் எப்படி நுழைவது?

அட! வசந்த் இருக்கானே... அவனை எப்படி மறந்து போனேன்? ம்... அவன்தான் இதற்குச் சரியான ஆள்.

உற்சாகமாய் கட்டிலை நெருங்கித் தலையணை அருகே இருந்த தனது செல்போனைக் கையில் எடுத்தான். அதை உயிர்ப்பித்து வசந்தனைத் தொடர்பு கொண்டான்.

ரிங் போயிற்று.

முழுவதுமாய் அடித்து ஓய்ந்தது.

மீண்டும் முயற்சித்தான். தொடர்ந்து மணி ஒலித்துக் கொண்டிருக்க... இரவின் அமைதியில் அது பலமாகக் காதில் எதிரொலித்தது.

'சோம்பேறி வசந்த்! சீக்கிரம் போனை எடுடா...' - தனக்குள் முனகிக் கொண்டிருந்தபோது... தூக்கம் கலைந்த நிலையில் வசந்தின் குரல் கேட்டது.

"ஹலோ!"

"டேய் வசந்த்! நான் ராஜா..."

"என்னடா இந்த நேரத்தில?"

"மச்சான்! உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்..."

"இந்த நேரத்திலயா?" - கண்களைத் திறவாமலேயே கேட்டான் வசந்த்.

"ஆமா... ஆமா."

"ரொம்ப டயர்டா இருக்கு ராஜா! தூக்கமா வருது... அப்புறம் பேசலாமே...!"

"டேய்... நான் ஒருத்தன் இங்கே தூக்கம் வராம அல்லாடிட்டு இருக்கேன். உனக்கு என்னடா தூக்கம் வேண்டிக்கிடக்கு?"

"டேய்! இதெல்லாம் ரொம்ப ஓவர். அர்த்த ராத்திரியில போன் பண்ணி ஏன் தூங்குறேன்றியா?"

"ஆமா. முதல்ல எழுந்து உட்கார்!"



"ராஜா! என்னடா ஆச்சு உனக்கு?" - கொட்டாவி விட்டான் வசந்த்.

"எழுந்து உட்கார்ந்திட்டியா?"

"ம்... உட்கார்ந்திட்டேன். சொல்லு!"

"வசந்த்! நாளைக்கு உனக்கு ஏதாவது புரோகிராம் இருக்கா?"

"புரோகிராம்ன்னா!"

"எங்கேயாவது வெளியே போறியா?"

"எனக்கு டியூட்டிடா. வேலைக்குப் போகணும்..."

"லீவு சொல்லிடுடா..."

"வாட்?"

"ஏன்டா கத்துற? லீவுதானே சொல்லச் சொன்னேன்..."

"நேற்றும் லீவு. இன்னிக்கெல்லாம் லீவு போட முடியாது ராஜா!"

"நீ லீவு போடுற..."

"எதுக்குடா?"

"நாம ரெண்டு பேரும் ஒரு முக்கியமான இடத்துக்குப் போறோம்."

"எங்கே?"

"தனலட்சுமி பட்டு சென்டருக்கு..."

"என்ன? ஜவுளிக் கடைக்கா!"

"ம்..."

"எதுக்கு?"

"உன் மேரேஜ் டிரஸ்ஸுக்கு ஆர்டர் கொடுக்க..."

"அதுக்குத்தான் இன்னும் நாள் இருக்கே...?"

"இப்பவே ஆர்டர் பண்ணினாத்தான் சரியா இருக்கும். கடைசி நேரத்தில கொடுத்தா அவசரமாச் செய்து கொடுப்பாங்க. அது திருப்தியா இருக்காது..."

"எனக்குத் தலையே சுத்துது..."

"ஏன்டா?"

"கல்யாணப் புடவையை ஆர்டர் எடுக்கிறதுக்கு இப்படி அர்த்தராத்திரியில போன் பண்ணி டார்ச்சர் பண்றியே... உனக்கு என்னடா ஆச்சு?"

"வசந்த்!"

"ம்..."

"எனக்கு என்னவோ ஆயிடுச்சுடா..." - ராஜ குமாரனின் குரலில்... உறக்கம் முற்றிலும் விலகிவிட, நிமிர்ந்து அமர்ந்தான் வசந்த்.

"டேய்! என்னடா சொல்ற?"

"வசந்த்! எனக்கு... எனக்கு எப்பவும் அந்தப் பொண்ணு நினைப்பாவே இருக்குடா..."

"யூ மீன்? உஷா!"



"ம்... அவளை உன் ஃபங்ஷன்ல பார்த்ததில இருந்து இதோ இந்த நொடி வரைக்கும் என் மனசு பாடாப்படுதுடா! படுத்தா... பொட்டுத்தூக்கம் கூட வர மாட்டேங்குது."

"ராஜா! நீ... அந்தப் பொண்ணை விரும்புறியா?" - ஆர்வமாய்க் கேட்டான்.

மறுமுனையில் சிலகணநேர மௌனத்திற்குப் பின் தயக்கமாய்ப் பதில் வந்தது.

"அ... அப்படின்னுதான் நினைக்கிறேன்."

"அப்படிப் போடு. நீ ஜவுளி ஷோரூம்ல அவ்வளவு அலும்பு பண்ணும்போதே எனக்கு டவுட்தான். சோழியன் குடுமி சும்மா ஆடாதேன்னு நினைச்சேன். நான் நினைச்சது சரியாப் போச்சு..."

"டேய்! கிண்டல் பண்ணாதேடா... நான் சீரியஸா பேசிட்டு இருக்கேன்..."

"சரி! உன் மனசுல சைத்தான் புகுந்திடிச்சு. அதனால உனக்குத் தூக்கம் வரலை. என்னை ஏன்டா டிஸ்டர்ப் பண்றே?"

"என்ன மச்சான் இப்படிச் சொல்ற? எனக்கு இருக்கிற ஒரே துருப்புச்சீட்டு நீதானே!"

"என்ன? துருப்புச்சீட்டா?"

"ஆமான்டா. உன் உதவியாலதான் நான் நாளைக்கு உஷாவை மீட் பண்ண முடியும். உன்னாலதான் நாங்க சந்திக்க முடியும்."

"என்னை என்ன மாமா வேலை பார்க்கச் சொல்றியா?"

"சேச்சே! தப்பாப் பேசாதடா... நீ... நீ கடவுள்! எங்களைச் சேர்த்து வைக்கப் போகிற கடவுள்."

"டேய்! என்னடா... ரொம்ப மேலே தூக்குறியே... எப்போ கீழே போடப் போற?"

"என்ன மச்சான் இப்படிக் கேட்கிற?"

"பின்னே? கடவுள் அது இதுன்றியே..."

"மச்சான்! ராமனையும் சீதையையும் சேர்த்து வைச்சது யாரு?"

"யாரு?"

"அதான்டா! சீதையைப் பிரிஞ்சி ராமன் தவிச்சப்போ... தூது போனாரே! கடல் கடந்து போய் சீதையைத் தேடிப் பிடிச்சு..."

"ஓ! அனுமாரைச் சொல்றியா?"

"ம்... அவரேதான். இப்ப எனக்கு நீதான் அனுமான்."

"அதானே பார்த்தேன். அங்கே சுத்தி இங்கே சுத்தி குரங்குன்ற..."

"தப்பு தப்பு... அவர் எவ்ளோ பெரிய கடவுள்!"

"சரிடா... ஏற்கனவே எனக்குத் தலை சுத்துது. நீ வேற இன்னும் குழப்பாதே. இப்ப நான் என்ன பண்ணனும்?"



"நாளைக்கு லீவு போடணும்..."

"போட்டுட்டு...."

"என்கூட உஷாவோட ஜவுளி ஷோரூமுக்கு வரணும்..."

"சரி! அப்புறம்?"

"நீ வந்தாப் போதும். மத்ததெல்லாம் நான் பேசிக்கிறேன்..."

"ம்... வெரி குட் ஜாப்."

"ப்ளீஸ்டா... எனக்காக..."

"சரி... சரி. வர்றேன். எப்போ வரணும்?"

"நீ வரவேண்டாம். நானே வந்து பிக்-அப் பண்ணிக்கிறேன்."

"ஓ.கே. சரி... போனை வெச்சிடவா?"

"இருடா... என்ன அவசரம்?"

"தூக்கம் வருதுடா!"

"உன் தூக்கத்தைத் தூக்கிக் குப்பையில போடு. ஏதாவது பேசு!"

"என்னடா பேசணும்?"

"ஏன்டா! ஊர்ல உலகத்தில பேசுறதுக்கு விஷயமா இல்லை. சும்மா எதையாவது பேசுடா.. படுத்தா தூக்கம் வரமாட்டேங்குது. விடியுற வரைக்கும் பேசிட்டு இருப்போம்..."

"ராஜா! இதெல்லாம் டூ மச்!"

"இருந்திட்டுப் போகட்டும்டா... நீ ஏதாவது பேசு!"

"சரி. நான் சொல்றதைக் கேட்கிறியா?"

"சொல்லு... சொல்லு!"

"முதல்ல போனைக் கட் பண்ணிட்டு கட்டில்ல படுத்துத் தூங்கு..."

"தூக்கம் வரலைன்னு தானே சொல்றேன்..."

"அது வராட்டி போகுது... நீ கண்ணை மூடிட்டுப் படு. கனவாவது வரும்..."

"கனவா!"

"ம்... கனவு வரும். கனவுல உஷா வருவா..."

ராஜகுமாரனின் விழிகள் விரிந்தன. "ரியல்லி?"

"யெஸ்! கனவுல உஷா வந்ததும் என்னென்ன பேசணுமோ... அதை விடிய விடிய உட்கார்ந்து பேசிட்டே இரு. என்னை விட்டுடு. பை... குட் நைட்!"

"குட் நைட் இல்லடா... குட் மார்னிங்!" - என்றவனுக்கு மறுமுனையில் வசந்த் போனை வைத்து விட்டான் என்று புரிந்தது.

புன்னகையோடு தன் போனைக் கட் பண்ணி எடுத்த இடத்தில் வைத்தான்.

வசந்த் சொன்னது போல் கனவு வருமா? அதில் உஷா வருவாளா?



ஆர்வத்தோடு படுத்துக் கண்களை மூடினான்.

ஒன்றுசேர மறுத்த இமைகளை வலுக்கட்டாயமாக இறுக மூடிக் கொண்டான்.

## 12

இன்றைக்கு ஏனிந்த ஆனந்தமே?
இன்பத்தில் ஆடுது என் மனமே!
கனவுகளின் சுயம்வரமோ - கண்
திறந்தால் சுகம் வருமோ?

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் உஷா. பளிங்கு போன்ற முகம் புன்னகை ததும்பிப் பிரகாசித்தது.

இனிமையான கனவு கண்டது போல் அதை இன்முகத்தோடு ரசித்துக் கொண்டிருந்தபோது... தனலட்சுமி மகள்களின் அறைக்குள் நுழைந்தாள்.

இளையவனின் படுக்கை வெறுமையாய் இருக்க... அறையின் மூலையில் இருந்த குளியலறையில் இருந்து நீர் சிதறும் ஒலி கேட்டது.

குளிக்கிறாளோ? - வியப்பான புன்னகையோடு மூத்த மகளின் படுக்கையை நெருங்கினாள்.

மகளின் குழந்தைத்தனமான முகத்தில் தெரிந்த புன்னகையும் ஜொலிப்பும் அவளை எழுப்ப விடாமல் தடுத்தது. சீரான சுவாசத்தோடு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மகளைக் கூர்ந்து கவனித்தாள்.

என்றுமில்லாத பேரழகோடு மின்னியது முகம். அதோடு மயக்கும் புன்னகையும்!

தனலட்சுமி முகம் கனிந்தது. இடக்கரம் தானாய் நீண்டு... மகளின் கேசத்தைப் பரிவாய் வருடியது. அந்த வருடலில் உஷாவின் உறக்கம் கலைந்தது.

மெல்ல அசைந்து இமைகளைத் திறந்தாள். கண்ணெதிரே நின்ற அன்னையைக் கண்டதும் சட்டென எழுந்து அமர்ந்தாள்.

"அம்மா!"

"என்னடாம்மா... இவ்ளோ நேரம் தூங்கிட்ட? உடம்பு எதுவும் சரியில்லையோன்னு நினைச்சுத் தொட்டுப் பார்த்தேன்..."

"இல்லம்மா... கொஞ்சம் டயர்ட். அதான்..."

"சரிடா! மணி எட்டாகப் போகுது. அப்பா கடைக்குப் புறப்படுறாங்க..."

"மை காட்! எட்டு மணியா? ஏம்மா... என்னை எழுப்பலை?" - என்றவாறே கட்டிலை விட்டு இறங்கினாள் உஷா.

அதே நேரம் குளியலறைக் கதவைத் திறந்து கொண்டு ஈரக் கூந்தலோடு வெளியே வந்தாள் உமா.

"அக்கா! இது வரைக்கும் அம்மா வந்து எழுப்பின பிறகா நீ எழுந்திருப்ப? இன்னிக்கு என்ன புதுசாக் கேட்கிற?"



"ஏன்டி! நான் ஏதோ கொஞ்சம் அசதியில தூங்கியிருப்பேன். நீயாவது எழுப்பி விட்டிருக்கலாமில்ல?"

"நானே ஜஸ்ட் பத்து நிமிஷம் முன்னாலதான் எழுந்தேன். எனக்குக் காலேஜுக்கு டயமாகுது. உன்னை எழுப்புவேனா? குளிப்பேனா?"

"போடி இவளே... ஐயோ! டயமாச்சே..." - பரபரவென பெட்ஷீட்டை மடித்து வைத்துப் படுக்கையை சீர் செய்துவிட்டு... குளியலறையை நோக்கி ஓடினாள்.

தலையை உலர்த்திக் கொண்டே சிரித்தாள் உமா.

"அக்கா! நீ என்ன கலெக்டர் ஆபீஸுக்கா போகப் போற? நம்ம கடைதானே! பொறுமையாக் கிளம்பு. அம்மா! டிபன் ரெடியா?"

"ரெடியா இருக்கு... நீ தலையை நல்லா உலர்த்திக்க..."

"டயமில்லம்மா... நீங்க சீக்கிரமா டிபன் எடுத்து வையுங்க. நான் ஒரு ஃபைவ் மினிட்ஸ்ல வந்திடுறேன்..."

"சரி. நேத்து உன் ஃப்ரெண்ட் வீட்டு விசேஷம் எப்படி இருந்தது? வந்ததும் வராததுமா... ரெண்டு பேரும் படுத்துட்டீங்க..."

"அ... அதுவா? ஃபங்ஷன்ல ரொம்பக் கூட்டம்மா. என் ஃப்ரெண்டுங்ககிட்ட அரட்டை அடிச்சே ரொம்ப டயர்டாகிட்டோம். ஆட்டோவில வந்ததுல... ரொம்பக் கஷ்டமாகிப் போச்சு. அதான் உடனே படுத்திட்டோம்..."

"நீங்க ஏன் ஆட்டோவில வந்தீங்க? அப்பாதான் காரை எடுத்துட்டு வர்றேன்னு சொன்னாங்களாமே..."

"சொன்னாங்கம்மா... லேட்டாகும்னு நினைச்சோம். பட்... சீக்கிரமா விசேஷம் முடிஞ்சதால எல்லாரும் கிளம்பும்போதே நாங்களும் கிளம்பி வந்துட்டோம். அப்பாவுக்குப் போன் பண்ணி சொல்லிட்டேனே..."

"இருந்தாலும் நீங்க நைட் நேரத்தில தனியா வரலாமா? கடையை அடைச்சிட்டு வந்த அப்பா என்னைத்தான் திட்டினாங்க..."

"விடுங்கம்மா! அப்பா திட்டுறதெல்லாம் ஒரு திட்டா? அப்பாவுக்குச் சத்தமாப் பேசக் கூடத் தெரியாது..."

"ம்... இப்படியே சொல்லிச் சொல்லி எம்புள்ளைய எவளும் மதிக்காதீங்க..." - என்றவாறே உள்ளே நுழைந்த ரங்கநாயகியைக் கண்டதும் உமாவின் முகம் கடுத்தது.

"இப்ப யாரு உங்க புள்ளையை மதிக்கலை?"

"நீங்கதான்டி... நேற்று அவன் என்ன சொல்லி அனுப்பினான்... நீங்க என்ன பண்ணீங்க?"

"ஏன் பாட்டி! ஃபங்ஷன் சீக்கிரமா முடிஞ்சதால உடனே கிளம்பி வந்தோம். இதுல என்ன தப்பு?"

"ஏன்? உன் அப்பனுக்குப் போன் பண்ணியிருக்க லாமில்ல? அவன் வந்து கூட்டியாந்திருப்பானில்ல...!"

"ப... பண்ணியிருக்கலாம். சும்மா நைட் நேரத்தில ஏன் அப்பாவை அலைய விடணும்னுதான்..."



"இது ஒரு காரணமா? உங்களுக்கு உடம்புல ஒரு பயம் கிடையாதுடி. உங்க அப்பன்தான் தலைக்கு மேல தூக்கி வெச்சுக் கொஞ்சிட்டு இருக்கானே..."

"எங்க அப்பா எங்களைக் கொஞ்சினா உங்களுக்கு ஏன் வயிறு எரியுது?" - படபடத்த மகளை அதட்டினாள் தனலட்சுமி.

"உமா! என்ன இது? பாட்டிகிட்ட மரியாதை யில்லாம..."

"அம்மா! நானா சண்டைக்குப் போறேன்? இந்தப் பாட்டிக்கு இதே வேலையாப் போச்சு. தினமும் ஏதாவது ஒரு காரணத்தை வெச்சு சண்டையைத் தொடங்கிடுது..."

"நானா... சண்டைக்கு வர்றேன்?"

"ஆமா!"

"உங்க மேல உள்ள அக்கறையிலதானடி சொல்றேன். ராத்திரி நேரத்தில கண்ணுக்கு லட்சணமான வயசுப் பொண்ணுங்க நகைநட்டோட தனியா வரலாமா? காலம் எவ்வளவு கெட்டுக்கிடக்கு?

"பட்டப்பகல்லயே ரோட்டுல ஒரு பொண்ணு தனியா நடக்க முடியலை. செயினை அறுக்கிறேன்னு கழுத்தையும் அறுத்திட்டுப் போயிடுறான். உங்களுக்கு ஏதாவது ஆயிடுச்சின்னா... அப்புறம்..." - ரங்கநாயகி பேச்சு வராமல் கண் கலங்க... உமாவிற்குள் சுருக்கென்றது.

'பாட்டி சொல்வதும் நியாயம்தானே! நேற்று நடந்த களேபரத்தில் எதையும் யோசியாமல்... வழியில் சென்ற

ஆட்டோவை நிறுத்தி ஏறி வந்துவிட்டோம். ஆனால் நாட்டுநடப்புகளைப் பற்றித் துளியும் யோசிக்க வில்லையே?'

"வயசானவங்க பலதையும் யோசித்துத்தான் சொல்வோம். அது உங்களை மாதிரி இளசுகளுக்குப் புடிக்கிறதில்லை. கேட்கிற பொறுமையும் இல்லை. உங்க நல்லதுக்குத்தானே சொல்றோம்..."

"ஸாரி பாட்டி!"

"காலம் எவ்வளவு முன்னேறினாலும் மாறினாலும்... தப்பும் தவறும் அதிகமாகிட்டுத்தானே இருக்கு. நாமதானே எச்சரிக்கையோட இருக்கணும்... பட்டபிறகு அழுதா புரண்டா... திரும்ப வருமா?"

"ஸாரி பாட்டி! நாங்க ஏதோ டென்ஷன்ல அப்படியே கிளம்பி வந்துட்டோம். இனிமே... இப்படி நடக்காது!" - மென்மையான குரலில் சொன்ன மகளைப் பார்த்து புன்னகைத்தாள் தனலட்சுமி.

"உமாம்மா! எப்பவுமே இதே மாதிரி அமைதியாப் பேசுடா... பார்க்கவே சந்தோஷமா இருக்கு."

"ம்மா! டயமாச்சும்மா... மாமியாரும் மருமகளுமாச் சேர்ந்து இப்படி கிளாஸ் எடுத்துட்டே இருந்தா... நான் எப்போ காலேஜ் போறதாம்?"

"அதானே பார்த்தேன்... இவளாவது அமைதியாப் பேசுறதாவது?"



"பாட்டி! ஏற்கனவே டயமாச்சுன்னு நான் கடுப்புல இருக்கேன். நீங்க வேற இன்னும் கடுப்பேத்தாதீங்க. அப்புறம் சாப்பிடாமப் போயிடுவேன்..."

"வேண்டாம்டியம்மா... நான் பேசலை. வா... வந்து சாப்பிடு. உஷா எங்கே?"

"இதோ வந்துட்டேன் பாட்டி!" - ஈரம் சொட்டச் சொட்ட வந்தவள் யாரிடமும் நின்று பேசாமல் மளமளவென புடவையைச் சுற்றிக் கொண்டு எளிதான ஒப்பனையோடு பத்தே நிமிடத்தில் ஆயத்தமாக... மூவரும் புறப்பட்டுக் காரில் ஏற... கையசைத்து வழியனுப்பினாள் தனலட்சுமி.

உமா தலையை வெளியே நீட்டினாள்.

"அம்மா! இன்னிக்கு வீட்லயே இருங்க. கோவிலுக்கு எங்கேயும் போக வேண்டாம்..."

"ஏன்டி?"

"நம்ம வீட்டுக்கு யாராவது வந்தாலும் வருவாங்க!" - என்றவளின் கையில் நறுக்கெனக் கிள்ளினாள் உஷா.

"ஸ்ஸ்... ஏன்க்கா?"

"உன் வாயை மூடிட்டு வா!" - குரலைக் குறைத்துக் கொண்டே அதட்டினாள்.

வெளியே நின்ற தனலட்சுமி புரியாமல் கேட்டாள். "யாரு வருவாங்க?"

"அது... நேத்து சர்மியோட வீட்டுல சில ஃப்ரெண்ட்ஸைப் பார்த்தேன். அவங்க நம்ம வீட்டுக்கு வர்றதாச் சொன்னாங்க..."

"உமா!"

"இருக்கா... ஒருவேளை அவங்க வரும்போது அம்மா வீட்டுல இல்லைன்னா அவங்க மனசு கஷ்டப்படாதா?"

"சரி... சரி. நான் எங்கேயும் போகலை. நீங்க போயிட்டு வாங்க..."

"பைமா... பை பாட்டி!" - கையசைத்ததும் காரைக் கிளப்பினார் ராமச்சந்திரன். பின் இருக்கையில் இரு மகள்களும் தங்களுக்குள் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டே சிரிக்க... தானும் புன்னகைத்தார்.

"என்னடாம்மா! அப்பாவுக்குத் தெரியாம என்ன ரகசியம்?"

"அது... ஒண்ணுமில்லப்பா... ஜஸ்ட் எ ஜோக்!"

"அப்பாகிட்ட சொன்னா... நானும் சிரிப்பேனில்ல?"

"அக்கா! அப்பாகிட்ட சொல்லிடலாமா?"

"ஏய்! உதை வாங்கப் போற நீ?"

"உஷாம்மா... அப்படியென்ன ரகசியம்?"

"இது ஒண்ணும் பெரிய ரகசியமில்லப்பா... இவ சும்மா என்னைக் கலாய்ச்சிட்டு இருக்கா..."

"ஏதோ இருக்கு. சொல்ல மாட்டேங்கிறீங்க?"

"உங்ககிட்ட எதையும் மறைக்க மாட்டோம்ப்பா... ஒரு ரெண்டு நாள் போகட்டும். சொல்றோம்..."



"அதென்ன ரெண்டு நாள்?"

"அப்பா! ஸன்டே தானே ஹாலிடே. அன்னிக்கு நாம எல்லாரும் வீட்டுல இருந்து நிதானமாப் பேசுவோம். ஓ.கே.யா?"

"ஓ.கே." - என்றவர் அதற்கு மேல் பேசவில்லை.

உஷாவைக் கடையில் இறக்கிவிட்டு இளைய மகளைக் கல்லூரிக்கு அழைத்துச் செல்ல... தங்கைக்கு கையசைத்துவிட்டுப் புன்னகையோடு படிக்கட்டில் ஏறி கடைக்குள் நுழைந்த உஷா திடுக்கிட்டுப் போனாள்.

தன் நண்பனோடு சேர்ந்து மிடுக்காய் நின்று கொண்டிருந்த ராஜகுமாரன்... உஷாவைக் கண்டதும் மலர்ந்து புன்னகைத்தான்.

"ஹாய்!"

உஷா சட்டெனத் திரும்பி கடை ஊழியர்களைக் கவனித்தாள்.

காலை நேர பரபரப்பில் அனைவரும் தங்கள் பணியைச் செய்து கொண்டிருக்க... மெல்ல ராஜகுமாரனிடம் திரும்பினாள். குரலைத் தழைத்துக் கொண்டாள்.

"இங்கே என்ன பண்றீங்க?"

"என்னங்க இப்படிக் கேட்கிறீங்க? கிட்டத்தட்ட ஒன் அவரா கால்கடுக்க வெயிட் பண்றோம்..."

"எதுக்கு?"

"உங்களைப் பார்க்கத்தான்..."

"என்னை ஏன் பார்க்கணும்?"

"நிறையப் பேசணுங்க..."

"மிஸ்டர்! லுக்... என்கிட்ட நீங்க என்ன பேசணும்? நான்..." - என வேகமாகத் தொடங்கியவள்... கடையின் மூத்த ஊழியர் வந்ததும் லேசாய் புன்னகைத்தாள்.

"ஹலோ அங்கிள்!"

"குட் மார்னிங் உஷாம்மா..."

"மார்னிங் அங்கிள்!"

"அப்பா வரலையாம்மா?"

"உமாவைக் காலேஜ்ல விட்டுட்டு வருவாங்க அங்கிள்! எனி இம்பார்ட்டன்ட்?"

"ஆமாம்மா! இவங்க ரெண்டு பேரும் ஏதோ கல்யாணப் புடவைக்கு ஆர்டர் கொடுக்கணுமாம். ரொம்ப நேரமா வெயிட் பண்றாங்க..."

லேசான நிம்மதி மூச்சோடு ராஜகுமாரனை ஒரு முறை பார்த்துவிட்டு அவரிடம் திரும்பினாள்.

"கிரௌண்ட் ஃப்ளோர்ல வெயிட் பண்ணச் சொல்லுங்க அங்கிள்! அப்பா ஒரு பத்து நிமிஷத்தில வந்திடுவாங்க..."

"அப்பா பொறுமையாய் வரட்டும்மா... பட்டுப் புடவை லாக்கர் சாவி உன்கிட்டதானே இருக்கும்மா...?"



"ம்..."

"நீ இவங்களுக்குச் சில மாடல் காட்டும்மா... அவங்க செலக்ட் பண்றதை ஆர்டருக்கு அனுப்பிடலாம். இன்னிக்கு லோடு வருது. நான் லாரி ஆபீஸ் வரைக்கும் போயிட்டு வர்றேன்..."

"சரிங்க அங்கிள்! நீங்க போங்க. நான் பார்த்துக் கிறேன்."

"தம்பி! இவங்கதான் இந்தக் கடையோட ஓனரம்மா. எது பேசுறதா இருந்தாலும் பேசிக்கங்க... நான் வர்றேம்மா...! - என அவர் விலகிச் செல்ல... திகைப்பான பார்வையோடு இருவரும் உஷாவைப் பார்த்தனர்.

உஷா புருவங்களை உயர்த்திக் கேட்டாள். "என்ன?"

"ஏங்க உஷா! அவர் என்ன சொல்லிட்டுப் போறார்?"

"ஏன்? உங்களுக்குத் தமிழ் புரியாதா!"

"உங்க அப்பா யாருங்க?"

"ராமச்சந்திரன். இந்தக் கடைக்குச் சொந்தக்காரர்."

"அச்சச்சோ..." - வசந்த் பதறினான்.

"ஏன்? என்னாச்சு?"

"மச்சான்! வா... போயிடலாம்."

"எதுக்குடா?" - ராஜகுமாரன் அசையாமல் நின்றான்.

"இது பெரிய இடத்து விவகாரம். வா... போயிடலாம்."

"நாம என்ன சும்மா விளையாட்டுப் பேச்சு பேசவா வந்தோம்? பேசாம இரு. நான் பேசிக்கிறேன்..."

"ஹலோ! ரெண்டு பேரும் என்ன விஷயமா வந்தீங்க?"

"அது... இவன் சொல்லுவான்!" - வசந்த் ராஜகுமாரனைக் கைகாட்ட...

ராஜகுமாரனைப் பார்த்து புருவம் உயர்த்தினாள். "ம்...?"

"அது வந்து... பார்த்துட்டுப் போலாம்னு வந்தோம்..."

"யாரை?"

"மாடல்... பட்டு ஸாரி மாடல்ஸ் பார்க்கலாம்னு..." - அவன் தடுமாற... புன்னகையை மென்று கொண்டாள்.

"ஓ.கே. ஃபாலோ மீ!" - என்றவாறே படிக்கட்டில் அவள் ஏற... அவளது நடைக்கேற்ப அசைந்தாடிய கூந்தலை ரசித்தவாறே... பின்னால் சென்றான் ராஜகுமாரன். கூடவே வந்த வசந்த் கிசுகிசுத்தான்.

"மச்சான்! இப்பக்கூட ஒண்ணும் கெட்டுப் போயிடலை. வா... இப்படியே எஸ்கேப் ஆயிடலாம்."

"ஏன்டா?"

"எனக்கென்னவோ இது சரிப்பட்டு வரும்னு தோணலை..."

"ஏன்?"



"இது பெரிய இடத்துப் பொண்ணுடா!"

"நாம என்ன பிளாட்பார கேஸா? நானும் மாசம் அறுபதாயிரம் சம்பாதிக்கிறேன். அப்பா அவர் பங்குக்குச் சம்பாதிக்கிறார்..."

"இருந்தாலும்..."

"இப்ப நீ வாயை மூடிட்டு வரலை... அத்தை பையன்னுகூடப் பார்க்க மாட்டேன். கழுத்தை நெரிச்சிடுவேன்..." - பற்களைக் கடித்தவாறே கிசுகிசுத்தான் ராஜகுமாரன்.

"நீ செய்வடா...! கொலை வெறி பிடிச்சவன் மாதிரிதான் இருக்க..."

"பேய்!"

"ராத்திரியானா பேசியே கொல்ற... இப்ப என்னன்னா..."

"பேசி முடிச்சாச்சா?" - உஷாவின் குரலில் இருவரும் நின்று நிமிர்ந்தனர்.

பட்டுப் புடவைப் பிரிவில் வந்திருந்தனர். இருவரும் லேசாய் சிரித்து வைத்தனர்.

"ம்... பேசிட்டோம்."

"இப்ப சாரீஸ் பார்க்கலாமா?"

"ம்... ம்... பார்க்கலாமே!"

"நீங்க எந்த ரேட்ல பார்க்கிறீங்க?"

"வசந்த்! எவ்வளவு அமௌண்ட்ல பார்க்கலாம்?"

"என்கிட்ட ஏன்டா கேட்கிற?"

"நீதான்டா மாப்பிள்ளை... நீதான் செலக்ட் பண்ணணும்..."

"ஹும்... எல்லாம் என் விருப்பப்படியா நடக்குது? நீயா ஏதோ பண்ற... நீ செய். என் தலையை உருட்டாதே..." - வசந்த் பரிதாபமாய்ச் சொல்ல... நெற்றியைச் சுருக்கினாள் உஷா.

ராஜகுமாரன் அவசரமாய்ச் சமாளித்தான். "நீங்க ஒண்ணும் தப்பா நினைச்சுக்காதீங்க. அவன் எப்பவுமே இப்படித்தான்... எல்லாப் பொறுப்பையும் என்கிட்ட விட்டுடுவான்.."

"ஓஹோ!"

"நீங்க ஒரு ஃபிப்டி தௌஸண்ட்ல சாரீஸ் காட்டுங்க..."

"ஓ.கே." - என்றவாறு இரும்புப் பெட்டகக் கதவைத் திறந்து விலை உயர்ந்த புடவைகள் நான்கைந்தை எடுத்து கண்ணாடித் தடுப்பின் மீது வைத்தாள். அடியில் உள்ள கதவைத் திறந்து இரண்டு கனமான பட்டுப் புடவைகளை எடுத்து வைத்துவிட்டு... கதவைப் பூட்டி விட்டு நிமிர்ந்தாள்.

"பிரிச்சுக் காட்டவா?"

"இல்ல வேண்டாம். உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?"



"சிரமமா! இது எங்க கடமை ஸார்.... பிரிச்சுக் காட்டினால்தானே உங்களுக்கு டிசைன் தெரியும்!" - என்றவாறே அழகாய் மடிக்கப்பட்டிருந்த புடவையை பூப்போல் பிரித்தாள்.

இரத்தச் சிவப்பில் உடல் முழுக்க ஜரிகைப்பூ வேலைப்பாடுடன் கூடிய புடவை அது. இருபக்கமும் கெட்டியான ஜரிகையுடன் பளபளத்தது. முந்தானைப் பகுதியைப் பிரித்துக் காட்டினாள் உஷா.

ஜரிகை வேலைப்பாட்டில் சின்னஞ்சிறு கண்ணன் வெண்ணெய் திருடித் தின்னும் கோலம் வெகு அற்புதமாய் இருந்தது. வேண்டாவெறுப்பாய் பார்த்துக் கொண்டிருந்த வசந்த் கூட வியப்பாய் நெருங்கி வந்தான். "வாவ்! ரியல்லி ஃபென்டாஸ்டிக்."

"பிடிச்சிருக்கா சார்?"

"ம்... வெரி நைஸ்."

"மத்த புடவையைப் பிரிச்சுக் காட்டவா?"

"வேண்டாங்க... இதுவே ரொம்பப் பிரமாதமா இருக்கு."

"கலர் ஓ.கே.வா?"

"கலர்? ராஜா...! பொண்ணுக்கு என்ன கலர் பிடிக்கும்னு தெரியலையே?"

"போன் பண்ணிக் கேளுடா!"

"நானா?"

"பின்னே நானா கேட்க முடியும்? கேளுடா...."

"இல்ல... அவங்க வீட்டுல யாராவது தப்பா நினைச்சுக்கப் போறாங்கடா. நாம நம்ம வீட்லயே சொல்லாம வந்திருக்கோம்."

"போதும் போதும்... விட்டா எல்லாத்தையும் ஒப்பிச்சிடுவ. முதல்ல உன் வுட்பியோட செல்லுல கூப்பிட்டுப் பேசு. விஷயம் சீக்ரெட்னு சொல்லு..."

"சரிடா..." என்றவாறே தன் செல்லை எடுத்துக் கொண்டே... வசந்த் சற்று விலகிச் செல்ல...

வரவழைத்துக் கொண்ட துணிச்சலுடன் உஷாவிடம் திரும்பினான்.

"அப்புறம் உஷா! நைட் நல்லாத் தூங்குனீங்களா?" - அவனது இயல்பான கேள்வியில் முகம் கடுத்தாள்.

"இது என்ன கேள்வி? நைட்ல எல்லாரும்தான் தூங்குவாங்க..."

"ஆனா... நான் தூங்கலையே?"

"வாட்?"

"தூங்க விடாமப் பண்ணிட்டீங்களே! விடிய விடிய விழிச்சிருந்து கண்ணை மூட முடியாம..."

"வெயிட் மிஸ்டர்! நான் என்ன பண்ணினேன்?"

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னீங்களா?" - அவனும் நிமிர்வாய்க் கேட்க... தடுமாறினாள்.



"அது... அது வந்து..."

"நீங்க மட்டும் பதில் சொல்லியிருந்தா... இவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேனா? உங்களால என் தூக்கம் மட்டுமா போச்சு? வசந்தோட தூக்கமும் கெட்டுப் போச்சு..."

"வாட் நான்சென்ஸ்?"

"உண்மைதாங்க... ராத்திரியெல்லாம் போன் பண்ணி என்னைத் தூங்க விடாம டார்ச்சர் பண்ணிட்டான். அது மட்டுமா... காலையில இருந்து ஒரு காபி கூடக் குடிக்க விடாம ஆறு மணிக்கே எழுப்பிட்டு வந்து உங்க கடை வாசல்ல நிக்க வெச்சிட்டான்..." - என்ற வசந்தைப் பார்க்கையில் பரிதாபமாகத் தோன்றியது.

கோபமாய் ராஜகுமாரனை முறைத்தாள். "என்ன இதெல்லாம்?"

"எல்லாம் உங்களாலதான். நீங்கள் மட்டும் பதில் சொல்லியிருந்தால் நான் ஏன் இவனை..."

"ஸ்டாப்! இப்ப என்கிட்ட என்ன பதிலை எதிர்பார்க்கிறீங்க?"

"என்ன பதில் சொன்னாலும் சரி. நோ மட்டும் சொல்லிடாதீங்க..." - என்றவனைப் பார்த்து அடக்க முடியாமல் புன்னகைத்தாள்.

அவளது புன்னகை புதிய தெம்பைத் தர... நாற்காலியை முன்னே இழுத்துப் போட்டுக் கொண்டு ஆர்வமாய்க் கேட்டான்.

"பிடிச்சிருக்கா?"

"அப்போ நீங்க புடவை பார்க்க வரலை...!"

"அதான் பார்த்தாச்சே... செலக்ட்டும் பண்ணிட்டோம். நீங்க சொல்லுங்க உஷா... என்னைப் பிடிச்சிருக்கா?"

"இதோ பாருங்க... கல்யாணம்றது விளையாட்டுக் காரியம் இல்லை..."

"நானும் அப்படிச் சொல்லலையே?"

"நீங்க பேசுறது விளையாட்டு மாதிரிதானே தெரியுது..."

"நோ... நோ. என் மேல சத்தியமா உங்களை விரும்புறேன். எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா... அது உங்ககூடத்தான். அதுல எந்த மாற்றமும் இல்லை."

"எப்படி இது? சரி! நான் இப்ப என்ன பண்ணணும்?"

"சரின்னு சொல்லணும்..."

"மிஸ்டர் ராஜா! எனக்கு அந்த அதிகாரம் இல்லை. எங்க அப்பா பார்க்கிற மாப்பிள்ளை யாரா இருந்தாலும் நான் தலையாட்டிடுவேன்..."

"உஷா!" - திகைப்பாய் ஏமாற்றமாய் இருக்கையை விட்டே எழுந்தான் ராஜகுமாரன். உதடுகளில் புன்னகை நெளிய அவனை ஆழமாய்ப் பார்த்தாள்.

"அந்த மாப்பிள்ளை நீங்களா இருந்தா எனக்கு முழுச் சம்மதம்! ஸோ... நீங்க என்கிட்ட பேசுறதை விட



அப்பாகிட்ட பேசறதுதான் சரி. ஓ.கே?" - அவள் என்ன சொல்கிறாள் எனப் புரிந்து கொள்ள இயலாமல் நின்றவனின் தோளில் தட்டினான் வசந்த்.

"டேய்! இன்னுமா புரியலை உனக்கு? உன் மாமனார்கிட்ட போய் பேசுவியாம்... இவங்களுக்கு ஓ.கே.வாம்!"

"என்ன?" - வியப்பும் ஆச்சர்யமுமாய் உஷாவின் முகம் பார்க்க... அது வெட்கச் சிவப்பை பூசிக் கொண்டது.

## 13

நினைத்தது நிறைவேறும்
நீ இருந்தால் என்னோடு
நடப்பது நலமாகும் - நான்
இருந்தால் உன்னோடு!

**கா**ரை வெகு உற்சாகமாய் சீறவிட்டுக் கொண்டிருந்தான் ராஜகுமாரன். அவன் அருகே அமர்ந்திருந்த வசந்தன், நண்பனின் உற்சாகத்தைக் கண்டு புன்னகை முகமாய் அவனது உற்சாகத்திற்கு இடையூறாய் ஏதும் பேசாமல் மௌனமாய் அமர்ந்திருந்தான்.

ராஜகுமாரன் விசிலடித்தவாறே ஸ்டீரியோவை ஃபுல் சவுண்டில் வைக்க, பாடல்கள் அதிரத் துவங்கின. அதற்கேற்ப காரின் வேகத்தை இன்னும் அதிகரித்தான்.

"ராஜா! போதும். இது ஓவர் ஸ்பீடு... காரை ஸ்லோ பண்ணு." - உரிமையாய் அதட்டினான் வசந்த்.

"நோ வசந்த்! ஐயாம் ஸோ ஹேப்பி. இந்த சந்தோஷத்தை என்ஜாய் பண்ண விடு."

"உன் என்ஜாய்ய ரோட்ல பண்ணாதே. ஏதாவது ஒரு தனிமையான இடத்தில போய் கத்து. கூச்சல் போடு. உன்னை யாரும் ஏன்னு கேட்க மாட்டாங்க."

"ஈஸிட்?"

"யா. இப்படி ரோட்ல காட்டாதே. ட்ராபிக் போலீஸ் கண்ல பட்டா வம்பாகிடும்."

"தனிமையான இடம்னா... எங்கே போறது வசந்த்?"

"ஏதாவது பீச் அல்லது மலையடிவாரமாப் போ. பட்... என்னைப் போய் வீட்ல விட்டுட்டு நீ என்ஜாய் பண்ணு."

"வாட்? வீட்டுக்கா?"

"ஆமா! நான் வேலைக்குப் போக வேண்டாமா?"

"சும்மா இருடா! எப்பப் பாரு வேலை வேலைன்னு கிட்டு..."

"ஏன்டா சொல்லமாட்டே? உனக்கென்ன... உன் கம்பெனிக்கு நீதான் முதலாளி. நீ போனாலும் போகாட்டியும் வேலை தானா நடக்கும். எனக்கு அப்படியா?"

"டேய்! சும்மா போரடிக்காதே. இந்த நிமிஷம் நான் எவ்வளவு சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? அதை என்கரேஜ் பண்ணாம சும்மா வீட்டுக்குப் போறேன்றியே!"



"நண்பா! நீ சொல்றதெல்லாம் சரிதான். நான் ஏற்கெனவே கல்யாணத்துக்காக பதினைஞ்சு நாள் லீவு அப்ளை பண்ணியிருக்கேன்."

"அதோட இன்னிக்கு ஒரு நாள் லீவா இருக்கட்டும். நீ சொல்லு... நாம இப்ப எங்கே போலாம்?"

"உன் இஷ்டம். நான் சொன்னா கேட்கவா போற?"

"திருக்கழுக்குன்றம் போலாமா?"

"என்ன? திருக்கழுக்குன்றமா?"

"ம்..."

"நீ எப்படா பக்திமான் ஆனாய்?"

"உஷாவை முதன் முதலா கோயில்ல வெச்சுத்தான் பார்த்தேன். அப்ப இருந்தே கடவுள் நம்பிக்கை அதிகமாயிடுச்சு."

"என்ன?"

"ஆமான்டா! தினமும் காலையில அவளைச் சந்திச்ச அந்தக் கோயிலுக்குப் போறேனே!"

"அப்போ இன்னிக்கும் அங்கே போக வேண்டியதுதானே?"

"போகலாம்! ஆனா அங்கே போனா சந்தோஷமா கத்த முடியாதே!"

"என்ன?"

"நீதானேடா கத்து... கூச்சல் போடுன்னு சொன்னே?"

"அதுக்கு?"

"அதுக்குத்தான் திருக்கழுக்குன்றத்தைத் தேர்ந் தெடுத்தேன். சுற்றுவட்டாரத்தில அதுதானே உயரமான இடம். சாமி தரிசனம் பண்ணின மாதிரியும் ஆச்சு... மலை முழுக்க எதிரொலிக்கிற மாதிரி ஹை ஸ்பீடுல கத்துன மாதிரியும் ஆச்சு!" - என்றவாறே காரைத் திருப்பினான்.

வசந்த் லேசாய் அலுத்துக் கொண்டான். "என்னவோ பண்ற? இது எதுல போய் முடியப் போகுதோ?"

"கண்டிப்பா கல்யாணத்தில தான் முடியும்!" - ராஜகுமாரன் உறுதியாய்ச் சொல்ல, நிமிர்ந்து அமர்ந்தான் வசந்த்.

"ராஜா! நீ எப்படிடா இவ்வளவு உறுதியாச் சொல்ற?"

"எதை?"

"கல்யாணம்னு சொல்றியே... அதை!"

"நடக்கப் போறதைத் தானே சொல்றேன். இன்னிக்கே அம்மாகிட்ட பேசப் போறோம். சம்மதம் வாங்கப் போறோம்."

"என்ன? போ... றோ... மா?"

"ஆமா!"

"யாரைச் சொல்ற?"

"நம்ம ரெண்டு பேரையும்தான்." - வெகு இயல்பாய் ராஜகுமாரன் சொல்ல, பதறினான் வசந்தன்.



"என்ன? நானுமா?"

"ஆமா!"

"என்ன... விளையாடுறியா?"

"ஏன்டா?"

"பின்னே? ஏதோ நண்பன் ஹெல்ப் கேட்டானேன்னு கூட வந்தா... நீ என்னை வம்புல மாட்டி விட்டுடுவ போலிருக்கே!"

"ஏன்டா? உன் அத்தைகிட்ட தானே பேசப் போற?"

"வேண்டாஞ் சாமி. அத்தையப் பத்தி உனக்குத் தெரியுமோ தெரியாதோ! ஆனா எனக்கு நல்லாத் தெரியும். என்னை விட்டுடு."

"என்னடா இப்படிக் காலை வாருற?"

"ராஜா! உம் மனசுல உள்ளதை அந்தப் பொண்ணுகிட்ட சொல்லணும்னு சொன்ன. சரின்னு நானும் கூட வந்தேன். அதோட என் வேலை முடிஞ்சு போச்சு. இனி வீட்ல பேசுறது சம்மதம் வாங்குறதெல்லாம் உன் சாமர்த்தியம்."

"டேய்! நீ இல்லாம எப்படிடா நான் அம்மாகிட்ட பேசமுடியும்?"

"எப்படி வேணா பேசு. என்னை விட்டுடு. இந்த விஷயம் மட்டும் என் அம்மாவுக்குத் தெரிஞ்சது... அவ்வளவுதான்."

"வசந்த்! என்னடா இப்படிச் சொல்ற?"

"ராஜா! என்னதான் நாம ஃபிரெண்ட்ஸா இருந்தாலும் நம்ம அம்மா அப்பா ரிலேஷன்ஸ்தான். இப்போ நான் வந்து அத்தைகிட்டப் பேசினா ஏதோ நான்தான் உன்னை இப்படி செய்யச் சொன்னேன்ற மாதிரி நினைப்பாங்க!

அது பெரியவங்களுக்குள்ள கசப்பை உண்டாக் கிடும். ஸோ...! நீயே பேசிட்டா எந்தப் பிரச்சனையும் வராது. ஓ.கே.?"

ராஜகுமாரனின் முகம் லேசாய் மாறியது. தயக்கமாய் வசந்தை ஏறிட்டான்.

"வசந்த்! கல்யாணம்னா இவ்வளவு இருக்கா?"

"இன்னும் எவ்வளவோ இருக்கு. பொண்ணு என்ன குலம் கோத்திரம் அப்படி இப்படின்னு எவ்வளவோ இருக்கே!"

"அது ஒன்னும் பிரச்சனை இல்ல."

"எப்படிச் சொல்ற?"

"சீனுவும் நம்ம ரிலேஷன்தானே! அவனுக்குப் பார்த்த பெண் என்றால் நம்ம இனமாய்த்தானே இருக் கணும்!"

"என்னோட முதல் கவலையே இதுதான்."

"எது?"

"சீனுவோட அம்மாவை எப்பவுமே நம்ம ஃபேமிலியில யாருக்கும் ரொம்பவும் பிடிக்காது. இதுல அவங்க ரிஜெக்ட் பண்ணின பெண்ணை நீ செலக்ட்



பண்ணியிருக்க. இது அத்தைக்குத் தெரிஞ்சா ஒத்துக்குவாங்கன்னு நினைக்கிறியா?" - வசந்தின் கேள்வியில் ராஜகுமாரனின் உற்சாகம் சுத்தமாய் வடிந்தது.

காரின் வேகம் தானாய் குறைந்தது. சாலையில் வாகனங்கள் சீறிப்பாய்ந்து கடந்து செல்ல, கார் தாம்பரத்தைத் தாண்டி செங்கல்பட்டு சாலையில் விரைந்தது. நான்கு வழிச்சாலை மேம்பாலத்தைக் கடக்கும் வரை அமைதியாய் இருந்துவிட்டு பின் வசந்தை ஏறிட்டான்.

"வசந்த்!"

"என்ன ராஜா?"

"என்னடா ஏதேதோ சொல்லிப் பயமுறுத்துற!"

"பயமுறுத்தல ராஜா! இதுதான் யதார்த்தம். ஒரு பொண்ணை விரும்புறது ரொம்ப சுலபம். பட்... அதே பொண்ணை கல்யாணம் பண்றது அவ்வளவு சுலபம் இல்ல. அதான் நம்ம ஊர்ல நிறைய பேரோட நேசம் தோத்துப் போயிடுது."

"நோ... நோ... நான்... நான் தோத்துப் போக மாட்டேன். எனக்கு... என்னோட உஷா வேணும்."

"ரிலாக்ஸ் ராஜா! நான் உன்னைக் குறிப்பிட்டுச் சொல்லல. நாட்டு நடப்புக்களைச் சொன்னேன்."

"வேண்டாம். நீ எதையும் சொல்ல வேண்டாம். என்னால என் வீட்ல சம்மதம் வாங்க முடியும்." -

உறுதியாய்ச் சொன்னவனைப் பார்த்துப் புன்னகைத்தான் வசந்தன்.

"தட்ஸ் குட்! இந்த உறுதி இருந்தால் போதும் ராஜா. நீ பேசுற விதத்தில பேசி வீட்ல சம்மதம் வாங்கிடு. நீ மட்டும்தான் பேசணும்... சரியா?"

"சரிடா! நானே பேசிக்கிறேன். வசந்த்! ஒரு வேளை... அம்மா ஒத்துக்கலைன்னா என்னடா பண்றது?"

"மறந்திட வேண்டியதுதான்."

"யாரை?"

"உன் ஆளைத்தான்!"

"நோ... என்னால முடியாது! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உஷாகிட்ட சம்மதம் வாங்கியிருக்கேன்."

"சம்மதம் மட்டுமா வாங்கின? நாளைக்கே பெண் பார்க்க வர்றேன்னு பெரிய ஹீரோ மாதிரி டயலாக் விட்டுட்டு வந்திருக்க... நினைவிருக்கட்டும்."

"அது டயலாக் இல்லடா. கண்டிப்பாப் பெண் பார்க்கப் போறோம்."

"அதுக்கு இன்னிக்கே நீ சம்மதம் வாங்கியாகணும்."

"வசந்த்?"

"நீ சொன்னதை நம்பி அந்தப் பொண்ணு உன்னை எதிர்பார்த்திட்டு இருக்கும். நீ என்ன பண்ணுவியோ தெரியாது. வீட்ல பேசி சம்மதம் வாங்கு."



"ம்... ம்..."

"என்ன வால்யூம் குறையுது!"

"சேச்சே! எப்படிப் பேசுறதுன்னு யோசிக்கிறேன்."

"ராஜா! ஒன்னு பண்ணலாமா?"

"என்னடா?"

"முதல்ல வண்டியை வீட்டுக்குத் திருப்பு."

"ஏன்டா?"

"வீட்ல போய் அம்மா அப்பாகிட்ட பேசி சம்மதம் வாங்கு. நல்லபடியா சம்மதம் கிடைச்சிடுச்சுன்னா அதுக்கப்புறமா இங்கே வந்து சாமிய கும்பிட்டுட்டு உனக்கு எவ்வளவு ஹேப்பியோ அவ்வளவு தூரம் கத்து. குதி. கூச்சல் போடு. சரியா?"

"ம்... இதுவும் நல்ல ஐடியாதான்."

"அப்போ வண்டியைத் திருப்பு."

"ஓ.கே." – என்றவாறே வண்டியைத் திருப்ப முயன்ற ராஜகுமாரன், பின்னால் வரும் வாகனங்களை கவனிக்கத் தவறினான். திரும்புவதற்குரிய சிக்னலையும் கொடுக்க மறந்தான்.

கனமான நீளமான இரும்புக் கம்பிகளைச் சுமந்து கொண்டு திணறியவாறே வந்து கொண்டிருந்த லாரி தனக்கு முன்னே சென்று கொண்டிருந்த கார் எந்த முன்னறிவிப்புமின்றி சட்டெனத் திரும்புவதை உணர்ந்து

அவசரமாய் பிரேக்கை அழுத்தியும் காரியம் கைமீறிப் போனது.

முன்னே சென்று கொண்டிருந்த காரை இடித்து சில அடி தூரம் இழுத்துச் சென்று சற்று தொலைவில் மூச்சு விட்டு நின்றது. காருக்குள் இருந்து கேட்ட கூக்குரல்கள் லாரியின் இரைச்சலில் அடங்கிப் போனது.

கண்ணாடி முன் அமர்ந்து தனது விரல்களால் கூந்தலைக் கோதிக் கொண்டிருந்தாள் உஷா. முகம் புதுப் பொலிவோடு மின்னிக் கொண்டிருந்தது. காலையில் ராஜகுமாரன் தன்னிடம் பேசிய வார்த்தையை எண்ணி தனக்குள் புன்னகைத்துக் கொண்டிருந்தபோது முகத்தின் முன்பாய் கையை ஆட்டினாள் உமா.

"அக்கா! அக்க்கா!" - உமா அழுத்தமாய் அழைக்க திடுக்கிட்டு நிமிர்ந்தாள் உஷா.

"ம்..."

"என்னக்கா? உட்கார்ந்தே கனவு காண்றியா?"

"இ... இல்லையே!"

"இதானே வேணாங்கறது. நான் உள்ளே வந்து பத்து நிமிஷமாச்சு. நான் வந்ததுகூடத் தெரியாம அப்படியே மெய்மறந்து போயிருக்கியே!"

"அப்படி யெல்லாம் ஒண்ணுமில்ல!"

"எங்கிட்ட மறைக்காதக்கா. சொல்லு!"

"எ... என்ன சொல்லணும்?"



"உன் கனவில வந்தது யாரு? அந்த ராஜகுமாரனா?"

"ம்ஹூம்..."

"பொய் சொல்லாதே. உம் மூஞ்சிதான் சொல்லுதே!"

"போடி! உனக்கு வேற வேலையே இல்ல..." - என எழுந்தவளைத் தோள்பற்றி அமர வைத்தாள் உமா.

"ஒழுங்கா உண்மையைச் சொல்லு. இல்ல... அம்மாகிட்ட போட்டுக் கொடுத்திடுவேன்."

"ஏய்..."

"நீ சொல்லாட்டிதான். சொல்லு... சொல்லு... என்ன நடந்தது?" - ஆர்வமாய்க் கேட்டவாறே தமக்கையின் அருகே அமர்ந்து கொண்டாள். உஷாவை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"எதுவும் நடக்கல. என்னை விடு."

"அட! இதை நான் நம்பணுமாக்கும். ஒரு குங்குமக் கோடவுனே உன் முகத்தில கொட்டிக் கிடக்குதே! ஒழுங்கா மரியாதையா ஒரு லைன் விடாம சொல்லிடு. என்ன நடந்தது?"

"அதான் ஒன்னும் நடக்கலன்னு சொல்றேனில்ல?"

"அப்படியா? அம்மா..." - எனத் தொடங்கியவளின் வாயை பதட்டமாய் மூடினாள் உஷா.

"ஏய்! இப்ப எதுக்குடி அம்மாவைக் கூப்பிடுற?"

"நீதான் சொல்ல மாட்டேங்கிறியே! நான் அம்மா கிட்டயே..."

"வேணாம்டி. நீ என் செல்லம் இல்ல..."

"செல்லமும் இல்ல... வெல்லமும் இல்ல. உண்மையைச் சொல்லு. இன்னிக்கு என்ன நடந்தது?" - உமா கறாராய்க் கேட்க, மீண்டும் முகம் சிவந்தாள் உஷா.

"உமா! இன்னிக்கு... இன்னிக்கு..."

"ம்... மேலே சொல்லு!"

"காலையில் அவர்... நம்ம கடைக்கு வந்தாரடி!" - உஷா தயக்கமாய்ச் சொல்ல, முகம் மலர்ந்தாள் உமா.

"யாரு? உன் ராஜகுமாரனா?"

"ம்... ம்..." - புன்னகையோடு தலையாட்டினாள்.

"அப்படிப் போடு. எதிர்பார்த்தேன். ம்... என்ன சொன்னார்?"

"வந்து... அவரைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதமான்னு கேட்டார்."

"இதைத்தானே நேற்றும் கேட்டார்."

"ம்..."

"சரி... நீ என்ன சொன்னாய்?"

"நான்... நான்..."

"சும்மா சொல்லு. ஏன் மென்னு முழுங்குற?"



"நான் என்ன சொல்றது உமா?"

"இதென்ன கேள்வி? உனக்கு அவரைப் பிடிச்சிருக்கா? இல்லையா?"

"பி...டி...ச்சிருக்கு!"

"அப்போ ஓ.கே. சொல்ல வேண்டியதுதானே!"

"அதெப்படி சொல்ல முடியும்?"

"ஏன்?"

"அப்பா பார்க்கிற மாப்பிள்ளையைத்தான் நாம கட்டிக்கணும்னு முடிவு பண்ணியிருக்கோமே. மறந்து போச்சா?"

"அப்போ... நோன்னு சொல்லிட்டியா?"

"ம்ஹூம்..."

"வேற என்னதான் சொன்ன?" - பொறுமையின்றிக் கேட்டாள் உமா.

"எங்க அப்பா பார்க்கிற மாப்பிள்ளை நீங்களா இருந்தால் எனக்கு சம்மதம்னு சொல்லிட்டேன்."

"அக்கா! நீயா...? நீயா இப்படிச் சொன்னாய்?"

"ஏன்டி?"

"நான்கூட இப்படி சமயோசிதமா பேசியிருக்க மாட்டேன். வாவ்! அசத்திட்ட போ. சரி! அதுக்கு அவர் என்ன சொன்னாரு?"

"அவரா... நாளைக்கே அவங்க வீட்ல உள்ளவங்களோட பெண் கேட்டு வர்றதா சொல்லியிருக்கார்."

"என்ன? நாளைக்கேவா?"

"ம்..."

"ஹைய்யோ! சூப்பர்க்கா. நிஜமாவே உன் ஆளு ஹீரோதான். இல்லக்கா...?" - உற்சாக மிகுதியால் தமக்கையைக் கட்டிக் கொண்டாள் உமா.

வெட்கமும் புன்னகையுமாய் அதை ஆமோதித்தாள் உஷா.

"சீக்கிரம் வாக்கா தூங்கலாம். நாளைக்கு நாம ஃப்ரெஷ்ஷா எழுந்து ரெடியாகணுமில்ல. நாளைக்குக் காலேஜுக்கு லீவு சொல்லிடவா?" - என்ற தங்கையை மெல்ல அதட்டினாள்.

"ஷ்...! நீயே மாட்டி விட்டுடுவ போலிருக்கே!"

"ஏங்க்கா?"

"அவர் வர்றது நமக்குத் தெரிஞ்ச மாதிரி காட்டிக்கக் கூடாது. தானா வர்ற வரன் மாதிரி வரட்டும்."

"அப்போ... லீவு போட வேண்டாமா?"

"காரணம் இல்லாம லீவு போட்டுட்டு வீட்ல இருந்தா அம்மா கேட்டா என்ன சொல்றது?"

"ஆமா...!"

"பேசாம நீ காலேஜுக்குப் போ. நானும் கடைக்குப் போறேன்."



"அவங்க வந்தால்...?"

"அப்பா கடையில தானே இருப்பாங்க. வீட்ல இருந்து தானா தகவல் வரும். அப்படி வந்தா நான் உனக்கு போன் பண்றேன். நீ பர்மிஷன் கேட்டுட்டு வந்திடு. சரியா?"

"அப்போ... நீயும் கடைக்குப் போயிடுவியா?"

"ம்..."

"அப்பச் சரி. அக்கா! அவர்... வந்திடுவாரில்ல?"

"கண்டிப்பா வந்திடுவார். எனக்கு நம்பிக்கை இருக்கு!" - கண்களில் கனவோடு சொன்னாள் உஷா.

காலையில் அவன் சொல்லிவிட்டுச் சென்ற வார்த்தை மீண்டும் மீண்டும் செவியில் மோதிக்கொண்டே இருந்தது.

புன்னகையோடு சென்று படுக்கையில் விழுந்தாள்.

"ம்... இனிமே உன்னைக் கையில பிடிக்க முடியாது. கல்யாணப் பொண்ணு. அதுவும் மனசுக்குப் பிடிச்சவரோட மணவாழ்க்கை அமையப் போகுது. இனி என்ன? இன்பம்... இன்பம்... இன்பம்தான். தூங்கு... தூங்கு. கனவில ராஜகுமாரன் வந்தாலும் வருவார். குட் நைட்!" - என்றவாறே உமாவும் தன் படுக்கையில் படுத்துவிட, புன்னகையோடு புரண்டு படுத்தாள் உஷா.

ஆனந்தமாய் கண்களை மூடிக் கொண்டாள்.

## 14

உயிரின் துளி காயும் முன்னே
என் விழி உன்னைக் காணும்!
கண்ணே, ஓயும் ஜீவன் ஓடும்
முன்னே ஓடோடி வா!

மருத்துவமனைக்கே உரிய நெடியும் மென்மையான குரலோசையும் தனக்கு வெகு அருகே அமர்ந்து யாரோ விசும்பும் ஒலியும் கேட்டு கண்களைத் திறக்க முயற்சித்தான் ராஜகுமாரன். இரும்பை ஏற்றி வைத்தது போல் கனமாக இருந்த இமைகளை பிரிக்க இயலாமல் முனகினான்.

மகன் அருகே கண்ணீரோடு அமர்ந்திருந்த யசோதா மகனது அசைவு கண்டு பரபரப்பாய் எழுந்தாள். அவனது கன்னங்களை வருடினாள்.

"ராஜா! ராஜா! கண்ணைத் திறந்து பாருப்பா. டாக்டர்... டாக்டர்... வந்து எம் புள்ளையப் பாருங்களேன்!" - யசோதாவின் கூக்குரலில் சில ஷூக்கள் சப்திக்கும் ஓசை கேட்டது.

மீண்டும் இமைகளைத் திறக்க முயன்று தோற்றுப் போய் மறுப்பாய் தலையசைத்தபோது மென்மையான குரல் வருடியது.

"மிஸ்டர் ராஜா! ஸ்ட்ரெய்ன் பண்ணிக்காதீங்க. மெதுவா... மெதுவா கண்ணைத் திறந்து பாருங்க!" - என்றவாறே தன் இடக்கரத்தைத் தொட்டு நாடித்துடிப்பை பரிசோதிப்பதை உணர்ந்தான்.



'இது எந்த இடம்?' நாசியை நெருடிய மணம் அது... மருத்துவமனை என்று புரிந்தது. எப்படி இங்கே வந்தேன்? கண்களைத் திறக்க முடியாமல் திணறிக் கொண்டே தன் மூளையைத் தட்டி எழுப்பினான்.

எப்படி இங்கே வந்தேன்? உஷாவைப் பார்க்கத்தானே போனேன்? அட! உஷாவைப் பார்த்து அவளிடம் சம்மதம் கூட வாங்கி விட்டேன். அம்மாவிடம் சொல்லி நாளைக்கே பெண் பார்க்கச் செல்ல வேண்டும். அம்மாவிடம் சம்மதம் வாங்க வேண்டும். இல்லை... அதற்கு முன்பாக நான் திருக்கழுக்குன்றம் சென்று மலை உச்சியில் ஏறி நின்று என் சந்தோஷத்தைச் சத்தமாக... மலையடிவாரம் வரை எதிரொலிக்கும்படி கத்த வேண்டும்.

வசந்த் கூட சொன்னானே! முதலில் சம்மதம் வாங்கலாம் என்றானே! நான் காரைத் திருப்பினேனே! ஓ! நோ! அந்த லாரி... என் கார் மீது மோதியதே! மை காட்!

திடுக்கென கண் விழித்தவாறே எழ முயற்சித்தான். அருகே நின்று பரிசோதித்துக் கொண்டிருந்த மருத்துவர் பதறினார்.

"நோ... நோ... எழுந்திருக்கக் கூடாது. பிளட் ஏறிட்டு இருக்குது."

"பிளட்டா?" - குழப்பமாய் பார்வையை உயரே திருப்பியவனின் தலை சுற்றியது. பிளாஸ்டிக் பையில் கருஞ்சிவப்பாய் இரத்தத்தைக் கண்டதும் கண்களை மூடிக் கொண்டான்.

"ராஜா! என்னப்பா? எதுவும் பண்ணுதா?"

"அம்மா! எனக்கு... என்னாச்சு?"

"ஏம்பா! நீ காரையெடுத்துட்டு எங்கே போன? செங்கல்பட்டுல உனக்கு என்ன வேலை?"

"செங்கல்பட்டா? ஓ! காட்! அம்மா... வசந்த்... வசந்த் எங்கே? அவனும் என்கூட கார்ல வந்தானே!" - அவசரமாய் கண்களைச் சுழற்றித் தேடினான். வசந்த் கண்ணில் படாததால் பதறிப் போனான்.

"அம்மா! வசந்த் எங்கே? அவனுக்கு எதுவும்..."

"கூல் டவுன் மிஸ்டர் ராஜா! அவர் பக்கத்து ரூம்ல இருக்கார். ஹீ இஸ் ஆல்ரைட்."

"டாக்டர் நான் அவனைப் பார்க்கணும்."

"நோ... நோ... நீங்க கட்டிலை விட்டு இறங்கக் கூடாது."

"வொய்?"

"உங்க காலை அசைக்கக்கூடாது. ஆபரேஷன் பண்ணியிருக்கு!"

"என்ன?" - திகைப்பாய் தன் கால்களைப் பார்த்தவன் திகைத்தான்.

இடது கால் முழுக்க பாண்டேஜால் சுற்றப்பட்டு கனமான கட்டோடு தெரிந்தது. வலது பாதம் கண்ணில் படாதவாறு பெரிய கட்டோடு இருந்தது.



கையில் தலையில் எல்லாம் காயங்கள் கட்டோடு இருக்க, அப்போதுதான் வலியை உணர்ந்தான் ராஜ குமாரன். வலியை மீறி வசந்த்தின் நினைவு வந்தது.

'ஐயோ! வசந்த்? அவனுக்கு என்னவாயிற்று? எனக்கே இத்தனை காயங்கள் என்றால்? கடவுளே! அவனுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது. இன்னும் ஒரு மாதம் கூட முழுதாய் இல்லையே அவனது திருமணத் திற்கு?'

"அம்மா! நான் வசந்த்தை உடனே பார்க்கணும்."

"என்ன ஸார் இது? இப்படி உடம்போட உங்களால நகரக்கூட முடியாது. முதல்ல படுங்க. உங்களுக்கு கம்ப்ளீட் ரெஸ்ட் தேவை." - என பரிவோடு அவனைப் படுக்கையில் சாய்க்க முயன்ற நர்ஸை உதறினான்.

"நோ... நான் வசந்த்தை பார்த்தே ஆகணும்."

"ராஜா! இப்படி அடம் பிடிக்காதேப்பா!"

"அம்மா! நான் அவனைப் பார்க்கணும்மா. அவனுக்கு அடுத்த மாசம் கல்யாணம்மா. ஐயோ! என்னாலதான்... என்னாலதான் இந்த விபத்து நடந்தது. வீட்ல தூங்கிட்டு இருந்தவனை எழுப்பிட்டுப் போய்... நான்தான்... காரோடு நசுக்கிட்டேன். நான்தான்... என்னோட அலட்சியம்தான் எல்லாத்துக்கும் காரணம். வசந்த்! வசந்த்!" - தலையில் அடித்துக் கொண்டு அரற்றியவனை அதட்டினார் மருத்துவர்.

"மிஸ்டர்! படிச்சவர்தானே நீங்க? உடம்பு முழுக்க காயம் பட்டிருக்கு. எத்தனை இடத்தில ஸ்டிச் போட்டிருக்கோம் தெரியுமா? ஏன் இப்படி பிஹேவ் பண்றீங்க?"

"ஸாரி டாக்டர். வெரி ஸாரி. பட்! நான் என் நண்பனைப் பார்க்கணும். ப்ளீஸ் ஹெல்ப் மீ டாக்டர்!"

"நீங்க பயப்படுற மாதிரி அவருக்கு எதுவும் ஆகல்ல. காரோட வலது பக்கமா லாரி இடிச்சதால உங்களுக்குத் தான் காயம் அதிகம். அவர் இடது பக்கமா இருந்ததால இவ்வளவு காயம் இல்ல."

"இவ்வளவு இல்லன்னா?"

"அவரோட இடது கையில கொஞ்சம் பலமான அடி. சைடுல உள்ள கண்ணாடியில மோதினதில தலையில கொஞ்சம் காயம்."

"நோ..." - வீறிட்டான் ராஜகுமாரன்.

"டோண்ட் எமோஷனல். ஹீ இஸ் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்."

"எப்படி டாக்டர் உங்களால பொய் சொல்ல முடியுது. ஐயோ! கார் நசுங்கும்போது கத்தினானே! அவன் கத்தினது இன்னும் எங்காதில கேட்டுட்டே இருக்குதே!"

"ஏன் ஸார்! பைபாஸ் ரோட்டுல ட்ரைவிங் பண்ணும்போது எவ்வளவு கவனமா இருந்திருக்கணும். அப்போ அலட்சியமா இருந்திட்டு இப்ப வந்து கத்தினா எப்படி?"



ராஜகுமாரன் வாயடைத்துப் போனான்.

"என்னவோ உங்க நல்ல நேரம். லாரி டிரைவர் தப்பிச்சு ஓடாம போலீஸ்ல சொல்லியிருக்கான். அதனால தான் உங்களை இந்த அளவுக்காவது காப்பாத்த முடிஞ்சது. இல்லேன்னா..."

"வேண்டாம் டாக்டர். வேற எதுவும் சொல்லாதீங்க. எம்புள்ள உசிர் பொழைச்சதே போதும்." - யசோதா கண்ணீர் விட்டாள்.

"அதை உங்க பிள்ளைகிட்ட சொல்லுங்கம்மா. டாக்டர்ஸ் சொல்றதைக் கேட்டு எங்கூட கோ-ஆப்பரேட் பண்ணினாத்தான் அவரால நடமாட முடியும். இப்படி சும்மா எமோஷனலாகி கையைக் காலை ஆட்டிட்டு இருந்தா எங்களால ஒண்ணும் பண்ண முடியாது."

"டாக்டர்!"

"மிஸ்டர் ராஜா! உங்க ஹெல்த் மேலே உங்களுக்கும் அக்கறை வேணும்."

"ஸாரி டாக்டர்."

"இட்ஸ் ஓ.கே. டேக் ரெஸ்ட். நர்ஸ்! இன்னும் ஆஃப் அன் அவர்ல இந்த இன்ஜெக்ஷனைப் போடுங்க."

"யெஸ் டாக்டர்."

"டாக்டர்..." - தொண்டை அடைக்க அழைத்தான்.

"யெஸ்!"

"நான்... ஒரே ஒரு வாட்டி... வசந்த்தைப் பார்க்கணுமே!"

"அவருக்கு வலி தெரியாம இருக்க டோஸ் கொடுத்திருக்கோம். துங்குறார். எழுந்ததும் பார்க்கலாம்."

"டாக்டர்! அவனால... நடக்க முடியுமா?"

"அவருக்குக் கால்ல எந்த அடியும் படல. நல்லா நடக்குறார்."

"தேங்க் காட்!"

"நீங்கதான் ரொம்ப கேர்ஃபுல்லா இருக்கணும். காலை அசைக்கக்கூடாது. எலும்புகள் ஜாயிண்ட்டானாத்தான் உங்களால காலை ஊன்ற முடியும். ஸோ... பி கேர்ஃபுல்." - என்றவாறு டாக்டர் வெளியேற, பெருமூச்சோடு படுக்கையில் சரிந்தான் ராஜகுமாரன்.

தன்னையும் மீறி கண்கள் கசிந்தது. உடல் முழுக்க வலி தெரிந்தது. தலையில் போடப்பட்டிருந்த கட்டு விண்ணென்று தெறித்தது. கால்கள் இருந்த இடம் சுத்தமாய் மரத்துப் போயிருந்தது.

இனி இந்தக் கால்கள் தன் பணியைச் செய்யுமா? என்னால் நடமாட முடியுமா? கடைசி வரை படுக்கையிலேயே இருந்து விடுவேனோ? நினைப்பே பயமுறுத்தியது. கண்களில் நீர் நிறைந்து தலையணையை நனைத்தது.

யசோதா பதறிப் போய் மகனின் விழி நீரைத் துடைத்தாள்.



"ராஜா! ஏம்ப்பா கண் கலங்குற?"

"அம்மா! நான்... என் கால்... இனிமே..."

"வேண்டாம்யா. இப்படியெல்லாம் நினைக்காதே. டாக்டர் எதுக்கும் பயப்பட வேண்டாம்னு சொல்லியிருக்கார். அமைதியாப் படுய்யா."

"யசோதா!" - மெல்லிய குரலில் அழைத்தவாறே காசிநாதன் உள்ளே வந்தார். கணவனைக் கண்டதும் எழுந்தாள்.

"என்னங்க! புள்ளை கண் விழிச்சிட்டான்."

"ராஜா! வலி எதுவும் இருக்காப்பா?" - மகனிடம் குனிந்து பரிவாய்க் கேட்டார்.

"அப்பா!"

"என்னப்பா?"

"நான்... நான் நடப்பேனா அப்பா?"

"இது என்னய்யா கேள்வி? இப்பத்தான் ஸ்கேன் ரிப்போர்ட் எல்லாம் வாங்கிட்டு வந்தேன். டாக்டர்கிட்ட கூட காட்டிட்டேன். பயப்பட எதுவும் இல்ல. சீக்கிரமே சரியாகிடும்னு சொன்னார்."

"அப்பா!"

"தைரியமா இருய்யா. இது சாதாரண விபத்துதான். கொஞ்ச நாள் ரெஸ்ட் எடுத்தாப் போதும். அப்புறம்..."

"அப்பா! நான் வசந்தைப் பார்க்கணும்."

"வசந்த்தை டாக்டர் செக் பண்ணிட்டு இருக்கார். டாக்டர் போனதும் அவனே வந்து பார்க்கிறேன்னு சொன்னான்."

"பேசினானாப்பா? நல்லா இருக்கானா?"

"நல்லா இருக்காம்ப்பா."

"அத்தை... அத்தை மாமா வந்தாங்களா?"

"அவன் கூடத்தான் இருக்காங்க."

"அத்தைக்கு எம் மேல ரொம்ப கோபமிருக்கும். இல்லப்பா...?"

"உம் மேல கோபப்பட என்ன இருக்கு ராஜா? நான்தானே உன்னை செங்கல்பட்டுக்கு கூட்டிட்டுப் போனேன்!" - வசந்தின் குரல் கேட்டு சிரமமாய் எழ முயன்றான்.

"ஏய்! எழுந்துக்காதே. படு... படு..." - என்றவாறே தாயின் உதவியோடு வந்தவனைக் கண்டு மீண்டும் கண்கலங்கினான் ராஜகுமாரன்.

வசந்த்தின் இடக்கரம் கழுத்தோடு சேர்த்துக் கட்டியிருந்த கட்டுத் துணியில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. முகத்தில் ஆங்காங்கே சிறு காயங்கள். தலையில் சற்றுப் பெரிய கட்டு. நண்பனின் கண்ணீரை புன்னகையோடு துடைத்தான் வசந்த்.

"என்ன ராஜா இது? சின்னக் குழந்தையாட்டம்..."

"ஸாரி மச்சான்... வெரி ஸாரி!"



"நீ ஏன்டா ஸாரி கேட்குற?"

"என்னாலதானே உனக்கு இப்படி..."

"ராஜா! தப்பு எம் மேலதான். பேசாம வேலைக்குக் கிளம்பிட்டு இருந்த உன்னை என்னை செங்கல்பட்டு வரைக்கும் ட்ராப் பண்ணிடுன்னு கூட்டிட்டுப் போனது தப்பு. அதோட டயமாகிப் போச்சுன்னு ஓவர் ஸ்பீடுல போகச் சொன்னது பெரிய தப்பு. என்னாலதான் உனக்கு இப்படி ஆயிடுச்சு. மன்னிச்சுடுடா!" - என்ற வசந்த்தை குழப்பமாய்ப் பார்த்தான் ராஜகுமாரன்.

நண்பனின் நிலையறிந்து பெற்றவர்கள் அறியா வண்ணம் கண் அசைத்தான் வசந்த். ராஜகுமாரனுக்குப் புரிந்து போனது. என் மீது யாரும் பழி போட்டுவிடக் கூடாது என்பதற்காக பழியைத் தன் தலைமீது போட்டுக் கொண்டான் என்பது புரிய மனம் உருகிப் போனது.

தன் வலக்கரத்தை மெல்ல நீட்டி வசந்த்தின் கரத்தைப் பற்றிக் கொண்டான். அந்தப் பற்றுதலில் இருந்த தவிப்பை உணர்ந்த வசந்த் படுக்கையில் அமர்ந்து ராஜகுமாரனை லேசாய் அணைத்துக் கொண்டான்.

ராஜகுமாரனின் விழிகள் கசிய வசந்த்தின் அன்னை பொருமினாள்.

"பாருடா! நீ செய்த காரியத்தால ராஜாவாட்டம் சுத்தித் திரிஞ்ச புள்ள இப்படிப் படுக்கையில கிடந்து கண்ணீர் விட வெச்சிட்டியே!"

"அத்தை! அவனை ஒண்ணும் சொல்லாதீங்க!"

"நீ சும்மா இரு ராஜா! இவனுக்கு செங்கல்பட்டுல என்ன வேலை? அப்படியே போனாலும் ஏன் அவ்வளவு அவசரம்? இப்பப்பாரு... இவன் அவசரம் எத்தனை பேரை அழவெச்சிருக்குன்னு..."

"சரி விடு சாந்தா. அவன் என்ன வேணும்னா பண்ணினான்? இப்படியெல்லாம் நடக்கணும்னு இருந்திருக்கு!" - காசிநாதன் தன் தங்கையை சமாதானம் செய்தார்.

"மனசு கேட்கலண்ணா... அடுத்த மாசம் கல்யாணத்தை வெச்சுக்கிட்டு இப்படி அடிபட்டுட்டுப் படுத்திருக்கானே... நான் என்ன பண்ணுவேன்? ஒரு வேளை அடி பலமாப் பட்டிருந்தா...?"

"அம்மா! அதான் பொழைச்சிட்டோமில்ல! பிறகென்ன... சும்மா சொன்னதையே சொல்லிட்டு இருக்கீங்க?" - சிடுசிடுத்தான் வசந்த்.

"பார்த்தியாண்ணா? செய்யுறதையும் செய்திட்டு நம்மகிட்ட கோபப்படுறதை!"

"விடு சாந்தா... அவனுங்களே மனசு நொந்து போயிருக்காங்க. நாமளும் இதைப்பத்தியே பேசினா கோபம் வரத்தானே செய்யும்!" - யசோதா சொல்ல, வசந்த் புன்னகைத்தான்.

"தேங்க்யூ அத்தை!"



"எதுக்குப்பா?"

"எங்களைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு. அப்படியே இன்னொரு சின்ன ஹெல்ப் பண்ணுங்க அத்தை."

"என்னப்பா?"

"முதல்ல அம்மாவைக் கூட்டிட்டுப் போய் கேன்டீன்ல ஏதாவது சாப்பாடு வாங்கிக் கொடுங்க. நீங்களும் மாமாவும் சாப்பிட்டுட்டு வாங்க."

"உங்களை இப்படிப் பார்த்த பிறகு எங்களுக்கு எப்படிடா பசிக்கும்?"

"அம்மா! எங்களுக்கு ஒண்ணும் இல்லம்மா. சாதாரண காயம்தான்."

"எது? இது சாதாரண காயமா?"

"பக்கத்தில உள்ள ரூம்ல இருக்கிற பேஷண்டுக்கு தலையில அடிபட்டு கோமாவில இருக்கார். இன்னொரு பேஷண்ட் இரண்டு கால்களையும் இழந்திட்டு இருக்கார். அப்புறம்..."

"போதும்டா. இப்ப எதுக்கு இதையெல்லாம் சொல்ற?"

"இவங்ககூட கம்பேர் பண்ணும்போது எங்க காயம் சாதாரணமானதுதான்."

"ம்... இப்படியே பேசி தப்பிச்சிடு."

"அம்மா! நாங்கதான் தெம்பா இருக்கோமே. நீங்க பக்கத்தில நின்னு அழுதிட்டே இருந்தா எங்களுக்கு

கஷ்டமா இருக்கும்மா. நாங்க கொஞ்ச நேரம் ரிலாக்ஸ்டா பேசிட்டு இருக்கோம்."

"வசந்த்! ராஜாவை அதிகம் பேசக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காருப்பா."

"நான் பார்த்துக்கிறேன் அத்தே. நீங்க எல்லாரும் போய் சாப்பிட்டு வாங்க."

"வசந்த்! நாங்க..."

"யசோதா! அதான் சொல்றான்ல... வாங்க. போய் சாப்பிட்டுட்டு வரலாம்."

"என்னங்க சொல்றீங்க?"

"சின்னப் புள்ளைங்க மனசு வருத்தத்தில இருக்காங்க. ஏதாவது பேசிட்டு இருக்கட்டும். வா... வா சாந்தா."

"ராஜா! கைய காலை அசைக்காதே. நிறைய..."

"நான் பார்த்துக்கிறேன் அத்தே. நீங்க கிளம்புங்க!" - வசந்த் தைரியமாய் அவர்களை அனுப்பிவிட்டு நண்பனிடம் திரும்பினான். ராஜகுமாரன் கண்களை அயர்ச்சியாய் மூடிக்கொண்டான்.

"ராஜா!"

"ம்..."

"ரொம்ப வலிக்குதா?" - பரிவாய்க் கேட்டான் வசந்த்.

வேதனையோடு கண்களைத் திறந்தான்.



"காயத்தை விட மனசுதான் ரொம்ப வலிக்குது."

"ஏன்டா?"

"கல்யாண மாப்பிள்ளை நீ. என் அவசரத்துக்கு உன்னையும் கூட்டிட்டுப் போய் இப்படி முடமாக்கிட்டேனே!"

"வாயை மூடு. அதையெல்லாம் விடு. இப்ப நம்ம விஷயத்துக்கு வா. நாம அடிபட்டுக் கிடக்கிறதை உஷாவிற்கு தெரிவிக்க வேண்டாமா?"

"எ...ன்ன?" - அப்போதுதான் உஷாவின் நினைவு வர திகைப்பாய் நண்பனை ஏறிட்டான்.

"என்னடா இப்படிப் பார்க்கிற? சொல்லணுமில்ல?" - வசந்த் மீண்டும் கேட்க, ராஜகுமாரனின் பார்வை தன் கால்களுக்குச் சென்றது. விரக்தியாய் பெருமூச்சு விட்டான்.

இந்தக் கால்கள் இனி பழையபடி நடமாடுமா? அவள் பின்னே கம்பீரமாய் வலம் வந்த கால்களை அசைக்கக்கூட முடியாமல் கிடக்கிறதே. அதோடு உணர்வேயின்றி கிடந்த விதம் பயமுறுத்தியது. மருத்துவரின் பேச்சு கூட நெருடிக் கொண்டிருந்தது.

ஒரு வேளை... இறுதிவரை தன்னால் நடமாடவே முடியாது போய்விட்டால்? தன்னைக் கட்டிக்கொண்டு என்ன செய்வாள் உஷா? வேண்டாம்... இப்போதைக்கு எதுவும் தெரிய வேண்டாம். கால்கள் சரியானால் பார்த்துக் கொள்ளலாம்.

"என்னடா... எதுவுமே சொல்ல மாட்டேங்கிற?"

"வேண்டாம் வசந்த்."

"என்ன?"

"இந்த விஷயம் உஷாவிற்கு தெரிய வேண்டாம்."

"ஏன்டா? அந்தப் பொண்ணு உன்னை எதிர் பார்த்திட்டு இருப்பாளே! நாம இந்த விஷயத்தைச் சொன்னால்..."

"வேண்டாம்னு சொன்னால் விடு வசந்த்!"

"ராஜா! ஏன்டா?"

"ஒருசில விஷயங்கள் வெளியே தெரியாம இருக்கிறதுதான் நல்லது. நான் உஷாவோட நல்லதுக்குத்தான் சொல்றேன்."

"எதை நல்லது என்கிறாய்?"

"நீ போன் பண்ணாமல் இருப்பது நல்லது என்கிறேன். என் வார்த்தையை நீ மீறமாட்டாய் என்று நம்புகிறேன். இனி இதைப் பற்றி நாம பேச வேண்டாம் வசந்த்." - மரத்த குரலில் சொல்லிவிட்டு வேதனையாய் கண்களை மூடிக்கொண்டான் ராஜகுமாரன்.

## 15

நீ வருவாய் என
நான் இருந்தேன் ஏன்
மறந்தாய் என
நானறியேன்!



**"வ**ணக்கம்!" - கணீரென ஒலித்த குரலில் எழுதிக் கொண்டிருந்த கணக்கினை நிறுத்திவிட்டு நிமிர்ந்தார் ராமச்சந்திரன். நரைத்த முறுக்கு மீசையோடு நின்றிருந்த மனிதரைக் கண்டதும் சட்டென அடையாளம் கண்டு கொண்டவராய் எழுந்து வரவேற்றார்.

"அடடே! வாங்க ரத்னவேல். வாங்க, உட்காருங்க."

"ரொம்ப நன்றி ராமச்சந்திரன். நான் உங்ககிட்ட இதை எதிர்பார்க்கல."

"ஏன் ஸார்? முதல்ல உட்காருங்க. ராசு! டீ சொல்லுப்பா."

"இருக்கட்டும். நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்."

"மன்னிப்பா? எங்கிட்டயா?" - ராமச்சந்திரன் வியப்பாய்க் கேட்க, மௌனமாய் தலையசைத்தார் ரத்னவேல். இருக்கையில் அமர்ந்து கொண்டே பெருமூச்சு விட்டார்.

"ஆமா ராமச்சந்திரன். நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசலாம்னு வந்தேன். நீங்க எப்போ ஃப்ரீயா இருப்பீங்க?"

"ஒரு நிமிஷம் ஸார்... தயா!"

"ஸார்..." - டை கட்டிய இளைஞன் பணிவாய் வந்து நின்றான்.

"கஸ்டமர்க்கு பில்லைப் பார்த்து செக் பண்ணிக் கொடு. நாங்க ஒரு பத்து நிமிஷம் பேசிட்டு வர்றோம்."

"ஓ.கே. ஸார்!"

"வாங்க ரத்னவேல். அப்படி உட்கார்ந்து பேசுவோம்!" - என்றவாறே தன் அறைக்குள் அழைத்துச் சென்றார். கண்ணாடியால் வேயப்பட்ட அறைக்குள் பதிக்கப்பட்டிருந்த கணினியில் ஒவ்வொரு தளத்திலும் நடைபெற்றுக் கொண்டிருந்த வியாபாரங்களும் கூட்டங்களும் கேமிராவின் உதவியோடு தெரிய, அவற்றை நிதானமாய் பார்த்துக் கொண்டே, ராமச்சந்திரன் காட்டிய இருக்கையில் அமர்ந்தார் ரத்னவேல்.

"வியாபாரமெல்லாம் அமோகமா இருக்குது போல..."

"ஆமா ஸார். இந்த மாசம் முழுக்க முகூர்த்தம் இருக்கு. அதனால நல்ல வியாபாரம்."

"சந்தோஷம்!"

"சொல்லுங்க ஸார். என்ன விஷயமா இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க?" - ராமச்சந்திரன் கேட்டதும் தயங்கினார் ரத்னவேல்.

"ராமச்சந்திரன்! முதல்ல நீங்க என்னை மன்னிக்கணும்."

"எதுக்குங்க?"

"வந்து... எனக்கு நேற்றுதான் விஷயமே தெரியும். என் மனைவிதான் சொன்னாள்."

"எனக்கு... எதுவுமே புரியல."

"ராமச்சந்திரன்! அன்னிக்கு எங்க வீட்டுக்கு வந்து கல்யாணப் பேச்சை நிறுத்திடலாம். என் பொண்ணுக்கு



இப்பக் கல்யாணம் பண்ற எண்ணம் இல்லன்னு சொன்னீங்களே!"

ராமச்சந்திரனின் முகம் லேசாய் மாறியது.

"ஆ...மா..."

"அதுக்கு காரணம் எம்புள்ளன்னு எனக்கு இப்பத்தான் தெரிஞ்சது. உண்மை எதுவும் தெரியாம நான் உங்ககிட்ட கோவிச்சிக்கிட்டேனே. என்னை மன்னிச்சிடுங்க ராமச்சந்திரன்!" என்றவாறே கைகளைக் கூப்பினார் ரத்னவேல்.

"ஐயோ! என்ன ஸார் இது? நீங்க போய் என்கிட்ட மன்னிப்பு கேட்டுகிட்டு..."

"இல்ல ஸார். நான் உங்களை தப்பா நினைச்சிட்டேன். எங்களை விட வசதியான மாப்பிள்ளை கிடைச்சதும்தான் எங்க புள்ளைய வேண்டாம்னு சொல்லிட்டீங்கன்னு அன்னைக்கு எம் மனைவி நிறைய திட்டினாளே.

"அப்பக்கூட நீங்க இதைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லலையே. எதுவுமே பேசாம அமைதியா இருந்து எம் புள்ளைய காட்டிக் கொடுக்கலையே. இந்த பெருந்தன்மை யாருக்கு வரும்?"

"விடுங்க ஸார். கல்யாணம் பண்ணிட்டு வாழப் போறது அவங்க. அவங்களுக்கு விருப்பம் இல்லாத விஷயத்தை நாம திணிக்கக்கூடாது இல்லையா? அதான்..."

"இந்த சீனுப்பய இதை எங்கிட்ட சொல்லியிருக்கலாம். அதை விட்டுட்டு அந்தப் பொண்ணுகிட்ட போய்ப் பேசி... உங்களை எவ்வளவு தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளிட்டான். அந்தப் பொண்ணு மனசு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கும்?"

"சரி... விடுங்க ஸார். போனதைப் பத்தி ஏன் பேசணும்?"

"எனக்கு நேத்துதான் விஷயம் தெரியும். தெரிஞ்சதுல இருந்தே உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும்னு தோணிச்சு. அதான் வந்தேன்."

"இதுல உங்க தப்பு எதுவும் இல்லையே ஸார்!"

"தப்பு இருக்கு. எம் மகன்கிட்ட சம்மதம் கேட்டுட்டு நான் கல்யாணப் பேச்சைத் துவங்கியிருக்கணும். ம்ப்ச்! என் கணிப்பு தப்பாப் போச்சு."

"சார்! டீ." - கடைப் பையன் டீயோடு வந்தான்.

"கொண்டு வாப்பா! ரத்னவேல் ஸார்... டீ சாப்பிடுங்க."

"நன்றி!" - வாங்கிக் கொண்டார்.

"இப்ப எப்படி ஸார் இந்த விஷயம் தெரிஞ்சது? உங்க மகனே சொல்லிட்டாரா?"

"இல்ல ராமச்சந்திரன். அந்தப் பயலுக்கு இன்னும் அந்தத் துணிச்சல் வரல்ல. நான் விசாரிச்சதுக்கு கோபப்பட்டுட்டு வீட்டை விட்டுப் போயிட்டான். இன்னும் வீட்டுக்கு வரல."



"ஓ! நீங்க ரொம்ப கோபப்பட்டீங்களோ?"

"கோபப்படாம எப்படி இருக்க முடியும்? அவன் செய்தது சாதாரண காரியமா? அவனை அடிச்சே விரட்டியிருக்கணும்."

"கோபப்படாதீங்க ஸார்."

"மனசுக்குக் கஷ்டமா இருக்கு ராமச்சந்திரன். நேற்று உறவுக்காரங்க வீட்டு நிச்சயதார்த்தத்திற்கு எம் மனைவி போயிருந்தா. அங்கே உங்க பொண்ணுங்களையும் பார்த்திருக்கிறாள்..."

"எ...ன்...ன...?"

"கொஞ்சம் பிரச்சனை ஆயிடுச்சி போலிருக்கு. அப்பத்தான் இந்த உண்மை தெரிஞ்சிருக்கு." - தயக்கமாய் அவர் சொல்லிக்கொண்டு போக, ராமச்சந்திரனுக்கு சுருக்கென்றது.

முந்தைய தினம் தோழி வீட்டு விசேஷத்திற்குப் போனவர்கள் சீக்கிரமே வீடு திரும்பியதும், தான் வீட்டிற்குப் போவதற்குள் இரு மகள்களும் தூங்கி விட்டதும் நினைவில் நெருடியது.

"ரத்னவேல் ஸார்! பிரச்சனை என்றால்...?"

"பிரச்சனை ஒண்ணும் பெரிசில்லை. ஆனா விபரம் புரியாமல் எம் மனைவி கொஞ்சம் கோபமாய் பேசி விட்டாள் போலிருக்கிறது. ரொம்ப வருத்தப்பட்டாள். உங்கள் பெண் எதுவும் சொல்லவில்லையா?"

"இல்லை...!" - வெறுமையாய் தலையாட்டினார்.

"ராமச்சந்திரன்! உங்களைப் போலவே உங்கள் பெண்களுக்கும் தங்கமான குணம். பெரியவர்களுக்குள் ஏன் வீண் பிரச்சனை உண்டாக்க வேண்டும் என்று நினைத்திருக்கலாம். எத்தனை தங்கமான குணம் பாருங்கள்." - ரத்னவேலின் மெய்யான பாராட்டில் உச்சி குளிர்ந்து போனார் ராமச்சந்திரன்.

"ஆமாம்! என் குழந்தைகள் சுத்தத் தங்கம்தான்."

"ராமச்சந்திரன்! அந்தத் தங்கத்தை உங்ககிட்ட மீண்டும் கேட்டு வந்திருக்கேன். தருவீர்களா?" - ரத்னவேலுவின் கேள்வியில் தன் புன்னகையைத் தொலைத்தார் ராமச்சந்திரன்.

"என்ன? என்ன கேட்டீங்க?"

"ராமச்சந்திரன்! என் மூத்த மகன்தான் என் சொல்லை மதிக்காமல் போயிட்டான். என் இளைய பிள்ளை உங்கள் பெண்களைப் போல் பத்தரை மாற்றுத் தங்கம். நான் சொல்லும் வார்த்தையை இதுவரை தட்டியதில்லை."

"அது..."

"பொறுங்கள் ராமச்சந்திரன். உங்களைப் போல் ஒரு அருமையான சம்மந்தம் கிடைப்பது அரிது. உங்க சம்பந்தத்தை எனக்கோ என் மனைவிக்கோ விடுவதற்கு மனசில்லை. அதனாலதான் இந்த முடிவை எடுத்தோம்.



"என் இளைய மகன் பாலாஜி சிவில் என்ஜினியரா இருக்கான் கை நிறைய சம்பாதிக்கிறான். அவன் சம்பாத்தியத்தில அடையார்ல ஒரு வீடு கூட வாங்கிட்டான். கல்யாணமானதும் அவன் அங்கேயே குடி போயிடலாம்."

"இதை...யெல்லாம் ஏன் எங்கிட்ட சொல்றீங்க?"

"அதான் சொன்னேனே... உங்க சம்மந்தத்தை விடமுடியலன்னு. உங்க பொண்ணைப் பார்த்ததில இருந்து எம் மனைவி ரொம்ப வருத்தப்பட்டாள். அருமையான பொண்ணை இவனால இழந்திட்டோமேன்னு புலம்பினாள். சும்மா சொல்லக்கூடாது ராமச்சந்திரன். என் மூத்த மகனை விட இளைய மகன் அழகன். உத்தமமான புள்ள. அதி புத்திசாலியும் கூட.

"எதுக்கும் நீங்க ஒருமுறை பாருங்க. உங்களுக்குப் பிடிச்சிருந்தா மேற்கொண்டு பேசலாம்!" - என்றவாறே சட்டைப் பையினுள் கைவிட்டு போஸ்ட் கார்டு சைஸில் இருந்த போட்டோவை எடுத்து மேசை மீது வைத்தார் ரத்னவேல்.

ராமச்சந்திரன் அதை ஏறிட்டும் பார்க்கவில்லை. தயக்கமாய் புன்னகைத்தார்.

"ஸார்! மன்னிக்கணும்."

"ஏன் ராமச்சந்திரன்?"

"இல்ல... இந்தக் கல்யாணம் நின்னு போனதில எம் பொண்ணு ரொம்ப மனசொடிஞ்சி போயிட்டா. அவ திருப்திக்காக இப்பக் கொஞ்ச நாளா நம்ம கடைப்

பொறுப்பைப் பார்த்திட்டு இருக்கா. இந்த சமயத்தில போய் திரும்பவும் எப்படி...?"

"என்ன? உங்க பொண்ணு... இப்போ... இந்தக் கடையிலயா இருக்கா?"

"ஆமா!"

"ராமச்சந்திரன்... நான் பார்க்கணுமே!"

"இதோ... இவதான்." - தன் முன் இருந்த கணினித் திரையைக் காட்டினார். பட்டுப்புடவை வரிசையின் முன் நின்று புன்னகை முகமாய் வாடிக்கையாளர்களிடம் பேசிக் கொண்டிருந்த உஷாவைப் பார்த்து நிறைவாய் புன்னகைத்தார்.

"பொண்ணு மகாலஷ்மியாட்டம் இருக்காளே. எங்க பாலாவுக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பாள்."

"ரத்னவேல் ஸார். நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாது. நான் எம் பொண்ணோட சம்மதம் இல்லாம எந்த வரனும் பார்க்கிறதா இல்ல."

"நீங்க சொல்றதுல எந்தத் தப்பும் இல்ல ராமச்சந்திரன். நான் என் விருப்பத்தைச் சொன்னேன். நீங்க உங்க வீட்ல பேசுங்க. பொண்ணுகிட்டயும் சொல்லுங்க. எல்லாருமா பேசி நிதானமா முடிவு பண்ணுங்க.

"உங்க முடிவு எதுவா இருந்தாலும் நான் சந்தோஷமா ஏத்துப்பேன். ஆனா நடந்தது எதையும் மனசில வெச்சுக்



காதீங்க. எனக்கு மூணும் பையனுங்கதான். என் வீட்டுக்கு வர்ற மருமகளை எங்க பொண்ணாய் பார்த்துப்போம். எங்களை நம்பி பொண்ணு தரலாம்."

"உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா ஸார்!"

"மூத்தவன் செய்த தப்புக்கு நான் மன்னிப்பு கேட்டுக்கிறேன். அதை மனசில வெச்சிகிட்டு..."

"பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்க ஸார். புள்ள செய்த தப்புக்கு நீங்க என்ன பண்ணுவீங்க? நான் வீட்ல பேசுறேன். அவங்களுக்கு விருப்பம்னா நானே உங்க வீட்ல வந்து பேசுறேன்."

"ரொம்ப நன்றி ராமச்சந்திரன். அப்ப நான் வரட்டுமா?"

"வாங்க!" - எழுந்து நின்று கைகூப்பினார். இருவரும் கைகூப்பி விடைபெற்று, ரத்னவேல் வெளியே செல்ல, எதிரே வந்தாள் உஷா.

தந்தையின் அறையை நோக்கிச் சென்றவளை அருகே பார்த்ததில் புன்னகைத்தார் ரத்னவேல். இவதான் என் மருமகள் என்ற முடிவுடன் வெளியேறிச் சென்றார்.

"அப்பா...!" - என்றவாறே அறைக்குள் நுழைந்த மகளைக் கண்டதும் டேபிளின் மீதிருந்த புகைப்படத்தை எடுக்க முனைந்த ராமச்சந்திரன் அதை கணக்கு நோட்டின் அடியில் பதுக்கிவிட்டு எழுந்தார்.

"என்னம்மா?"

"மணி ரெண்டாகுதேப்பா... சாப்பிடலாமா?"

"ம்... சாப்பிடலாம்மா. நீ போய் கார்ல உட்கார். நான் இதோ வந்திடுறேன்."

"அப்பா! என்ன மறந்திட்டீங்களா? அம்மா சாப்பாடு கொடுத்தனுப்பிட்டாங்க."

"ஓ! தந்திட்டாளா? சரி! நீ கைகால் அலம்பிட்டு உட்காரும்மா. நான் வந்திடுறேன்."

"சரிப்பா! சீக்கரம் வாங்க." - உஷா வெளியேற, ராமச்சந்திரன் கைகள் தானாய் அந்தப் புகைப்படத்தை எடுத்தது. வெகு சாதாரணமாய் அதில் பார்வையைப் பதித்தவரது பார்வை வியந்தது.

சீனிவாசனைப் பார்த்திருந்தவர் அவனது தம்பியும் அவனைப் போல்தான் இருப்பான் என்று எதிர்பார்த்தவர் புகைப்படத்தில் இருந்த இளைஞனைப் பார்த்துப் பிரமித்துப் போனார்.

நல்ல பொன் நிறத்தில் கருகரு கேசத்துடன் புன்னகை சிந்திய முகம், கண்களில் அசாத்திய ஒளியுடன் நேர் பார்வையோடு நின்ற அந்த இளைஞனை வெகுவாய் பிடித்துப் போனது.

'என் இளைய மகன் அழகன். உத்தமமான புள்ள. அதிபுத்திசாலி. கைநிறைய சம்பாதிக்கிறான். என் வார்த்தையைத் தட்டமாட்டான்!' - ரத்னவேலுவின் குரல் எதிரொலித்தது.



கையிலிருந்த புகைப்படத்தை ரசனையாய் பார்த்தார். தன் பெண்ணிற்கு இந்தப் பையன் வெகு பொருத்தமாய் இருப்பானே! படித்தவன். உத்தியோகத்தில் இருக்கிறான். கண்ணுக்கும் நிறைவாய் இருக்கிறான்.

இப்படி ஒரு வரன் கிடைப்பது அபூர்வம். அதுவும் தானாய் தேடி வந்த இடம். இதையே பேசி முடித்து விட்டால் என்ன? ஒரு முடிவுடன் புகைப்படத்தை எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டார். இது எதையும் அறியாத உஷா தந்தைக்காகக் காத்திருக்கத் துவங்கினாள்.

## 16

பெண் மனதில் ஏற்றி வைத்த
தீபம் அல்லவா - ஒளி
பிறக்கும் முன்னே அணைத்தல்
பாவம் அல்லவா - கண்ணும்
கண்ணும் பேசியது உன்னால் அன்றோ!

மாலையில் சீக்கிரமாகவே வந்து நின்றாள் உமா. கடையில் நின்ற கூட்டத்தினரிடையே ஊர்ந்து சென்று நேராய் உஷாவின் முன்னே சென்று நின்றாள்.

"அக்கா! என்னாச்சு?" - இண்டர்காமில் பேசிக் கொண்டிருந்த உஷா நிமிர்ந்தாள். மூச்சு வாங்க நின்றிருந்த தங்கையைக் கண்டதும் தன் சோர்வை மறைத்துப் புன்னகைத்தாள்.

"என்னடி? இப்படி மூச்சு வாங்குது?"

"ம்ப்ச்! நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு. என்னாச்சு?"

"என்ன என்னாச்சு?"

"விளையாடாதே அக்கா! மாப்பிள்..."

"ஷ்...! ஒரு நிமிஷம் இரு!" - என்றவள், ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

"முதலில் உட்காரு. ஏன் இப்படி ஓடிவந்திருக்க?"

"அக்கா! உன் போன் எப்ப வரும்னு எதிர்பார்த்திட்டே இருந்திட்டு இப்ப ஏமாந்து வந்திருக்கேன். என்னதான் ஆச்சு?"

"எதுவும் ஆகல!"

"அப்படின்னா...?"

"இதுவரைக்கும் வீட்ல இருந்து போன் எதுவும் வரல..." சொல்லும்போதே உஷாவின் குரலில் ஏமாற்றம் இழையோடியது.

"அவர் வரலையா?"

"ம்ப்ச்..."

"ஏன் வரலை?"

"என்னைக் கேட்டா... எனக்கு என்னடி தெரியும்?"

"அக்கா! உனக்கு ஏமாற்றமே இல்லையா?" - என்றவாறே தமக்கையின் முகத்தை ஆராய்ந்தாள். உள்ளே எழுந்த ஏமாற்றத்தை மறைத்து லேசாய்ப் புன்னகைத்தாள்.



"நான் எதையும் எதிர்பார்க்கல... அதனால ஏமாற்றமும் இல்ல..."

"பொய் சொல்லாதே!"

"இல்ல உமா."

"பொய் சொல்றக்கா. நேற்று உன் முகம் எப்படி இருந்தது தெரியுமா? அப்படியே புதுசா பூத்த ரோஸ் மாதிரி பளிச்சின்னு பிரெஷ்ஷா இருந்தது. இன்னிக்கு...?"

"உமா! நீ வீட்டுக்குப் போ... பசிக்குமே!"

"பசியா? நான் எவ்வளவு டென்ஷனா இருக்கேன் தெரியுமா? அந்த ஆள் ஏன் வரல்ல? ஒருவேளை சும்மா டைம் பாஸுக்காக வந்து பேசிட்டுப் போனானா?"

"சேச்சே! அப்படி இருக்காது."

"பின்னே ஏன் வரல?"

"கல்யாண விஷயம் இல்லையா? நாள் நட்சத்திரம் எல்லாம் பார்ப்பாங்களே! இன்னிக்கு நாள் நல்லா இல்லையோ என்னவோ?" - தனக்கும் சேர்த்தே சமாதானம் செய்தவளைக் குழப்பமாய்ப் பார்த்தாள் உமா.

"அப்படியும் இருக்குமோ?"

"அப்படித்தான் இருக்கும்."

"அப்போ நாளைக்கு வருவாரா?"

"தெரியலையே!"

"ஏங்க்கா! அந்த ஆளோட போன் நம்பர், அட்ரஸ் எதுவும் தந்தாரா?"

"இல்லையே!"

"என்னக்கா நீ? இதெல்லாம் கேட்க மாட்டியா நீ?"

"என்ன உமா நீ? இதையெல்லாம் நான் எப்படிக் கேட்கிறது?"

"கேட்கணும். இப்ப எப்படி அவரை காண்டாக்ட் பண்றது? போன் நம்பர் இருந்தா போனாவது பண்ணியிருக்கலாம்."

"உமா! நீ ஏன் டென்ஷனாகிற? தேவைன்னா அவரே வரட்டும்."

"ஒரு வேளை... வரலன்னா?"

"வரலன்னா போகட்டும். நான் ஒண்ணும் யாரையும் எதிர்பார்க்கல. எனக்கு வேலையிருக்கு... நீ கிளம்பு!"

"வீட்ல போய் என்ன பண்றது? நீயும் வா போகலாம்!"

"எனக்கு வேலை இருக்கு உமா. நீ போய் காபி டிபனை முடி. நான் ஒரு ஏழு மணிக்கெல்லாம் வந்திடுறேன்."

"ம்ஹும்... தனியா வீட்ல இருந்தா எனக்குத் தலையே வெடிச்சிடும். நீ சீக்கிரமா வேலையை முடிச்சுட்டு வா. நான் அப்பா ரூம்ல வெயிட் பண்றேன்."

"ம்..." - மௌனமாய் தலையாட்டி அவளை அனுப்பி விட்ட பிறகும் உஷாவிற்கு வேலை ஓடவில்லை. அவன் எதற்காக வரவில்லை. அத்தனை உறுதியாய்ச்



சொல்லிவிட்டுச் சென்றானே! எல்லாமே விளையாட்டா? உமா சொன்னது போல் பொழுதுபோக்கா?

பொழுது போவதற்காகவா என்னையே சுற்றி வந்தான். இல்லை... அவனது பேச்சில் போலித்தனம் இல்லை. கள்ளம் இல்லை. அவன் என்னை விரும்பியது உண்மை. பெண் கேட்டு வருவதாகச் சொன்னது உண்மை.

பிறகேன் வரவில்லை? ஐயோ! அவன் யாரென்று கூடத் தெரியாமல் விளக்கில் விழும் விட்டில் பூச்சியாய் அவன் பேச்சில் மதிமயங்கிப் போனேனே! ஒருவேளை... அவன் வரவேயில்லையென்றால்... தன் நிலை?

இத்தனை காலம் கட்டுப்பாடாய் இருந்தும் கடைசியில் ஊர் பெயர் தெரியாத எவனிடமோ மனதை இழந்துவிட்டோமே! எப்போதும் அவன் நினைவுதானே அலைக்கழிக்கிறது!

ஒவ்வொரு முறை தொலைபேசி அழைக்கும் போதும் மனம் அவனைத்தானே எதிர்பார்க்கிறது! இது தவறு உஷா. போகிற போக்கில் வந்து பேசுபவனது வார்த்தையைக் கேட்டது தவறு. அதை உண்மையென்று நம்பியது தவறு. எல்லாம் என் தவறு! - நெற்றியை இறுகப் பற்றிக் கொண்டாள் உஷா.

"உஷாம்மா!" தந்தையின் குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

"அப்பா!"

"என்னம்மா! தலை வலிக்குதா?"

"இல்லப்பா... சும்மாதான்!"

"வீட்டுக்குப் போலாமாம்மா?"

"இப்பவா? மணி ஆறுகூட ஆகலையேப்பா?"

"சின்ன புள்ளையும் நீ வந்தாத்தான் வீட்டுக்குப் போவேன்னு அடம் புடிக்குது. நீயும் ரொம்ப சேர்ந்து தெரியுறியேம்மா! "

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லப்பா!"

"சரி! மிச்ச வேலையை வரதன் பார்த்துப்பார். நீ வா. உங்க ரெண்டு பேரையும் வீட்ல விட்டுடறேன்."

"சரிப்பா!" - என்றவாறு தனது கைப்பையை எடுத்துக்கொண்டு தந்தையின் பின்னே புறப்பட்டாள். அவள் வெளியேறிய சில நொடிகளில் தொலைபேசி அழைத்தது. கடை ஊழியர் போனை எடுத்தார்.

"ஹலோ! தனலஷ்மி பட்டு சென்டர்."

"ஹலோ! அங்கே உஷா இருக்காங்களா?"

"யாரு?"

"உஷா! பட்டு செக்ஷன்ல நிற்பாங்களே...!"

"ஓ! முதலாளியம்மாவா? அவங்க இப்பத்தான் வீட்டுக்குப் போனாங்க!"

"போயிட்டாங்களா? ஓ! காட்!"

"நீங்க யாருங்க?"

"அவங்களோட உறவுக்காரங்க. கொஞ்சம் அவசரமாப் பேசணும். அவங்ககிட்ட செல் இருக்கா?"



"அதெல்லாம் தெரியாது ஸார்."

"ஸாரி! அவங்க வீட்ல போன் இருக்கா? அந்த நம்பர் சொல்ல முடியுமா?"

"ஹலோ! யார் ஸார் நீங்க?" - ஊழியரின் குரல் உயர்ந்தது. மறுமுனையில் வசந்த் தடுமாறினான்.

"அதான்... சொன்னேனே... உறவுக்காரங்கன்னு..."

"உறவுக்காரங்களா இருந்தா ஏன் என்கிட்ட நம்பர் கேட்கிறீங்க? உங்களுக்குத் தெரியாதா?"

"ஸாரி! எனக்கு வீட்டு நம்பர் தெரியாது."

"எதுக்கும் கொஞ்ச நேரம் கழிச்சு போன் பண்ணுங்க. ஓனர் வந்திடுவாங்க. அவங்ககிட்டப் பேசிக்குங்க."

"ஹலோ! போனை வெச்சுடாதீங்க. நான் கொஞ்சம் அர்ஜெண்டாப் பேசணும். உஷாவோட..." - என்றவனின் கையிலிருந்த போனைப் பறித்தான் ராஜகுமாரன்.

படுக்கையில் சாய்ந்த நிலையில் தலையிலும் கை, கால்களில் பெரிய கட்டோடு இருந்த நண்பனைப் பொறுமையின்றிப் பார்த்தான் வசந்த். அவனது உடலிலும் ஆங்காங்கே காயங்கள், நெற்றியில் பெரிய பாண்டேஜ் கட்டு.

"ராஜா! ஏன்டா போனைப் பிடுங்கின? கொண்டா...!"

"எதுக்கு?"

"நமக்கு அடிபட்டு ஹாஸ்பிடல்ல இருக்கிறதை உஷாகிட்டச் சொல்ல வேண்டாமா?"

"வேண்டாம்!"

"என்ன?"

"வேண்டாம்னு சொன்னேன்."

"ஏன்டா! அவ உன்னை எதிர்பார்த்திட்டு இருப்பாளே! இப்ப நாம நம்ம நிலையைச் சொல்லிட்டா..."

"தேவையில்லை!" - அழுத்தமாய்ச் சொன்னவனைக் கோபமாய்ப் பார்த்தான் வசந்த்.

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?"

"வசந்த்! நான்தான் நேற்றே தெளிவாச் சொன்னேனே!"

"ராஜா! கொஞ்சம் உஷாவைப் பத்தியும் யோசிச்சுப் பாருடா. பெரிய ஹீரோ மாதிரி நாளைக்கே அம்மா கிட்ட சொல்லிப் பெண் கேட்டு வர்றேன்னு சொல்லிட்டு வந்தியே... அவ எதிர்பார்த்திட்டு இருப்பாளே!"

"ம்ப்ச்! அதெல்லாம் எதிர்பார்க்க மாட்டாள்!" - அலட்சியமாய்ச் சொல்லியவாறே முகத்தைத் திருப்பிக் கொண்டவனைத் தன் புறமாய்த் திருப்பினான் வசந்த்.

"என்ன சொன்னாய்?"

"இப்ப நீ ஏன் கோபப்படுற?"

"நீ செய்த காரியத்திற்கெல்லாம் என்னையும் கூட்டுச் சேர்த்தியே! கோபம் வராதா? பாவம்டா அந்தப் பொண்ணு.



அது மனசில ஆசையை விதைச்சிட்டு இப்படி அலட்சியமாப் பேசினா எப்படி?"

"வசந்த்! நான் சொல்றதைக் கேளு. இப்போதைக்கு உஷாவிற்கு எதுவும் தெரிய வேண்டாம். முதல்ல நமக்கு குணமாகட்டும்."

"என்னடா பேசுற? நமக்கு குணமாக ஒரு மாசம் ரெண்டு மாசம்கூட ஆகலாம். அதுவரை அந்தப் பொண்ணு எப்படி தவிச்சுப் போவாள்? தினம் தினம் உன்னை எதிர்பார்த்து ஏமாந்து நிற்பாளே!"

"ஒரு நாள் இல்ல ரெண்டு நாள் எதிர்பார்ப்பாள். பிறகு விட்டுடுவா வசந்த்."

"ஸ்டுப்பிட் மாதிரிப் பேசாதே ராஜா. ஆக்ஸிடெண்ட் ஆனதில உனக்கு என்னவோ ஆயிடுச்சு!"

"வசந்த்!"

"பின்னே? சும்மா இருந்த பொண்ணைத் தேடித் தேடிப் போய்ப் பேசி அவ மனசைக் கலைச்சிட்டு, இப்ப ஒரு சின்ன விபத்து நடந்ததும் பயந்திட்டியோ?" - வசந்த் கோபமாகவே கேட்க, ராஜகுமாரன் திகைத்தான்.

"வசந்த்! நீ... நீ என்னைச் சந்தேகப்படுறியா?"

"ஆமா! என் நண்பன் பெரிய உத்தமன். ஒரு அருமையான பெண்ணைப் பார்த்து மனசு மயங்கிட்டான். அவகிட்டப் பேசுறதுக்கு நம்மால முடிஞ்ச ஹெல்ப் பண்ணலாம்னுதான் நீ கூப்பிட்டப்ப எல்லாம் உங்கூட

வந்தேன். இப்பத்தானே புரியுது. உனக்குப் பொழுது போக ஒரு அப்பாவிப் பொண்ணோட லைஃப்ல விளையாடியிருக்கேன்னு!"

"வசந்த்! மைன்ட் யுவர் வேர்ட்ஸ்."

"ஏன்? நான் பேசுறதுல என்ன தப்பு?"

"நோ வசந்த்! ஐ லவ் உஷா. உஷாவை என் உயிரைவிட மேலா நேசிக்கிறேன்!"

"ஹும்! இதை நான் நம்பணுமாக்கும்?" - அலட்சியமாய் முகத்தைத் திருப்பிக் கொள்ள, வேதனையாய் நண்பனைப் பார்த்தான் ராஜகுமாரன்.

"வசந்த்! நீ கூட என்னைப் புரிஞ்சுக்க மாட்டியா?"

"இதைவிட எப்படிப் புரிஞ்சுக்கணும்ற? ரெண்டே நாள் கூட வந்த எனக்கே அந்தப் பொண்ணு மேல இவ்வளவு அக்கறை இருக்கு. உனக்கு எப்ட்டிடா இல்லாமப் போச்சு?"

"இருக்கு வசந்த். உஷா மேலே உன்னைவிட எனக்கு அதிக அக்கறை இருக்கு. அதைவிட அதிகமான பிரியம் இருக்கு. ஆனா..."

"ஆனா என்னடா?"

"என் காலைப் பார்த்தியா வசந்த்?"

"ஏன்? காலுக்கு என்ன?"

"வசந்த்! என் கால்ல... எந்த உணர்வுமே இல்லடா!" - தொண்டை அடைக்கச் சொன்னவனை திகைப்பாய்ப் பார்த்தான் வசந்த்.



"எ...ன்...ன...?"

"ரெண்டு நாளா எனக்குக் கால் இருக்கிற உணர்வே இல்ல மச்சான். ஒருவேளை... என் கால் இனிமே செயல்படாதுன்னு நினைக்கிறேன்!" - என்றவனிடம் அவசரமாய் மறுத்தான் வசந்த்.

"நோ... நோ... அப்படியெல்லாம் எதுவும் ஆகாதுடா. ஆபரேஷன் பண்ணின வலி தெரியாம இருக்க ஊசி போட்டிருப்பாங்க. அதனாலதான் உனக்கு அப்படித் தோணுதுன்னு நினைக்கிறேன்."

"இதையே தான் டாக்டரும் சொன்னார். ஆனா எனக்கு நம்பிக்கை இல்லை!"

"ஏன்டா?"

"டாக்டர்ஸும் அம்மாவும் எங்கிட்ட எதையோ மறைக்கிறாங்கடா?"

"என்னடா சொல்ற?"

"செக்-அப் பண்ணும்போது கூட என் முன்னால எதையும் சொல்ல மாட்டேங்கிறார். என்னால காலைக் கூட அசைக்க முடியல."

"ராஜா! நீயா எதையாவது கற்பனை பண்ணிக்காதே! நான் டாக்டர்கிட்ட பேசுறேன்."

"ம்ப்ச்! எனக்கு நம்பிக்கை இல்லை!"

"நீ எப்படா கோழையா மாறின?"

"காலங்கள் எல்லாத்தையும் மாத்திடுதே!"

"நீ ரொம்பக் குழம்பிப் போயிருக்கே. சரி... நீ ரெஸ்ட் எடு. நாளைக்குப் பேசலாம்."

"வசந்த்! நீ இதை எதையும் உஷாவுக்குத் தெரியப்படுத்த வேண்டாம்."

"ராஜா! நான்..."

"நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோ. உஷாவை நான் விரும்பினது நிஜம். ஆனா அப்போ நான் இருந்த கோலம் வேறு. இப்ப என்னோட கோலம் வேறு!"

"அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்?"

"இருக்குடா! என்னால ஒரு வேளை நடக்கவே முடியலன்னா என்னை எந்தப் பொண்ணு ஏத்துப்பா?"

"அப்போ... உனக்கு உஷா மேல நம்பிக்கை இல்லையா?"

"நோ... எனக்கு எம்மேலயே நம்பிக்கை இல்லை!"

"ராஜா...!"

"ஒருவேளை எம் மேல பரிதாபப்பட்டு உஷா என்னை ஏத்துக்கிட்டாலும் என்னால அவளைக் கட்டிக்க முடியாது."

"ஏன்டா?"

"அவ அமோகமா வாழணும்டா. என்னைக் கல்யாணம் பண்ணிட்டு எனக்குச் சேவகம் பண்ணி அவ வாழ்க்கையை வீணாக்கணுமா? நோ! நான் இதை



ஒத்துக்கவே மாட்டேன்!" - உறுதியாய் மறுத்தான் ராஜகுமாரன்.

"ராஜா! இதெல்லாம் வீண் கவலைடா! நாளைக்கே உனக்கு பரிபூரணமா குணமாகிடலாம்!"

"அப்படி ஆகிட்டா அதுக்கப்புறமா நானே போய் உஷாகிட்ட எல்லாத்தையும் சொல்லி மன்னிப்புக் கேட்டுப்பேன்."

"அப்போ... அதுவரைக்கும்...!"

"அவளுக்கு எதுவும் தெரிய வேண்டாம்."

"ராஜா! இது தப்பு. நம்ம நிலைமை தெரியாம... அவளுக்கு வேற ஏதாவது வரன் வந்து அதை அவ ஏத்துக்கிட்டான்னா?" - வசந்த் தயக்கமாய்க் கேட்க, பெருமூச்சு விட்டான் ராஜகுமாரன்.

"அவளாவது சந்தோஷமா வாழட்டும்னு விட்டுட வேண்டியதுதான்!"

"ரா... ஜா..."

"என்னைப் பொறுத்த வரை உஷா சந்தோஷமா வாழணும். என்னால அது முடியலன்னா அவ யாரைக் கட்டிக்கிட்டாலும் எனக்கு சந்தோஷம்தான்!"

"உனக்கென்ன பெரிய இவன்னு நினைப்பா? நீ சொல்ற மாதிரி இன்னொருத்தனைக் கட்டிக்க அந்தப் பொண்ணு முழு மனசோட சம்மதிக்குமா?"

"அவ சம்மதிக்கணும்னுதான் உன்னை அவளுக்குப் போன் பண்ணாதேன்னு சொல்றேன்."

"என்ன உளர்ற?"

"வசந்த்! இப்ப நீ போன் பண்ணி நாம அடிபட்டுக் கிடக்கிற விஷயத்தைச் சொல்லிட்டா... உஷா மனசு பதறிப்போய் நம்மைப் பார்க்க ஓடி வரலாம்..."

"வந்தால் என்ன?"

"என்னை இந்த நிலையில பார்த்தால் நிச்சயமா வேறு ஒருத்தனைக் கட்டிக்கச் சம்மதிக்க மாட்டாள். என்னால அவ வாழ்க்கை கஷ்டப்படக்கூடாது."

"அதுக்கு?"

"இப்ப நாம போன் பண்ணலன்னு வையி. ஒரு ரெண்டு நாள் தேடுவாள். அப்புறம் நம்மகிட்ட இருந்து எந்த ரெஸ்பான்ஸும் இல்லன்னதும் தானாக நம்மை மறந்திடுவா. நம்ம மேல உள்ள கோபத்திலயாவது இன்னொரு வரன் வந்தால் சம்மதிச்சிடுவா!"

"அதெல்லாம் சரிடா. ஒரு வேளை... உனக்கும் குணமாகி அவளுக்கும் வேற இடத்தில கல்யாணமாகிட்டா...?" - வசந்தின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திண்டாடிப் போனான்.

"உன்னால முடியாது ராஜா. அந்தப் பொண்ணு மேலே நீ எவ்வளவு பைத்தியமா இருக்கன்னு எனக்குத் தெரியும். அதனாலதான் சொல்றேன்... இந்தச் சினிமா ஹீரோ மாதிரி வசனம் பேசிட்டு இருக்காதே.

நான் தகவலைத் தெரிவிக்கிறேன். அவளுக்கு எப்படி விருப்பமோ அப்படிச் செய்யட்டும். என்ன சொல்ற?"



"வேண்டாம் வசந்த்."

"திரும்பவும் ஏன்டா?"

"நான்தான் அவளை விரும்புறேன். அவ என்னை விரும்புறாளான்னே தெரியாது. அவ அப்பா சம்மதிச்சாத்தானே தனக்குச் சம்மதம்னு சொன்னாள்."

"ஆ... மா...!"

"இந்த மாதிரி நிலையில அவ அப்பா என்னை எப்படிடா மாப்பிள்ளையாக்கச் சம்மதிப்பார்?" ராஜகுமாரன் கேள்வியில் வசந்த் பேச்சற்றுப் போனான்.

## 17

வானத்து நிலவை தண்ணீரிலே
சிறை வைத்த கதைதான் - உன்
கதையே விழிகள் இருந்தும் உனைப்
பார்க்காமல் சுகம் ஏது?

**வா**னத்து நிலவு காற்றின் அசைவிற்கேற்ப மேகக் கூட்டத்தினூடே நகர்ந்து செல்ல, அதை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் உஷா. சில சமயம் வெளியில் வந்து பளீரென ஒளியைச் சிந்துவதும் மறுகணமே மேகத்தினுள் தன்னை மறைத்துக் கொள்வதுமாய் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தது நிலவு.

ஏனோ இந்த நிலவைப் பார்க்கையில் ராஜ குமாரனின் நினைவு தானாய் வந்தது. அவனும் இதே போல் தானே தன்னிடம் கண்ணாமூச்சி ஆடுகிறான்?

சும்மா இருந்தவளிடம் வந்து தேனாய்ப் பேசி கட்டினால் உன்னைத்தான் கட்டுவேன் என சபதம் செய்து, இதோ என் தாயிடம் சொல்லி உன்னைப் பெண் கேட்டு வருகிறேன் என்று சொல்லிச் சென்றானே!

அமைதியாய் இருந்த என் மனக்குளத்தில் ஆசை என்ற கல்லை எறிந்துவிட்டு இப்போது துன்பச் சலனத்தை உண்டாக்கிவிட்டு மறைந்து கொண்டானே! ஏன்? எதற்காக?

நான் இதற்கு முன்பாக ஒரு தரம்கூட அவனைச் சந்தித்ததில்லையே! அவன் மனம் நோகும்படி நடந்து கொண்டதில்லையே! பிறகேன் என்னை இப்படி அலைக்கழிக்கிறான்?

அவனாகத்தானே வந்தான்? பார்த்த கணம் முதல் விரும்புகிறேன் என்றானே! என்னைக் கட்டிக் கொள்ளச் சம்மதமா எனத் துணிச்சலாய்க் கேட்டானே! இப்போது அந்தத் துணிவு எங்கே போயிற்று?

ஒருவேளை அவனது விருப்பத்திற்கு அவன் வீட்டார் மறுப்புத் தெரிவித்திருக்கலாம். அதை என்னிடம் நேராய் வந்து சொல்லியிருக்கலாமே! ஏன் இப்படித் தன்னை மறைத்துக் கொண்டு என்னை அலைக்கழிக்கிறான்?

இன்றோடு ஒரு வாரம் ஓடிப் போய்விட்டது. இன்று வருவான் நாளை வருவான் என ஒவ்வொரு கணமும் அவனை நினைத்து ஏங்கி வழி மேல் விழி வைத்து... ஏமாற்றம்தானே மிஞ்சியது.



கண்களில் நீர் பொங்கிற்று. நெஞ்சம் விம்மியது. என்னதான் உமாவிடமும் தன்னைப் பெற்றவர்களிடமும் இயல்பாய் இருப்பது போல் காட்டிக் கொண்டாலும் மனம் தனிமையில் அழத்தானே செய்கிறது.

என்னை இப்படி அழ வைப்பது தான் அவனது திட்டமா? இதற்காகத்தான் தேடித் தேடி வந்தானா? இதற்காகத்தானே... இப்படி எதுவும் நிகழ்ந்து விடக்கூடாது என்றுதானே மனக்கதவை அழுத்தமாய்ப் பூட்டி வைத்திருந்தேன்.

இவன் எப்போது அந்தப் பூட்டை உடைத்தான்? எப்படி மனதிற்குள் நுழைந்தான்? இப்போது ஏன் என்னை தவிக்க விடுகிறான்? இதிலிருந்து எப்படி மீளப் போகிறேன்?

நினைக்கையில் நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருந்தது. தாள முடியாமல் விம்மினாள். கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

இந்தக் கண்ணீரோடு சேர்த்து அவன் நினைவுகளும் வெளியேறிவிடாதா? என்ற தவிப்பில் கண்ணீரோடு கரைந்து கொண்டிருந்தபோது கதவைத் திறக்கும் ஓசை கேட்டது.

அவசரமாய்க் கண்ணீரைத் துடைக்க, அறைக்குள் நுழைந்த உமா அப்படியே நின்றாள். ஜன்னலோரமாய் வெளியே வெறித்துக் கொண்டிருந்த உஷாவை நெருங்கினாள்.

"அக்கா!"

"ம்..." - திரும்பாமலேயே குரல் கொடுத்தாள்.

"என்னக்கா பண்ணிட்டு இருக்க?"

"சு...ம்...மா... நிலாவைப் பார்த்திட்டு இருக்கேன்."

"நிலாவைப் பார்த்தா எல்லாருக்கும் சந்தோஷமாகத்தானே இருக்கும்?"

"ம்... ஆமா! நானும்... சந்தோஷமாத்தான்...!"

"அக்கா! முதல்ல என்னைப் பார்த்துப் பேசு!" - என்றவாறே தமக்கையின் தோளைப் பற்றித் திருப்ப, கண்ணீரோடு திரும்பினாள் உஷா. உமா திடுக்கிட்டுப் போனாள்.

அக்கா வெகுநேரமாய் அழுது கொண்டிருக்கிறாள் என்று புரிந்தது.

"அக்கா! என்னாச்சு? ஏன் இப்படி அழறே?"

"உ... மா...!"

"சொல்லுக்கா! என்னதான் பிரச்சனை உனக்கு?"

"எ...ன்...னால... முடியலடி. அவனை... மறக்க முடியல!" - என்று கேவியவாறே தங்கையைக் கட்டிக் கொண்டாள் உஷா. உமா சர்வமும் ஆடிப்போனாள்.

இதை அவள் எதிர்பார்க்கவில்லை. முதல் இரண்டு நாள் துருவிக் கேட்டபோது கூட அலட்சியமாகத்தானே



பதில் சொன்னாள். அவன் வரமாட்டான்... நான் எதிர் பார்க்கவும் இல்லை என்றாளே!

அதற்குப் பிறகு அவனைப் பற்றிப் பேசக்கூட இல்லையே! தானுண்டு தன் வேலை உண்டு என்றுதானே இருந்தாள். வெளியில் சொல்லாமல் தனக்குள்ளே குமுறிக் கொண்டேதான் இருந்தாளோ? இப்படி விம்மும் அளவிற்கு அவன் நினைப்பு வதைக்கிறதா?

கைகள் தானாய் மூத்தவளின் கேசத்தை வருடியது.

"அக்கா! என்னக்கா சொல்ற?"

"உமா! என்னால சாப்பிட முடியல. தூங்க முடியல. வேலை செய்ய முடியல. அப்படியே... பைத்தியம் பிடிச்சிடும் போல இருக்குடி. நின்னா... நடந்தா... படுத்தா... அவன் நினைப்பு என்னைக் கொல்லுது. செத்துடலாம் போல இருக்கு!"

"அக்கா!"

"நான் என்ன பண்ணுவேன் உமா! என்னால... என்னால எதுவுமே முடியல்ல..."

"அக்கா! முதல்ல அழறதை நிறுத்து!"

"முடியலடி... நான்..."

"முதல்ல கண்ணைத் துடை. சத்தம் போடாதே! வா... முதல்ல முகத்தை அலம்பு!"

"உமா!"

"அக்கா! டிபன் ரெடி. அம்மா உன்னைச் சாப்பிடக் கூப்பிட்டாங்க. நாம போகலன்னா அம்மாவோ பாட்டியோ இங்கே வந்திடுவாங்க."

"ஐயோ!"

"வா! முதல்ல முகத்தைக் கழுவு. நாம அப்புறமாப் பேசுவோம். வாக்கா!" - குளியலறைக் கதவைத் திறந்து உள்ளே அனுப்பினாள்.

"உஷாம்மா! உமாக்குட்டி! அப்பா வந்தாச்சு. சாப்பிட வாங்கடா!" - அறைக்கு வெளியே அன்னையின் குரல் கேட்டது. பதட்டமாய் குரல் கொடுத்தாள் உமா.

"இதோ வந்திட்டேம்மா! ஃபேஷ் வாஷ் பண்ணிட்டு வந்திடுறோம்."

"சீக்கிரம் வாங்கம்மா... அப்பா கூப்பிடறாங்க!"

"ஒரே நிமிஷம்... வந்திடறோம். அக்கா! போதும் வா!" - உமாவின் அவசரத்தால் முகத்தை மளமளவென அலம்பிவிட்டு வெளியே வந்தாள் உஷா. முகம் இன்னும் கன்றிப் போயிருக்க, டவலை எடுத்து முகத்தை அழுத்தமாய்த் துடைத்து விட்டாள் உமா.

"வாக்கா!"

"உமா! எனக்குப் பசியில்ல. நீ போய்ச் சாப்பிடு."

"விளையாடாதேக்கா! அப்பா வந்தாச்சு... வா."

"என்னால... முடியல உமா. யாரைப் பார்த்தாலும் நான் அழுதிடுவேன்."



"நீ ஏங்க்கா அழணும்? முதல்ல மனசைத் தைரியமா வை. யாரோ ஒரு பொறம்போக்குக்காக உன் கண்ணீரை ஏன் வேஸ்ட் பண்ற?"

"தப்புதான்டி... மூளைக்குத் தெரியுது... மனசுக்குத் தெரியலையே!"

"எப்பக் கேட்டாலும் அலட்சியமா பதில் சொன்னியேக்கா! இப்ப எப்படி?"

"அவன் சுத்திச் சுத்தி வந்தப்போ பெரிசா ஈர்ப்பு ஏற்படல உமா. ஆனா அவனைப் பார்க்காத இந்த ஏழெட்டு நாளா நான் தவிச்ச தவிப்பு... என்னை ரொம்பத் தவிக்க விட்டுட்டான்டி. அவன் இனிமே வரமாட்டான்னு தெரியுது.

ஆனா... அவனைப் பார்க்காம... அவன் இல்லாம என்னால வாழமுடியும்னு எனக்குத் தோணலடி. நான் ஏமாந்திட்டேன். நான் அம்மா அப்பாவோட நம்பிக்கையைத் தகர்த்திட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாது." - முகத்தை மூடிக்கொண்டு அழத் துவங்கினாள்.

"அக்கா! ப்ளீஸ்... அழாதே. எதுவா இருந்தாலும் நைட்ல பேசிக்கலாம் வா!"

"முடியாதுடி! இந்த நிலையில என்னால அப்பா முகத்தில விழிக்க முடியாது. உடைஞ்சி போயிடுவேன். நான் வரமாட்டேன். என்னால யாரையும் பார்க்க முடியாது." - தமக்கையின் கதறல் உமாவை உலுக்கியது.

ராஜகுமாரனின் மீது வெறுப்பு மண்டியது. பொறுக்கி நாய்! எங்கிருந்து வந்தான்? இப்படித் தன் உடன்பிறப்பைக் கதற வைத்துவிட்டு எங்கே போய் பதுங்கிக் கொண்டான்? அவன் மட்டும் என் கையில் கிடைத்தால்...

"அம்மாடி! ரெண்டு பேரும் என்னடா பண்றீங்க?" - குரல் கொடுத்தவாறே ராமச்சந்திரன் வர, அவசரமாய் முகத்தைத் துடைத்துக் கொண்டாள் உஷா. உமா வலுக்கட்டாயமாகப் புன்னகைத்தாள்.

"என்னப்பா! ரூமுக்கே வந்திட்டீங்க? நாங்கதான் வர்றோம்னு சொன்னோமே!"

"அப்பாவுக்குப் பொறுமை இல்லையேம்மா."

"அப்பா!"

"ஒரு சந்தோஷமான விஷயம் பேசணும்மா. உங்க எல்லாரையும் வெச்சிக்கிட்டே சொல்லலாம்னுதான் கூப்பிட்டேன்!"

"ச...ந்...தோஷமான விஷயமா? என்னப்பா அது?" - சற்றுக் குழப்பமாய் தமக்கையைப் பார்த்துவிட்டுக் கேட்டாள் உமா.

"எல்லாம் நல்ல விஷயம்தான். வாங்க! சாப்பிட்டுட்டே பேசலாம்."

"ம்... வர்றோம்! வாக்கா."

"உஷாம்மா! என்னடாம்மா முகமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு?"



"லேசா... தலைவலிப்பா!"

"காலையிலே தலைவலின்னு சொன்னியேம்மா... இன்னுமா சரியாகல?"

"இ...ல்...லப்பா!"

"ஹாஸ்பிடல் போலாமாடா?"

"இல்லப்பா. இப்பத்தான் மாத்திரை போட்டேன். சரியாகிடும்."

"சரிடா... சாப்பிட்டுட்டு படுத்து ஓய்வெடும்மா!"

"ம்..." - மௌனமாய் தந்தையின் பின்னே இருவரும் சாப்பாட்டு அறைக்கு வந்தனர். அதற்குள் அனைத்தையும் தயாராய் எடுத்து வைத்திருந்தாள் தனலஷ்மி.

"வாங்க! எல்லாரும் உட்காருங்க."

"நீயும் உட்கார் தனம். எல்லாருக்கும் முதல்ல இனிப்பு வை. ரசகுல்லா வாங்கிட்டு வந்தேனே!"

"இதோ வைக்கிறேன்ங்க..." - அட்டைப் பெட்டியைத் திறந்து ஜீராவில் மூழ்கியிருந்த ரசகுல்லாவை ஸ்பூனால் எடுத்து அனைவரின் தட்டிலும் வைத்தாள். உமா ஆசையாய் எடுத்து வாயில் வைத்தாள்.

"ம்... வெரி டேஸ்ட்டி அப்பா! இன்னிக்கு என்னப்பா விசேஷம்? ஜமாய்க்கிறீங்க!"

"நல்ல விஷயம் பேசும்போது இனிப்போட ஆரம்பிக்கலாமேன்னு தான் வாங்கிட்டு வந்தேன்."

"அப்படி என்னப்பா நல்ல விஷயம்? புதுசா ஏதாவது பிராஞ்ச் ஓபன் பண்றோமா?"

"ம்ஹூம்... அதைவிட சந்தோஷமான விஷயம்."

"வேற என்னப்பா? சஸ்பென்ஸ் போதும்."

"இதோ இந்த போட்டோவைப் பாரு உஷாம்மா!" - என உஷாவிடம் போட்டோவை நீட்டினார் ராமச்சந்திரன். ராஜகுமாரன் நினைவிலேயே உழன்று கொண்டிருந்த உஷா அதை கவனியாமல் சிலையாய் அமர்ந்திருக்க, போட்டோவைப் பறித்தாள். உமா.

"ஏன்? உங்க பெரிய பொண்ணுதான் பார்க்கணுமா? நாங்க பார்க்கக் கூடாதா?" - கேலியாய் கேட்டுக்கொண்டே புகைப்படத்தில் பார்வையைப் பதித்தவள் லேசாய் விசிலடித்தாள்.

"வாவ்! யார் இந்த ஹீரோ?"

"உனக்குப் பிடிச்சிருக்கா உமாம்மா?"

"ம்... சூப்பரா இருக்கார். யாருப்பா இவர்? நம்ம கடையில விளம்பரத்துக்கு நடிக்கப் போறாரா?"

"ஏய்! வாயை மூடுடி. அவர் மாப்பிள்ளை!" - அன்னையின் அதட்டலில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் உஷா. உமாவின் சிரிப்பு மறைந்தது.

"அம்மா! யா... ரு...? மாப்பிள்ளையா?"

"ம்... நம்ம உஷாவிற்கு வந்திருக்கிற வரன். பையன் பேரு பாலாஜி. எப்படி இருக்கிறார்?"



திகைப்பாய் உஷாவைப் பார்க்க, அவள் உறைந்து போயிருந்தாள். கண்கள் தங்கையின் முகத்தில் நிலை குத்திப் போயிருக்க, விழிகள் தளும்பின.

"ஏய்! இது உனக்குப் பார்த்த மாப்பிள்ளை இல்லை. எவ்வளவு நேரம்தான் பார்ப்பாய்? அக்காகிட்ட காட்டு. அவளும் பார்க்கட்டும்!" - ரங்கநாயகி சொல்ல, இயந்திரத்தனமாய் தமக்கையிடம் நீட்டினாள் உமா.

உஷாவிடம் எந்த அசைவும் இல்லை. ராமச்சந்திரன் மகளின் தோளைத் தொட்டார். திடுக்கிட்டு நிமிர்ந்தாள் உஷா.

"உஷாம்மா!"

"அ...ப்...பா...!"

"போட்டோவை வாங்கிப் பாரும்மா!"

"வே... ண்டாம்ப்பா!"

"என்னம்மா சொல்ற?"

"இப்ப... கல்யாணத்துக்கு என்னப்பா அவசரம்?"

"என்னம்மா இப்படிக் கேட்கிற? இது தானா தேடி வந்த வரன்மா. இந்த மாப்பிள்ளை யாருன்னு தெரியுமா?"

"யா... ரு?"

"இதுக்கு முன்னால பார்த்தோமே மிலிட்ரிக்காரர் மகன். அவரோட தம்பிம்மா!"

"எ...ன்ன?"

"ஆமாம்மா! போன வாரத்தில ஒரு நாள் ரத்னவேல் என்னைப் பார்க்க வந்தார். அவரோட மூத்த மகன் கல்யாணத்தை நாம வேண்டாம்னு சொன்னதுக்கு அவர் மகன்தான் காரணம்னு தெரிஞ்சு போச்சாம். ரொம்ப வருத்தப்பட்டார்.

மன்னிப்பும் கேட்டார். இது அவரோட இளைய மகனாம். நிறைய படிச்சிருக்காராம். நல்ல வேலையில இருக்காராம். நம்ம வீட்டுப் பொண்ணுதான் தனக்கு மருமகளா வரணும்னு ரொம்ப விருப்பப்பட்டுக் கேட்டுக்கிட்டார்."

"உடனே தலையாட்டிட்டு வந்திட்டீங்களாப்பா?"

"இல்லம்மா. போட்டோவைப் பார்த்தேன். பையன் ரொம்ப அழகா இருந்தானா? . விட மனசில்லை. இருந்தாலும் மாப்பிள்ளையைப் பத்தி விசாரிக்கணுமே! அதான் பொறுமையா விசாரிச்சு எனக்கு முழு திருப்தியான பிறகுதான் அம்மாகிட்டயே சொன்னேன்.

இப்ப நீ போட்டோவைப் பார்த்து ஓ.கே. சொல்லிட்டா மாப்பிள்ளை வீட்ல பேசிடலாம். உஷாம்மா! நீ என்னடா சொல்ற?" - தந்தையின் பேச்சைப் பொறுக்க முடியாமல் எழுந்து கொண்டாள் உஷா.

"என்னம்மா எழுந்திட்டே?"

"அப்பா! எனக்கு... எனக்கு... இதெல்லாம் வேண்டாம்ப்பா!"



"உஷாம்மா!"

"ப்ளீஸ்ப்பா! என்னைக் கம்பெல் பண்ணாதீங்க. எனக்குக் கல்யாணமே வேண்டாம்ப்பா!"

"ஏய்! என்னடி சொல்ற? தானா தேடி வர்ற வாழ்க்கையை இப்படி அபசகுனமா வேண்டாம்னு சொல்லலாமா?" - சீறிய ரங்கநாயகியைப் பார்த்து கைகூப்பினாள்.

"பாட்டி! தயவுசெய்து என்னைக் கஷ்டப்படுத்தாதீங்க. எனக்கு... வேண்டாம்!"

"என்ன வேண்டாம்?"

"கல்யாணமே வேண்டாம். என்னை இப்படியே விட்டுடுங்க!" - கண்களில் துளிர்த்த நீரோடு விசும்பிய மகளின் தலையை வருடினார் ராமச்சந்திரன்.

"உஷாம்மா! என்னடா ஆச்சு உனக்கு?"

"அப்பா! வேண்டாம்ப்பா. எனக்குக் கல்யாணத்துல... இந்த ஆம்பிளைங்க மேலே எல்லாம் நம்பிக்கை இல்லப்பா. தயவு செய்து என்னை... இப்படியே இருக்க விடுங்க. கடைசி வரைக்கும் உங்க மகளா... உங்க கூடவே இருந்திடுறேம்ப்பா!"

"உஷாம்மா!"

"இனிமே தயவு செய்து யாரும் எங்கிட்ட கல்யாணப் பேச்சை எடுக்காதீங்க. அதைக் காதால கேட்கக்கூட நான் விரும்பல. என்னை மன்னிச்சிடுங்கப்பா. மன்னிச்சிடுங்க..."

- என்றவாறே தன் தோளில் சாய்ந்து கதறிய மகளை பரிவாய் அணைத்துக் கொண்டார் ராமச்சந்திரன்.

அவரது மனம் வெகுவாய் குழம்பித் தவித்தது.

## 18

ஒருவழிப்பாதை என் பயணம்
மனதினில் ஏனோ பல சலனம்
ஆறுதல் தேடி அலையுது நெஞ்சம்
அழுதிடக் கண்ணில் நீருக்கு பஞ்சம்!

அழுது களைத்துப் போனவளாய் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தாள் உஷா. 'இதுக்குத்தான் பொம்பளைப் பிள்ளைகளை வீட்டோட வெச்சி வளர்க்கணும்ன்றது. நான் சொல்றதை இந்த வீட்ல யார் கேட்கிறாங்க? அதது அந்தந்த காலத்தில நடந்தாகணும். இல்லேன்னா ஊரார் வாயில விழுந்து வறுபடணும். ஒழுங்கா அவளைக் கல்யாணம் பண்ணி அனுப்புற வழியைப் பாரு' - என ஒரு பாட்டம் ஆர்ப்பாட்டம் பண்ணி விட்டுத்தான் ஓய்ந்தாள் ரங்கநாயகி.

தனலஷ்மி எதுவும் பேசாவிட்டாலும் மிகுந்த வருத்தத்தில் இருந்தாள் என்று புரிந்தது. ராமச்சந்திரன் பலமான யோசனையோடு எதுவும் பேசாமல் மகளை அமைதியாகப் படுக்க வைத்தார்.

அவள் தூங்கும் வரை அவளருகே அமர்ந்து தலையை வருடிக் கொண்டே இருந்தார். அவரது முகம்



தீவிர சிந்தனையில் இருந்தது. மகள் நன்றாய்த் தூங்கி விட்டாள் என்று தெரிந்ததும் பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

அறையிலிருந்த மற்றொரு கட்டிலில் அமர்ந்து தலையை இறுகப் பற்றிக் கொண்டிருந்தாள் உமா. மகளின் அருகே அமர்ந்தார்.

"உமாம்மா!"

"அப்பா!"

"என்னடா இதெல்லாம்?"

"அப்பா!"

"உஷாவுக்கு என்னம்மா ஆச்சு?"

"அது... வந்துப்பா... எனக்கு... தெரியலையேப்பா!"

"வேண்டாம்மா. அப்பாகிட்ட பொய் பேசாதேடா!"

"அப்பா!"

"உனக்குத் தெரியாம இருக்காது. அக்கா உன்கிட்ட எதையும் மறைக்க மாட்டாள். சொல்லும்மா!"

"அப்பா! அவளுக்கு மேரேஜ்ல இஷ்டம் இல்லன்னு..."

"இல்லம்மா! இதுக்கு முன்னால அவ இதே காரணத்தைச் சொன்னதுக்கும் இன்னிக்குச் சொன்ன துக்கும் வித்தியாசம் இருக்குதே. அவ கண்ணீர் என்னை ரொம்ப சங்கடப்படுத்துதே!"

"அப்பா! நானும் அக்காகிட்ட பேசிப் பார்க்கிறேம்ப்பா. நீங்க போய்ப் படுங்க."

"அப்போ... உனக்கும் எதுவும் தெரியாதாம்மா?" - ஏமாற்றமாய்க் கேட்ட தந்தையைக் காண்கையில் இதயம் வலித்தது. கண்களை மூடித் தன்னை திடப்படுத்திக் கொண்டாள்.

"அப்பா! நீங்க எதைப்பத்தியும் கவலைப்படாமப் போய்த் தூங்குங்க. நான் நாளைக்கே இதுக்கு ஒரு முடிவு கட்டுறேன்."

"உமாம்மா!"

"அப்பா! உங்ககிட்ட எப்பவோ சொல்லியிருக்கணும். ம்ப்ச்! நாங்க என்னவோ நினைச்சோம். ஆனா ஏதேதோ நடந்து போச்சு."

"என்னம்மா சொல்ற?"

"எல்லாம் சொல்றேன்ப்பா. இன்னிக்கு வேண்டாம். எனக்கு ஒரு நாள் டைம் கொடுங்க. நாளைக்குச் சொல்றேன்."

"ஏம்மா?"

"எனக்கு ஒரே ஒரு வேலை இருக்கு. விடிஞ்சதும் முதல் வேலையா அதை முடிச்சிட்டு வந்து உங்ககிட்ட எல்லாத்தையும் சொல்லிடுறேன்."

"எதுவும் பிரச்சனையாம்மா?"



"சேச்சே! அப்படியெல்லாம் எதுவும் இல்லப்பா!"

"நாளைக்கு என்ன பண்ணப் போற?"

"எம் ஃபிரெண்ட் ஷர்மியப் பார்த்து கொஞ்சம் பேசணும். அதுக்காக மார்னிங் அவ வீட்டுக்குப் போகணும்ப்பா."

"இதுக்கும் அதுக்கும் என்னம்மா சம்மந்தம்?"

"கொஞ்சம் வெரிஃபிகேஷன் பண்ணணும்ப்பா. எல்லாத்தையும் உங்ககிட்ட சொல்றேன். இன்னிக்கு நான் கொஞ்சம் யோசிக்கணும். ப்ளீஸ் டாட்."

"சரிம்மா. உங்க மேல எனக்கு இப்பவும் நம்பிக்கை இருக்கு."

"உங்க நம்பிக்கை வீணாகாதுப்பா!"

"எப்படியோம்மா! அக்காவுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லாம இந்தக் கல்யாணம் நடந்தாகணும். ஏன்னா ஏற்கெனவே ஒரு பிள்ளையால கல்யாணம் நின்னு போனதுல ரத்னவேலு ரொம்ப வருத்தத்தில இருக்கார்.

இந்தச் சமயத்தில அடுத்த புள்ளையோட கல்யாணமும் நம்ம பொண்ணால நின்னு போயிடக் கூடாது. அவர் நம்ம குடும்பத்து மேல ரொம்ப மரியாதை வெச்சிருக்காரும்மா. நாம அதைக் கெடுத்துக்கக் கூடாது."

"அப்படியெல்லாம் எதுவும் ஆகாதுப்பா. நீங்க மனசைப் போட்டுக் குழப்பிக்காம போய்ப் படுங்கப்பா."

"உமாம்மா...!"

"போங்கப்பா... அதான் நான் பார்த்துக்கிறேன்னு சொல்றேனில்ல."

"எதுவா இருந்தாலும் பார்த்துச் செய்யும்மா. அப்பாகிட்ட எதையும் மறைக்க வேண்டாம்."

"இல்லப்பா! உங்களுக்குத் தெரியாம எதுவும் நடக்காது. நாங்க உங்க பொண்ணுங்கப்பா. எந்தத் தப்பும் செய்ய மாட்டோம்."

"இது போதும்மா!" - நிம்மதி மூச்சோடு எழுந்து கொண்டார் ராமச்சந்திரன்.

"அப்பா! அக்கா நாளைக்கு கடைக்கு வரவேண்டாம். நிம்மதியா வீட்ல ரெஸ்ட் எடுக்கட்டும்."

"சரிம்மா!"

"நான் நாளைக்குள்ள இந்த ப்ராப்ளத்தை ஸால்வ் பண்ணிடுவேன். நீங்கதான் இதை சரிபண்ண முடியும். ஜஸ்ட்! ஒரு துப்பு கிடைச்சாப் போதும். எல்லாம் சரியாகிடும்."

"சரிம்மா... எதற்கும் ஜாக்கிரதையா இரு."

"சரிப்பா!"

"இப்ப... ரத்கவேலுகிட்ட என்னம்மா சொல்றது?"

"இப்போதைக்கு எதுவும் சொல்ல வேண்டாம்ப்பா. ஒரு ரெண்டு நாள் போகட்டும்."



"சரிம்மா... நீயும் படுத்துக்க."

"சரிப்பா!" - தந்தை சென்ற பிறகும் தூக்கம் வராமல் அமர்ந்தே இருந்தாள் உமா. மூளை வேகமாகச் சிந்திக்கத் துவங்கியது.

அக்காவின் கண்ணீருக்கு முழுக் காரணம் அந்த ராஜகுமாரன்தான். முதலில் அவனைக் கண்டுபிடிக்க வேண்டும். எங்கே போய்விடப் போகிறான்? அவனது அத்தை பையன்தானே சர்மியின் அக்காவை மணக்கப் போகிறார்?

அவரைப் பார்த்தால் போதும். இவன் தானாய் மாட்டிக் கொள்வான். வர்றேன்டா... என் அக்காவைத் துடிக்க வைத்துவிட்டு எங்கோ சென்று உல்லாசமாய்த் திரிகிறாயா? வருகிறேன்! - உமாவின் பற்கள் நறநறத்தன.

விடிந்ததும் முதல் வேலையாய் உமா சென்று நின்றது சர்மிளாவின் வீட்டில். பேஸ்ட்டும் பிரஷ்ஷுமாய் நின்ற சர்மிளா ஆச்சர்யமானாள்.

"ஏய்... உமா! என்னடி இவ்ளோ தூரம்?"

"இல்ல... ஒரு முக்கியமான விஷயமா உன்னைப் பார்த்திட்டுப் போலாம்னு வந்தேன்."

"இவ்வளவு காலையிலா? அப்படி என்னடி முக்கியமான விஷயம்?"

"சொல்றேன். முதல்ல பிரெஷ் பண்ணிட்டு வா!"

"இதோ! ரெண்டே நிமிஷம். அக்கா... ஒன் மினிட். இங்க வாயேன்!" - பால்கனியில் நின்று செல்போனில் கிசுகிசுத்துக் கொண்டிருந்த தன் தமக்கையை அழைத்தாள் சர்மிளா.

"என்ன ஷர்மி?"

"அக்கா! எம் ஃபிரெண்ட் உமா வந்திருக்கா. அவளுக்கு ஒரு கப் காபி கொடேன். நான் பிரெஷ் பண்ணிட்டு வந்திடுறேன்."

"சரி... வாம்மா! இப்படி உட்கார்." - என்றவாறு இருக்கையைக் காட்டிவிட்டு மெல்லிய குரலில் போனில் சொன்னாள்.

"வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்காங்க. அப்புறமாப் பேசுறேன்." - என்றவாறே போனைக் கட் பண்ணினாள். உமாவிற்குள் குறுகுறுத்தது. போனில் பேசுவது யார்? ஒரு வேளை... இவளது வருங்கால கணவனாக இருக்குமோ? கேட்டு விடலாமா?

லேசாய் தொண்டையைச் செருமிக் கொண்டாள். முகத்தில் கேலியை வரவழைத்துக் கொண்டே கேட்டாள்.

"என்ன அக்கா! போன்ல யாரு... மாப்பிள்ளை ஸாரா?"

"அச்சோ! சத்தம் போடாதே" - முகம் சிவக்க அவள் பதறிய விதமே உண்மையைச் சொல்லிவிட, திருப்தியாய் புன்னகைத்துக் கொண்டாள்.



"ம்... ம்... நடக்கட்டும். என்ஜாய்!" - என்றாள் சிரித்துக் கொண்டே. சர்மிளாவின் அக்காவும் வெட்கச் சிவப்போடு போனை மேசை மீது வைத்துவிட்டு, அடுக்களைக்குள் நுழைய, சட்டென இருக்கையை விட்டு எழுந்தாள் உமா.

வீடு முழுக்கப் பார்வையை ஒருமுறை சுழலவிட்டு யாரும் கண்ணில் படவில்லை என்றதும் மேசையை நெருங்கி செல்போனை உயிர்ப்பித்தாள். கடைசியாகப் பேசிய எண்ணை எடுத்துப் பார்த்த போது வசந்த் என வந்தது.

'வாடா வா! உன்னைத்தான் தேடிட்டு வந்தேன். நீயா மாட்டிக்கிட்ட...' - என்றவாறு தனது செல்போனை உயிர்ப்பித்து வசந்தின் நம்பரைப் பதிவு செய்து கொண்டு போனை மேசை மீதே வைத்துவிட்டுச் சமர்த்தாய் சோபாவில் வந்து அமர்ந்து கொண்டாள்.

சர்மிளாவின் அக்கா காபியோடு வர, சர்மிளாவும் முகம் துடைத்தபடியே வந்து சேர்ந்தாள்.

"இந்தாம்மா காபி!"

"நோ தேங்க்ஸ் அக்கா! நான் காபி சாப்பிடறதில்லை!"

"ஏன்டி? நீதான் குடிப்பியே!"

"இன்னிக்கு விரதம்! நீயே குடிச்சிடு சாமி!"

"சரி... என்ன முக்கியமான விஷயம்?"

"சர்மி! இன்னிக்கு நான் கொஞ்சம் வெளியே போக வேண்டியதிருக்கு. காலேஜுக்கு லீவு சொல்லிடுறியா?"

"ஓ.கே."

"சரி... நான் கிளம்புறேன்!" - என எழ முயன்றவளைத் தடுத்தாள் சர்மிளா.

"ஏய்! என்ன கிளம்பிட்ட?"

"அதான் சொன்னேனே! வெளியே போகணும்னு..."

"ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்னு சொன்னியே!"

"ம்... லீவு சொல்லுன்னு சொன்னேனே!"

"வாட்? இதுவா முக்கியமான விஷயம்?"

"ம்..." - தோளைக் குலுக்கினாள் உமா.

"ஏய்! என்ன நக்கலா? இதுக்கா காலங்கார்த்தால ஓடி வந்தே?"

"ஆமான்டி! எனக்கு டயமாச்சு. வரட்டுமா? பை!" - தோழியின் கன்னத்தில் தட்டிவிட்டு கையசைத்து விடை பெற்றவளை குழப்பமாய்ப் பார்த்தாள் சர்மிளா.

'இந்த உமாவுக்கு என்ன ஆச்சு?' - தனக்குள் முனகிக் கொண்டது காதில் விழுந்தபோதும் அதைக் கவனியாததுபோல் விடுவிடுவென வெளியேறி தெரு முனையில் இருந்த பேருந்து நிறுத்தத்தை அடைந்தாள்.



காலை நேரம் கூட்டம் எதுவுமின்றி வெறிச்சோடிக் கிடந்தது. காலியாய் கிடந்த இருக்கையில் அமர்ந்தவாறே தனது செல்லை உயிர்ப்பித்து வசந்தை தொடர்பு கொண்டாள்.

எதிர்முனையில் பெண் குரல் கேட்டது. "ஹலோ!"

"ஹலோ! வசந்த் இருக்காரா?"

"அவன் படுத்திருக்கான். நீ யாரும்மா?"

"அவர்கிட்ட கொஞ்சம் பேசணும்."

"நீ யாருன்னு சொல்லும்மா!"

"நீங்க யாரு?"

"நான் அவனோட அம்மா!"

"உங்க பிள்ளைகிட்ட போனைக் கொடுங்க. நான் யாருன்னு அவரே சொல்லுவார்!" - உமா கடுப்பாய்ச் சொல்ல, சாந்தா குழப்பமாய் மகனிடம் போனைக் கொடுத்தாள்.

"வசந்த்! யாரோ ஒரு பொண்ணு பேசுறாப்பா!"

"யாரு? ஹலோ!" - வசந்தின் குரல் கேட்டதும் சீறினாள் உமா.

"ஹலோ! மிஸ்டர் வசந்த்!"

"யா! நீங்க யாரு?"

"நான் உமா."

"உமா! எந்த உமா?"

"ம்... உஷாவோட தங்கை உமா!" - உமாவின் பதிலில் திடுக்கிட்டான் வசந்த். தயக்கமாய் தாயை ஏறிட்டான்.

"அம்மா!"

"என்னப்பா?"

"ரொம்ப பசிக்குதும்மா. காபி வேணும்."

"இதோ வாங்கிட்டு வர்றேன்." - சாந்தா விலகியதும் மெதுவாய் பேசினான்.

"சொல்லுங்க!"

"மிஸ்டர்! நீங்கதானே அந்த ஆள் கூட எங்க அக்காவை வந்து மீட் பண்ணினவர்?"

"ஹலோ! நீங்க... என்ன கேட்கிறீங்க?"

"மிஸ்டர் ராஜகுமாரனைத் தெரியுமா?"

"தெரியும்! என் மாமா பையன்!"

"உங்க மாமா பையன் இப்போ எங்கே இருக்கார்?"

"இ... இங்கேதான் இருக்கான்."

"அவருக்குத் தலையில எதுவும் அடிபட்டு பழசெல்லாம் மறந்திட்டாரா?"

"தலையில லேசான அடிதாங்க. கால்லதான்... கொஞ்சம் பலமான அடி. ஆமா... எங்களுக்கு



ஆக்ஸிடெண்ட் ஆனது உங்களுக்கு எப்படித் தெரியும்? யார் சொன்னது?"

"வாட்? ஆக்ஸிடெண்ட்டா?"

"என்னங்க இப்படிக் கேட்கிறீங்க? இப்பத்தானே தலையில அடிபட்டிருக்கான்னு... ஹலோ! நீங்க... உஷாவோட சிஸ்டர்தானா?"

"ஆமா ஸார். நீங்க என்ன சொல்றீங்க? எப்போ ஆக்ஸிடெண்ட் நடந்தது?"

"அது நடந்து பத்து நாளாகப் போகுதுங்க. இப்போ ஹிந்து மிஷன் ஹாஸ்பிடல்லதான் இருக்கோம்."

"என்ன... பத்து நாளாகுதா? ஏன் ஸார்? எங்களுக்கு ஒரு போன் பண்ணியிருக்கக் கூடாது?"

"நான் சொன்னேங்க... இந்த ராஜாப் பயதான் சொல்ல விடல்ல..."

"நான்... அவரைப் பார்க்கணுமே!"

"தாராளமா வாங்க. தாம்பரம் மெயின் ரோட்ல இருக்கிற ஹிந்து மிஷன் ஹாஸ்பிடல்லதான் இருக்கோம். ஃபர்ஸ்ட் ஃப்ளோர்ல நூற்றி எட்டாம் நம்பர் ரூம்."

"ஓ! தேங்க்யூ ஸார். நாங்க உடனே வர்றோம். பட்! நாங்க வர்றத அவர்கிட்ட சொல்ல வேண்டாம்."

"ஏங்க?"

"ஒரு இன்ப அதிர்ச்சியா இருக்கட்டுமே!"

"ஓ.கே... ஓ.கே!"

"அப்புறம்... வசந்த் ஸார்! காயம் ஒன்னும் அதிகமில்லையே?"

"என்னை இன்னும் நாலு நாள்ல டிஸ்சார்ஜ் பண்ணிடுறதா சொல்லியிருக்காங்க. ராஜாவுக்குத்தான் காயம் அதிகம். எப்படியும் இன்னும் ஒன் மன்த் ஆகும் கியூராக!"

"எப்படி ஸார் ஆச்சு?"

"காரை ஓட்டும் போது கவனம் ரோட்டுல இருக்கணும். இவரோட கவனம் முழுக்க உஷா மேலயே இருந்தது. லாரிக்காரங்கிட்ட மாட்டிக்கிட்டோம்."

"மை காட்!"

"பதறாதீங்க! கார்தான் நொறுங்கிப் போச்சு! நாங்க தப்பிச்சிட்டோம்."

"ஏன் ஸார்! இதையெல்லாம் அக்காவுக்குத் தெரியப்படுத்த வேண்டாமா? இந்த ஒன் வீக்கா அவ எவ்வளவு கஷ்டப்பட்டா தெரியுமா?"

"ஸாரிங்க! இதுக்கு நான் பொறுப்பில்ல. இதெல்லாம் அவனோட முடிவு. நான் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவே இல்லை!"

"இருக்கட்டும்... இருக்கட்டும். எல்லாம் நேர்ல பேசிக்கிறோம்."



"ஆமா... என் நம்பர் உங்களுக்கு எப்படிக் கிடைச்சது?"

"அது... உங்க வுட்பிகிட்ட இருந்து சுட்டது!"

"என்ன?"

"அதான் இன்னும் கொஞ்ச நேரத்தில நேர்ல வருவேனே! அப்ப எல்லாம் டீட்டெய்லா சொல்றேன். இப்ப போனை வெச்சிடவா?" - என்றவள் அவனது பதிலை எதிர்பாராமல் போனைக் கட் பண்ணினாள்.

மனது அடித்துக் கொண்டது. தான் நினைத்தது போல் ராஜகுமாரன் மோசமானவன் அல்ல என்ற உண்மை தேனாய் இனித்தது. உற்சாகமாய் தந்தைக்கு போன் செய்தாள்.

## 19

காயங்களும் ஆறாதோ
நீ எதிர் தோன்றினால்
உடனே வந்தால் உயிர்வாழும்
வருவேன் அந்நாள் வரக்கூடும்!

சுரீரென்ற வலியால் வீறிட்டு எழுந்து அமர்ந்தான் ராஜகுமாரன். மகனின் கூச்சலில் பதறிப்போய் ஓடி வந்தாள் யசோதா.

"ராஜா! என்னப்பா? ஏன் கத்தினே?"

"அம்மா! கால் ரொம்ப வலிக்குதும்மா!"

"என்ன?"

"முடியலம்மா. கால் முழுக்க ஏதோ குடையுற மாதிரி இருக்கு. ம்மா! ரொம்ப வலிக்குதும்மா!" - இடது காலைப் பற்றிக் கொண்டு அவன் துடிக்க, யசோதா வெளியே ஓடினாள்.

வராந்தாவில் நின்றிருந்த கணவனை நெருங் கினாள்.

"என்னங்க! புள்ளை வலி தாளாம துடிக்கிறான். சீக்கிரமா டாக்டரை கூட்டிட்டு வாங்க."

"இதோ கூட்டிட்டு வர்றேன். நீ பையன் பக்கத்தில போய் இரு!" - என காசிநாதன் விரைய, பதட்டமாய் மகனை நெருங்கினாள்.

"ம்மா! வலிக்குதும்மா... ரொம்ப வலிக்குது."

"கொஞ்சம் பொறுத்துக்கப்பா. அப்பா டாக்டரைக் கூப்பிடப் போயிருக்கார்."

"முடியலம்மா. ரொம்ப உளைச்சலா இருக்கு. ஏதோ குடையுற மாதிரி..."

"இதோ டாக்டர் வந்திட்டார். டாக்டர்... எம் புள்ளை..."

"கொஞ்சம் நகருங்கம்மா. மிஸ்டர் ராஜா! என்ன பண்ணுது?" - என்றவாறே காலை பரிசோதிக்கத் துவங் கினார்.

"டாக்டர்! ரொம்ப வலிக்குது. ஒரு மாதிரி... உளைச்சலா இருக்கு. முடியல!"



"குட்! இனி எந்த பயமும் இல்ல."

"டாக்டர்!"

"மிஸ்டர் ராஜா! அடிபட்ட எலும்புகள் நல்லாப் பொருந்தியாச்சு. கால் முழுக்க இரத்த ஓட்டம் பாயுறதால உங்களுக்கு அப்படி உளையுது.

"பட்! இது ரொம்ப நல்ல விஷயம். இனிமே உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்ல."

மருத்துவர் புன்னகையோடு சொல்ல யசோதா நெகிழ்ந்து போனாள்.

"டாக்டர்! அப்போ எம் புள்ளை நடந்திடுவானா?"

"கண்டிப்பா! இன்னும் கொஞ்ச நாள்ல காலை ஊன்றி விடலாம். தொடர்ந்து மெடிஸன், கொஞ்சம் எக்ஸர்சைஸ் செய்தா கொஞ்சம் கொஞ்சமா நடக்க ஆரம்பிச்சிடலாம்."

"டாக்டர்! நி... ஜ... மாவா? என்னால நடக்க முடியுமா?"

கண்களில் துளிர்த்த நீரோடு ராஜகுமாரன் கேட்க...

புன்னகையோடு அவனது தோளில் தட்டினார் மருத்துவர்.

"யெஸ் மிஸ்டர் ராஜா. உங்களால பழையபடி நடக்க, ஓட முடியும். முதல்ல கால்ல உணர்வே இல்லன்னதும் நான்கூட கொஞ்சம் பயந்திட்டேன். இனி எந்த பயமும் இல்ல. சீக்கிரமா நடந்திடலாம்."

"தேங்க்யூ டாக்டர். அம்மா! நான் உடனே வசந்தைப் பார்க்கணும்."

"நானே வந்திட்டேன் ராஜா. யாரெல்லாம் வந்திருக்காங்க பாரு!" - புன்னகையோடு வசந்த் வர, அவன் பின்னே வந்தவர்களைக் கண்டு விழிகளை விரித்தான்.

தந்தையின் பின்னே நின்ற உஷா கண்களில் மின்னும் கண்ணீரோடு ராஜகுமாரனைப் பார்த்தாள்.

அவனும் பேச்சற்றுப் போக, யசோதாவும் காசி நாதனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"வசந்த்! யாருப்பா இது?"

"எல்லாம் நமக்கு வேண்டியவங்கதான் அத்தை. இவர் மிஸ்டர் ராமச்சந்திரன். அன்னிக்கு நாம பட்டு ஸாரி எடுக்கப் போனோமே... அந்தக் கடையோட ஓனர். இது அவங்க பொண்ணு!"

"அட! உன் நிச்சயதார்த்தத்திற்குக் கூட இந்தப் பொண்ணுங்க வந்திருந்தாங்களே! வாங்கம்மா."

"வணக்கம்மா!" - ராமச்சந்திரன் கைகுவித்தார்.

"வணக்கம்! வாங்க."

"இப்ப புள்ளைக்கு எப்படி இருக்கு?"

"முன்னைக்கு இப்பப் பரவாயில்லங்க. இப்பத்தான் டாக்டர் வந்து பார்த்திட்டு, சீக்கிரமா நடந்திடலாம்னு சொன்னார்."



"ரொம்ப சந்தோஷம்."

"உங்களுக்கு எங்க ராஜாவை ஏற்கெனவே தெரியுமா?"

"இல்லம்மா. இப்பத்தான் முதன்முறையா பார்க்கிறேன்." - ராமச்சந்திரன் திருப்தியான புன்னகையோடு ராஜகுமாரனை பார்த்துக் கொண்டே சொல்ல...

யசோதா குழப்பமாய் கணவனை ஏறிட்டாள்.

"என்னங்க சொல்றார்?"

"அத்தே! உங்க குழப்பத்தை நான் தீர்த்து வைக்கிறேன். இந்தப் பய இப்போதைக்கு பேசுற மாதிரி இல்ல. வேற வழியில்ல... நான்தான் சொல்லியாகணும்."

ராஜகுமாரன் விழிகள் உஷாவிடம் உறைந்து போய் விட, மகனைக் குழப்பமாய்ப் பார்த்துவிட்டு வசந்திடம் திரும்பினாள் யசோதா.

"என்னப்பா சொல்ற?"

"ராமச்சந்திரன் சாருக்கு ராஜாவையோ ராஜாவுக்கு ராமச்சந்திரன் சாரையோ தெரியாது. ஆனா..."

"ஆனா...?"

"ராமச்சந்திரன் சாரோட பொண்ணு உஷாவை இவனுக்கு ரொம்ப நல்லாத் தெரியும்."

வசந்த் நமுட்டுச் சிரிப்போடு சொல்ல, முகம் மாறினாள் யசோதா.

"என்ன?"

"ம்... ஏதோ கோயில்ல வெச்சிப் பார்த்தானாம். அப்ப இருந்தே ஒரே உஷா புராணம்தான். நைட்ல அவனும் தூங்கமாட்டான்... என்னையும் தூங்க விடமாட்டான். அவ்வளவு டார்ச்சர்!"

"டேய் ராஜா! என்னடா இதெல்லாம்?"

தாயின் அதட்டலில் திடுக்கிட்டு விழித்தான் ராஜ குமாரன்.

உஷாவும் தந்தையின் பின்னே பதுங்கிக் கொள்ள...

ராஜகுமாரன் தாயை ஏறிட்டான்.

"என்னம்மா கேட்டீங்க?"

"வசந்த் சொல்றதெல்லாம் உண்மையா?"

"என்ன சொன்னான்? டேய்! என்னடா சொன்ன?"

"உண்மையைச் சொன்னேன்!"

"என்ன உண்மை?"

"ம்... நீ என்னைப் பண்ணின டார்ச்சர் எல்லாம் சொல்லிட்டேன்."

"போடா!" - பற்களைக் கடித்தவனை அதட்டினாள்.

"அவன்கிட்ட ஏன்டா கோபப்படுற? அவன் சொன்னது உண்மையா? இல்லையா?"



"அம்மா... அது வந்து... நானே உங்ககிட்ட சொல்லணும்னுதான் வீட்டுக்கு வந்திட்டு இருந்தேன். அந்த நேரம்தான் ஆக்ஸிடெண்ட் ஆகி... சொல்ல முடியாமப் போச்சு!"

"ஏன் ஸார்? உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா?" - காசிநாதன் கேட்க...

பதட்டமாய் மறுத்தார் ராமச்சந்திரன்.

"இல்லங்க... இதோ இப்ப இங்க வரும்போது என் சின்னப் பொண்ணு சொல்லித்தான் தெரியும். எம் பொண்ணு பத்து நாளா எதையோ நினைச்சி வருத்தப்பட்டுட்டு இருந்தான்னு தெரியும்.

"ஆனா... அதுக்குக் காரணம் உங்க புள்ளைன்னு தெரியாது. இப்பத்தான் எல்லாம் தெரியுது."

"ராஜா! என்னடா இதெல்லாம்?"

"அம்மா! எனக்கு உஷாவைப் பிடிச்சிருக்கும்மா. நான் நல்லா குணமானதும் எங்க கல்யாணத்தை முடிச்சி வெச்சிடுங்க."

"ஏய்! என்னடா விளையாடுறியா?"

"யசோதா... பொறு! ராஜா... ஏம்ப்பா இதைப் பத்தி எங்ககிட்டச் சொல்லல..."

"அதான் சொன்னேனேப்பா. சொல்றதுக்குள்ள இப்படி ஆயிடுச்சி! அதோட..."

"நீ எதுவும் சொல்ல வேண்டாம். என்னங்க! இது .. நமக்குச் சரிவராது."

"ஏன் யசோதா?"

"ஏங்க! நேற்று ரஞ்சிதம் வந்தாளே... அவ என்ன சொன்னான்னு தெரியுமா உங்களுக்கு?"

"என்னவாம்?"

"இந்தப் பொண்ணை ஏற்கெனவே சீனுவுக்காகப் பார்த்திருக்காங்க. அந்தப் பய எவளையோ நினைச்சிக்கிட்டு இவளை வேண்டாம்னு சொல்லிட்டானாம்!"

யசோதா சொல்ல, உஷாவின் முகம் கன்றிப் போனது.

ராஜகுமாரன் கோபமானான்.

"ஏம்மா! எப்பவோ நடந்து முடிஞ்சதைப் பத்தி இப்ப என்ன பேச்சு?"

"முழுசாக் கேளுடா. இப்ப அவ தன்னோட ரெண்டாவது புள்ளைக்கு இதே பொண்ணை பேசியிருக்கிறதாச் சொன்னாள்."

"என்ன? பாலாவுக்கா?" - அதிர்ச்சியில் எழுந்தே விட்டான்.

"டேய்! முதல்ல படு. அம்மா சொல்றதைக் கேளு!"

"அம்மா! இதெல்லாம்..."



"நேற்றுத்தான்டா சொன்னாள். சாயந்திரம் உன்னைப் பார்க்க வந்திருந்தா. அப்பத்தான் சொன்னாள்."

"நோ... நோ... எனக்கு என்னோட உஷா வேணும்."

"ராஜா! பொறுமையா இருப்பா."

"இல்லப்பா! உஷாதான் என் மனைவின்னு எப்பவோ முடிவு பண்ணிட்டேம்மா. மனசளவுல அவ கூட வாழ்ந்திட்டு இருக்கேன்."

"ஆனா... அவங்க பேசி முடிச்சிட்டாங்களேப்பா!"

ராமச்சந்திரன் இடையில் புகுந்தார்.

"அம்மா! அவங்க எங்ககிட்ட பெண் கேட்டது நிஜம். ஆனா இன்னும் நாங்க எந்த பதிலும் சொல்லவில்லை."

"அங்கிள்! ப்ளீஸ் அங்கிள்! தயவுசெய்து அவங்ககிட்ட ஏதாவது சொல்லி அவாய்ட் பண்ணிடுங்க."

"தம்பி! எனக்கு எம் மக சந்தோஷமா வாழுறதுதான் முக்கியம். அவளுக்கு உங்க மேல விருப்பம்னு தெரிஞ்ச பிறகு இன்னொருத்தருக்கு எப்படிக் கொடுப்பேன்?"

"ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்!"

"அம்மா! நீங்க ஒண்ணுமே சொல்லலையே!" - ராமச்சந்திரன் கேட்க...

தயக்கமாய்க் கணவனைப் பார்த்தாள் யசோதா.

"நாங்க என்ன சொல்றது? ரஞ்சிதமும் எங்க உறவுக்காரங்கதான். இப்படி அவ பையனுக்கு பார்த்த பெண்ணை எம்புள்ளைக்கு எப்படிப் பேசுறது? உறவுக் குள்ள கசப்பாயிடுமே!"

உஷா கலங்கிப் போய் நிற்க...

அதுவரை மௌனமாய் நின்ற உமா வாய் திறந்தாள்.

"எங்கிட்ட ஒரு ஐடியா இருக்கு... சொல்லலாமா?"

"என்ன? என்ன ஐடியா?"

"அந்தம்மா பேசின பொண்ணை உங்க பிள்ளைக்கு கேட்டாத்தானே தப்பு?"

"ஆமா!"

"அந்த மாப்பிள்ளைக்கு அக்காவைப் பிடிக்காமப் போயி, அவர் வாயாலயே இந்தப் பொண்ணு வேண் டாம்னு சொல்லிட்டா எங்க அக்காவை உங்க மருமகளா ஏத்துப்பீங்களா?"

"என்னம்மா சொல்ற?"- அனைவரும் திகைப்பாய் கேட்க, உமா பலமாய் தலையாட்டினாள்.

"ஏத்துப்பீங்களா? மாட்டீங்களா?"

"எனக்கு மட்டும் எங்க பிள்ளை சந்தோஷமா வாழணும்னு ஆசை இல்லையா? அவன் சந்தோஷம் தான் எங்க சந்தோஷம். ஆனா..."



"அப்போ... எம் புள்ளைய உங்களுக்குப் பிடிக்கலையாம்மா?"

"சேச்சே! பொண்ணு மகாலக்ஷ்மியாட்டம் இருக்காள். அன்னிக்கு ஜவுளிக் கடையில வெச்சுப் பார்த்தப்பவே எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு.

"இந்த மாதிரி ஒரு பொண்ணு நம்ம பையனுக்கு மனைவியா வந்தா நல்லா இருக்குமேன்னு கூட நினைச் சேன்!"

"அம்மா! நிஜமாவாம்மா?"

"ம்... ஆனா... இப்ப... இந்தச் சூழ்நிலையில... எப்படி?"

"ஆன்ட்டி! டோண்ட் வொர்ரி. நான் இந்தப் பிரச்சனையை சரிபண்ணிடுறேன். யாரும் பயப்பட வேண்டாம்."

"உமாம்மா! என்னடா சொல்ற?"

"அப்பா! நான் அந்த மாப்பிள்ளைகிட்ட பேசு றேம்ப்பா!"

"என்ன?"

"ம்... பேசிப் பார்க்கலாம். கண்டிப்பா வொர்க்-அவுட் ஆகும்."

"எப்படி உமா? என்ன பேசப் போகிறாய்?" - உஷா ஆர்வமாய்க் கேட்க...

உமா வெகு அலட்சியமாய் புன்னகைத்தாள்.

"எல்லாம் அந்த மாப்பிள்ளையோட அண்ணன் சொல்லிக் கொடுத்த ஐடியாதான்!"

"என்ன?"

"ஆமா! அந்த ஆள் நம்மகிட்ட வந்து என்ன பேசினானோ அதே மேட்டரை நான் பேசப் போறேன். தட்ஸ் ஆல்!"

"ஏய்! இதெல்லாம்... சரியா வருமா?"

"எல்லாம் சரியா வரும். நீ எதைப் பத்தியும் கவலைப்படாம உன் ராஜகுமாரனுக்கு சீக்கிரம் குணமாகணும்னு வேண்டிக்க. மத்ததெல்லாம் நான் பார்த்துக்கிறேன்."

"உமாம்மா! பார்த்துடா. ரத்னவேல் நம்ம குடும்பத்து மேல ரொம்ப மரியாதை வெச்சிருக்கார். அது பாழாகிடக் கூடாது."

"நான் நிதானமாப் பேசுறேம்பா. மாப்பிள்ளை படிச்சவர்ன்னு சொன்னீங்களே! நிச்சயமாப் புரிஞ்சுப்பார். அவங்களாவே விலகிட்டா நமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை."

"நான் வேணா... ரத்னவேல் கிட்ட போய்ப் பேசிப் பார்க்கட்டுமா?"

"என்னது?"



"அதாம்மா. எம் பொண்ணுக்கு இப்படி இந்தப் பிள்ளையைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லி..."

"அப்பா! கதையையே கெடுத்திடுவீங்க போலிருக்கே. நீங்க அப்படிச் சொன்னா ஆன்ட்டி பயந்தது மாதிரி அவங்க ரிலேஷனுக்குள்ள விரிசல் விழுந்திடாதா?"

"ஆ... மா..."

"அதுக்குத்தான் சொல்றேன். இந்த விஷயம் பெரியவங்க காதுக்குப் போகாமலேயே பேசி முடிச்சிடலாம். நீங்க எனக்கு அவர் வேலை செய்யுற இடத்தோட அட்ரஸ் மட்டும் கொடுங்க... போதும்!"

"ஏம்மா! தனியாவா போகப் போற?"

"பின்னே? ஊரையே கூட்டிட்டுப் போகவா?"

"அதுக்கில்லம்மா..."

ராமச்சந்திரன் தயக்கமாய் இழுக்க, தந்தையின் கரத்தை ஆதரவாய்ப் பற்றினாள் உமா.

"அப்பா! உங்க பயம் எனக்குப் புரியுது. வேணா ஒண்ணு பண்ணலாம். நாம ரெண்டு பேருமே போகலாம். நீங்க காரை விட்டு இறங்கக் கூடாது. நான் உங்க கண் படுற தூரத்துல நின்னு பேசுறேன். ஓ.கே.வா?"

திருப்தியாய் தலையசைத்தார். "சரிம்மா!"

"சரி! அப்ப நாங்க கிளம்பட்டுமா?"

"சரிங்க! சீக்கிரமா நல்ல பதிலோட வாங்க!"

"கண்டிப்பா. மாப்பிள்ளை ஸார்... உங்க உடம்பை பத்திரமாப் பார்த்துக்கங்க. வரட்டுமா?" - உமா கேலியாய் சொல்ல, ஆர்வமாய்க் கேட்டான் ராஜகுமாரன்.

"உமா! நீங்க... எப்போ பாலாவைப் பார்க்கப் போறீங்க?"

"நாளைக்கே!"

## 20

பொட்டு வைத்த முகமோ
கட்டி வைத்த குழலோ
பொன் மணிச் சரமோ
அந்தி மஞ்சள் நிறமோ!

'ஜே.கே. கன்ஸ்ட்ரக்ஷன்' - என போர்டு தாங்கிய அடுக்கு மாடிக் கட்டடத்தின் அருகே இருந்த கார் பார்க்கிங்கில் கைகளைக் கட்டிக் கொண்டு காத்திருந்தாள் உமா.

அவளுக்குச் சற்று தள்ளி தன் காரை நிறுத்திவிட்டு அதற்குள் அமர்ந்திருந்தார் ராமச்சந்திரன்.

வரிசையாய் கார் வருவதும் இறங்கிச் செல்லும் நபர்களைக் கவனிப்பதுமாய் உமா பொறுமையிழந்து கொண்டிருந்த நேரம். தனக்கு வெகு அருகே வந்து நின்றது ஒரு ஸாண்ட்ரோ கார்.



லேசாய்ப் பதறி விலகியவள் கோபமாய் நிமிர்ந்த போது காரைத் திறந்து இறங்கினான் பாலாஜி.

போட்டோவில் பார்த்ததை விடவும் அழகாய், இளமையாய்த் தெரிந்தான்.

உமா பார்த்துக் கொண்டிருந்த போதே அவன் தன் காரைப் பூட்டிவிட்டு, அவளைக் கடந்து செல்ல, அவசரமாய்க் குரல் கொடுத்தாள்.

"எக்ஸ்கியூஸ்மீ..."

"எஸ்..." - நின்று திரும்பினான்.

படபடத்த உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவனை நேராய்ப் பார்த்தாள்.

"மிஸ்டர் பாலாஜி...?"

"நான்தான்!"

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணுமே!"

"என்கிட்டயா?"

"ம்..."

"ஸாரி! நீங்க யாருன்னு தெரியலையே!"

"ஆனா உங்களை எனக்குத் தெரியும். ரத்னவேல் ஸார் பையன்தானே நீங்க?"

"யா!"

"உங்ககிட்ட பேசணும்."

"என்ன விஷயமாய்?"

"உங்க கல்யாண மேட்டர் பத்தி."

"வாட்?" - புருவங்களைச் சுருக்கினான்.

"யெஸ்... உங்களுக்கு உங்க வீட்ல பொண்ணு பார்த்திருக்காங்க இல்ல..."

"ஆமா!"

"அந்தப் பொண்ணோட தங்கை நான்!"

உமா சொன்னதும் வசீகரமாய் புன்னகைத்தான் பாலாஜி.

நழுவிய இதயத்தை வெகு பிரயாசைப்பட்டு இழுத்துப் பிடித்தாள் உமா.

"இப்ப... எதுக்காக சிரிக்கிறீங்க?"

"இல்ல... ஆச்சரியமா இருக்கு."

"என்ன?"

"முன்னெல்லாம் கட்டிக்கப் போற பொண்ணைப் பார்க்கணும்னு ஊர் விட்டு ஊர் போயி சுவரேறிக் குதிச்சுப் போய் பார்ப்பாங்க. ஆனா இப்போ... ரொம்ப முன்னேற்றம்தான்."

"வாட் யூ மீன்?"



உமாவின் குரல் உயர்ந்தது.

"மாப்பிள்ளையைப் பார்க்கணும்னு பொண்ணு தன்னோட தங்கையை அனுப்புற அளவுக்கு ரொம்ப முன்னேறியிருக்கு நம்ம ஊர்."

"ஹலோ! என்ன நக்கலா?"

"நீங்க என்னைப் பார்க்கத்தானே வந்தீங்க?"

"பார்க்க வந்தது உண்மைதான். ஆனா நீங்க கற்பனை பண்ற மாதிரி உங்க அழகைப் பார்த்திட்டு போய் எங்க அக்காகிட்ட வர்ணிக்கிறதுக்காக வரல."

"தேங்க்யூ."

"வாட்?"

"நான் அழகா இருக்கேன்னு சொன்னதுக்கு."

"நான்சென்ஸ்!"

பற்களைக் கடித்தவாறே லேசாய் முகம் திருப்பி தன் தந்தையின் காரைப் பார்த்தாள்.

ராமச்சந்திரன் தன்னையே பார்ப்பது தெரிந்தது.

"இதோ பாருங்க! இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் வேண்டாம். கொஞ்சம் சீரியஸா பேசலாமா?"

"ஓ! பேசலாமே. அதுக்கு முன்னால எனக்குக் கொஞ்சம் அர்ஜெண்ட் வொர்க் இருக்கு. அதை முடிச்சிட்டு வந்திடுறேனே!"

"நோ நோ... நான் இப்பவே பேசணும்."

"ஓ.கே. அப்ப ஆபீஸுக்குள்ள வாங்களேன்."

"நோ! இங்கே நின்னுதான் பேசணும்."

"அட! என்னங்க இது உங்களோட பெரிய ரோதனை யாப் போச்சே. சரி சொல்லுங்க... என்ன விஷயம்?"

"வந்து... எங்க அக்காவை உங்களுக்கு பிடிக் கலைன்னு சொல்லணும்."

"வாட்? என்ன சொன்னீங்க?"

"எனக்கு இந்தப் பொண்ணு பிடிக்கலைன்னு உங்க பேரண்ட்ஸ்கிட்ட சொல்லணும்."

"ஏன்?"

"ஏன்னா... எங்க அக்காவுக்கு உங்களைப் பிடிக் கலை!"

"யார் சொன்னது?"

"எங்க அக்காதான்!"

"அவங்க என்னைப் பார்த்திருக்காங்களா?"

"இ... இல்ல."

"என்னைப் பார்க்காமலே எப்படி பிடிக்கலேன்னு சொல்லலாம்? என்ன நினைச்சிட்டு இருக்கீங்க?"

"ஹலோ! ஏன் ஸார் இப்படிக் கத்துறீங்க? கொஞ்சம் மெல்லப் பேசுங்களேன்."



"இதோ பாருங்க! எனக்கு ரீஸன் தெரிஞ்சாகணும். என்னை ஏன் பொய் சொல்லச் சொல்றீங்க?"

"இதோ பாருங்க ஸார்... நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளுங்க. எங்க அக்காவுக்கு உங்களை மட்டுமில்ல... வேற யாரையுமே பிடிக்காது."

"ஏன்?"

"அவளுக்கு வேற ஒருத்தரைப் பிடிச்சிருக்கு!"

"அதுக்கு?"

"அதனால நீங்க உங்க வீட்ல சொல்லி எனக்கு இந்தப் பொண்ணை பிடிக்கலைன்னு சொன்னாப் போதும். மத்ததை..."

பேசிக்கொண்டே போனவளின் பேச்சு நின்றது.

காரில் சாய்ந்து இரு கைகளையும் கட்டிக்கொண்டு கண்களில் கூர்மையோடும் உதட்டில் புன்னகையோடும் நின்றவனைக் கண்டு பேச இயலாமல் தவித்தாள்.

"ம்... ஏன் நிறுத்திட்டீங்க? சொல்லுங்க!"

"அது வந்து... நீங்களே சொல்லிட்டா..."

"இந்த சப்பை ஐடியாவையெல்லாம் உங்களுக்கு யாருங்க கொடுத்தது? சீனுவா?"

"ஐயோ! அந்த மேட்டரெல்லாம் உங்களுக்கும் தெரியுமா?"

"தெரியும்... தெரியும்! அவனுக்கு மட்டும்தான் இப்படியெல்லாம் தோணும்."

"ஸாரி ஸார். எனக்கும் இந்த ஐடியா சரியாவரும்னு தோணினதால தான் உங்களைப் பார்க்க வந்தேன்."

உமா தயங்கியவாறே சொல்ல...

பாலாஜியின் புன்னகை அதிகரித்தது.

"ஓ.கே. இப்ப நான் என்ன பண்ணனும்?"

"எங்க அக்காவைப் பிடிக்கலைன்னு சொல்லணும்..."

"அப்போ... உங்களைப் பிடிச்சிருக்குன்னு சொல்லிடவா?"

அவன் தயங்காமல் கேட்டுவிட, பதறிப் போனாள்.

"எ... என்...ன?"

"உங்க பேர் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"உ...மா..."

"வெல் மிஸ் உமா. எங்க வீட்ல அண்ணனால ஏற்கெனவே நிறைய பிரச்சனை.

"தன்னோட கல்யாணத்தை நிறுத்த இதே மாதிரி ஏடாகூடமான வேலையைச் செய்து... அப்பாவோட கோபத்தை சம்பாதிச்சிட்டு இப்ப ஃபிரெண்ட் வீட்ல போய் தங்கியிருக்கான்.



"அப்பாவுக்கும் அவனுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. தன் பிள்ளையால தடைப்பட்ட கல்யாணம் இன்னொரு பிள்ளையால நடக்கட்டும்னுதான் அப்பா எங்கிட்ட கேட்டாங்க.

"நானும் அவங்க மனசு கஷ்டப்படக் கூடாதுன்னு பொண்ணைப் பார்க்காமலேயே ஓ.கே. சொல்லிட்டேன்."

"ஸார்?"

"இப்ப வந்து நீங்க இப்படிச் சொன்னா எப்படி? நான் என் அப்பாகிட்ட என்ன சொல்ல முடியும்?"

"ஸார் ப்ளீஸ்! அப்படிச் சொல்லாதீங்க. எங்க அக்கா தன் மனசுக்கு பிடிச்சவனோட வாழணும். அது உங்க கையிலதான் இருக்கு."

"நோ உமா. நம்ம கையிலன்னு சொல்லுங்க."

"என்ன?"

"நேரிடையாவே சொல்றேன். உங்க அக்காவை நான் பார்த்ததில்ல. அதனால அவங்களை அவாய்ட் பண்றது ஒண்ணும் பெரிய விஷயமில்ல..."

"ஓ! தேங்க்யூ ஸார்!"

"ஒன் மினிட்... பட்! உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருந்தா நாம கல்யாணம் பண்ணிக்கலாமே!"

"வாட்?"

"யா! ஒரு பொண்ணை பிடிக்கலன்னு நிராகரிக்கிறது பாவம். என் அண்ணன் அப்படி நிராகரிச்சதாலதான் இன்னும் அவன் லவ் கேள்விக்குறியாவே இருக்கு.

"ஸோ...! அதே பாவத்தை என்னையும் செய்ய வெச்சுடாதீங்க. அதுக்குப் பதிலா இந்தப் பொண்ணை பிடிச்சிருக்குன்னு சொல்லிடுறேன்.

"உங்க வீட்ல எல்லாருக்கும் ஓ.கே.ன்னா ஸிம்பிள். மேட்டர் ஓவர்."

"நோ! அது நடக்காது."

"வொய்?"

"நடக்காது. வீட்ல மூத்தவளை வெச்சிட்டு யாராவது ரெண்டாவது பொண்ணுக்கு கல்யாணம் பேசுவாங்களா?"

"ஏங்க? நான் என்ன உடனேயா தாலி கட்டப் போறேன்? என்னதான் கோபம் இருந்தாலும் மூத்த புள்ளைய வெச்சிகிட்டு எங்க அப்பா எனக்கு கல்யாணம் பண்ணுவாங்களா?"

"அப்போ?"

"அண்ணனுக்கு இன்னும் த்ரீ மன்த்ஸ் டைம் கொடுத்திருக்கோம். அதுக்குள்ள அவன் விரும்புற பொண்ணு வீட்ல பேசி கன்வின்ஸ் பண்ணி கல்யாணத்துக்கு சம்மதிக்க வெச்சிடுவான். அதுக்கு அப்புறம்தான் நம்ம கல்யாணம்."



"ஹலோ! நான் உங்களைக் கல்யாணம் பண்றேன்னு சொன்னேனா?"

"சொல்லித்தான் ஆகணும். வேற வழி?"

"நான் ஏன் சொல்லணும்?"

"ஏங்க... முன்ன பின்ன தெரியாத உங்க அக்காவுக்காக நானே இவ்வளவு தூரம் இறங்கி வரும்போது நீங்களும் வந்துதான் ஆகணும்."

"இதோ பாருங்க... நான்... இப்போ படிச்சிட்டு இருக்கேன். அதனால..."

"ஃபைனல் இயர்தானே?"

"ம்...!"

"படிப்பு முடிஞ்சதும் கல்யாணத்தை வெச்சிக்கலாம். எனக்கொண்ணும் பிரச்சனை இல்லை. வெயிட் பண்றேன்."

"ஓஹோ! முடிவே பண்ணியாச்சா?"

"யெஸ்!"

"அதெப்படி ஸார்! என்னைப் பத்தி எதுவுமே தெரியாம கண்டதும் மையலா? இது என்ன சங்க காலமா?"

"எந்தக் காலமா இருந்தா என்னங்க? ஒரு பொண்ணைப் பார்த்ததும் பிடிச்சுப் போனா போதாதா?

இப்போ உங்க வீட்டுக்கு பொண்ணு பார்க்க வந்தாக்கூட ஒரு ரெண்டு நிமிஷம்தானே கண்லகாட்டுவாங்க.

"அந்த சில நொடிகள்ல உங்களைப் பிடிச்சிருக்கா இல்லையான்னு நாங்க முடிவு பண்ணியாகணுமில்ல!"

"ம்ப்ச்! மத்த பேச்சை விடுங்க. இப்ப முடிவா என்னதான் சொல்றீங்க?"

"நான் எப்பவோ முடிவு பண்ணிட்டேன். இனிமே நீங்கதான் சொல்லணும்."

"நா... னா?"

"ஆமா! நான் என் முடிவை அப்பாகிட்ட சொல் லிடுறேன். அப்பா வந்து பேசுறப்போ உங்க பதிலைச் சொன்னாப் போதும். ஓ.கே.?"

"இதோ பாருங்க... நான்..."

"வெயிட்! வெயிட்! ஏன் இவ்வளவு பதட்டம்? வீட்ல போய் என்னோட போட்டோவை எடுத்துப் பார்த் துட்டு... இந்த பாலாஜி நமக்கு பொருத்தமா இருப் பானான்னு யோசிச்சு நிதானமா முடிவெடுத்தாப் போதும். வரட்டுமா?"

"மிஸ்டர்..."

"ஸாரி! ஆல் ரெடி நான் லேட். இதைவிட லேட் டானா அது அவ்வளவு நல்லா இருக்காது. ஸோ... பை! ஸீ யூ அகெய்ன்." - புன்னகையோடு கையசைத்துவிட்டு அவன் சென்றுவிட...



உமா ஆத்திரமாய் தரையை உதைத்தாள்.

இடியட்! நான் என்ன பேச வந்தேன்... இவன் என்ன சொல்லிவிட்டுப் போகிறான்.

இப்போ... அப்பாவிடம் என்ன பதில் சொல்வது? குழப்பமாய் கையைப் பிசைந்து கொண்டிருக்க...

ராமச்சந்திரன் காரை விட்டு இறங்கி மகளை நெருங்கினார்.

"என்னம்மா சொல்லிட்டுப் போறார்?"

"அது... வந்துப்பா... சரின்னு சொல்லிட்டார்."

"என்ன? சரின்னு சொல்லிட்டாரா?"

"ம்... அவங்க அப்பாகிட்ட பேசிக்கிறேன்னு சொன்னார்."

உமா சொன்னதும் ஆகாயத்தைப் பார்த்துக் கைகூப்பினார் ராமச்சந்திரன்.

"அந்த ஆண்டவன் நம்மளக் கைவிடலம்மா."

"ம்...ம்..."

"போலாமாடா?"

"போலாம்ப்பா!"

காரில் ஏறி அமர்ந்து புறப்பட்ட பிறகும் ராமச் சந்திரன் வாய் ஓயாமல் பேசிக்கொண்டே வந்தார்.

"புள்ள ரொம்ப தங்கமான புள்ளை போலிருக்கு. என்ன ஒரு அடக்கம்... என்ன ஒரு களையான முகம்?"

"யாரைப்பா சொல்றீங்க?"

"அதாம்மா... இப்பப் பேசிட்டுப் போச்சே... ரத்ன வேலுவோட இளைய புள்ளை."

"ஓஹோ!"

"பையன் கண்ணுக்கு லட்சணமா இருக்கான் இல்லம்மா. சிரிச்ச மாதிரிப் பேசினானே! நீ பேசின எதுக்குமே கொஞ்சம்கூட கோபப்படலையே!"

"இதுல கோபப்பட என்னப்பா இருக்கு?"

"என்னம்மா இப்படிக் கேட்கிற? வீட்டுக்குத் தெரியாம ஒரு வயசுப் பொண்ணு இப்படி வந்து நம்மகிட்ட பேசுறாளேன்னு ஒரு ஆம்பிளைக்குக் கோபம் வராதா?

"அதிலும் பழியை அவர் மேல போடுறோம்னு தெரிஞ்சும் எப்படிம்மா கோபம் வராம இருக்கும்?"

"கோபப்பட்டா நட்டம் அவருக்குத்தான்... நமக் கில்ல!"

"என்னம்மா சொல்ற?"

"ஆமா! நாம சொன்னதுக்கு ஒத்துக்கலன்னா நாளைக்கே அவர் அப்பாகிட்ட போய் வேண்டாம்னு சொல்லப் போறோம். அவங்களுக்குத்தான் மன வருத்தம்."



"இப்படியெல்லாம் பேசக்கூடாதுடா. அவர் எவ்வளவு பெருந்தன்மையா நீ சொன்னதுக்கெல்லாம் தலையாட்டிப் போறாரு. அவங்க மனசை நாம கஷ்டப்படுத்தணும்னு நினைக்கலாமா?"

'க்கும்... அவன் பேசியதை முழுதாய் கேட்டிருந்தால் அவனைப் பற்றித் தெரிந்திருக்கும். என்னவோ பெரிய வியாபாரி போல் நீ சொன்னதை நான் கேட்கிறேன்... அதற்குப் பதிலாக என்னைக் கட்டிக் கொள் என்றானே! இந்த அப்பா என்னவென்றால்...'

"ம்... இப்படி ஒரு பிள்ளை மருமகனாய் அமைந்தால் நன்றாகத்தான் இருக்கும். நமக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை."

ஏக்கமாய்ச் சொன்ன தந்தையை வியப்பாய் பார்த்தாள் உமா.

"அப்பா!"

"ஆமாம்மா! நீ மட்டும் படிப்பை முடித்திருந்தால் இந்தப் பிள்ளையை உனக்கு கட்டி வைத்து எனக்கு மருமகனாக்கியிருப்பேன். நீ தான் மேலே மேலே படிச்சிட்டே இருக்கணும்ன்றியே. இப்படி ஒரு மாப்பிள்ளை அமையுமா?"

"அப்பா! நான்..."

"ஏம்மா! இன்னும் ரெண்டு மாசத்துல படிப்பு முடியு தில்ல... பேசாம இந்தப் புள்ளையைக் கட்டிக்கிறியாம்மா?

நான் வேணா ரத்னவேலுகிட்ட பேசிப் பார்க்கட்டுமா?" - தந்தையின் கேள்வியில் உமாவின் இதயம் மீண்டும் நழுவியது.

## 21

ஏழ்பிறப்பும் இணைந்திருக்கும்
சொந்தம் இந்த சொந்தமம்மா
வாழ்விருக்கும் நாள் வரைக்கும்
தஞ்சம் உந்தன் நெஞ்சமம்மா!

"உள்ளே வரலாமா?" - ரத்னவேலுவின் தயக்கமான குரல் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தாள் ரங்கநாயகி.

"யாரு?"

"நான் ரத்னவேலு. இது எம் புள்ளை. ராமச்சந்திரன் கிட்ட கொஞ்சம் பேசணும்."

வாசலில் கேட்ட சம்பாஷணையில் பூஜையறையில் இருந்த ராமச்சந்திரன் வெளியே வந்தார்.

"யாரும்மா? அடடே! ரத்னவேலு! வாங்க, வாங்க! தம்பி! நீங்களும் வாங்க." - புன்னகையும் பதட்டமுமாய் வரவேற்க, தந்தையுடன் உள்ளே நுழைந்தான் பாலாஜி.

"உட்காருங்க! என்ன சாப்பிடுறீங்க?"

"இப்பத்தான் சாப்பிட்டு வந்தோம். நீங்களும் உட்காருங்க ராமச்சந்திரன். கொஞ்சம் பேசணும்."



"ஒரு நிமிஷம்..." - என்றவர், தாயிடம் திரும்பினார்.

"அம்மா! காபி கொண்டு வாங்கம்மா!"

"சரிப்பா!"

ரங்கநாயகி உள்ளே சென்றதும் அவர்களின் எதிரே அமர்ந்தார்.

"சொல்லுங்க ஸார்!"

"வந்து... வீட்ல வேற யாரும் இல்லையா?"

"இன்னிக்கு வெள்ளிக்கிழமை. என் மனைவி குழந்தைகளைக் கூட்டிட்டு பக்கத்தில இருக்கிற கோயிலுக்குப் போயிருக்கா."

"நல்லது. அவங்களை வெச்சிக்கிட்டு பேசச் சங்கடமா இருக்குமேன்னு நினைச்சேன். நல்ல வேளையா அவங்க இல்ல."

பாலாஜியின் முகம் ஏமாற்றமாய்ச் சுருங்க...

ராமச்சந்திரன் சற்று குழப்பமாய்ப் பார்த்தார்.

"என்ன ஸார் விஷயம்?"

"சொல்றேன் ராமச்சந்திரன். அதுக்கு முன்னால நீங்க என்னை மன்னிக்கணும்."

"என்ன ஸார் இது?"

"ராமச்சந்திரன்... நான் உங்ககிட்ட போட்டோ தந்தேனே எம் புள்ளை பாலாஜி... அது இவன்தான்."

"வணக்கம் அங்கிள்!"

"வணக்கம் தம்பி." - பூரிப்போடு புன்னகைத்தார்.

"அதுல ஒரு சின்ன தப்பு நடந்து போச்சு ராமச்சந்திரன்..."

"ஸார்!"

"நான் உங்க மூத்த பொண்ணுக்குத்தான் இவனைப் பேசினேன்..."

"ஆமா!"

"ஆனா நான் போட்டோ எதுவும் காட்டல. அன்னிக்கு ஒரு நாள் ட்ராபிக் சிக்னல்ல உங்களைப் பார்த்தோம்..."

"என்னையா? எப்போ?"

"ஒரு நாலு நாள் இருக்கும். நீங்க உங்க பொண்ணுங்களோட கார்ல போயிட்டு இருந்தீங்க. அப்பத்தான் உங்க பொண்ணுங்களை இவனுக்குக் காட்டினேன்." - ரத்னவேலு நிறுத்த, வியப்பாய் பாலாஜியை ஏறிட்டார் ராமச்சந்திரன்.

பாலாஜி அதே புன்னகையோடு கைகளைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருக்க ரத்னவேலு தொடர்ந்தார்.

"பார்த்த உடனே பொண்ணைப் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டான்."



"ரொம்ப சந்தோஷம்."

"முழுசாக் கேளுங்க ராமச்சந்திரன். நேற்று உங்களைப் பார்த்துப் பேசலாம்னு உங்க கடைக்கு வந்தோம். நீங்க இல்ல. ஆனா உங்க மூத்த பொண்ணு இருந்தாள்."

ராமச்சந்திரனுக்கு ஏதோ புரிவது போல் இருக்க, தகப்பனையும் மகனையும் மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

ரத்னவேலு மிகுந்த தயக்கத்துடன் மகனை ஒரு முறை பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்.

"இதுதான் பொண்ணு நல்லா பார்த்துக்கன்னு இவன்கிட்ட சொன்னேன். ஆனா... இவன்... இவன்..."

"சொல்லுங்க ஸார். என்னாச்சு?"

"நான் சொல்றேன் அங்கிள். அப்போ சிக்னல்ல காட்டினபோது நான் பார்த்தது சம்மதிச்சது எல்லாம் உங்க ரெண்டாவது பொண்ணைத்தான்!"

"எ...ன்...ன?"

"மன்னிச்சிடுங்க ராமச்சந்திரன். எனக்கே இது அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

"ஆனா இவன் பிடிவாதமா... உங்க சின்னப் பொண்ணுதான் வேணும்னு சொல்றான். அதான்... என்ன பண்ணலாம்னு உங்ககிட்டயே கேட்டுடலாம்னு..."

"அப்பா ரொம்பத் தயங்கினாங்க அங்கிள். அதான் நானும் கூட வந்தேன். தயவு செய்து நீங்க எங்களைத் தப்பா எடுத்துக்கக் கூடாது.

"ஒரு பொண்ணைப் பார்த்துப் பிடிச்சுப் போன பிறகு அதே வீட்ல அந்தப் பொண்ணோட அக்காவையே எப்படி அங்கிள் கட்டிக்க முடியும்?" - என்ற பாலாஜியைப் பார்த்து பிரமித்துப் போனார் ராமச்சந்திரன்.

'என்ன பிள்ளை இவன்? நேற்று தன் மகள் இவனைச் சந்தித்ததையோ பேசியதையோ துளியும் கசிய விடாமல் எத்தனை அழகாய் சிந்தித்து திசை திருப்பியிருக்கிறான்.

எத்தனை புத்திசாலித்தனம்? இந்தப் பிள்ளையைக் கை நழுவ விடுவதா?'

ராமச்சந்திரன் யோசித்துக் கொண்டிருந்த போது சிரிப்புச் சத்தத்துடன் தாயோடு மகள்களும் உள்ளே நுழைந்தனர்.

ஹாலில் அமர்ந்திருந்தவர்களைக் கண்டதும்... தனலட்சுமி குழப்பமாய் கணவரைப் பார்க்க...

சோபாவில் சாய்ந்து அமர்ந்து ஒற்றைப் புன்னகையோடு அமர்ந்திருந்தவனைக் கண்டதும் வெலவெலத்துப் போனாள் உமா.

"சொன்னபடியே வந்துவிட்டானா?"

"வாங்கம்மா! தனம்! இது ரத்னவேலு. இது மாப்பிள்ளைப் பையன். பேரு பாலாஜி." - கணவர் அறிமுகப்படுத்தியதும் புன்னகையோடு வரவேற்றாள் தனலட்சுமி.



"அடடே! வாங்க... வாங்க. எப்ப வந்தீங்க?"

"இப்பத்தாம்மா... பத்து நிமிஷம் ஆச்சு!"

"இருங்க... காபி எடுத்திட்டு வர்றேன்."

"தனம்! இந்தா காபி. உஷா கையில கொடுத்து கொடுக்கச் சொல்லு!"

ரங்கநாயகி காபியோடு வர, அவளது வார்த்தையில் திகைத்துப் போனாள் உஷா.

ராமச்சந்திரன் மகளிடம் கண்ணால் சமாதானம் செய்தவாறே மனைவியிடம் திரும்பினார்.

"தனம்! காபியை உமாகிட்ட கொடு."

"அப்பா!" - உமாவின் முகம் மாறியது.

"பதறாதம்மா. வீட்டுக்கு வந்த விருந்தாளிகளுக்கு காபி கொடுக்கிறதா நினைச்சுக்கம்மா! கொடு தனம்."

குழப்பமான முகத்தோடு தாய் நீட்டிய காபி ட்ரேயை வாங்கி மூவருக்குமாய் கொடுத்தாள்.

மற்ற இருவரும் உடனே எடுத்துக் கொள்ள, பாலாஜி மட்டும் நிதானமாய் அவளைப் பார்த்துக் கொண்டே காபிக் கோப்பையை எடுக்க, கடுப்பாய் முறைத்து விட்டு தமக்கையுடன் சேர்ந்து தங்கள் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

"ராமச்சந்திரன்! நீங்க எதுவுமே சொல்லலையே!"

"ரத்னவேலு ஸார்! எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல. வீட்ல பெரிய பொண்ணை வெச்சிகிட்டு எப்படி சின்னப் பொண்ணுக்கு..."

"நோ ப்ராப்ளம் அங்கிள். எங்களுக்கு ஒண்ணும் அர்ஜெண்ட் இல்ல. நீங்க ஏதாவது நல்ல வரன் வந்தா... பெரியவங்களுக்குப் பாருங்க. நாங்களும் என் அண்ணனுக்கு முடிச்ச பிறகு தான் என் மேரேஜ் நடக்கும்.

"அதனால உங்க பொண்ணோட சம்மதமும் உங்க சம்மதமும் கிடைச்சாப் போதும். நாங்க கிளம்பிடுவோம்."

"சந்திரா! என்னப்பா நடக்குது இங்கே? பெரியவளைக் கேட்டுட்டு இப்ப சின்னவளைப் பத்தி பேசுறாங்க!" - ரங்கநாயகி படபடத்தாள்.

"அம்மா! நான் எல்லாம் சொல்றேன். நீங்க கொஞ்சம் பொறுமையா இருங்க."

"பொறுமையா இருக்கணுமா? இது என்னடா அநியாயம்? எம் பேத்திக்கு வர்ற வரனெல்லாம் இப்படித் தட்டிப் போனா..."

"பாட்டி! இப்படி வாங்க!" - உமா வந்து ரங்க நாயகியை உள் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

"என்னை ஏன்டி இழுத்திட்டு வர்ற? விடு கையை!"



"பாட்டி! நாங்களே எவ்வளவு கஷ்டப்பட்டு இதை ஏற்பாடு செய்திருக்கோம். நீங்க என்னன்னா கத்தி கூச்சல் போட்டு காரியத்தையே கெடுத்திடுவீங்க போலிருக்கே!"

"என்னடி சொல்ற?"

"அக்காவுக்கு ஏற்கெனவே ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துப் பேசி முடிவு பண்ணியாச்சு."

"என்ன?" - வாயைப் பிளந்தாள் ரங்கநாயகி.

உஷா மென்மையாய் பாட்டியை அணைத்துக் கொண்டாள்.

"ஆமா பாட்டி! அன்னிக்கு கோயில்ல சிவந்த மாலை கட்டிப் போடச் சொல்லி அனுப்புனீங்களே... அன்னிக்குத்தான் அவரை முதன் முறையாப் பார்த்தேன்!"

உஷா ஆரம்பித்து வைக்க, உமாவும் உஷாவும் அடுத்தடுத்த நிகழ்வுகளைச் சொல்லி... அதை தனலட்சுமியும் தலையாட்டி ஆமோதிக்க, ரங்கநாயகிக்கு தலைசுற்றியது.

பொத்தென இருக்கையில் அமர்ந்தாள். தன்னைச் சுற்றி நின்ற பேத்திகளையும் மருமகளையும் பார்த்தாள்.

"ஏன்டி! இவ்வளவு காரியம் நடந்திருக்கு. யாருமே இதுவரைக்கும் என்கிட்ட ஒரு வார்த்தைகூடச் சொல் லலியே!"

"அது வந்து பாட்டி... இதை உங்ககிட்ட எப்படி...?"

"அப்போ என்னை அந்நியமாத்தான் நினைச்சுட்டு இருக்கீங்க. நான்தான்... நம்ம பேத்திங்க... நம்ம மருமகன்னு பைத்தியக்காரி மாதிரி..."

"அத்தே! என்ன வார்த்தை சொல்லிட்டீங்க?"

"உண்மைதானே இது?"

"இல்ல அத்தே! இந்த விஷயமெல்லாம் எனக்கே நேற்றுதான் உங்க புள்ளை சொன்னார். நானே இதை உங்ககிட்ட சொல்லியிருக்கணும். தப்புதான்!"

"பாட்டி! உங்ககிட்ட மறைக்கணும்னு இல்ல பாட்டி. நீங்க அந்தக் காலத்து மனுஷி. இதையெல்லாம் எப்படி ஏத்துப்பீங்களோன்னு தான் பயந்திட்டோம் பாட்டி. ஸாரி... வெரி ஸாரி பாட்டி!"

"ஆமா பாட்டி! நீங்க எங்க செல்லப் பாட்டி இல்லையா? கோபப்படாதீங்க பாட்டி!" - கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள் உமா.

"போதும் போதும்... செய்யுறதெல்லாம் செய்திட்டு இப்ப என்ன கொஞ்சல் வேண்டிக்கிடக்கு?" - முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ரங்கநாயகி.

"அத்தே! சின்னப் புள்ளைங்க. தெரியாமப் பண்ணிட்டாங்க. மன்னிச்சிடுங்க அத்தே!"

"போனாப் போகுது விடு. மாப்பிள்ளையையாவது கண்ல காட்டுவீங்களா? இல்ல சொல்லாமக் கொள்ளாம தாலியக் கட்டிட்டு வந்து நிற்பியா?"



"என்ன பாட்டி நீங்க? அந்தத் தப்பை மட்டும் என்னிக்குமே செய்ய மாட்டேன். அம்மா அப்பா ஆசீர்வாதத்தோட, உங்க அட்சதையோடத்தான் எங்க கல்யாணம் நடக்கும்."

"சரி... அந்த மாப்பிள்ளை எப்படி இருப்பான்?"

"பாட்டி! அப்படியே அந்தக் காலத்து ராஜகுமாரன் மாதிரியே இருப்பார். அக்கா கொடுத்து வெச்சவ."

"ஏன்? நீ கூடத்தான் கொடுத்து வெச்சவ. இந்தப் புள்ள கூடத்தான் ராஜாவாட்டம் இருக்கான்."

"ஐயோ பாட்டி! சத்தமாப் பேசாதீங்க!" உமா பதற...

ஹாலில் இருந்த ராமச்சந்திரன் குரல் கொடுத்தார்.

"தனம்."

"இதோ வந்திட்டேங்க!"

மருமகளின் பின்னே ரங்கநாயகியும் செல்ல, கதவருகே நின்று கொண்டனர் உமாவும் உஷாவும்.

"என்னங்க?"

"தனம்! இவங்க நம்ம உமாவை இந்தப் பையனுக்குக் கேட்கிறாங்க. நீ என்ன சொல்ற?"

"நான் சொல்றது இருக்கட்டும். முதல்ல உமாகிட்ட கேட்கணுமே!"

"அவகிட்ட என்ன கேட்கிறது? புள்ளைகளுக்கு எது செய்யணும்னு நமக்குத் தெரியாதா?" - என்ற தாயிடம் மறுப்பாய் தலையசைத்தார் ராமச்சந்திரன்.

"இல்லம்மா... இதில அவளோட விருப்பமும் முக்கியம்."

"அவதான் மாப்பிள்ளை போட்டோவைப் பார்த்த உடனே ஹீரோ மாதிரி இருக்கார். சூப்பரா இருக்கார்ன்னு சொன்னாளே... எல்லாம் பிடிக்காமலா சொல்வாள்?" - என்றதும் அனிச்சையாய் திரும்பினான் பாலாஜி.

"ஐயோ பாட்டி! மானத்தை வாங்காதீங்க!"

பற்களைக் கடித்தவாறே உமா முறைக்க, அடக்க மாட்டாமல் சிரித்தான் பாலாஜி.

அந்தச் சிரிப்பில் தன்னை மறந்து லயித்துப் போனாள்.

"என்ன உமாம்மா! நீயும் ஒரு வாட்டி சொல்லிட்டா அவங்களுக்குத் திருப்தியா இருக்கும்."

"வாயைத் திறந்துதான் பதில் சொல்லணும்னு இல்லங்க. சம்மதம்னு தலையாட்டினாக்கூட போதும்." - என்று பாலாஜி சொல்ல, அனைவரின் பார்வையும் உமாவின் மீது நிலைத்தது.

வெட்கமும் கூச்சமுமாய் சம்மதமாய்த் தலையாட்டி விட்டு கதவின் பின்னே ஒளிந்து கொண்டாள் உமா.



ராஜகுமாரன் நன்றாய் தேறியிருந்தான்.

ஊன்றுகோலின் உதவியோடு நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

அவன் அருகே நின்று கொண்டிருந்த மருத்துவர் திருப்தியாய் புன்னகைத்தார்.

"ம்... ஓ.கே. மிஸ்டர் ராஜா. பர்ஃபெக்ட்லி ஆல்ரைட். இனிமே நீங்க தாராளமா வீட்டுக்குப் போகலாம்."

"தேங்க்யூ டாக்டர். இன்னிக்கே போகட்டுமா?"

"போகலாம். தொடர்ந்து எக்ஸர்சைஸ் பண்ணுங்க. சீக்கிரமே இந்த ஸ்டிக்கோட உதவியில்லாம நடந்திட லாம்."

"தேங்க்யூ டாக்டர்."

"நான் நர்ஸ்கிட்ட சொல்லி அனுப்புறேன். நீங்க பில் பே பண்ணிட்டுக் கிளம்பலாம்."

"சரிங்க டாக்டர்!"

யசோதா நன்றியோடு கை குவித்தாள்.

மருத்துவர் போய்விட... நிம்மதியாய் மகனைப் பார்த்தாள்.

"இப்பத்தான்டா எனக்கு உயிரே வந்திருக்கு. ஆமா நாம வீட்டுக்குப் போறதை உஷாகிட்ட சொல்ல வேண்டாமா?"

"கண்டிப்பா! இதோ போன் பண்ணிச் சொல் லிடுறேன்."

கட்டிலை நெருங்கி தனது செல்போனை எடுத்த போது கதவு மெலிதாய் தட்டப்பட்டது.

"யாரு?"

"நான்தான் அத்தை!"

உஷாவின் குரலில் குபீரென மலர்ந்தான்.

"கதவு திறந்துதான் இருக்கு. வாம்மா!" - என்றதும் கையில் அர்ச்சனைக் கூடையோடு உள்ளே நுழைந்தாள் உஷா.

தலை குளித்து ஈரக் கூந்தலோடு சந்தனமும் குங்குமமும் நெற்றியிலிட்டு மங்களகரமாய் வந்து நின்றவளைப் புதிதாய் பார்ப்பது போல் பார்த்தான்.

"என்னங்க!"

"உனக்கு ஆயுசு நூறு உஷா. இப்பத்தான் போன் பண்ணனும்னு எடுத்தேன். நீயே வந்திட்டே."

"கோயிலுக்குப் போயி உங்க பேர்ல அர்ச்சனை பண்ணினேன். அதான் பிரசாதம் கொடுத்திட்டுப் போலாம்னு வந்தேன்."

"தேங்க்யூ உஷா."

"எனக்கெதுக்கு தேங்க்ஸ். அத்தே! பிரசாதம் எடுத்துக்கங்க. அவருக்கும் வெச்சி விடுங்க." - என்றவளை



பெருமையாய் பார்த்தாள் யசோதா. தனக்கும் பிள்ளைக்கும் விபூதி இட்டுக்கொண்டு புன்னகைத்தாள்.

"இன்னிக்கு வீட்டுக்குப் போகச் சொல்லிட்டாங்கம்மா. நான் போய் பில்லை செட்டில் பண்ணிட்டு வர்றேன். அதுவரைக்கும் இவனைக் கொஞ்சம் பார்த்துக் கம்மா."

"சரிங்க அத்தே!" - யசோதா வெளியேறியதும் உஷாவை தன்புறமாய் இழுத்தான் ராஜகுமாரன்.

"அச்சோ! என்ன இது? விடுங்க."

"உஷா!"

"ம்..."

"எப்போ வீட்டுக்குப் போவோம்னு இருந்தது."

"அதான் இன்னிக்குப் போயிடலாமே!"

"நாளைக்கே கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"அட! என்ன அவ்வளவு அவசரம்?"

"இத்தனை நாள் ஹாஸ்பிடல்ல இருந்தேன். தினமும் என்னைப் பார்க்க வந்திடுவ. இனிமே வீட்டுக்கு வருவியா?"

"ஐயோ! அம்மா திட்டுவாங்க."

"அதுக்குத்தான் சொல்றேன். நாளைக்கே கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"வேண்டாம்!" - மறுப்பாய் தலையசைத்தாள்.

"ஏன்?"

"இன்னைக்கே பண்ணிக்கலாம்."

வெட்கமாய்ச் சொன்னவளை... உற்சாகமான ஆரவாரத்துடன் அணைத்துக் கொண்டான் ராஜகுமாரன்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்!" - என்ற கேலியான குரலில் இருவரும் பதறி விலக...

பாலாஜியும் அவன் பின்னே உமாவும் உள்ளே நுழைந்தனர்.

"பாலா! வாடா தம்பி!" - அன்பாய் அணைத்து வரவேற்றான் ராஜகுமாரன்.

"என்ன அண்ணா! இது ஹாஸ்பிடலா... இல்ல உங்க வீட்டு பெட்ரூமா?"

"ஏய்! ச்சீ! இதென்ன பேச்சு?" - உமா அதட்டினாள்.

"ஓ.கே. ஸாரி ஸாரி... அண்ணா! உங்களுக்கு ஒரு குட் நியூஸ்!"

"என்னப்பா?"

"ஒரு வழியா சீனு அந்த தாரணி கூட சேர்ந்திட்டான். இன்னும் பதினைஞ்சு நாள்ல கல்யாணம்."

"ஓ... ரொம்ப சந்தோஷம்."



"அதுக்கு அடுத்த முகூர்த்தத்தில நம்ம கல்யாணம்!" எனக் கண்சிமிட்டியவனது கைகளை நன்றியோடு பற்றிக் கொண்டான்.

"ரொம்ப நன்றி பாலா! உன்னாலதான் நம்ம கல்யாணம் எந்தப் பிரச்சனையும் இல்லாம முடிவாகி யிருக்கு."

"நான் எதுவும் பண்ணல அண்ணா. நான்தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்."

"என்ன?"

"ஆமா அண்ணா! நீங்க அண்ணிய விரும்பின தாலதான்... இந்த வாயாடி எனக்குக் கிடைச்சா. இல்லேன்னா..."

"ஏய்! யாரை வாயாடின்ற? நானா வாயாடி?" - உமா கோபமாய்ச் சீற, பாலாஜி பதறினான்.

"ஐயோ... இல்லம்மா. உன்னைப் போய் அப்படிச் சொல்லுவேனா?"

"ம்... அந்தப் பயம் இருக்கட்டும். ஏதோ போனாப் போகுதுன்னு உனக்கு வாழ்க்கை கொடுத்திருக்கேன். ஒழுங்கா நான் சொன்னதைக் கேட்டு நடக்கணும். இல்ல..." ஒற்றை விரலை நீட்டி மிரட்ட,

பாலாஜி பரிதாபமாய்ச் சொன்னான்.

"அண்ணி! நிஜமாவே இது உங்க தங்கைதானா?"

"என்னடா கேட்டே? உன்னை..." - உமா அடிப்ப தாய் பாவனை செய்து கொண்டு பாலாஜியை விரட்ட...

அறை முழுவதும் சிரிப்பலை பரவியது.